
பரராஜசேகரம்

பாலரோக நிதானம்



தாமரை நூலகம்
சென்னை - 26

உ

பரராசசேகரம் பாலரோகநிதானம்

மூலம்
ஏழாலை
ஐ. பொன்னையபிள்ளை

உரையாசிரியர்
வைத்திய கலாநிதி
வ. சிவப்பிரகாசம் D.A.M.

பதிப்பாசிரியர்
ஆர்.சி. மோகன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்
7, N.G.O. காலனி,
வடபழனி, சென்னை-600 026.

தாமரை வெளியீடு		எண்-280
முதல் பதிப்பு	:	டிசம்பர் 2003
உரிமை பெற்றது.	:	©

நூலைப் பற்றி

நூலின் பெயர்	:	பரராசசேகரம்-பாலரோகநிதானம்
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி, வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2003
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 x 8
தாளின் தன்மை	:	14.4 வெள்ளைத்தாள்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	174 + 10
பிரதிகள்	:	1000.
பைண்டிங்	:	செக்ஷன்
விலை	:	ரூ.60-00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ் ஆஃப்செட், சென்னை - 34.

91/A

பதிப்புரை

தங்களது கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்த புத்தகம் ஈழத்து சித்த மருத்துவ நூல். ஈழமண்ணில் நெடுங்காலமாக வாழ்ந்து வரும் நமது' தமிழ் சகோதர மக்கள் வழிவழியாக பயன்படுத்தி வந்த தமிழ் மருத்துவத்தையும் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றனர். இது பரராச சேகரன் எனும் மன்னனால் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. பரராசசேகரன், செகராசசேகரன் எனும் இரு ஈழத்து மன்னர்கள் சித்த மருத்துவத்திலும் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகிறது.

கெர்ப்பரோக நிதானம், பாலரோக நிதானம், சிரரோக நிதானம் என ஆறுக்கு மேற்பட்ட பாகங்கள் கொண்டது பரராசசேகரம். இது பாலரோக நிதானம் எனும் பாகமாகும். மருத்துவத்திலேயே குழந்தைகளுக்கு சிகிச்சை பார்ப்பது தான் மிகவும் கடுமையானது என்பது அனைவருக்கும் தெரியும். ஏனென்றால் குழந்தையின் நோயை அதன் வாயால் விவரிக்க முடியாது. மிகவும் தேர்ச்சி பெற்ற வைத்தியனால் தான் சரியாக வியாதியை அறிய முடியும். இந்த நூலில் பல்வித நோய்களுக்கான அறிகுறிகள் மற்றும் கடைபிடிக்க வேண்டிய மருத்துவ முறைகள் மிகவும் நன்றாக விவரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியிடம் அனுமதி பெற்று இந்த புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. இதர பாகங்களையும் விரைவில் வெளியிட அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

ஆர்.சி. மோகன்
பதிப்பாசிரியர்

உரையாசிரியர் அணிந்துரை

இல்லறம் நாற்பொருள் பயப்பது, இன்பம் நுகர்வதும் மட்டும் அன்று, தான் மட்டும் வாழ ஆசைகொண்டிருந்தவன். தன் மனைவி வாழ, தன் பிள்ளைகள் வாழ என்று தியாகம் செய்து, பண்புடையவன் ஆகிறான். மக்கட் செல்வம் மாண்புமிக்கது என்று பாண்டியன் அறிவுடைமை நம்பி,

"குறுகுறு நடந்து சிறுகைநீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம் வாழுதாளே"

புற நானூற்றில் (188) பாடியுள்ளான். ஆனால் மக்களைப் பெற்றும், பாலப்பருவத்தை கடக்குமுன், அவர்களை நோய் நொடியின்றி வளர்ப்பது இக்காலப் பெற்றோருக்குப் பெரும் பாடாகிவிடுகிறது. இணைந்த குடும்பங்கள் மறைந்துவரும் நிலையில் முதியோரின் அனுபவம் இல்லாமல், இணம் பெற்றோர் மருத்துவர் தயவிலேயே இன்று இருக்கிறார்கள். அவர்களுக்குக் கை மருந்துகளும் தெரியாது. அவற்றைச் செய்ய நேரமும் இல்லை. அதனால் சித்த ஆயுர்வேத மருத்துவரின் பொறுப்பு மேலும் அதிகமாகிறது. தம்மை நம்பிவரும் பெற்றோரினதும் பிள்ளைகளினதும் உடல் நிலை, மனோநிலைகளை நன்கு அவதானித்து, குடும்ப வைத்தியர்களாய், அன்னார் நலன் விரும்பிகளாய் இருத்தல் அவசியம். பாலரோக சிகிச்சை முறைகளை ஐயந்திரிபு அறக்கற்றும், உடலுக்கேற்ற சிகிச்சைகளைச் செய்தும், சமூக சுகாதார வாழ்வு நிலை உயரத்தம்மால் இயன்ற பணியை ஆற்ற வேண்டும். அவர்களுக்கு பரராசசேகரம், பாலரோகநிதானம் கையேடாக இருத்தல் அவசியம்.

பாவடியில் இயற்றப்பட்ட பாடநூல்களைப் பாராயணம் செய்து, பரிட்சைசித்தி எய்திய எமது தலைமுறை வைத்தியர்கள் அருகிவிட்டார்கள். இனிப்பாவால் ஆகிய வைத்தியநூல்கள் வழங்க மாட்டா. இந்த உண்மையை, முப்பதாண்டுகள் மருத்துவ மாணவருடன் பழகிக் கற்பித்து வந்தபோது அறிந்தேன். பாட்டை வாசிக்கும் ஆற்றலும் குன்றிய இன்றைய மாணவருக்கு உரைநடையில் நூலின் சாரத்தைக் கொடுத்தால் போதும் என்ற உண்மை புலனாயிற்று. உரைநடையில் எழுதத் தொடங்கிய போதுதான் எடுத்த

முயற்சியின் கஷ்டம் தெரிந்தது. சீலம் மிக்க குருவாலம் அவி. இராசரத்தினப் பெரியாரும், கற்பித்த 'பரராசசேகரம்' வைத்தியர் கற்பித்த வி. கனகசவை அவர்களும் சொல்லித் தந்தபடியும், கற்பிக்கும் காலத்தில் தோன்றிய ஐயங்களைத் தீர்த்துக்கொண்ட போது எழுதிய குறிப்புக்களைக் கொண்டும், எம் பரம்பரையில் வந்த அனுபவங்களைக் கொண்டு "பரராசசேகரம்" என்ற சமுத்திரத்தைக் கடக்கத் துணிந்தேன். அதற்காக ஆக்கப்பட்ட சிறுதோணியே இவ்வுரை.

கையிற் கிடைத்த ஓரிரு நூல்களில், குறிப்பு எழுதிய வைத்திய மாணவர்களின் விளக்கங்கள் சில வைத்திய மரவுவழியே வந்து கொண்டிருக்கின்றன என்று தெரிந்தது. அவை சரியா என வெவ்வேறு நூல்கள், அகராதிகளைப்புரட்டி ஆராயும் பொறுப்பு உண்டாயிற்று. கிடைத்த அகராதிகள், மருத்துவநூற் பதிப்புகளை வைத்துக் கொண்டு, ஒரு முடிவை எடுத்தேன். முதிர்ந்த மாணவர்கள் தம் ஐயங்களையும் கருத்தையும் முன்வைத்தனர். அவைகளை மனத்திற் கொண்டும் சில கருத்துக்களை எழுதியுள்ளேன். உதாரணத்திற்குச் சிலவற்றைத் தருகின்றேன்.

பக்கம் 1: கோடகசாலை இலை என்றதற்கு கர்ப்பூரவள்ளி எனச்சிலர் பொருள் கொண்டனர். சிவண்முகராஜா. கோடாசூரி = கோடகசாலை(முல்லைமுத்தையா தேவேந்திரநாதபண்டிதர்) பொருட்பண்புநூல் (பயில்வகை 2-ம் பதிப்பு) கோடகசாலை, கோடாகழி என்பது ஒரு வகைப் பூண்டு.

பாடல் 164: செங்கத்தாரி நெய்க்கு சாறு, சரக்கு அளவு சொல்லவில்லை. பதிப்பாசிரியர் ஐ. பொ. தாமே அளவு சொல்லியுள்ளார். அதன்படி செய்யுளில் அளவுகள் சொல்லாத இடத்தில் நான் அளவுகளை மேற்படி விகிதத்தின் படி சொல்லியுள்ளேன்.

பா. 460 : நச்சனங்காரம் என்பதற்கு, வெண்காரம் எனப்பொருள் கொண்டிருக்கிறேன்.

ஐந்திரவியம் பற்றி நூல்களில் வேற்றுமை உண்டு (பார்க்க சிவசண்முகராஜா தேவேந்திரநாதபண்டிதர், சுந்தர முதலியார் பதிப்பு (1891).).

இப்படி வேறு சில இடங்களிலும் கருத்து வேற்றுமை உண்டு.

எனது சிற்றறிவுக்கு எட்டியவாறு முடிவு செய்துள்ளேன். அறிஞர் தம் அறிவு அனுபவங்களில் பெற்ற கருத்து வேறுபாட்டால் சுட்டிக்காட்டும் படி வேண்டுகிறேன்.

இக்காலத்தில் பொது மக்களின் வைத்திய அறிவு அதிகரித்து வருகிறது.

வானொலி விளக்கங்கள் அவர்களுக்கு உபகாரமாகின்றன. இந்நூலும் அவர்களுக்குப் பயன் அளிக்கும் ஆனால் இதில் கூறப்பட்ட முறைகளை தாமே செய்ய முன்வருவது சங்கடங்களை உண்டாக்கலாம். மேனாடுகளில் சுய மருத்துவம் பல துயரங்களை விளைவித்து வருவதாக அறிகிறோம். கைமருந்து முறைகளுடன் தொடர்புடைய மூலிகை, சரக்குகளையே வைத்தியர் அல்லாதவர்கள் சேர்த்துக் குடிநீர் செய்யலாம் முக்கியமாகச் சுத்தி செய்யாத மூலிகைகள், தாதுவர்க்கங்களை உபயோகிப்பது கேட்டுக்கு ஏதுவாகும்.

வ. சிவப்பிரகாசம்

பருத்தித்துறை வீதி

பொருளடக்கம்

உ

சிவமயம்

பாலரோக நிதானம்

(காப்பு)

பாலர் பிணியிற் குணம்பேசும் பாட்டு மருந்து செய்முறையும்
காலக் கழிப்பு நீர்ச்செரிவுங் கட்டுஞ் சிலவே ரவையுடனே
கோலக் குழையுமிமண்ணெயுடன் குணத்தின்படியேகொள்வதற்குச்
சிலக் குருவின் நாயகனார் சித்தித் தார்சஞ் சீவியெனவே.

பிள்ளை பிறந்த உடனே என்னெய் பிசைய

[1]கோடகசாலையிலை ஆய்ந்தெடுத்து ஒருபிடி நல்லெண்ணெயிற் பிசைந்து தலையிலும் வார்த்து நாக்கிலும் தடவக் கிரந்தி கொள்ளாது.

பிள்ளைஅமுது முலைகுடியாதிருந்தால்

வசம்பு தோல்போக்கி வாழைப்பூச் சாற்றிலரைத் அடிவயிற்றில் பூசவும்.

கருங்கற்றாழஞ்சாறு ஒருபங்கும் [2]ஈருள்ளிச்சாறு இரண்டுபங்கும் கலந்து காய்ச்சி, கடுக்காயும் கோரோசனையும் பொடித்துத்தூவி நாக்கிற் தடவவும்.

மலசலங் கட்டினால்

சிறுபீளைவேரும் அதிமதுரமும் அரைத்து முலைக்கண்ணிற் பூசிப் பால் கொடுக்கவும்.

நாயுருவிவிரையும் கடுக்காயும் சமன்கலந்து ஒருபங்கும் கோரோசனை ஒருபங்கும் கூட்டிப் பொடித்து முலைப்பாலிற் புகட்ட வயிறு விடும்

வயிறு பொருமினால்

கடுக்காய் விரைநீக்கி அமுக்கிராயிலைச் சாற்றாலரைத்து

---

[1]கோடகசாலை-கர்ப்பூரவள்ளி என்பாரும் உளர். அது பொருந்தாது.

[2]ஈருள்ளி-வெங்காயம்

வயிற்றிற் பூசவும்.

வாழைப்பழச்சாறு குழம்பாகக்காய்ச்சி வயிற்றிற்பூசவும்.

பிணிதொடாமல் இருக்க

ஒரு மிளகும் அதினிடை அக்கராவும் வசம்பும் அரைத்து முலைப்பாலிற் கலக்கி, முதல்மாதம் முழுக்காட்டிய மறுநாட் புகட்டவும். இப்படி மாதந்தோறும் ஒவ்வொரு மிளகு ஏற்றி முன்போற் கொடுத்துவர நோயணுகாது.

நாக்கிரந்திக்கு

செங்கத்தாரிவேர், நன்னாரிவேர், கருஞ்சீரகம் இயங்கம் பழச்சாற்றிலூறவிட்டு அரைத்து நாக்கிற் தடவவும்.

மதுரம், திப்பிலி, கடுக்காய், கருஞ்சீரகம், ஈருள்ளி, வசம்பு, காவிளாய்வேர், சிறுபீளைவேர் பொடிசெய்து நல்லெண்ணெயிற் கொதிப்பித்து பூசவும்.

செங்கிரந்தி கருங்கிரந்தி இவற்றின் குணம்

செங்கிரந்தி யுடல்சிவக்கு மிடறு கட்டுஞ்
செயலாற்றுச் சோருமன்றி யதர மூதும்
துங்கமுற மலங்கட்டும் பாலுண்ணாது
தோன்றுமைந்து தினங்கழியி னன்மை சாரும்
பங்கமுறு கருங்கிரந்தி கறுத்துக் காட்டும்
பகரும்வாய் வரண்டுமிக்க குரலுங் கட்டும்
பொங்கிமிக வயிறூதி மலமுங் கட்டும்
பொல்லாத நோயிதெனப் புகன்றா ரன்றே. (பா. 1)

சிகிச்சை ஏனாதி

நன்னாரிவேர், கர்ப்பூரவள்ளியிலை, கஞ்சாங்கோரை, குன்றிமணியிலை இயங்கங்கொழுந்து இவைசாறு கொண்டு இருசீரகம், உள்ளி, திப்பிலி கோரோசனை பொடித்துத்தூவிக் கருப்புக்கட்டி கூட்டிக் குழம்பாகக்காய்ச்சி நாக்கிற்றடவவும்.

ஈருள்ளி, கர்ப்பூரவள்ளியிலை. குன்றியிலை இவை சாறு பிழிந்து கடுக்காய், திப்பிலி, கோரோசனை பொடித்துக் கூட்டிக் குழம்பாக்கி நாக்கிற்தடவவும். மலங்கழியாவிடின் கடுகுரோகணி கருஞ்சீரகம் கூட்டவும்.

முன் கர்ப்பரோக நிதானம் 223-ம் பாடலில் கூறிய செம்பரத்தம்பூ எண்ணெய் தாய்க்கும் பிள்ளைக்கும் கொடுத்து மேலும் பூச செங்கிரந்தி, கருங்கிரந்தி, செவ்வாப்பு, கருவாப்பு, செங்கரப்பன், கருங்கரப்பன் முதலியன திரும்.

கிரந்தி பலவுக்கும் எண்ணெய்

நிலக்கடப்பமிலை படி-2 உரித்த வெள்ளுள்ளி படி-2 இரண்டையும் கலந்து மூன்று முறை துவைத்து பிழிந்து வடிகட்டி ஆமணக்கெண்ணெய் இரண்டுபடியிற் கலக்கி செம்முள்ளியிலை, நொச்சிக்கொழுந்து, ஆனாக்கொழுஞ்சிக்கொழுந்து, செப்புநெருஞ்சி, மணித்தக்காளி, செங்கத்தாரிப்பட்டை, கலியாணமுருக்கிலை, அவரை சிறுசெருப்படி, கற்றாழஞ்சோறு கருநொச்சி, கொட்டைக்கரந்தை, தூதுவளை-வகை-பீடி-1 அல்லது எண்ணெய்க்கு ஏற்ற அளவிற் கூட்டவும். கோட்டம், செண்பகப்பூ ஏலம் இலவங்கம், கம்பிப்பிசின், திப்பிலிமூலம், மதுரம், வெளுத்தற்பிசின், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் கடுக்காய் வெள்ளுள்ளி, மிளகுவகைக்கு - வராகனிடை1 பொடித்துதூவி இரண்டுநாள் வெய்யிலில் வைத்துப் பின் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து பிள்ளைக்கும் தாய்க்கும் கொடுத்து மேலும் பூச முன் சொல்லிய வியாதிகள் தீரும். இந்த எண்ணெய் கொர்ப்பமாயிருக்குங்காலத்தில் பத்துமாதமும்-3 நாள்வீதம் கொடுத்துப் பிள்ளை பிறந்தவுடன் பிள்ளைக்கும் தாய்க்கும் கொடுக்க கிரந்தி தோன்றாது.

செவ்வாப்புக்கு

சேருமுடல் சிவத்தலது செவ்வாப் பாகுஞ்
செம்பரத்தை தனிற்பூவுஞ் செக்கத் தாரித்
தூருடனே தேற்றாவே ரதனிற் பட்டை
தோகுமிருசீ ரகமேலங் கடுக்காய் திப்பில்
நேரியவெள் ளெண்ணெய்தனிற் பொடித்துத் தூவி
நிகழ்வெயிலில் வைத்துண்டு மேலும் பூசத்
தீருமது செவ்வாப்புச் செங்கி ரந்தி
செம்முள்ளி யிலைபிசைந்து குளிக்க நன்றே. *(பா. 2)*

குளிப்பாட்ட

குன்றிமணியிலை, அவுரியிலை, ஆவரையிலை, சிற்ற வரையிலை, இயங்கமில்லை-வகைக்கு-ஒருபிடி குளிர்ந்த தண்ணீரிற் பிசைந்து குளிப்பாட்டச் செவ்வாப்புத்தீரும்.

கருவாப்புக்கு

கருகுவது டம்பெல்லாங் கருவாப் பாகுங்
கவின்கீழ்காய் நெல்லிகுன்றி பொன்னாங் காணி
உரியதுளி ராகரிசீ ரகமி ரண்டு
முற்றிவெள்ளி லெண்ணெய்தனிற் பிசைந்து பின்னர்
வருவெயிலில் வைத்துண்டு மேலும் பூச
மாறிடுமா வரையுடனே கோவைப் பத்ரம்
செருவுறவே பிழிந்துகுளிப் பாட்டி வந்தாற்
செவ்வாப்புக் கருவாப்புத் தீருந் தானே. *(பா. 3)*
(ஆகரி-திப்பிலி)

ஈருள்ளியெண்ணெய்

ஈருள்ளிச்சாறு, நல்லெண்ணெய், வகை-படி-1 கிரந்திநாயன், செம்பரத்தமிலை, செம்பரத்தம்பூ, கறுத்தக்காக்கணமிலை. கறுத்தகாக்கணமிலை வேர் இவை தனித்தனியிடித்துப் பிழிந்தசாறு வகை-படி ணீ ஓமம், கடுக்காய், மாயாக்காய், தான்றிக்காய்-வகை-கழஞ்சு-1 பொடித்துத்தூவி மெழுகுபதத்தில் வடித்து உள்ளும் புகட்டி மேலும் பூச செவ்வாப்பு, கருவாப்பு கிரந்திவகை முதலியன தீரும்.

கோரோசனைக் குளிகை

கோரோசனை இருசீரகம், மாயாக்காய், திப்பிலி சாத்திரவேதி, அக்கரா, கோட்டம், கராம்பு, சுத்திசெய்த வாளம் வகை கழஞ்சு - 1 கறுத்தபூவிலைச்சாறு விட்டரைத்துப் பயறளவு உருட்டி நிழலிலூ லர்த்தி முலைப்பால் கர்ப்பூரவள்ளிச்சாறு இவற்றில் கொடுக்க முற்கூறிய நோய்கள் தீரும்.

செங்கரப்பன் குணம்

பிள்ளையும் கனத்து வீங்கும் பிரண்டையின் பின்னல் போல
உள்ளமுங் கன்றிச் சீறி யுடம்பினுஞ் சிவந்து காட்டித்
துள்ளியே கையிற் றங்காத் துனுக்கெனச் சுழலும்பிள்ளை
கள்ளமாய் வயிற்றிற் காலிற் கட்டுஞ்செய் கரப்பன் காணே. *(பா. 4)*

இக்குணங்களில் உடம்பு கருத்திருப்பது கருங்கரப்பன் என்பதறிக.

சிகிச்சை சுரசம்

செங்கத் தாரி புல்லாந்தி சிறிய கிளாவேர் செஞ்சந்தம்
அங்கப்படியே யரைத்தொன்றா யதனைப்பிழிந்துள் ளுங்கொடுத்துப்

பங்கப் படாதே யம்மருந்து பற்றாய்ப் பூசி வருவீரேற்
சங்கத் தமருஞ் செங்கரப்பன் றணிந்தே யகலுங் கண்டீரே. (பா. 5)

(ஸுரஸம்-பிழிந்த சாறு)

கண்டோங் கொடிமல் லிகையிலைக் கடிதாய்ப் பிழிந்துள் ளுங்கொடுத்து
மிண்டா துடனே பூசிவரில் மீளு மிதுநாங் கைகண்டோம்
பண்டார் பஞ்ச பாண்டுமுல்லை பகரு நாகை யுள்ளியுடன்
கொண்டே யவித்துப் புகட்டிவரிற் கொடியகரப்பன் மாறிடுமே. (பா. 6)

பாகலிலையு மிளகுடனே பரிவாயரைத்துப் பிழிந்துடனே
தாகத்துறவே பருக்கிவரிற் றணியுஞ் செய்ய கரப்பனிவை
வேகத்துடனே மீறிவரில் விடாம லிந்த மருந்துசெய்யப்
போகத் துறுசெங் கரப்பனிவை பொறுத்தே போகுங்கண்டீரே. (பா. 7)

புங்கம்வேரெண்ணெய்

புங்கம் வேரைத் துருவிநன்றாய்ப் பொடியாய்த் துவைத்து நல்லெண்ணெய்
தங்கமாக வொருகொத்துத் தனியே விட்டுப் பிசைந்ததிலே
துங்க மான வசம்புள்ளி தூய கடுக்காய் மிளகேலம்
சங்கமான தான்றிநெல்லி சாற்று மிருசீ ரகங்கோட்டம். (பா. 8)

கோட்டமில்லாச் செஞ்சந்தங் கோதில் கராம்பு வசுவாசி
நாட்டு மாயா விலவங்க நல்ல கைப்புக் களிபாக்குக்
காட்டில் வள்ளி திப்பிலியுங் கடிய பூத விருக்கமுடன்
கூட்டு முலவாக் கொத்தமல்லி குலவு மாஞ்சில் செண்பகப்பூ. (பா. 9)

பூர்க்கு மிகில்நா கம்பூவும் பொருந்துஞ் செம்ப ரத்தையிற்பூக்
கார்க்குஞ் சரக்கொன் றிருகழஞ்சாய்க் கடிதா யிடித்துப் பிசைந்தொன்றாய்ச்
சேர்க்குங் கலத்தி லுடன்வெயிலிற் றிடமாய் வைத்துப் பதத்தெடுத்து
வார்க்கு மெண்ணெ யுள்ளருந்தி வரச்செங் கரப்பன் மாறிடுமே. (பா. 10)

செங்கத்தாரியெண்ணெய்

செங்கத் தாரி சிறுகிளாச் சிவந்த பூலா வேருடனே
புங்கம் வேர்நாற் கருஞ்சூரை பொருந்து மிவைவே றொருநிறையாய்த்
தங்கு மிருசீ ரகங்கோட்டஞ் சாற்றுங் கடுக்காய் செஞ்சந்தம்
சங்க மிளகீ ருள்ளியுடன் சாதி கராம்பு வசுவாசி. (பா. 11)
வாசி மாயாத் திகளிலவம் வருசெவ் வள்ளி திப்பிலியும்
பேசு மதுரங் கொத்தமல்லி பெருத்த கைப்புக் களிப்பாக்குத்
தூய நெல்லி சதகுப்பை துகடீ ரேலஞ் செண்பகப்பூக்
காயுந் திலவெண்ணெயிற் கொதித்து வார்க்கக் கரப்பன்மாறிடுமே. (பா. 12)

கொடிமல்லிகை யெண்ணெய்

கொடிமல் லிகைவேர் தனைப்பிடுங்கிக் கோதில் செஞ்சந் தனம்வசம்பு
பொடியா மிதனைத் தூளாக்கிப் பொருந்துந் திலத்தி லெண்ணெய்நன்றாய்க்
கடிதாய்க் காய்ச்சிக் கொதிபதத்திற் கலந்தே தூவி யுள்ளருந்திற்
கெடியா யோடுஞ் செங்கரப்பன் கேடில் கதிர்முன் பனியெனவே. (பா. 13)

புடைக்கரப்பன் குணம்

புடைத்த கரப்பன் கிரந்திசெய்யும் பெரிய குணத்தைப் புகன்றிடுகிற்
படைத்த சரீர முழுதெங்கும் பரந்தே கனத்துத் திரண்டெழுந்தே
அடைத்துச் சிலநாட் சென்றதற்பி னதிகமாகச் சியல்கட்டி
உடைத்தே புண்ணா மென்றுரைத்தா ருணர்ந்தே கலைகளறிந்தோரே.(பா. 14)

சொறி படுவன் குணம்

சொறிந்திடும் படுவன் செய்யுங் குணந்தனைச் சொல்லவேண்டிற்
செறிந்திடு முடம்பு முற்றுந் தினவதாய்த் தடித்து வீங்கி
நிறைந்திடக் கிரந்தி சேரி லிட்டிக்கு மதுதா னின்றேற்
பரிந்துடன் மருந்தான் மாறு மெனவுநூல் பகர்ந்த தாமே. (பா. 15)

படுவன் குணம்

படுவனின் குணந்தான் செய்யு முபாதியைப் பகர வேண்டில்
வடுவது விலாவி னெஞ்சில் வகுத்திடு முகத்தின் மூக்கில்
நடுமுது கினில்வ யிற்றில் நாடிய மறுதா னத்தும்
அடுகண மெனவே குத்தி யடர்ந்து கொப்புளம தாமே. (பா. 16)

கொள்ளிக் கரப்பன் குணம்

கொள்ளிக் கரப்பன் செய்குணத்தைக் குறித்தே யுரைக்கிற் சரீரமெங்கும்
புள்ளிப் படவே திரண்டெழுந்து புடைத்துப் பரந்து கருகிவரும்
வெள்ளைக் கயலை மாவடுவை வேலைக் கடலை வடிவாளைக்
கள்ளக் கடுவைக் கலைமானைக் கறுக்குங் கருங்கட் காரிகையே. (பா. 17)

கொள்ளிக்கரப்பன் அசாத்தியக்குறி

கொத்துங் கொள்ளி யசாத்தியமாங் குணத்தை யறிந்து கூறிடுகில்
எத்தும் வயிறு தான்வீங்கு மிருமி யடைக்கு மிளைப்புண்டாம்
கத்துங் குரலு மரிவுண்டாய்க் களைத்தே விக்கல் தோன்றிடுகிற்
பத்தும் பலது மோதுவிதென் பாலன் பிழைப்ப தரிதாமே. (பா. 18)

கொப்புளக்கரப்பன் குணம்

தடம்பெறு சரீர நொந்து தலைவலித் திருமிக் காயும்
நடம்பெறு மங்க முற்று நயமில்கொப் புளம்பிறக்கும்
விடம்பெறு விழிசி வக்கு மேவுமிக் குணம்வி ளம்பில்
குடம்பெறு கொங்கை நல்லாய் கொப்புளக் கரப்ப னாமே. (பா. 19)

வாப்புளிக்கரப்பன் குணம்

மாசிலாச் சிறுவன் மேனி பசலையாம் விழிநீர் சோரும்
வீசியே குளிர்ந்து சீறி விதமுறப் பாலெடுக்கும்
கூசியே குழியுங் கண்ணுங் குணாகுணம் பலவுஞ் செய்யும்
காசிலான் வயிறு மூதிக் கழிந்திடும் வாப்பு ளிக்கே. (பா. 20)

(வாப்புளிக்கிரந்தி - என்றும் பாடம். பசலை - தேமல்)

பறவையின் குணம்

காய்ந்துதலைக் குத்திருமி மிடற ரிக்குங்
கண்பீளை கொண்டுமிகச் சிவக்கு மன்றி
வாய்ந்த வயிற் றினிற்புண்போ னோவுண் டாகும்
வந்துதடித் துத் தடித்துச் சொறிந்து மாறும்
ஆய்ந்திடிலிக் குணம் பறவை செயுங்கு ணந்தா
னறிகவென விளம்பினா ரலைசூழ் பூவிற்
றோய்ந்தகலை நூற்பரப்பை யாய்ந்து மாயைத்
தொடர்பகற்றி யருள்பெற்ற தூயோர் தாமே. (பா. 21)

(பறவை - சின்னமுத்து போன்றது)

சிரங்கின் குணம்

சிறுவனுறுங் கைத்தலத்திற் புறங்கை தன்னிற்
சேருமரை முதலான மறுதா னத்தில்
விறுவிறெனச் சொறிந்துதண்ணீர் கட்டிப் பின்பு
மிகுந்ததின வுண்டாக்கும் விளம்பு கிற்றால்
இறுகுமிடை சிறுகுநுதல் வரைநேர் கொங்கை
யிருவிழியும் பயினமலை யிகலு நல்லாய்
கறுவுதல்சே ருஞ்சிரங்கின் குணமீ தென்று
கட்டுரைப்பர் மறையுணர்ந்த காட்சி யோரே. (பா. 22)

சிரங்கின் மகோதரக் கரப்பன் குணம்

சிரங்கின்மகோ தரக்கரப்பன் செயுங்கு ணந்தான்
றினவடங்கி வீங்கிமல சலமும் வற்றி

உரம்பயிலு முதரமுற வுள்முட் டாகி
வுவாதிமிகுந் தரிகுரலாய் மிடறும் விக்கி
வரம்பயிலு மூச்சுமிகு சுவாத முண்டாய்
வாயுமிகுந் தூண்மறந்த தாக மிஞ்சி
இரங்குறவே களைசோக மிகுதி யுண்டா
மிராக்காலத் ததிகரிக்கு மியம்புங் காலே. (பா. 23)

வேறு

கிரந்தி கரப்பன் முதலியவற்றுக்குப் பொதுச்சிகிச்சை

கிரந்தியெண்ணெய்

வீழி, நன்னாரி, தூதுவளை, கோழியவரை, சிற்றமட்டி, கிரந்திநாயன், கருவேம்பு, செங்கத்தாரி, கான்றை, கல்முரிசு, களப்பன்னை, தக்காளி, கறுத்தக்காக்கணம் இவை வேர். கோழியவரை, கறுத்தக்காக்கணம், கருவேம்பு, பருத்தி, வல்லாரை, முசுமுசுக்கை, கிரந்திநாயன் இவையிலை செம்பரத்தம்பூ - வகை- பிடி - 1 இருசீரகம், ஓமம், பூதவிருக்கம், நாகம்பூ, செவ்வள்ளி, மிளகு, வசம்பு, கைப்பு, களிப்பாக்கு, செஞ்சந்தனம், கோட்டம், கடுகுரோகணி, வெட்பாலை, ஏலம், இலவங்கம், சாதிக்காய், சடாமாஞ்சில், உள்ளி - வகை - கழஞ்சு - 2 வேர், இலை, சரக்குகள் வெவ்வேறாயிடித்துத்தூள் செய்து நல்லெண்ணெய் வெற்றிலை வெடிப்பதத்தில் கொதிப்பித்து இறக்கி முதலில் வேர்த்தூளும், பின் சரக்குத்தூளும், அதன்பின் இலைத்தூளும் தூவி, ஆற்றி உள்ளும் புகட்டி மேலும் பூசித் தலையிலும் வைக்க - கிரந்தி வகை - கரப்பன் வகை எல்லாம் தீரும்.

செம்பரத்தம்பூ எண்ணெய்

செம்பரத்தம்பூ - 25 செங்கத்தாரி, தேற்றாவேர் - வகை - பலம் -ட திரிபலை, செஞ்சந்தனம், வேம்பாடல், கோட்டம், செவ்வள்ளி, வசம்பு, மஞ்சள், மிளகு, வசுவாசி, இருசீரகம், திப்பிலி, மதுரம், சாதிக்காய், ஏலம், இலவங்கம், மாயாக்காய், பூதவிருக்கம், நாகம்பூ, கிருமிசத்துரு, ஈருள்ளி, வலம்புரி, வெளுத்தற்பிசின், செண்பகப்பூ, கராம்பூ - வகை - கழஞ்சு - 1 முன்போற்கொதிப்பிக்கவும்.

செம்பரத்தம்பூ எண்ணெய் - 2

வேலிப்பருத்தி, பொடுதலை, முருங்கை, முருக்கு, குப்பைமேனி, கர்ப்பூரவள்ளி, செருப்படிநாயன், ஈருள்ளி, மாதுளங்காய்,

செம்பரத்தம்பூ - இவை - சாறு நல்லெண்ணெய் - வகை - படி -2, இருசீரகம், ஓமம், திரிபலை, திரிகடுகு, கோட்டம், சாதிக்காய், கராம்பு, வசுவாசி, கல்நார், சாத்திரவேதி, ஏலம், இலவங்கம், செஞ்சந்தனம், பூதவிருக்கம், வெள்ளுள்ளி - வகை - கழஞ்சு - 2, நாயுருவி, பருத்தி, வட்டு, தூதுவளை, வெள்ளைக்காக்கணம், கீழ்க்காய்நெல்லி, இவை வேர் - வகை - பிடி - 1, சீனப்பாகு (பறங்கிக்கிழங்கு) - பலம் 1 சூதம் கழஞ்சு - 2 எல்லாம் அரைத்துக் கரைத்து நாலாநாள் மெழுகு பதத்தில் வடித்து உள்ளுந் தின்று மேலும் பூசித் தலையிலும் வார்க்க சூலை, கிரந்தி, புண், குட்டம் மசறிநோய், கெந்ததாளி, கிரந்தி வகை, கரப்பன்வகை, காய்ச்சல், வீக்கம், மாந்தம் முதலியவை தீரும். கெர்ப்பணிக்கு பத்து மாதமும் கொடுக்க அழிகருப்பம் முதலியன நீங்கும்.

ஈருள்ளியெண்ணெய்

ஈருள்ளிச்சாறு, கையாந்தகரைச்சாறு, எலுமிச்சம்புளி, நல்லெண்ணெய் - வகை - படி - 2 இயங்கமிலைச்சாறு, கர்ப்பூரவள்ளிச் சாறு - வகை - படி - 1 செஞ்சந்தனம், இருசீரகம், மஞ்சள், ஏலம், திரிகடுகு, இலவங்கம், மல்லி, உள்ளி, கராம்பு, மாயாக்காய், செவ்வள்ளி, சாதிக்காய், வசுவாசி - வகை - கழஞ்சு - 2 மெழுகுப்பதம் வடிக்கவும். முன்சொல்லிய ரோகங்கள் தீரும்.

பிள்ளைகொல்லுங் கிரந்தியெண்ணெய்

பஞ்சபாண்டவர் முல்லை, பருத்தி, முசுமுசுக்கை, முருக்கு, கோழியவரை - இவை சாறு நல்லெண்ணெய் - வகை - ப - 2. கிளுவை, அத்தி, உதி, புங்கு, வேல், இலுப்பை, செங்கத்தார், கயட்டை, இலந்தை, நாவல் இவை - பட்டை - வகை - பலம் - 2. இடித்துப் பதினாறுபடி தண்ணீர்வைத்து எட்டொன்றாயிறுத்த கஷம்பம் இவையெல்லாம். அதில் களப்பன்னை, தூதுவளை, கிரந்திநாயன். கல்முரிசு, கண்டங்கத்தரி - இவை - வேர் செம்பரத்தம்பூ, மாதளம்பூ, மாதளம்பிஞ்சு - வகை - பிடி - 1 சீனப்பாகு - பலம் - 2. திரிகடுகு, இருசீரகம், உள்ளி, மஞ்சள், சாதிக்காய், கடுகு, வசுவாசி, கல்நார், கராம்பு, வலம்புரி, இடம்புரி, வசம்பு, கைப்பு, களிப்பாக்கு, கடுக்காய், ஓமம், மதுரம், ஏலம், இலவங்கம், மாயாக்காய், பூதவிருக்கம், செஞ்சந்தனம், மல்லி, இரசம் - வகை - கழஞ்சு - 2 அரைத்துக் கரைத்து ஏழாநாள் மெழுகுபதத்தில் வடித்து மேலும்பூசி உள்ளுங் கொடுக்க முற்றிவெடித்த கிரந்திப்புண்கள், பலவகைக் கரப்பன் குட்டம் முதலியன தீரும்.

கிரந்தி யெண்ணெய்

சொலத்தகு மிருசீ ரகம்வசுவாசி தூயநல் லிலவங்க மேலம்
நலத்துறு சிவந்த கோரோ சனைவலம் புரிக்காய் நாகைமி லுள்ளிபீ நாறி
பெலத்துறு கராம்பு திப்பிலி வெளுத்தற் பிசின்சடை மாஞ்சின்மாயாக்காய்
வலத்துறு சிவந்த சந்தனங் குலக்காய் வகுத்திடு மக்கறா வகைக்கே (பா. 24)

வகைக்கொரு கழஞ்சு நிறுத்திடு வேர்கண் மயிலடிக் குருந்துகன் முரிசு
தொகுத்திடு செங்கத்தாரிவேர் புங்குசொன்னிலக் குமிழ்களப்பன்னை
வகுத்திடு சிறுகாஞ் சோன்றிவேரிவைகள் வகைக்கொருபிடியதுவாகப்
பகுத்திடு சரக்கும் வேரும்வெவ் வேறாய்ப்பரிவுட னிடித்துமாவாக்கே. (பா. 25)

ஆக்குமிள் ளெண்ணெய் வெற்றிலை வெடிக்கு மரும்பதத்
திறக்கிவேர்த் தூளைத்
தாக்கிடு பின்னைச் சரக்கினிற் றூடு யாற்றியே தலையினில்வைத்து
நாக்கினிற் றடவி யுடம்பினும் பூச நவின்றிடுங் கிரந்திசெங் கரப்பன்
போக்கிடுங் கரிய கிரந்திசெவ் வாப்புப் புண்களு மகலுமென் றுரைத்தார்.(பா.26)

புங்கம்வேர்க் கொதியெண்ணெய்

உரைபெறு செங்கத் தாரிவேர் புங்கி லுற்றிடு வேரதி மதுரம்
நிரைபேறு மிருசீ ரகமில வங்க நேர்திரி கடுகு செஞ் சந்தம்
வரைபெறு பூத விருக்கமீ ரரத்தை வசம்புநல் லுசிர்வலம் புரிக்காய்
தரைபெறு மேல மகில்சத குப்பை சார்ந்திடு கராம்புவெண் பிசினே. (பா. 27)

பிசினொடு சிவந்த வள்ளிகச் சோலம் பேசிடு முள்ளியீ ருள்ளி
கசிவுறு மாஞ்சி றன்னுடன் கடுக்காய் கைப்பத னோடுகளிப் பாக்கு
நசிவுறவிடித்துப்பொடித்திடு தூளை நாடுமெள் ளெண்ணெயின் முன்போல்
இசையுடன் கொதிப்பித் திடவருங் கிரந்தியினமெலா நீங்கிடுமினிதே. (பா. 28)

சூரியபுட எண்ணெய்

இனித்திடு குன்றி மணிகருப் பூர வள்ளிநற் பிரமிவல் லாரை
வனத்தினிற் படருந் தூதுவளை கொன்றை வருமுசு முசுக்கையுநீல
இனத்தினை யுடைய காக்கண நிலத்திற் பாகனல் லிலையுடன் வேர்கள்
கனத்தினைப்பொருவுங் கூந்தலா யுலர்த்தி யிடித்துமேற் கராம்பு செவ்வள்ளி(பா.29)

மல்லிமுக் கடுகு திப்பிலிமூலம் வருகுலக் காய்வசு வாசி
சொல்லுமீ ருள்ளி யேலம்வெட் பாலை சுகந்தரு சீரக மிரண்டு
நல்லவெண் கோட்ட மக்கராக் கிருமி சத்துரு வரத்தைசெஞ் சந்தம்
வெல்லுறு மாயாக் காயச மோதம் வெண்பிசி னொடுமல நாறி. (பா. 30)

இவையொரு சமனா யிடித்ததா ளிருபங் கிலையினிற் றாளொருபங்கு
சிவையினிற் றாளோர் பங்குவெவ் வேறாய்த் திலத்துறு மெண்ணெயிற் கலக்கிக்
கவையுடன் வெயிலின் மூன்றுநாள் வைத்துக் கடுகியே புகட்டிமேற்பூச
நவையுறு கிரந்தி கரப்பனே யாதி நசித்திடு மென்றனர் நல்லோர். (பா. 31)
(சிவை -வேர்)

கொதியெண்ணெய்

செங்கத்தாரி, இருதுடரி, விட்டாடி, கருஞ்சூரை, புல்லாந்தி, நன்னாரி, கொன்றை, இம்பூறல் - இவை - வேர் செவ்வள்ளி, செஞ்சந்தனம் சாதிக்காய், கைப்பு, களிப்பாக்கு, இருசீரகம், ஏலம், கடுக்காய், மாயாக்காய், கடுகு, கராம்பு, இந்துப்பு, வசுவாசி, மிளகு, ஈருள்ளி, மல்லி, ஓமம், வசம்பு, திப்பிலி, சந்தனம், பூதவிருக்கம், சாளியா, மதுரம் - வகை - கழஞ்சு - க 1, சேம்பரத்தம்பூ, இலை, கோடகசாலை, கர்ப்பூரவல்லி - வகை - படி - க 1. எல்லாம் தூள்செய்து நல்லெண்ணெயிற் கொதிப்பிக்கவும். தலைக்கு வைத்து உள்ளும் புக்ட்டக் கிரந்தி வகை லெல்லாம் தீரும்.

பெருங்கிரந்தி யெண்ணெய்

தூதுளை பிரமி செருப்படி நாயன் சொன்முசு முசுக்கைவெள் ளருகு
தாதவிழ் கறுத்தக் காக்கணம் வீழி தகுகரி சாலை மால் காந்தி
கோதக லாடு தீண்டிடாப் பாலை குக்குடக் கவரையு மின்னம்
ஓதுகர்ப் பூர வள்ளியு மிவைசா றுடன்வரு தேசியின் புளியே. (பா. 32)
(மால்காந்தி - விட்டுணுக்கிரந்தி)

இவையொரு நாழி பசுவின்பா லதுவு மெண்ணெயும் வகைக்கிருநாழி
அவுரிகாற் றோட்டி பரிதரு வாலி யருமுசு முசுக்கைபேய்ப் பீசுக்கு
நவையறு செங்கத் தாரிகன் முரிசு நற்களப் பன்னைநா யுருவி
குகைபெறு சடைக்காவிளைபெருங்குரும்பை குக்குடத்தவரைநன்னாரி(பா. 33)
(குக்குடத்தவரை - கோழியவரை)

சிறியகாஞ் சோன்றி கிரந்திக ணாயன் சேருறு விடத்தல்பொற்காணி
நறியதா துளையோ ரிதழ்சிறு மட்டி நவில்கண்டங் காரிசொல் வட்டு
மறுவறு மாடா தோடைநற் கான்றை வயங்குகீ ணெல்லியுமிவைவேர்
குறைவற வகைக்குக் கழஞ்சிரண்டாகுங் கோட்டநல்லிலவங்கமேலம்.(பா. 34)

உள்ளியீ ருள்ளி யிலவங்க மல்லி யுறுவசம் பட்டிசெண் பகப்பூத்
தள்ளருந் தூரிசு சீரக மிரண்டு சாதியின் காயிரண் டரத்தை
உள்ளுறு மிரசந் திப்பிலி யோம முற்றவா லுளுவையுஞ் சிவந்த
வள்ளிவேம் பாட னற்கடு ரோணி வானவர் தாருநா கம்பூ. (பா. 35)

(பட்டி - மதுரம்)

சுக்குநற் கடுக்காய் கடுகுலிவட் பாலை சுகந்தரு வெந்தய மாஞ்சில்
அக்கறா மாயாக் காய்விழா லரிசி வகைக்கிரு கழஞ்சது வாகத்
தக்கவா றிடித்துப் பொடித்தா டுவிக் காய்ச்சியே மெழுகெனும் பதத்தில்
இக்குநேர் மொழியாய் வடிகொடு பூசி யியன்முறை வழாமலுட் கொள்ளே.
(பா. 36)

கொண்டிடக் கிரந்தி பலவகைக் கரப்பன் கூறருந்தி மிருடன் விறைப்பு
மிண்டிய மூலப் பவுந்திரங் கிரந்தி மேனிவே றாக்கியே தினவு
கண்டிடுங் குட்ட முட்டண வாதங் கடுமைசெய் திடும்பிர மேகம்
அண்டிடா தகலும் புளியுட னுப்பு மகற்றிவென் றுரைத்தன ரறிந்தோர்.(பா.37)

சென்னகரம்பழத்து நெய்

முன்னானை முகனைப் பணிந்துசென் னகரையின் முதுபழத் துறுநெயொன்று
மொழிகுவன் சொற்றபழ மாசியின் காய்வள்ளி முதியதிரி கடுகேலமும்
பொன்னான கோட்டங் குறாசாணி செண்பகப் பூக்கராம் போமமதுரம்
புகலுமிரு சீருகஞ் சந்தனங் கொத்தமல்லி பெற்கடுக் காய்வசம்பு
மின்னார்கள் பயிலுமொழி மஞ்சளில வங்கமும் வசுவாசி செஞ்சந்தனம்
வெற்றிபெறு சாதியின் காய்பூத விர்க்கமும் மென்மைபெறு கடுரோகனி
முன்னோர்க ளுரைத்த மாகாணி தூதுவளை பொடு சில்லி சூரியிவைவேர்
முது சூதமத்தியிவைபட்டை மென்றொலிபோக்கி முறையொரு கழஞ்சுகூட்டே
(சொற்றம்பழம்-மேற்கூறிய சென்னகரம்பழம். சில்லி-சிறுகீரை.சூரி-நத்தைச்சூரி. சூதம்-மாம்பட்டை) (பா. 38)

தேடிய டுத்துத் தூளிடி யிட்டுத் தெளிவாக
நாடிய நத்தைச் சூரியொ டுத்தா மணிதானும்
பாடிய காற்பா சத்தொடு சில்லி பகர்சாறும்
கூடிய சுத்தா நெய்வகை நாழி கொளுவாயே. *(பா. 39)*
(காற்பாசம் - பருத்தி)

கொண்டெடுத்த சாறுநெய்யு மளவதாகக்
கூட்டியொரு சட்டிதனிற் காய்ச்சும் போது
வண்டுவிழந் திசைபயிலுங் கூந்த னல்லாய்
வற்றிவரு நேரம்பார்த் தீர வுள்ளி
விண்டபடி யிரண்டுபிடி யரிந்தே யிட்டு
மிகுத்துபொன்னி னிறமாகச் சிவந்த வாறே
பண்டுரைத்த தூடுவி யிறக்கி மேலாம்
பத்தியத்தோ டருந்திநெய்யை மேலும் பூசே. *(பா. 40)*

பூசியரு மதலைக்கு முட்பு கட்டப்
புண்புரைகள் வெகுகிரந்தி சொறிசி ரங்கு
மாசுடைய வொடுகரப்பன் புடைக ரப்பன்
வாய்வயிற்றிற் புண்கொத்த தாளி யாப்புத்
தேசுடைய வுடலதனை வீங்கச் செய்யுந்
தீமைபெறு கரப்பனுடன் வெகுக ரப்பன்
வீசுபுகழ்ப் பரராச சேக ரன்முன்
மிடியெனவே யகலுமி மெய்மை யாமே. *(பா. 41)*

சென்னகரம்பழத்து நெய் - வேறு

மாதுளங்காய் சிறுகீரை கறுத்துப் பூவின்
வளருமிலை கர்ப்பூர வள்ளி குன்றி
தூதுளம்வே ரதின்பழமு மிவைவெவ் வேறு
துவைத்தெடுத்த சாறுவரு பசுவி னெய்யும்
நீதியுட னோரிரொன்று நாழி கூட்டி
நேரியசேங் கொட்டையதி விடய மோமம்
கோதகலும் வசுவாசி யூசிக் காந்தங்
குறாசாணி தற்கோல மாயாக் காயே. *(பா. 42)*

காயுடனே யீருள்ளி சுக்கு மஞ்சள்
கராம்போல மக்கறாச் சிவந்த வள்ளி
நோயுடனே பரிகரிக்கு முலுவா வோடு
நுவல்கறுவாத் துவர்ச்சந்த மதுரஞ் சாதி
மேயகிரு மிக்குற்ற பகையு மல்லான்
மிகுமதுர விலவங்கம் வசம்பு நற்சீர்
நீயுடனே வகைக்கிரண்டு கழஞ்ச தாக
நிறுத்திடித்து மாம்பட்டை தனைய வித்தே. *(பா. 43)*

(துவர்ச்சிகை - கடுக்காய்)

அவிந்துற்ற நீரதனா லரைத்து முன்ன
ரறைந்தநெய்யிற் கலக்கிமெழு காம்ப தத்தில்
சிவந்துற்ற நெய்வடித்துக் கொண்டு தாயுஞ்
சிசுவுமுண்டு மேற்பூசச் செங்கிரந்தி
நிவந்துற்ற கருங்கிரந்தி சிவந்த வாப்பு
நிகழுமற்றைச் சொறிகரப்ப னாதி யெல்லாம்
குவிந்துற்ற முலைமடவாய் தீரு மென்று
குறித்தனர்மெய்ப் பொருளுணர்ந்த கொள்கையோரே. *(பா. 44)*

கிரந்தித் தொய்வுக்கு ஏனாதி

புங்கம்வேர் துருவிப் பிழிந்தபால், கஞ்சாங்கோரைச்சாறு, விட்டுணுகிராந்திச்சாறு, முலைப்பால், வகைக்கு மாகாணி (1/16படி) 1 திரிகடுகு, கோரோசனை, கர்ப்பூரம், கற்கண்டு, நெய், தேன் - வகை கழஞ்சு 3, ஏனாதி காய்ச்சிப்புகட்ட கிரந்தித்தொய்வு, ஈழை, இருமல் தீரும். முலைப்பால் கூட்டியும் கொடுக்கலாம்.

கிரந்தி விரேசனம்

பிள்ளைக்கற்றாழஞ் சோற்றை ஒரு சட்டியிலிட்டு கறுத்தப்பூ இலைச்சாறும் கடுக்காயும் திப்பிலியும் பொடித்துக்கூட்டி வெயிலில் வைக்க நீராகும். ஒரு சங்கு புகட்ட மலங்கழியும் கிரந்தி, இருமல், செங்கரப்பன் தீரும்.

மாந்தம் - வரலாறு

அன்னமும் பாலுநெய்யு மடைவிலாப் பழமும் வித்தும்
பின்னையும் பயறு தேங்காய் பெரியதோர் கதலிக் காயும்
தின்னவே கால்கு ளிர்ந்து தீயென வெதுப்பங் கண்டால்
உன்னுநற் பால கர்க்கு மாந்தமுற் றிடுமென் றாரே. *(பா. 45)*

அன்னை முலைப்பாலுண் டதின்மேலா வின்பாலை
உண்ணில் வயிற்றி னுரைசீதம் - பின்னைத்
திரண்டு பெருந்திரையாஞ் சேயிழையீர் கேளிர்
மருண்டுளையு நாளும் வயிறு. *(பா. 46)*

அன்னை முலையா ளறைக்கீரை யேவிரும்பி
உண்ணமுலைப் பால்குளவி யுண்டக்கால் - சின்னச்
சீதமாய் முற்றிப் புழுவாய்ச் சிரங்குபற்றும்
வேகமாய் நிற்கும் விதி. *(பா. 47)*

மாந்தத்தின் பொதுக்குணம்

துடித்திடக் கால் குளிர்ந்து துணுக்கெனக் கழிச்ச றோன்றி
அடிக்கடி யழுது பிள்ளை யலர்ந்துகண் சோரு மாகிற்
கடுத்திடு மாந்த மென்று கழறின ராயுள் வேதர்
படித்திடு வகையு மேற்ற சிகிச்சையும் பகர லுற்றாம். *(பா. 48)*

(துணுக்கென வலிப்புத்தோன்றி - என்றும் பாடம்)

மாந்தம் மிகுந்த குணம்

வாய்வெந்து சுரம தாகி வந்திடு மிரும லுண்டாய்
நோய்வந்து சுழிய வாங்கி நுவறலை வலிக்கு மீற்றிற்
போய்வந்து கடுப்புக் காணிற் பொறுத்துப்பி னிரத்தங் காணும்
வேய்வந்த தோளி னாளே மிகுந்திடுங் குணங்க டாமே. (பா. 49,

சிறியவன் வயிறு போகுஞ் சினந்திடு மஞ்சிப் பார்க்கும்
கறியுட னுண்ட தாயார் கையிலு மழுத னுங்கும்
அறிவழிந் துடம்பு காயு மரைக்குக்கீழ்க் குளிர்ந்தி ருக்கும்
வெறிவிரற் கால்கை வீங்கு மிகுமாந்த மென்று தேரே. (பா. 50,

சிசிக்சை சுரசம்

உள்ளியும் வசம்பும் வேலிப் பருத்திபேய் மிரட்டி யொன்றாய்த்
துள்ளவே வெதுப்பி யந்தச் சுரசத்தை வாங்கி மேலே
அள்ளியே பூச மற்று மருந்திட மிகுந்த மாந்தம்
நள்ளிருள் கதிரைக் கண்ட தாமென நாச மாமே. (பா. 51)

பொடுதலைக்குளிகை

சுக்கொடு மிளகு திப்பிலி யோமஞ் சொல்கருஞ் சீரகங் காயம்
பக்குவ மாக வகைக்குநாற் கழஞ்சு பகர்ந்திடு வசம்பொரு மூன்று
மிக்கவைங் கழஞ்சு சாரணை யினில்வேர் மிகுகடுக் காய்பதினைந்து
தொக்கிடு வேலி பொடுதலையோடு தும்பையின்கொழுந்தொருபிடியே(பா. 52)

இருந்திடு கொழுந்தும் வேரொடு சரக்கு மியம்பிய முறைவழுவாமற்
பரிந்துவிவ் வேறாய் வெதுப்பியொன்றாகப் பகர்பெருந் தும்பையின் சாற்றாற்
பொருந்தவோர் சாமமரைத்திடு பின்னர்ப்பொடுதலையினில் வரு சாற்றால்
மருந்தினை யரைத்துக் குன்றியி னளவா யுருட்டிமேல் வகைபுரி செயலே.
(பா. 53)

செயல்புரி சிறுவர்க் குற்றிடு மாந்தஞ் சேர்ந்திடு மசீரணங் கழிச்சல்
மயலுறு சுரமு நீங்கிடு மேற்ற வகையனு பானத்தி லீயக்
கயல்பொரு விழியாய் நோயோடு வயதுங் கண்டுநன் மருந்தினை யேற்ற
இயல்புறு மளவிற் கொடுத்திட நன்றா மென்றனர் முறையுணர்ந்தோரே.
(பா. 54)

பால் மாந்தத்தின் குணம்

மாந்தஞ் செய்யுங் குணமுரைக்கில் வயிறு பொருமி யிரைவுண்டாம்
ஆந்தை போலக் கண்விழிக்கு மன்னைமுலைப்பால் வாந்திக்கும்

வேய்ந்த வேப்பம் பூப்போல விதமாய்க் கழியுந் தாகமிகும்
ஏந்து தனத்து மடநல்லா யியல்பா யுலரு மிளைப்புண்டாம். (பா. 55)

கண்ணுங் குழியுஞ் செவிதாழுங் கருத்து மயங்கிக் குழைவுண்டாம்
புண்போ லுதர மிகநொந்து புளித்துக் கழியும் வயிறூதும்
பண்ணின் மொழியாய் பான்மாந்தம் பகருங் குணங்க ளிவைதீர
எண்ணார் மேதி நெய்தன்னா லியன்ற சிகிச்சை யினிதுரைப்பாம். (பா. 56)

சிகிச்சை: மேதிநெய்

கோதைகேண் மாந்த நெய்யைக் குலமேதி நெய்யு ழக்குப்
போதுசார் வாழை யீர்க்குப் பொடுதலை யிவைசா றொப்பாம்
மீதுயர் கற்க மேலம் விழால்வசம் புடன்வெள் ளுள்ளி
ஓதிய மதுரஞ் சீர முறுதிரி கடுகீ ரைந்தே. (பா. 57)

வாட்டமில் வகை கிளல்லாம் வகைக்கரைக் கழஞ்ச தாகக்
கூட்டியே யரைத்துக் கூறு நெய்யினிற் கலந்து காய்ச்சி
மூட்டியே மெழுக தென்னும் பதத்தினு முதிர வெந்து
நாட்டியே வடித்துப் பின்னை நல்லனு பானங் கேளே. (பா. 58)

கச்சின் முலைப்பா லதினுடனே கழறு நெய்தான் காசளவு
வெச்சோ டிட்டங் குள்ளேகொள் விளம்பு முட்டா யிருக்குமெனில்
நச்சும் பொடுதலை தன்சாற்றி யைந்தே புகட்ட வதற்பின்பு
மெச்சு முள்ளங் காலுச்சி விரும்பித்தடவ மாந்தம்போம். (பா. 59)

போர்மாந்தத்தின் குணம்

பொருமுங் கழியும் புண்போலப் போத மிகவும் வலியுண்டாம்
மருவி முலையுமுண்ணாது மயங்கும் வெருவுஞ் சத்திசெயும்
உருவுங் குன்றுங் கைகால்க ளோய்ந்து குளிர்ந்து துயரமுண்டாம்
புருவ நெரிக்கு மிவைகண்டாற் போர்மாந் தத்திற்கு குணந்தானே. (பா. 60)

போர்மாந்தத்தில் அசாத்தியக்குறி

ஏற்றமாய்க் கழிந்து சோரு மிடையிடை சுருமுந் தோன்றும்
தோற்றவே மிடலு ருக்குந் தோன்றிடும் விலாவெ லும்பு
மாற்றருஞ் சத்தி யுண்டாய் விழிகளு மலர்ந்து மூடும்
சாற்றுமிக் குணங்க ளுண்டே லசாத்திய மென்ற தேரே. (பா. 61)

மாந்தமா முடம்பு வற்றி வயிறொக்க நரம்பு தோன்றி
விந்தையாய் மலங்க ழிந்து விட்டுவிட் டேற்றங் கொள்ளும்
உந்தியிற் கடுத்துச் சீத மொழுகியே புறங்கால் வீங்கும்
விந்தைசேர் மாந்தஞ் செய்யும் விதமஃ துயிரை வாங்கும். *(பா. 62)*

சிகிச்சை குடிநீர்

நிம்பநுணாச் சூத மெகி னத்தி னோடு
நிர்க்குண்டி கொடுவேலி யுத்த மாணி
கொம்புற்ற விவையெல்லா மீர்க்குக் கூட்டிக்
கொண்டுள்ளி வசம்பொடு தலையு மோமம்
துன்பமறு மிருசீர நாகவல்லி
சுகமாகச் சமனிடைநற் கஷாயம் வைத்துக்
கும்ப நிக ருந்தனத்து மடநல் லாரே
குளிப்பாட்ட மாந்தமது குறைத்து போமே. *(பா. 63)*

(சூதம்-மா எகினம்-புளி நிர்க்குண்டி-நொச்சி)

உத்த மாணி பொடுதலையு முவந்த வசம்பு நாயுருவி
சித்த மாவின் றுளிர்நாவற் சேர்ந்த துளிரு மிவையல்லாற்
சுத்தச் சுக்கு மோதகமுஞ் சொல்லும் வெள்ளை யுள்ளியுடன்
நித்தங் குடிநீர் குடிப்பிரா னேர்போர் மாந்தம் வேரறுமே. *(பா. 64)*

நெய்

மங்காத பேய்பருத்தி பெரிய தும்பை
வளர்முருக்குப் பொடுதலையு முருங்கை யோடு
தங்காம லிவையெல்லா முழக்குச் சாகஞ்
சரிசமனாய் நிறுத்ததனைச் சேர்த்துக்கொண்டு
சிங்கார மஞ்சடிரி கடுவெள் ளுள்ளி
சேருமிக மேதிநெய்யிற் சேர்த்துக் காய்ச்சிப்
பங்கான பாக்களவு நக்கும்போது
பறந்துபோ மாந்தமது பரிவாய்த் தானே. *(பா. 65)*

முலைப்பாலே ரண்டெண்ணெய்

போர்மாந் தத்தி லெண்ணெய்க்குப் புகலே ரண்ட நெய்யுழக்குத்
தார்சேர் முலையின் பாலுடனே சாற்று மாவின் பாலுழக்கு
நீர்சேர் கொன்றை தனிற்பட்டை நிகழ்த்தும் வேளை தனின்மூலம்
வேர்சேர் வசம்பு வெள்ளுள்ளி வெட்பாலரிசி தான்கூட்டே. *(பா. 66*

கூட்டிவகைக்குக் கழஞ்சிரண்டு கொண்டேயரைத்துக் கரைத்துவிந்து
நாட்டு மெழுகு பதம்பார்த்து நலமா யிறக்கி வைத்ததற்பின்

ஊட்டு மெண்ணெய் காசளவா யுவந்து முலைப்பால் சேர்த்தருந்தக்
காட்டுங் கொடிய போர்மாந்தந் தீருமென்று கழறினரே. (பா. 67)

குண்டலாதியே ரண்டெண்ணெய்

பொன்னாங் காணி முசுமுசுக்கை புதிய தாளி பழம்பாசி
சொன்னா ரியங்கு தூதுவளை தோன்றுங் குமரி மடற்சாறு
முன்னா யோரொன் றொருநாழி முதிரா மணக்கி னெய்நாழி
மின்வே [1]சீவகஞ் சிவதையுடன் மேவு முரோணி தான்கூட்டே. (பா. 68)

(சீவகம் - இலந்தைப்பிசின்)

கூட்டிக் கலந்து மெழுகுபதங் குறுகக் காய்ச்சி வடிகொண்டு
நாட்டுங் காசி னிடைபுகட்ட நன்றாய் மலமுங் கழிந்திளகும்
பூட்டுஞ் சிலைநேர் நுதலணங்கே போர்மாந்தத்தின் சுரமதனை
வீட்டு முடலுந் தேறுமென மெய்மை யுணர்ந்தோர் விளம்புவரே. (பா. 69)

கொதியெண்ணெய்

அரத்தை குப்பை திரிகடுக மான கடுக்காய் மோதகமும்
உரத்தவசம்பு வெளுத்தலுட னுள்ளி கருஞ்சீர் மரப்பட்டை
நருக்கி யெண்ணெய் தனைக்காய்ச்சி நல்ல மருந்துப் பொடி தூவிப்
பருக்கி மேலுந் தான்பூசப் பதைத்தே மாந்தம் பற்றறுமே. (பா. 70)

(மரப்பட்டை - பீநாறி)

மாந்த மயக்கத்துக்குத் தைலம்

பார்மே னொச்சி பொடுதலையும் பருத்தி வேலி மாவிலங்கை
நீர்சேர் திருகு கள்ளியுவாய் நீண்ட வேலி முத்தெருக்கு
நேர்சேர் கொழுந்தொன் றோர்கழுஞ்சு நிம்பவெண்ணெய்தனிற்காய்ச்சி
ஏர்சே ருடலிற் பூசவிரான் மயக்க மாந்தம் பிரிந்திடுமே. (பா. 71)

(பருத்திவேலி-வேலிப்பருத்தி) வேலி-கொடுவேலி)

மாந்தவில்லை

சீர்பெறு மிளகுள்ளி திப்பிலி யிருசீரம்
பேர்பெறு வசவோடு பொடுதலை யிவையல்லால்
ஏர்பெறு மாவுற்ற வித்தொடு கருநிம்பத்
தேர்பெறு மிலைகூட்டி யரைசுடு நீர்விட்டே. (பா. 72)

(வசவு - வசம்பு)

விட்டரைத்து வில்லைதட்டி வெந்நீ ரனுபானத்
திட்டுவரப் போர்மாந்த மேகுங்காண் - திட்டமுடன்
மாந்தக் கழிச்சல் வயிறுதனிற் பொருமல்
ஏய்ந்தசத்தி யந்நீங்கு மே. (பா. 73)

விஷமாந்தத்தின் குணம்

தாகித்துக் கிறுகி றுக்குஞ் சடக்கென வீங்கும் வாடும்
தேகத்தி னுறுப்ப தெல்லாஞ் சேரவே யுளைந்து குத்தும்
வாகுத்து முதரத் துள்ளே மலம்விடு மடைத்துக் கொள்ளும்
பாகொத்த மொழிநல் லாளே மாந்தந் தானே. (பா. 74)

விஷமாந்தத்தின் அசாத்தியக்குறி

குறிபல கூறக் கேண்மின் குளிர்ந்துமெய் வெதும்பித் தோன்றும்
பெறுமொரு புறத்திற் காயு மறுபுறங் குளிர்ந்து நிற்கும்
பிறமது குளிர்ந்து நின்று பின்னுடல் பெரிதாய் வீங்கும்
செறுமலங் கடுத்து மேலுஞ் சேரவே கழியுங் கண்டாய் (பா. 75)

கண்டிடாய் விடுநீர் மெத்தக் கடுத்துமே கழிச்சுன் மிஞ்சில்
பண்டையோ ருரைத்த வண்ணம் பலமொழி பிதற்றிச்சோரும்
விண்டிடா நாவும் பல்லு மீரலும் வெளுத்துக் காணும்
கொண்டதோர் மாந்தந் தன்னிற் குறியசாத் தியமா மன்றே. (பா. 76)

தொங்கல் மாந்தம்

வலித்திடும் பொருமி வெப்பாய் மாக்கரைத் ததுபோ னீராய்ச்
சலித்திடக் கழிந்தோங் காளந் தங்கிடா தெடுத்துச்சோரும்
சலித்திட வயிறு கூப்பிட் டழுந்திடுங் களக ளக்கும்
நலித்திடுந் தொங்கன் மாந்தஞ் செய்குண னவிலுங் காலே. (பா. 77)

நெய்மாந்தம்

மயக்கிடும் வலித்துச் சோரு மாறிடு மோங்கா ளிக்கும்
உயிர்ப்பறக் கழிந்தே யூதி யுண்முட்டாய்ப் பொருமி யேறும்
செயிர்ப்புறத் திமிர்க்குங் காயும் தீன்மறந் திடுந்தா கிக்கும்
மயர்ப்புற வெண்ணெய் நெய்பா லவலிறைச் சியினின் மாந்தம். (பா. 78)

பழமாந்தம்

பொருமிடும் வலிக்குங் காயும் பொறப்புறு தாளும் வீங்கும்
உருமிடும் வயிறு மூதி யுவாந்திக்குந் தாக முண்டாம்
செருமிடுங் கால்கா யாது திமிர்த்திடுந் தொய்வுண்டாகும்
மருவிடும் பழத்தின் மாவில் வந்திடு மாந்த மன்றே. (பா. 79)

இவற்றின் அசாத்தியக்குறி

ஏற்றமாய்க் கழிந்து சோரு மிடையிடை சுரமுந் தோன்றும்
தோற்றவே யுடலு ருக்குந் தோன்றிடும் விலாவிவ லும்பு

மாற்றருஞ் சத்தியுண்டாம் விழிகளு மலர்ந்து மூடும்
சாற்றுமிக் குணங்கள் கண்டா லசாத்திய மென்று தேரே. (பா. 80)

(இச்செய்யுள் போர்மாந்தம் என்ற தலைப்பில் கீழும்வந்துள்ளது)

அக்கினி மாந்தம் முதற்குறி

உண்டியிற் பொரும லாலு முண்டன்னம் வீழ்த்த லாலும்
கொண்டுதான் கழிந்த தண்ணீர் கொதிப்புடன் வெடிப்பி னாலும்
மண்டியே வெளுத்துக் காய மலங்கெட வுலர்த லாலும்
கண்டிடுங் குறிக ளங்கி மாந்தமாய்க் கழறும் வேதம். (பா. 81)

குணம்

மலமுங் கழியுங் கிறுகிறுக்கும் வரண்டால் வயிறு வலித்துளையும்
சலமு மிகுந்து கழிந்திருக்குஞ் சற்றே யிரத்த மலத்துள்விழும்
பெலமுங் குறைந்து நயனமுகம் பேதப் படவே வெளுப்பேறும்
அலையுங் குணங்க ளிவைகண்டா லக்கினி மாந்த மெனலாமே. (பா. 82)

வந்து மிகுந்து பசியெழுப்பி வயிறு மழுற்றி மந்தித்துச்
சிந்தை தன்னி னினைந்தவெலாந் தேடுங் கொள்ள வொட்டாது
இந்தக் குணங்க ளுண்டென்னி லிதுவே யக்கினி மாந்தமென
அந்தப் படியே யாயுண்மறை யருளிச் செய்த துணர்ந்து கொள்ளே. (பா. 83)

வாயு மாந்தம்

வாயுவும் பொருமி யேறி வயிற்றினி லடசிக் குத்தித்
தேயுவை யடைத்து மூடித் தீன்மறந் தருவ ருக்கும்
பாயுநீர் மலம்வ ரண்டு பசியிலா திருக்கு நாளும்
மீயுயர் வாயு மாந்தம் செய்குணம் விளம்புங் காலே. (பா. 84)

பேய் மாந்தம்

அடிக்கடி சோர்ந்து வீழ மலகைபோல விழித்துப் பார்க்கும்
குடித்தபா லெதிரே டுங்குங் குமிறியே வயிறு போகும்
நடுக்கவே யுவாந்தி செய்யு நகைதரு நுரைநீர் வீழும்
வடத்துறு கொங்கை நல்லாய் வகுத்தபேய் மாந்த மன்றே. (பா. 85)

(இந்நோய்க்கு வரட்பூலாக்கொழுந்து பாக்களவு அரைத்து வெந்நீரிற் கொடுக்க நன்று)

சிகிச்சை- கருக்குக் குடிநீர்

உப்புவேப் பிலைவ சம்போ டுள்ளியுங் கருக்கி யொன்றாய்
அப்புவிட் டவித்த நீரை யளவதா யுட்பு கட்டத்

தப்பிலா மாந்த மெல்லாந் தறுகிடா தகலு முள்ளி
மெய்ப்படி சுட்டுக்கொள்ளில் விட்டிடு மாந்த மன்றே. (பா. 86)

வேர்க்கொம்பு வசம்போடுள்ளி விளம்பிய கடுக்கா யிந்துப்
பேர்க்கருஞ் சீர்வேப் பங்கூ ரிதமிள கசம தாகம்
சீர்க்கடு வுலுவா மல்லி திப்பிலி யிவைக ளெல்லாம்
கார்ப்பெரு மரிசி கூட்டிக் கருக்கிநீர் குடிக்கப் போமே. (பா. 87)

உத்தமா காணி நொச்சி நுணாச்சரு குடன்வேப் பங்கூர்
மெத்திய வசம்போ டுள்ளி வேர்க்கொம்பு கடுக்காய் கூட்டிச்
சத்தமா யவித்துட் கொள்ளத் தொலைந்திடு மாந்த மன்றிச்
சித்தமாங் கொட்டை யுப்பு வசம்புடன் றின்னப்போமே. (பா. 88)

எருக்கலை வாட்டி நீரை யருந்திட விதமாக மன்றி
உருக்குள்ளித் தயில முண்ண வுடனறு மாந்தங் கண்டாய்
பொருக்கென வுள்ளி யுப்புப் பொறுக்கும்வேப் பிலையோடொன்றாய்த்
திருக்கிளர் வெந்நீ ருண்ணத் தீர்ந்திடு மாந்தந் தானே. (பா. 89)

கொதியெண்ணெய்

பொற்புறுசீ ரகமிளகு கடுக்கா யுள்ளி
புதுவசம்பு கோட்டமில வங்கஞ் சுக்கு
அற்புறுதிப் பிலிகருஞ்சீர் தேவ தார
மடுத்தசரக் கொன்றிரண்டு கழஞ்சு வாங்கி
நிற்புறுசிற் றவரையிலை யுத்த மாணி
நிலவியவோ ரிதழின்றா மரைச மூலம்
எற்புறுநல் லெண்ணெயினிற் கொதித்து வார்க்கி
லியன்மாந்தம் வலிகழிச்ச லிளகிப் போமே. (பா. 90)

வாழைப்பூ நெய்

புல்லாந்தி தனிற்கொழுந்து நாவற்பட்டை
பொருவருமால் விழுது மலைதாங்கியிலையும்
செல்லாரு மிரசவா ழைப்பூ வொன்றாய்ச்
சேர்த்துநன்றாய்த் துவைத்தெடுத்த நீரோர் நாழி
சொல்லாரு மிஞ்சியுள்ளி சுக்குக் கோட்டஞ்
சுகமான கொத்தமல்லி நெல்லி யோமம்
நல்லோர்சீ ரகமிரண்டு திப்பி லிந்து
நாடுமதி விடய மிங்கு நறுநெய் கூட்டி (பா. 91)

(இங்கு - பெருங்காயம்)

கூட்டுச்சரக் குள்ளியிஞ்சி யதிக மாகக்
குறித்தசரக் கோலிரொன்று கழஞ்சு வாங்கி
நாட்டியரைத் துப்பதத்தில் வடித்த நெய்யை
நாடோறு மருந்திவ்ரிற் கழிச்சன் மாந்தம்
ஈட்டியஙிவப் பக்கழிச்சல் கிராணி தொங்க
லிதமாகு மக்கரங்க ளிந்த நெய்யிற்
தேட்டமுறத் தீர்த்திடுமே யுண்மை யாகச்
செப்பினார் வாழைப்பூ நெய்யி தன்றே. *(பா. 92)*

[மற்றொரு பிரதியின்படி]

கட்டுமாந்தத்துக்கு

கட்டி போல வயிறது கண்டிடில்
விட்ட பொன்னா விரைவேர் மிளகிவை
கொட்டு றாகரைத் துக்குளிர் நீரிலே
கட்டு மாந்தம்போங் காணப் பருகிலே *(பா.93)*

நீர்மாந்தத்தின் குணம்

மலம் கொக்கின் மலம் போலச் சிறுத்துக்கழியும். வயிறு பொருமும் சலம் கடுக்கும் உடம்பு குளிர்ந்திருக்கும்.

சிகிச்சை

வசம்பும் சுக்கும் தோல் சீவிச் சுட்டு மாவாக்கித் தேனிற் கொடுக்கவும்.

உண்டை

வேம்பு, நொச்சி, குப்பைமேனி, நுணா, பேய்மருட்டி, தும்பை, வரட்பூலா வகைக்கு ஒரு பிடி வெதுப்பிச் சாறு பிழிந்து உள்ளி, மிளகு, வசம்பு, ஓமம், அரைத்துக் கரைத்துக் காய்ச்சி சிறு சுண்டைக்காயளவு உருட்டி வெந்நீரிலிடவும்.

துவாலை

வேலிப்பருத்தியிலை, கஞ்சாவிலை, குன்றியிலை, வசம்பு, ஒருள்ளிப்பூடு, கருஞ்சீரகம், வெளுத்தற்பிசின், சுக்கு, வெண்காரம், அரைத்துக் கொதிக்க வைத்து உச்சி, வயிறு, உள்ளங்கால் உள்ளங்கை இவ்விடங்களிற் பூச மாறும்.

மேனியெண்ணெய்

[மாந்தம் பதினெட்டுக்கும்]

குப்பைமேனி, திராய், சிற்றிலைப்பாலாவி, கஞ்சாங்கோரை, சிவதை, நன்னாரி - இவை சமூலம், எருக்கலம்வேர், முருங்கைவேர், கோரைக்கிழங்கு - இவையெல்லாம் பழத்தேங்காய் துருவின பூவுடன் கூட்டித் துவைத்துப் பிழிந்து நல்லெண்ணெயுடன் கலந்து அதில் இருசீருகம், உள்ளி, ஈருள்ளி, இஞ்சி, கிருமிசத்துரு, சுக்கு, சத்திசெய்த வாளம் அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடிக்கவும். காசிடை கொடுக்க மாந்தம் 18-ம் தீரும் உப்புப் புளி தவிர்க்குக.

முலைப்பாலெண்ணெய்

ஆமணக்கெண்ணெய், நறுநெய், முலைப்பால் சமன்கலந்து திப்பிலி, நற்சீரகம், சுக்க அரைத்துக்கரைத்து மெழுகபதத்தில் வடிக்கவும். காசிடை கொடுக்கவும். தாய் உப்புப்புளி மறக்க மாந்தம் கணை முதிலியன தீரும்.

வாழைப்பூ நெய்

உரைபெறு மிரச வாழையின் பூவு முறுமலை தாங்கியி னிலையும்
வரைபெறு வெள்வேல் சம்புபுல் லாந்தி வகுத்திடு பட்டையிம் மூன்றும்
பரிவுறு மிஞ்சி துவைத்திடு சாறும் பகவுறு நெய்யுமோர் நாழி
நிரைபெறக் கலந்து காய்ச்சியங் கதனி னெல்லியின் காயதிமதுரம். (பா. 94)

(சம்பு - நாவல்)

சீரக மிரண்டு கரியகுந் திருக்கந் திப்பிலி யுள்ளியீ ருள்ளி
வேர்பெறு சுக்கு மதியினிலுப்பு விடயநல் லேலம்வெண் காரம்
பார்பெறு சுக்கு கராம்புச மோதம் பகர்குலக் காய்வசு வாசி
சீர்பெறு கைப்பி னுடன்களிப் பாக்குச் செவ்விய கோட்டமீர் கழஞ்சே.(பா. 95

அவையெலா மிடித்துப் பொடித்ததா டூவி யடுப்பினிற் காய்ச்சிநற் பதந்தான்
நவையெலா மகற்று மெழுகென வடித்து நக்கிட மாந்தமக் கரங்கள்
இவையெலா மகற்றும் வாயினிற் கிரந்தி யேகிடுங் கழிச்சலுமகலும்
புவியெலாம் புகழுந் தமிழறி முனிவன் புகன்றனன் மறைதெரிந் துணர்ந்தே.
(பா. 96)

வேலிப்பருத்தி, கொன்றைவேர், பிரமிசமூலம், பொடுதலை, வெற்றிலைக்காம்பு அரைத்து முலைப்பாலில் வெந்நீரிற் கொடுக்கவும்.

வெண்காயக்குளிகை

உள்ளிபல மிரண்டுடனே யக்க ராவு
மோதரிய சிற்றேல முலுவா நற்சீர்
கள்ளினிற மாங்கருஞ்சீர் சாதிக் காயுங்
கடுக்காயு முடனோமங் கூகை நீறு
தள்ளரிய பொரிகாரம் வெளுத்த லிந்து
சன்னிவிரை சதகுப்பை மதுர மிஞ்சி
உள்ளதொரு சிற்றரத்தை கராம்பு ரோணி
யுற்றநல்ல வசுவாசி காயங் கூட்டே. (பா. 97)

கூட்டு கொத்த மல்லிசா ரணையின் வேருங்
கொண்டுநிறை யிவையெல்லாங் கழஞ்சு வீதம்
கூட்டியுத்த மாகாணிச் சாறு தன்னாற்
குணமாக நாற்சாம மரைத்தே யுண்டை
கூட்டுபா வட்டங்கா யளைவ தாகக்
கூறரிய வெந்நீரி லுரைத்துட் கொள்ள
நாட்டியுள்ள மாந்தவகை கழிச்சல் வாயு
நாடாது நீங்குமென நவின்றிட் டாரே. (பா. 98)

மாந்த சன்னியின் குணம்

பெருத்திடும் வயிறு பெலமுற வலிக்குங் காயும்
வருத்திடு மயக்கி யேறி வயமறத் திமிர்த்துச் சோரும்
அருத்திடு மன்னஞ் செல்லா தயர்ந்திடுந் தாக முண்டாம்
உருத்திடு மாந்த சன்னி செய்குண முரைக்குங் காலே. (பா. 99)

தக்காளி தூதுவளை குதிரை வாலி
சன்னியின்வே ரவுரிதுளாய் பொன்னாங் காணி
மிக்காரும் பெருமருந்து மணித்தக் காளி
மிடுக்கான நொச்சிகிலு கிலுப்பை சீந்தில்
தொக்காரு மின்பூறல் சிற்ற மட்டி
தூயமயி லடிக்குருந்து நத்தைச் சூரி
திக்காருங் கன்முரிசு பேர மட்டி
செப்பியவேர் முசிற்றுமுட்டை நிலத்தினாகம். (பா. 100)

வேர்க்கொம்பு கொத்தமல்லி சன்னி நாயன்
விளம்புசத குப்பையுள்ளி கோட்ட மேலம்
ஏர்க்குமிரண் டரத்தை நற்சீர் வெளுத்தல் காய
மிலவங்கஞ் செண்பகப்பு வசம்போ றொன்ற

தீர்க்கமுற வொருகழஞ்சா யிடித்த தூளைத்
தெளிவெண்ணெய் தனிற்கொதித்துச் சிரத்தேவைக்கக்
கார்க்குமந்த சன்னிமுதற் சன்னி யெல்லாங்
கனலந்தேகு மெனவேதங் கழறு மன்றே. (பா. 101)

குடிநீர்

வேர்க்கொம்பி னுடனிலவே ரரிசி கூட்டி
மேன்மையுற வறுத்ததனைப் போட்டுக் கட்டி
ஏர்க்கவதி னீர்விட்டுக் காய்ச்சி நன்றா
யிருநேர முங்குடித்து வருவீ ராகில்
தீர்க்கமுறு மாந்தசன்னி யிருமல் சேடந்
தீர்ப்பதற்குக் கைகண்ட குடிநீ ராகும்
கார்க்கரிசி தனைவறுத்துத் தெளிவாய்க் கொள்ளிற்
கலைந்தேகுஞ் சன்னிபதி னெட்டுங் காணே. (பா. 102)

பொடி

நன்னாரி தூதுவளை வட்டு வேளை
நாட்டுசெங்க ளப்பன்னை யிவைவே ரின்னம்
சொன்னார்கன் முசிறரிசி நிலவேர் திப்பில்
கறுக்கான மிளகுவசம் புடன்க ருஞ்சீர்
பொன்னார வெச்சோடு காட்டித் தூளாய்ப்
புனரையின்றன் பழமவித்த நீரிற் றானே
முன்னாக வேயரைத்து வெதுப்பி யுண்டான்
மொழிமாந்த சன்னிமுரிந் தேகு மன்றே. (பா. 103)

சிற்றமட்டிக் குளிகை

சீரக மிரண்டினொடு மோதகந் திப்பிலி
சிறந்தநற் சுக்குமிளகு
செல்வசம் புள்ளியுஞ் சீர்பெருங் காயமுஞ்
சேர்குப்பை மேனியுடனே
ஊர்தனின் முதலியோ டுத்தமா காணியு
மோசைபெறு சிற்றமட்டி
யொக்கவே யிவைவேர்கள் சமனா நறுக்கியே
யோரளவு கூட்டிவெந்த
நீர்விட் டரைத்தபின் னொருபங்கு நேர்வாள
நிலைமைதவ றாதுகூட்டி

நிகழுமறு பங்கதனை நன்மருந் தாகவுந்
நேரவரை மிளகினளவாய்ச்
சீர்பெறுங் குளிகைதனை யேநிழ லுலர்த்தியே
செப்பதனி லிட்டுவைத்துச்
சிறுபால ருக்குற்ற மாந்தவகை முதலான
தீருமனு பானமடைவே. (பா. 104)

(சரக்குகளை அரைத்து அரைப்பங்கை எடுத்து அத்துடன் 1 கழ- வாளம் சேர்த்து அரைக்கவும். ஏற்ற அனுபானங் கூட்டுக என்பது கருத்து. சரக்குகள் ஒரு கழஞ்சாயின் பாதிக்கு சுத்திசெய்த வாளம் ஒரு கழஞ்சு கூட்டுக.)

மாந்தசன்னிக் குளிகை - வேறு

மாந்தசன்னிக் குளிகைதனை யுரைக்கப் கேண்மின்
வளமான சாதிலிங்க மிருசீ ருள்ளி
போந்தபெருங் காயமுடன் கராம்பு வாசி
பொலிவுபெறுஞ் சாதிக்காய் சீனக்காரம்
பந்தசுக்குத் திப்பிலியுங் கிருமி சத்ரு
வளருமிலைக் கள்ளிமுகி ழுசம தாகம்
ஏந்துதன மங்கையரே கழஞ்சொவ் வொன்றா
மேலமொடு நேர்வாள மிருக ழஞ்சே. (பா. 105)

பாங்காகி லெலுமிச்சம் புளியும் விட்டுப்
பரிவாக வரைத்துப்பா வட்டங் காய்போல்
மங்காம லுருட்டிநிழ லுலர்த்திச் செப்பில்
வைத்திருந்தா லனுபான வகையைக் கேளும்
பொங்காத பால்மாந்த குணத்தைச் சொல்லிற்
பிள்ளைமுலை யுண்ணாது காய்ச்சல் சத்தி
அங்காகி லொருகுளிகை யிளவெந் நீரி
லருத்திடுவா யிந்நோய்க ளகன்று போமே. (பா. 106)

இந்நோய்போங் கல்மாந்த குணத்தைச் சொல்லி
வியல்பாக வயிறழுது பொருமி யெங்கும்
வன்னோய்போ லேயுலருங் குளிகை யொன்று
வாங்குதித்தில் வெல்லமதில் வழங்க மாறும்
பொன்னாரு மடமானே யூது மாந்தம்
பொருந்துகுணங் காய்ச்சலொடு வீக்கம் பொல்லா
திந்நோயென் றெலுமிச்சம் புளியி னோடே
யிட்டிடுவா யொருகுளிகை யேற்கத் தானே. (பா. 107)

ஏற்றசிலேற் பனசன்னி மாந்தம் வந்தா
லிக்குணங்கேள் காய்ச்சல்குளிர் வரட்சி நெஞ்சு
கார்க்கிலதற் குக்குளிகை யொன்று தேனிற்
கரைத்துண்ணக் கொடுமாறுஞ் சன்னி மாந்தம்
ஆர்க்குமொரு பிள்ளைதனக் குளதே யாகி
லரிதான காய்ச்சல்குளிர் திடுக்காட் டந்தான்
வேர்க்கொம்பு தனையவித்த நீரிற் றானே
விதம்படவே குளிகையொன்று விரைந்தி டாயே. (பா. 108)

ஒன்றறியதோர் புழுமாந்தம் குணத்தைத் தானே
யுரைத்திடுகில் வயிறூதும் பொருமும் வாயாற்
கன்றியதோர் கிருமிவிழு மலச லங்கள்
கட்டாது குளிகைபழுப் புளியி னோடே
தின்றிடுகிற் றீருமே செமியா மாந்தஞ்
செய்குணங்கேள் முலைப்பாலைத் தேடி டாது
வென்றிடுகின் மிளகவித்த நீரிற் றானே
விதம்படவே குளிகையொன்று விரைந்திடாயே. (பா. 109)

மெலிந்திட்ட வலிமாந்த குணத்தைக் கேளு
மேலிருகால் கரம்வீங்குந் தலையி டிக்கும்
மலிந்திட்ட நுரைவீழும் வாயி னாலே
வயிறுபொரு மும்வசம்பு மிளகோ டுள்ளி
வலிந்திட்ட திப்பிலியு மவித்த நீரில்
வளமான குளிகையொன்று வழங்கத் தீரும்
அலைந்திட்ட கனிமாந்த குணத்தைத் தானே
யறைந்திடுகி னீலமுறு மங்கந் தானே. (பா. 110)

நீலமுறும் வயிற்றாலே நுரையும் வீழு
நிசமான வுள்ளிவேர்க் கெம்பி னோடு
கோலமுறு திப்பிலியு மசம தாகங்
குடிநீரிற் குளிகையொன்று கொடுக்கத் தீரும்
ஆலமுறு மானாக மாந்தம் வந்தா
லக்குணங்கே ளடிக்கடியே சீறும் விக்கும்
சீலமுறு முலையுண்ணாச் சுரம்வேர்க் கொம்பு
திகழ்வசம்பு மவிகுளிகை செலுத்தி டீரே. (பா. 111)

செலுத்தியபி னமர்மாந்த குணத்தைக் கேளுந்
தெளிவாகக் கண்முளிசுங் காய்ச்சல் சேரும்

வலுத்துமல சலமடைக்குங் கடுக்கா யேல
மலிவான மிளகுதூரி சிலவங் கந்தான்
பெலத்தமருந் துடனேதிப் பிலியுங் கூட்டிப்
பிசகாம லெலுமிச்சம் புளியும் விட்டே
உலர்த்தியநற் குளிகையுட னரைத்துக்கொண்டா
லோடுமமர் மாந்தமென வுரைத்த வெல்லாம். (பா. 112)

எனவுழத்து மாந்தத்தின் குணத்தைக் கேளு
மியல்பான தலைநடுங்கு மலம டைக்கும்
கனவுழத்தி காய்ச்சலொடு வீக்கங் காட்டுங்
கருதுமருந் துற்றசிறு சீந்திற் சாறும்
மனமுறுநல் லெள்ளெண்ணெய் குளிகை யொன்றும்
வைத்திடவே மாறுமது வாத சன்னி
எனவுரைத்த மாந்தமுறுங் குணங்கடன்னை
யிசைத்திடுவன் றனித்தனியே யின்ப மானே. (பா. 113)

இன்பமா யுரைத்திடக்கேள் காய்ச்சல் தூக்க
மிசைக்குமடிக் கடிமயக்குங் குளிர்ச்சி வேர்வை
துன்பமாய் வரிற்கடுகு பெருங்கா யந்தான்
சுக்கமிள கவிநீரிற் குளிகை கூட்டி
அன்பதாய்க் கொடுத்திடுகின் மீளுங் கோழை
யானசன்னி மாந்தமதின் குணத்தை யாயில்
வன்பதாய்க் காய்ச்சலுடன் மூச்சுக் கொள்ளும்
வயிறூதிப் பொருமிமல மடைக்குந் தானே. (பா. 114)

மலமடைக்குஞ் சறளிகொள்ளு மிளைக்கும வேர்க்கு
மாறாம னெஞ்சிடிக்குஞ் சேற்ப முண்டாம்
சலமடைக்கு மிதற்குமருந் தொன்று கேண்மின்
றக்கோரே வெள்ளையுள்ளி யசம தாகம்
பெலமுடைக்குங் கடுக்காயுங் கறுவாத் தோலும்
பேச்சுக்கு மதியினுப்புப் பெருஞ்சீர் தானும்
செலமுடைக்குந் துருசுவசம் புடனே மேனி
சேரிலையு மொவ்வொர்நிறை தேடிக் கொள்ளே. (பா. 115)

தேடிக்கொண் டெள்ளிலெண்ணெய் குளிகை தானுஞ்
சேர்த்தரைத்தே யிம்மருந்து திடம தாக
நாடிக்கொண் டிதையறிந்து நேரந் தானு
நல்கியிடிற் றியாலமது மூன்றாய் நாட்டும்

கோடிக்கொண் டிருந்தசிறு பிள்ளை மாந்தங்
குணமாகு மனுபானங் குறித்துச் செய்தால்
வாடிக்கொண் டிருந்தவிடை மானே கேளாய்
மற்றிதுபோன் மருந்துமா மலைதனிலுமிலையே. (பா. 116)

நீர்ப்பாட்டின் குணம்

தண்ணீர் நிறைந்த குடமுடைந்தா லென்னக் கழியுந்தாகமுண்டாம்
உண்ணீர் விழியுஞ் சொருகிவிறைத் துடனே வேர்த்து நாவரளும்
புண்ணீர்ந்தெனவே வயிற்றுவலி புரட்டிப் புரட்டிச் சோகிக்கும்
கண்ணோர் பரண்டைவலித்துளைந்துகளையாய்மயக்கு நீர்ப்பாடே. (பா. 117)

நீர்ப்படுவன் குணம்

உரமாய் வயிறு வலித்தூதி யுடனே கழிந்து சோகித்துப்
பரமாய் வறுகிச் சியலிரத்தங் கழிந்தே பகர்நாக் கொன்னிக்கும்
திரமாய் நீர்போல் விறைத்தேறித் திமிர்த்தேமயக்குங் களையுண்டாம்
கரமே போலுநீர்ப்படுவன் சதிக்குக் குணங்க ளிவையாமே. (பா. 118)

சொரியாப்படுவன் குணம்

பொருமி வயிறு புளித்தெழும்பிப் புகைந்தே வலித்துச் சோகித்துச்
செருமி யூதிச் சத்தித்துத் தீனை மறந்து துயரித்தே
அருவிக் கழிந்து வயிறழுதே யதிக மாகத் தாகிக்கும்
மருவிச் சரீரந் தனைக்கொடுக்கு மாயச் செரியா மையின் படுவன். (பா. 119)

ஈரற்படுவன் குணம்

ஈரற் குலையை வறுகி நொந்தே யெரிந்து புகைந்த வலியுண்டாய்ச்
சோரக் கழியுந் துயர்செய்யுஞ் சுருட்டி யுடலைக் கூனிவிக்கும்
யாரச் சரீரங் குளிர்ந்தேறிப் பார்வை குறைந்து நாவரளும்
தீர மயக்கி விறைத்தேறுந் திடனா மீரற் படுவனிதே. (பா. 120)

இரத்தப்படுவன் குணம்

வயிற்றை வலித்துப் பொருமிநொந்து வறுகிப் புரட்டிச் சோகித்தே
உயிர்ப்பை யளித்தோங் காளிக்கு முதிரங் கழிந்து தாகிக்கும்
பயிர்ப்பிற் சரீரங் குளிர்ந்தேறிப் பதறி விறைத்து வேர்வையுண்டாம்
செயிர்ப்பி லிரத்தப்படுவனிது திண்ணங்கொலை செய்திடுமென்பர். (பா. 121)

சிகிச்சை

உள்ளித்தைலம் - ஒத்தணம்

உரித்தே யுள்ளி தனையரைத்திட் டுடனே சீலை தனிற்பூசி
எரித்தே விளக்கிற் காச்சிவடித் திதமாயருந்திச் சிரத்தில் வைத்துப்

பரித்து நீறு குழைகொண்டு பார்த்து வேம்பி னிலையைவறுத்
தரித்துப்பொட்டாய்ப் பிடித்துவரி லகலுநீர்ப்பாட்டுடன்படுவன். (பா. 122)

தாகத்துக்குக் குடிநீர்

நீர்க்கரை மணல்கொணந் தூரிய சட்டியிற்
கார்க்கமாஞ் சருகுடன் கலந்நெ ரித்துப்பின்
கூர்க்கநீர் விட்டது குறுகக் காய்ச்சியே
பார்க்கநீர் வடித்துடன் பருகிற் றாகம்போம். (பா. 123)

கருக்குக் குடிநீர்

பருத்தி விறகு பச்சோலை பருத்த வேர்க்கொம் பீரவுள்ளி
எரித்த கரியி னீர்விட்டே யிதமாய்க் காய்ச்சி வடித்தருந்தில்
உரித்தா முழலை நாவரட்சி யுடனே யகலு மதுவன்றிக்
கருத்தா லோதி நீர்கொடுக்கிற் கழிச்ச றாக மகன்றிடுமே. (பா. 124)

(ஓதிநீர் கொடுக்கில் என்பதை நீரோதிக் கொடுக்கில் என மாற்றுக. நீரோதும் முறையும் மேற்கூறிய நீறுகுழை கொண்டு பார்க்கும் முறையும் பிரதிகளிற் கூறப்பட்டிருப்பினும் இங்கு சேராது நீங்கினோம்)

நீர்ப்பாட்டுக்கு

சோற்றைச் சமைத்து வறுத்ததனைத் தூய நீர்விட் டுறக்காய்ச்சி
மாற்றி வடித்துக் குடித்துவரின் மாறு நீர்பாட்டுடன்கழிச்சல்
போற்று முள்ளி வேர்க்கொம்பு பொருந்து முத்தா மணிச்சாற்றை
ஊற்றி யரைத்துக் கொதிக்கவைத்தே யுடனே பூசிச் சிரத்தில்வையே.(பா. 125)

குடிநீர்

மாங்கொட்டை வசம்பு சுக்கு மதித்தவெள் ளுள்ளி கூட்டிப்
பாங்கிட்டு வறுத்து நன்றாய்ப் பரிந்துநீர் விட்டுக் காய்ச்சித்
தாங்கிட்டு வடித்தே யுண்ணிற் றணியநீர்ப் பாட்டு மாந்தம்
ஓங்குவேப் பிலைக ருக்கி யுடன்காய்ச்சிக் குடிக்கப் போமே. (பா. 126)

நீர்ப்படுவனுக்கு

அரிசியை வறுத்து நன்றா யவித்தநீர் தனைக்கு டிக்க
உரியவேப் பிலைது வைத்தே யுடன்வறுத் தொற்ற நன்றாம்
பொருவருங் குளிகை சுக்குப் பொடியுடன் கலந்து தேய்க்கத்
தெரிவரு மூன்று நாளுஞ் சென்ற பின் நீறு மன்றே. (பா. 127)

உத்தமா காணி நொச்சிச் சருகுடன் வறுத்தே யொற்ற
நித்திய சாம்ப லொற்று நிதானமாய்ப் பிடிக்க நன்றாம்

சுத்தமாய் மூன்று நாளுஞ் சுகவெந்நீர் குளித்த லாகும்
புத்தியா லறிந்து செய்யிற் பொறுக்குநீர்ப் படுவன் றானே. (பா. 128)

சரீரம் விறைத்து வேர்க்குமெனிற் றானே கொண்மாப் பிடிக்கநன்றாம்
தரியா தென்னி லெருக்கலைவேர் தானே பிடுங்கி யிடித்தவித்துப்
பரிவா லொற்றுப் பிடித்துவரிற் பகரும் வேர்வை விறைப்பேகும்
பிரியாதிதற்கும்வேர்க்குமெனிற் பேராக்குணமென் றறிந்து கொள்ளே. (பா. 129)

தாகத்திற்குக் குடிநீர்

மாம்பூ விரண்டு பிடிபிடுங்கி மணலுங் குளத்திற் கரையள்ளிக்
கரம்பு கூட வறுத்தொன்றாய்க் காய்ச்சிக் குடிநீர் குடித்துவரில்
தேம்பு தாக நாவரட்சி திடனாய்மாறுங் கைகண்டோம்
சோம்பு கழிச்சன் மாறாதேற் சுக்குக் களியு நன்றாமே. (பா. 130)

இஞ்சி யுறட்டி யதுமாகு மிதமாய்க் கழிச்சன் மாறிவிடும்
மிஞ்சிக் கழியி லிஞ்சி நெய்யு மீளு மருந்தி வருவீரேல்
அஞ்சு விதமா நோய்களுக்கு மடுக்கி மிந்த மருந்தெல்லாம்
வஞ்சிக் கொடியே பலகாலு மதித்தே பாய்ந்து மருந்துசெய்யே. (பா. 131)

ஓங்காளத்துக்கு

இஞ்சிக் கிழங்குஞ் சீரகமு மியல்பா யரைத்துத் தேன்விட்டு
மிஞ்சக் காய்ச்சி யருந்திவரின் மீளுஞ் சத்தி யோங்காளம்
தஞ்ச மாகுஞ் சாதிக்காய் சாற்றுஞ் சுக்குச் சீரோமம்
கொஞ்சமாக வறுத்திதனைப்பொடித்துத்தேனிற் கொள்ளுகவே. (பா. 132)

தாமரைவளைய ஏலாதிக்குளிகை

ஏலம்வெண் கோட்டஞ் சாத்திர வேதி யிலவங்கஞ் செண்பகமொக்கு
மாலுறு குலக்கா யுருத்திர மணியு மருவுகோ ரோசனை மதுரம்
வேலைநேர் விழியாய் பூமியி னாக மேவிய முசிறினின் முட்டை
வாலிய மான்கொம் போடுசெங்கழுநீர் வருகிழங்கொவ்வொருகழஞ்சே.(பா. 133)

தாமரை வளையச் சாறுகொண் டரைத்துச் சாற்றுபா வட்டையின் காய்போல்
தோமற வுருட்டி யேநிழ லுலர்த்திச் சுகவனு பானத்தி லீய
ஆமுறு தாக நாவினில் வரட்டி யவற்றொடு மிகுசுரந் தோஷம்
பூமலி குழலாய் மாந்தமக் கரங்கள் பொருமுநீர்ப் பாடிவை போமே.(பா. 134)

மிருத்தியாதிக் குளிகை

போமதி மதுரங் கோட்டமோ டாரம் புகலிரு வேலியா மிச்சு
நாமமார் முத்தற் காசுநன் னாரி நற்கிலு கிலப்பைசெங் கழுநீர்

பூமலி பங்கம் பாளைவேர் சுக்குப் பொருந்துமுந் திரிகைபே ரீஞ்சு
காமுறு விழிசேர் கலையினிற் கொம்புங் கருதுகோ ரோசனைஞாழல்.(பா.135)

அவற்றொடு காண்டா மிருகத்தின் கொம்பு மாரலின் கிழங்குபூநாகம்
குவித்துறு முசிறி னரிசிசெண் பகப்பூக் கூறிய திப்பிலி தேவர்
உவப்புறுதாரம் பசியகர்ப் பூர மொன்றொருகழஞ்சுகொண் டிவற்றைத்
தவத்துறு முனிவர் கூறியவண்ணந்தகுமுலைப்பாலினி லரையே.' (பா. 136)

அரைத்திடு மெழுகு பதத்தின் மூர்க்கத் தளவுற வுருட்டி நன்மருந்தை
உரைத்திடு நோய்கட் கேற்றனு பானத் தோடுண மாந்தமக் கரங்கள்
பருத்திடு வாத பித்தசேற் பனத்திற் பகர்சுரஞ் சன்னியுட்குத்து
விரைக்குழன் மடவாய்தீருமென்றாயுள் வேதிய ருரைத்தனர் தெரிந்தே.(பா. 137)

(மூர்க்கம் - பயறு)

வாதமாந்த வலிப்பின் குணம்

கைகால் குளிர்ந்து தரம்பொருமிக்
கண்ணும் வெறிக்கப் பார்வையுண்டாம்
மெய்தான் வேர்வை முகந்திருக்கும்
விறைத்தே வலிக்கும் பலவிதமாய்ப்
பொய்யா மேப்பங் கொட்டாவி
புன்க ணாசி நீர்வடிதல்
மையார் குழலா யிவைகண்டால்
வாத மாந்தம் வலிப்பாமே. (பா. 138)

(குளிர்ந்து உதரம் பொருமி எனப் பிரிக்க உதரம் - வயிறு)

பித்தமாந்த வலிப்பின் குணம்

வாந்தி பிராந்தி மூச்சுழலை வலுவாங் குரலுஞ் சீணித்துக்
காந்தல் சோபம் வேர்வையதாய்க் கைகால் குளிர்ந்து கடுப்புண்டாம்
சேர்ந்த பஞ்ச விந்திரியஞ் சீர்கெட் டிருக்கும் பலவிதமாய்ப்
பேர்ந்து குன்றி வலியுண்டாம் பித்த மாந்த வலிப்பிதுவே. (பா. 139)

சிலேற்பனமாந்த வலிப்பின் குணம்

மெய்யுங் குளிருஞ் சிலிர்த்துவரு வாய்நீர் வீழ மோங்காளம்
கையுங் காலுந் தினவாகுங் கனத்தே வயிறு தான்பொருமும்
பையப்பேசு முடல்பெரிதாம் படுமேன் மூச்சுச் சிறுதுறங்கும்
செய்யவலியாஞ் சிலேற்பனத்திற் செப்பு மாந்த வலிப்பிதுவே. (பா. 140)

சிகிச்சை பெருங்காயக்குளிகை

செப்பும் வெளுத்தல் வசம்புள்ளி திறமாங் காயம் பீநாறி
தப்பின் மாயாக் காயினுடன் சாற்று மிளகு சுக்கோமம்

துப்பா ரிலுப்பை யரைப்புடனே சொல்லும் வேம்பின் பிண்ணாக்கும்
ஒப்பாய் வேலிப் பருத்தியினி லுற்ற விலைச்சாற் றினிலரையே. (பா. 141)

அரைத்துத் தூதின்பழமளவா யாகு முண்டை நிழலுலர்த்தி
உரைத்து வேம்பி னெண்ணெயினி லிடவே யோடு மாந்தவலி
தெரிக்கு நாவ னொச்சியொடு செங்கத் தாரி முடிதும்பை
வரைக்குணாச்சி துடரிபொடு தலைநற் றுளிர்க ளவித்திடுமே. (பா. 142)

அவிந்த நீரி லுரைத்திட்டா லகலும் பொருமல் கழிச்சலொடு
சிவந்த குத்துக் கொழுவுதலு நீங்கும் விடஞ்சேர் மாந்தமதும்
தவந்தா னியற்றுந் தமிழ்முனிவன் சாற்ற மறையின் மொழிப்படியே
குவிந்த தனத்து மடநல்லீர் குறித்துச் செய்ய வல்லீரே. (பா. 143)

வல்லவிம் மருந்து தன்னிற் பாதிக்கு வாளங் கூட்டி
ஒல்லுநன் முறைய தாக வுத்தமா காணிச் சாற்றால்
வல்லவா றரைத்து ழுந்தி னளவதாம் வகையு ருட்டிச்
சொல்லிய நோய்க்குப் பேதி வேண்டிடிற் கொடுக்க நன்றே. (பா. 144)

பெருங்காயக் குளிகை - 2

வல்லிருசீ ரசகமதுர மிளகு சுக்கு
வகுத்ததிரி பலையோம முள்ளி காயம்
மல்லிசன்னி விரைகோட்ட முயிற்று முட்டை
வருநிலவேர் சமன்கொண்ட மங்கை பாலால்
சொல்லு முறை யரைத்திலகம்விரையே போலச்
சுகம்பெறவே யுருட்டிநிழ லுலர்த்தி யிஞ்சி
நல்லமுலைப் பாலொடுதேன் கூட்டி யீய
நாடாது பொருமல்குத்துப் பொறுப்பும் போமே. (பா. 145)

போகு மாந்தம் பொருமல் கழிச்சலுக்
காகு மோமம் வறுத்தவி நீரிற்றேன்
நாகை யுள்ளியீ ருள்ளி நவில்சமன்
தோகை பாலி லரைத்துக் கலக்கியே. (பா. 146)

கூறு நன்மருந் திட்டுக் கொடுக்கவே
சீறு மாந்த வலிப்புச் சுரமொடு
வீறு சன்னி யிரும லடைப்பிவை
மாறு மென்று வகுத்தனன் மாமுனி. (பா. 147)

மாந்தக் குளிகை

மாந்த மதினோய் பலவகற்று மாந்தக் குளிகை வகுத்திடுவன்
வாய்ந்த வுள்ளி மிளகோமம் வசம்பு கருஞ்சீர் பெருங்காயம்

போந்த வரத்தை சிறுதிப்பில் பொலியு மாங்காய் தனிற்பருப்பு
வேய்ந்த வடைகாய் தனிலெடுக்க நன்றாமியற்றும் விதங்கேளே. (பா. 148)

கேளீர் காய மொன்றொழித்த வெல்லா மரைத்து வில்லைதட்டி
மாள வுப்புக் கவசித்து மருந்தைச் சுட்டு வெந்தபின்பு
மீளக் கவசந் தனைநீக்கி விளம்புங் காய மதனோடு
நீளு மம்மி தனிலிட்டு நிகழ்த்தும் பொடுதலைதன்சாற்றால் (பா. 149)

அரைத்துத் தூது வளங்காயி னளவா யுருட்டி யனுபானத்
துரைத்தே யிட்டான் மாந்தவகை யெல்லாந் தீரு முண்மையிது
கரைத்துக் கொடுக்கு மொருகுடிநீர் கராம்பீ ருள்ளி மாயாக்காய்
பருத்திப் பிஞ்சு மாதளையின் பூவும் வசுவாசி. (பா. 150)

மதுர மோம மிவையெல்லா மளவா யெடுத்துப் பொடிசெய்து
சதுரம் பெறுநீர் விட்டவித்துத் தானே புகட்ட வக்கரங்கள்
கொதிநீர் போல வருங்கழிச்சல் குடலி லவியல் மாந்தவகை
இதமாக மென்றே யாயுண்மறை யிசைத்த வுண்மை யறிந்துகொள்ளே.

கொதியெண்ணெய்

முப்புர மெரித்த மூலி முதிர்ந்தலீ சுரனார் மூலி
தப்பறு மஷி நத்தைச் சூரியன் பூறல் குந்தம்
செப்புறு வாசை நொச்சி பரிதரு வாலி வேர்கள்
ஒப்புறு மதுரங் கோட்டஞ் செண்பகப் பூவே யோமம். (பா. 152)

(முப்புரமெரித்த மூலி-சிவனார்வேம்பு ஈசுரனார் மூலி-பெருமருந்து குந்தம்-குருந்து வாசை-ஆடாதோடை)

சன்னியின் விரைவ சம்பு சார்சிறு தேக்க ரத்தை
துன்னுங்வண் பிசின்க ருஞ்சீ ரகநில வேர்மு யிற்றின்
மன்னிய முட்டை யெல்லாம் வகைசமன் பொடித்துக் கொண்டு
பன்னுமெள் ளெண்ணெய் தன்னிற் கொதித்திட வலிகள் போமே. (பா. 153)

பொடுதலையெண்ணெய்

வெள்ளையுள்ளி பெருங்காயம் வெளுத்தலுடன் றிப்பிலியும்
உள்ளகடுக் காய்மிளகோ டுறுவசம்பு சமன்கொண்டு
கள்ளுறுமுத் தமாகாணி காட்டுப்பொடு தலைதுவைத்துக்
கொள்ளவரு சாற்றரைத்து நிம்பவெண்ணெய்கொதித்திடுமே. (பா. 154)

கொதிக்கவைத்து மெழுகதெனுங் கூர்ப்பதத்தி லேவடித்து
விதித்தபடியுட்புகட்டி மேற்பூசி யுச்சியிலும்
மதித்துவைக்க மாந்தவலி மாறாத தலைக்கனப்புக்
குதித்தோடிப் போகுமெனக் குறியமுனி யுரைத்தனனே. (பா. 155)

அக்கரம்

சோதிசேர் கைகலை மீதிற் சொல்லரு மமல மூர்த்தி
நீதிசேர் நந்திக் கந்நா ணிகழ்த்திய வாயுள் வேதத்
தோதிய வக்க ரத்தி னுறுகுணஞ் சிகிச்சை யாவும்
தீதிலா வுலகின் மீதே யறிந்தவா செப்ப லுற்றாம். (பா. 156)

அக்கரத்தொகுப்பு

கறுப்புடன் சிவந்த வெள்ளை காட்டு முள் ளீரல் வாயிற்
பொறுத்திடு மக்க ரங்கள் போந்தவக் கரத்தின் மேவிச்
செறுத்திடு சுரமுஞ் சன்னி சேருமக் கிரந்தி
ஒறுத்திடு குணஞ்சி கிச்சை யோதுவ லுணர்ந்து கொள்ளே. (பா. 157)

(உள்ளீரல் வாயிற் பொறுத்திடுமக்கரங்கள் என்பதற்கு உள்ளக்கரம், ஈரலக்கரம், வாயக்கரம் எனப்பொருள் கொள்ளுக)

கறுத்த அக்கரத்தின் குணம்

மந்திக்குந் தலைக்குத் துண்டாம் வயிற்றினிற் பொருமிக் காயும்
வந்திக்கு மிருமி முட்டாய் மயக்கிடும் வயிற்றி னோவாம்
அந்திக்கு மதரம் புண்ணா மனுங்கிடு மோங்கா ளிக்கும்
கந்திப்பச் சிலைச்சா றேபோற் கரியெனக் கழிச்ச லுண்டே. (பா. 158)

உண்டியு மறந்து மேனி கருகியுள் ளவிய லுண்டாய்
மிண்டிடு மிரவி னாளு மிடுக்கிடுஞ் சோகஞ் செய்யும்
கொண்டிடும் வரட்சி தாகங் குளிருட நடுக்க முண்டாம்
கண்டிடுங் கறுத்தத் தீய வக்கரங் கடின மாமே. (பா. 159)

சிகிச்சை குடிநீர்

கரியசீ ரகமிளகு நாகையுள்ளி பிரமி
கர்ப்பூர வள்ளிசிறு காஞ்சோன்றி திப்பில்
உரியதொரு வல்லார லிவைசரக்கு நிறையா
யுடன்காய்ச்சி யந்திசந்தி யுட்கொள்ளு வீரேற்
மெரியகறுத் தக்கரமும் பறவையொடு வெப்பும்
பேசரிய விஷகிரந்தி யவியன்மிகு மாந்தம்
அரியசுர மிவையனைத்து மகன்றுவிடு மென்றே
யாயுண்மறை யறைந்தபடி யறிந்துசெய நன்றே. (பா. 160)

திற்பிலி யிருசீ ரோமந் திகழுதி மதுர மேலம்
பொற்புறு நாகை யுள்ளி புகலில வங்க மாயாச்
சொற்பெறு கராம்பு வாசி தூயசா திக்காய் கோட்டம்
சிற்புறு மரத்தை சுக்குச் சீருள்ளி கடுக்கா யிந்து. (பா. 161)

இந்துசெவ் வள்ளி பூத விருக்கமோ டியல்செஞ் சந்தம்
முந்தவொன் றொருக ழஞ்சாய் முதிர்வள்ளிச் சாற்ற ரைத்துக்
கந்தமாண் பனையின் வெல்லங் கலந்துமே யருத்து வீரேற்
றொந்தவக் கரங்க ளெல்லாந் துணிந்துட னகலுந் தானே. (பா. 162)

தூதுவளைநெய்

தூதுவளை நன்னாரி கண்டங் காலி
தூயவா டாதோடை வட்டின் வேரும்
தீதறுசீ ரகமிரண்டு திப்பிலி கோட்டந்
திகழேல மதிமதுரங் கடுக்காய் சுக்குப்
பேதமறு நாகையுள்ளி யசம தாகம்
பேணியொரு கழஞ்சுகொண்டே யிடித்து மாவாய்க்
கோதறுதூ துளையிலைகாய் துவைத்த நீரிற்
குறித்தரைத்தே நெய்வெதுப்பிக் கொள்ளப் போமே. (பா. 163)

செங்கத்தாரி நெய்

செங்கத் தாரி தூதுவளை சிறந்த கண்டங் காலிவட்டுத்
தூங்க மாரின் பூறனன்னார் தூதி விலைகாய் வல்லாரல்
தங்க மார்கர்ப் பூரவள்ளிச் சாறு மிவையோர் சரிகொண்டே
பங்க மறுநற் பசுநெய்யும் பகரு மிருசீர் ரகமேலம். (பா. 164)

ஏல மதுர மீரவுள்ளி மிலவங் கந்திப் பிலிமிளகு
சாலுங் கடுக்கா யிந்துப்புச் சாதிக் காய்செவ் வளிகோட்டம்
கோல முறுவே ருடன்சரக்குக் கூட்டி வடித்துட் கொள்வீரேல்
பாலர் கிரந்தி யக்கரமும் பகரு மவிய லிவைபோமே. (பா. 165)

செங்கத்தாரி முதல் நன்னாரி வரைக்கும் வேர் தூதுவளையிலை. காய் - வல்லாரல் - கர்ப்பூரவள்ளி - இவை சாறுவகையும் நெய்யும் வகை நாழி -`1 வேரும் சரக்கும் - வகை கழஞ்சு - 1. கூட்டி வடிக்க.

கொதியெண்ணெய்

நன்னாரி தூதுவளை பொன்னாங் காணி
நல்லபெரு மருந்தவுரி குதிரை வாலி
பொன்னாருங் கிலுகிலுப்பை மணித்தக் காளி
பொருந்துமயி லடிக்குருந்து சிற்ற மட்டி
மின்னாரு மின்பூற லமுக்கி ராய்வேர்
மிக்கதுளாய் நற்சீந்தில் சன்னி யின்வேர்
சொன்னாரோர் நிறைகொண்டே யிடித்து மாவாய்ச்
சோராமற் சரக்குச் செங் கழுநீர் கோட்டம். (பா. 166

கோட்டமுள்ளி சதகுப்பை வசம்போ டேலங்
கொத்தமல்லி யீரரத்தை செண்ப கப்பூ
நாட்டுசன்னி விரையிலவங் கம்வெ ளுத்த
னற்சீர கஞ்சரக்குக் கழஞ்சோ ரொன்றாய்
ஈட்டுநில வேருடனே முசிற்று முட்டை
யியல்பான தெளிவெண்ணெய் கொதிக்கக் காய்ச்சிப்
போட்டுநீரி னிலிறக்கித் துளாவி யெண்ணெய்
பொருத்தவே யக்கரங்கள் பொறுக்குந் தானே. (பா. 167)

சிவந்த அக்கரத்தின் குணம்

அன்னத்தை மறக்குங் காயு மனுங்கிடும் வயிற்றி னோவாம்
பொன்னொத்த மேனி தானும் பொருமிடும் வாயிற் புண்ணாம்
வன்னத்தின் மஞ்சள் போல மலங்சலங் கழிந்து சோரும்
மின்னொத்த விடையாய் செய்யவக்கர மிரும லுண்டே. (பா. 168)

சிகிச்சை குடிநீர்

பிரமிசிறு காஞ்சோன்றி வல்லாரல் [1]வள்ளி
பெருத்தகடுக் காய்மிளகு திப்பிலியீ ருள்ளி
மருவுகருஞ் சீரோம மதுரமொரு நிறையாய்
வைத்தவித்துக் குடித்துவரின் மந்தமுடற் கொதிப்புப்
பொருமல்சிவத் தக்கரம்வெப் பிருமலுடன் கிரந்தி
பொறுக்குமென வேயாயுண் மறைபுகன்ற தாகும்
தெரிவருநற் [2]கொதியெண்ணெய் சிரமதனிற் பொருத்திச்
சிறந்திடுநெய் யுங்கொடுக்கச் செப்பினர்க ளன்றே. (பா. 169)

[1]வள்ளி - சாத்தாவாரி. கர்ப்பூரவள்ளியையும் கருதுவர்.
[2]கொதியெண்ணெய் - கறுத்த அக்கரத்தின் சிகிச்சையிற் கூறப்பட்டுள்ளது

தூதுவளை வேரிலைகா யொடுசெங்கத் தாரி
தூயகண்டங் காலியுமின் பூறலுநன் னாரி
மாதுவளர் வல்லாரல் கர்ப்பூர வள்ளி
மதுரந்திப் பிலிமிளகு கடுக்காய்நற் சீரம்
சீதமிகு மீரவுள்ளி யிலவங்கங் கோட்டஞ்
சீரேலங் கொத்தமல்லி செப்புமொரு நிறையாய்ப்
பேதமறு பசுநெய்யில் வடித்தருந்தி வரவே
பொருத்தசுரங் கழிச்சலுட னக்கரங்கள் போமே. (பா. 170)

வெள்ளைக்கரத்தின் குணம்

காய்ந்திடும் வயிறு மூதிக் கழிந்திடும் வெள்ளை யாக
ஆய்ந்திடுந் வயிற்றி நோவா யுனுங்கிடும் வாயிற் புண்ணாம்
ஏய்ந்திடுந் தாக முண்டா மிருமிடுங் கால்கா யாது
காய்ந்திடும் வெள்ளையான வக்கலஞ் சாற்றுங் காலே. (பா. 171)

சிகிச்சை குடிநீர்

கொடிமல்லி கையிலைபூக் கர்ப்புர வள்ளி
கோதில்சிறு காஞ்சோன்றி மிளகிருசீ ரகமும்
படிமேவு வல்லார லீரவுள்ளி திப்பில்
பஞ்சவர்கண் முல்லையிலை கூட்டியொன்றா யவித்த
குடிநீரை யந்திசந்தி வடியிட்டுக் கொடுத்துக்
கூறுமரை மருந்துமிவை விடாதுதினஞ் செய்தால்
கடிமேவு மக்கரங்க ளவியலிவை மாறிக்
கழிச்சலும்விட் டகலுமெனக் கழறுமரு மறையே. (பா. 172)

நெய்

கேட்டமதி மதுரநெல்லி முளியசம தாகங்
கொத்தமல்லி தான்றியிரு சீர்சிவந்த சந்தம்
நாட்டமுறு நிலவினுப்பு மிளகுசிறு திப்பில்
நற்கடுக்காய் மாயாக்கா யேலமொடு சுக்குக்
கூட்டுமதி விடயமகி லிலவங்கஞ் சாதி
குலமான செவ்வள்ளி கொடிமல்லிச் சாறும்
ஈட்டுநறு நெய்யதனில் வடித்தருந்தி வரவே
யிசைவான வக்கரங்க ளிளகியகன் றிடுமே. (பா. 173)

உள்ளக்கரத்தின் குணம்

தலையினை வலிக்குங் காயந் தகுமுட லவிந்து புண்ணாய்ச்
சிலையென வயிறு மூதிச் செருமியுள் ளனுங்கி முட்டாய்
நிலையெனக் கால்கா யாது நெய்ப்பற்றாய்ச் சியலாய்ச் சுண்டாய்
உடலைவுறக் கழிந்து நாறு முள்ளிலக் கரந்தான் றீதே. (பா. 174)

சிகிச்சை குடிநீர்

பிரமிசிறு காஞ்சோன்றி வல்லாரல் வள்ளி
பெருத்தகடுக் காய்மிளகு திப்பிலிசுக் கேலம்
உரியவிவை யொன்றாக்கி யவித்துடனே குடித்தே
யுள்ளருந்தி யரைமருந்து முடனரைத்துக் கொண்டே

சிரமதனிற் கொதியெண்ணெய் திடமாகப் பொருத்திற்
றீர்ந்திடுமுள் ளவியல்சுர மெனமுனிவ ருரைத்தார்
பொருவருமக் கரங்களிவை மந்தமொடு வெப்பிற்
பொருந்திவருஞ் சன்னிசுரம் பேணிவகை புரியே. (பா 175)

நெய்

தூதுவளை வேரிலைகாய் தூடகண்டங் காலிவட்டுத்
தூதுவளை ரின்பூறல் தங்குசெங்கத் தாரி .
தீதில்வள்ளி காஞ்சோன்றி திகழ்பிரமி வல்லாரல்
மாதிருசீ ரகமேல மதிமதூர மீரவுள்ளி. (பா. 176)

உள்ளசமோ தகமிளகு வுரியகடுக் காய்திப்பில்
கொள்ளுமில வஞ்சாதி குலவுநறு நெய்யதனில்
மெள்ளவடித் தந்திசந்தி வெதுப்பியருந் திடுவீரேல்
உள்ளவிய லக்கரங்க ளுடன் கழிச்ச லகன்றிடுமே. (பா. 177)

ஈரலக்கரத்தின் குணம்

கடுத்திடுங் கழியுங் காயுங் கடினமா மிரவின் மீண்டும்
கொடுத்திடு மசனஞ் செல்லாக் குளிருட னடுக்கமுண்டாம்
விடுத்திடாச் சியலி ரத்தம் விழுந்திடு முக்கிச் சோரும்
தடுத்திடா வீரன் மீதி லக்கரங் கடின மாமே. (பா. 178)

சிகிச்சை நெய்

தூதுவளை வேரிலைகாய் பூக்கண்டங் காலி
தூயவட்டுப் புல்லாந்தி வேர்செங்கத் தாரி
மீதுவளர் காஞ்சோன்றி வல்லாரல் பிரமி
மிக்கவள்ளி நாயுருவி யிருசீர மேலம்
தாதுவள ரதிமதூர மீருள்ளி மிளகு
சாதிக்காய் மாயாக்கா யொடுகடுக்காய் தான்றி
ஓதியதிப் பிலியுலுவா நெல்லிக்காய் கோட்ட
முடனரத்த சந்தமச மோதமில வங்கம். (பா. 179)

உடன் சரக்குச் சாறிலைவே றொன்றாய்க் கூட்டி
யரியநறு நெய்யதனில் வடித்துக் கொள்ளில்
திடமுறவே கொதியெண்ணெய் சிரத்தில் வைத்துத்
தினம்வெதுப்பி நெய்யருந்திற் றீர்வி யாதி
விடமுறுமுள் ளக்கரம்வெப் பிருமல் காய்ச்சல்
விஷகிரந்தி கழிச்சலிவை விட்டே யேகும்
குடமுனிவ னுரைத்தபடி குறித்துச் செய்யிற்
கூறுபிணி யெலாம்பொறுங்குங் குறிக்கொ ணீயே. (பா. 180)

வாயக்கரத்தின் குணம்

இருமிடும் வாயிற் புண்ணா மிளகித்தொப் புளம தாகி
மருவிடும் வயிறுமுதி மந்தித்துக் குளிர்ந்து காயும்
வெருவிடு மன்னஞ் செல்லா வீங்கிடு முகமும் வாயும்
மருவிடும் வாயிற் றோன்று மக்கரம் வகுக்குங் காலே. (பா. 181)

சிகிச்சை - நெய்

திப்பிலி யிருசீ ரோமஞ் செஞ்சந்தங் கடுக்காய் நெல்லி
பொற்புறு மிலவ மேலம் பொருந்திய கோட்ட மாயாச்
சொற்பெறு முலுவாத் தான்றி தூயதி மதூரம் வள்ளி
நிற்பறு சரக்கு நேராய் நெய்யினிற் கொதித்துக் கொள்ளே. (பா. 182)

அக்கரசுரத்தின் குணம்

கஞ்சியை மறக்குங் காயுங் கடினமாய்த் தலைக்குத் துண்டாம்
மிஞ்சியே யிருமித் தொய்வாய் மிடுக்கிற வயிற்றி னோவாம்
கெஞ்சியே யழற்றி வாயுங் கேவல மனுங்கிப் புண்ணாம்
வஞ்சியே யக்கரத்தில் வருசுரம் வகுக்குங் காலே. (பா. 183)

சிகிச்சை குடிநீர்

கர்ப்பூர வள்ளிசிறு காஞ்சோன்றி பிரமி
கதித்திடுவல் லாரலிவை கலந்துசரி யெடுத்தே
சொற்பாவு மதிமுதர மிளகுதிப் பிலியுந்
தூயகடுக் காய்சுக்கு மீருள்ளி கருஞ்சீர்
நற்பாரி லிவையவித்து நாலிலன்றாய்க் குறுக்கி
நாடோறு மந்திசந்தி குடித்துவரு வீரேற்
பொற்பாரக் கரசுரமா கிரந்தியொடு வெப்புப்
பொருந்துபற வைச்சுரமும்பொடிபொடிந்துபோமே. (பா. 184)

நெய்

கண்டங் காலி யிம்பூறல் கதித்த செங்கத் தாரிவட்டுத்
துண்டார் தூது வளையிலைகாய் துலங்கு பிரமி வல்லாரல்
அண்டார் பூரவள்ளியுட னரிய சிறுகாஞ் சோன்றியிலை
கொண்டே யிருசீ ரகமேலங் கோதின் மதுர மிலவங்கம். (பா. 185)

வங்க மிருசீ ரகத்தினோடு வகுத்த கடுக்காய் திப்பிலியும்
தூங்க வசமோ தகமுலுவாத் தூய மிளகு நறுநெய்யிற்
தங்க மாக வடித்தருந்தித் தகுமோர் வெதுப்ப பத்தியமாய்
அங்கம் பறவைச் சுரத்துடனே யடுத்தக் கரத்தின் சுரம்போமே. (பா. 186)

அரைமருந்து

திற்பலி யிருசீ ரோமந் திகழுதி மதுர மேலம்
பொற்புறு நாகை யுள்ளி பொருந்திய சாதிக் காயும்
சொற்றவாண் பனையின் வெல்லந் தூயவிந் துப்புங் கூட்டி
அற்புற வள்ளிச் சாற்றி லரைத்துணச் சுரங்கள் போமே. (பா. 187)

(வள்ளி-கர்ப்பூரவள்ளி)

அக்கரசுரசன்னியின் குணம்

அலத்திடு மிருமிக் காயு மதிகமா யிரவின் மிண்டிக்
கலத்தினிற் கஞ்சி கொள்ளாக் கடுமையாய்ப் பிதற்றிப் பேசும்
உலர்த்திடுங் கிடைகொ டாதா முரத்திடக் கழியிற்சன்னி
பெலத்திடு மக்க ரத்திற் பெருஞ்சுர சன்னி யாமே. (பா. 188)

சுரத்துட னடுக்க முண்டாய்த் துயர்செயு மறுங்கிச் சோரும்
உரத்திடு மயக்கி யேறி யுவாதியாய்ப் பேசி டாது
சிரத்தினிற் கனத்தி டித்துத் திமிர்ந்திடுந் தீமை செய்யும்
வருத்திடக் கரத்தின் மேவி வருஞ்சுர சன்னி யாமே. (பா. 189)

சிகிச்சை - கொதியெண்ணெய்

நன்னாரி கிலுகிலுப்பை செங்கத் தாரி
நற்சிவதை யியங்குபுங்க முத்தற் காசு
சொன்னார்கன் முரிசுகளப் பன்னை நொச்சி
சொற் குதிரைவா லியிரு வேலி வேரும்
பன்னாரு மெருக்கவுரி யழுக்கி ராய்வேர்
பகர்தூது வளையிலா மிச்சுக் கோட்டம்
மின்னார்செஞ் சந்தனம்வேர்க் கொம்போ டுள்ளி
மிருந்தசத குப்பையகில் தேவ தாரம். (பா. 190)

தார்செறியு மரமஞ்சள் கடுகு ரோணி
சன்னிவிரை வசம்பரத்தை கொத்த மல்லி
ஏர்செறிசென் பகப்பூவோ டேல மோரொன்
றிருகழஞ்சு வேருடனே யிடித்து மாவாய்க்
கார்செறியுந் திலத்திலெண்ணெய் நிம்ப வெண்ணெய்
கலந்துகொதித் திடக்காய்ச்சி மருந்தைத் தூவிச்
சீர்செறியுஞ் சிரத்தில்வைத்துப் பொருத்த நாளுந்
தீர்ந்திடுமக் கரசுரத்திற் சன்னி தானே. (பா. 191)

கொதியெண்ணெய் - 2

குருந்துமயி லடிக்குருந்து நற்குதிரை வாலி
கோதின்மணித் தக்காளி நன்னாரி யவூரி
மருந்துநொச்சி கன்முரிசு சன்னியள நாயன்
மருவுதுளாய் தக்காரி யசுவகந்தி யினில்வேர்
திருந்துகிலு கிலுப்பைபெறு மருந்தினொடு சீந்தில்
திகழ்தூது முயிற்றுமுட்டை நிலத்தினில்வேர் நேராய்ப்
பொருந்துசத குப்பையுள்ளி வெண்கோட்ட மேலம்
பொற்புறுசுக் கிலவங்கங் கொத்தமல்லியரத்தை. (பா. 192)

அரத்தைசன்னி வசம்புமஞ்சள் வெளுத்தல் காய
மரிசநற்சீர் செண்பகப்பூக் கழஞ்சோ ரொன்றாய்
உரைத்தெளி வெண்ணெய்தனிற் கொதித்து வார்க்கி
லோடிவிடு மக்கரத்தின் சன்னி யெல்லாம்
பரத்தினிலே கைகண்டோ மிந்த வெண்ணெய்
பதறாமற் கொதித்ததனைப் பொருத்த முன்னம்
சிரத்தினின்முக் கூட்டெண்ணெய் பொருத்திப் பின்னர்த்
திரும்பாதே யிந்தவெண்ணெய் செய்ய நன்றே. (பா. 193)

ஏனாதி

நன்னாரி தூதுவளை யாடா தோடை
நல்லவட்டுக் கத்தரிவேர் நிலத்தி னாகம்
சொன்னார்சுக் கதிமதுரங் கடுக்காய் நற்சீர்
தூயமல்லி மிளகிந்துப் பேலங் கோட்டம்
மின்னாருந் திப்பிலிநல் லசம தாக
மிக்கதொரு நாகையுள்ளி மிகாமற் கூட்டிப்
பொன்னார வறுத்தாடா தோடைச் சாற்றிற்
பொருந்துநெய்யிற் கொதிக்கவைத்துப் பொறுத்துண்பாயே.

பொறுக்குமிந்த வேனாதி தனையுள்ளே கொண்டு
பொருந்துநில வேர்சுக்கு மரிசியுடன் பொரித்து
நறுக்கிவெள்ளைச் சீலைதனிற் பொட்டாக் கட்டி
நாடோறு மருந்திவரத் தீர்கின்ற வியாதி
இறுக்குசிலேற் பனசன்னி சுரமுதல தாக
வேகிவிடு மக்கரத்தின் சுரசன்னி யீறாய்ச்
சறுக்கியகன் றோடுமென வாயுண்மறை முன்னஞ்
சாற்றியது தவறாமற் செயநன்று காணே. (பா. 195)

அக்கரத்தின் பொதுக்குணம்

பொருமலுங் கழிச்சலும் பண்ணும் வாயினிற்
செருமலும் வயிற்றினி னோவுஞ் சேர்ந்திடும்
இருமலுங் காய்ச்சலு மெரிவுங் கூதலும்
தரும்பெரு மக்கரத் தலைக்கொ திப்புமே. (பா. 196)

கறுப்பதாய் வெள்ளையாய்க் கரியின் பச்சிலை
உறுப்பதாய் சிவப்பதா யுதிரச் சீதமாய்
இறுப்பநெய் யெண்ணெய்பா லெனக்க ழிந்திடிற்
செறுப்பதக் கரக்குணக் கழிச்சல் செப்பிடே. (பா. 197)

கூறிய வாயுடல் சூதங்கள் குய்பங்கள்
நாறியே புண்ணதாய்ப் பூத்து நாவரண்
டூறிய மூலமுந் தள்ளி யுள்ளவிந்
தேறிய சத்தியோ டிருமிக் காயுமே. (பா. 198)

அக்கரக்கிரந்தி வெப்பின் குணம்

கொதித்திடும் வெதும்பிக் காயுங் குமிறியே வயிறு மூதி
மதித்திடும் வாயிற் புண்ணா மந்தமாய் வயிறுங் காயும்
கதித்திடுங் கால்கா யாது கஞ்சியு மறந்த னுங்கும்
விதித்திடக் கரக்கி ரந்தி வெப்புச்செய் குணமி தாமே. (பா. 199)

காய்ச்சலொடுதலைவலியும் இருமலும் அனுக்கமும் காணும். சத்தி கழிச்சல் உண்டாகும் வாய்ப்பூத்துப்புண்ணாம் உடலவியும் சிவக்கும் கழிச்சல் நாறும் பலபேதமாய்க்கழியும் இவை அக்கரத்தின் பொதுக் குணமென்பது.

பொதுச்சிகிச்சை - அக்கர சஞ்சீவி மாத்திரை

அமரர்தமைச் சிறையினில் வைத் தரசு செய்த
வவுணர்கோன் றன்மார்பி லருள்வேல் விட்ட
திருமுகமா றுடையபிரான் பதாம்பு யத்தைச்
சிந்தித்து வணங்கியருள் பெற்றுக் கொண்டு
பெருமையுறு மக்கரசஞ் சீவி யென்னும்
பெயருடைய மாத்திரையைப் பேசக் கேண்மின்
அருமையுறு கஸ்தூரி யொன்று ஞாழ
லதுவிரண்டு கோரோச னையு மூன்றே. (பா. 200)

ஏலந்தா லொடுமதுர மைந்து சுக்கு
மிரிசந்திப் பிலியுமிவை யாற ரத்தை

சீலமுறு சாதிக்கா யோமஞ் சோம்பு
செப்புகருஞ் சீரகமேழ் கோட்ட மெட்டுக்
கோலமுறு நாலுமைந்து மக்க ராவாங்
கூறுசிறு தேக்கதுவு மையி ரண்டு
நாலிலுறு நாலிதெல்லாங் கழஞ்சு வீத
நாடுமுலைப் பால்விட்டே யரைத்து ருட்டே. (பா. 201)

அரைத்துருட்டிப் பயறளவாய் நிழலு லர்த்தி
யருமுலைப்பால் தேன்கூட்டிக் குளிகை யீய
உரைத்தவத்தி சுரஞ்சன்னி நாவிற் புண்ணு
முதரத்தி லவியலொடு கிராணி மாந்தம்
பெருத்தவக்க ரச்சுரமும் பறவைத் தோஷம்
பேசுகணை பலதோஷ மான வெல்லாம்
உரத்தகதி ரவன்முன்னர்ப் பனியே போல
வோடிவிடு மெனமுனிவ ருரைத்தாரன்றே. (பா. 202)

அக்கராக் குளிகை

கோரோ சனையே சாதிக்காய் கோட்ட மேலஞ் செண்பகப்பூ
நீரார் செஞ்சந் தனமானி னீண்ட கொம்பு பூநாகம்
பேரார் முயிற்று முட்டையுடன் பேசுங் கணிதவேதியதும்
பாரா ருருத்தி ராக்கமில வங்கப் பட்டை கன்னாரே. (பா. 203)
நாரும் வகைக்குக் கழஞ்சொன்று நலஞ்சே ரக்க ராவிரண்டு
சேருங் கழஞ்சு முலைப்பாலிற் சேர்த்தே யரைத்துப் பயறளவாய்
நீருங் குளிகை முலைப்பால்தே னினைவாய்க் கூட்டிக் கொடுத்திடுகில்
தீருங் கழிச்ச லக்கரத்திற் சேருஞ் சன்னி யவியல்சுரம். (பா. 204)

அமுதாதிக்குளிகை

அதிமதுரஞ் செண்பகப்பூ வேலங் கோட்ட
மரியவெட்டி யிலாமிச்சுப் பச்சை மாஞ்சில்
விதிமருவு கராம்புடனே கணித வேதி
விளங்குநற்கோ ரோசனையுங் கழஞ்சோரொன்றாம்
பதிமருவு வெட்டியின்வே ரவித்த நீரிற்
பதனமுற வரைத்துருட்டு குன்றி போல
மதிநுதலார் தமதுமுலைப் பாலி லீய
மாறிவிடு மக்கரங்கள் வரட்சி வெப்பே. (பா. 205)

நெய்

தூதுவளை நாயுருவி முசுமு சுக்கை
சொல்லுமிவை சமூலங்கர்ப் பூர வள்ளி
தூதுவளர் வல்லாரல் பிரமி யோடு
தகுமாடா தோடைகொன்றை கறுத்துப் பூவின்
மீதுவள ரிலையுடன்வேர் சரக்கீ ருள்ளி
மிளகுசுக்கு வசம்பிருசீ ரகமா யாக்காய்
போதுவளர் நெல்லிக்காய் கடுக்காய் கோட்டம்
புகன்மதுர மக்கரவோ டோம மல்லி. (பா. 206)

ஒருபிடி யிலையும் வேரு முறுசரக் கொருக ழஞ்சு
தருபசு நெய்யிற்காய்ச்சித் தகுமுறை யுட்பு கட்டி
உருவுறு மேலும் பூச வொழியுமக் கரங்கள் வெப்புப்
பொருமலுங் கழிச்சன் மாந்தம் போகுமென் றுரைக்கும் வேதம். (பா. 207)

நெய் - 2

உரைக்கு மேலம் வசுவாசி யோம மிருசீ ரகமிளகு
கரைக்கு மஞ்ச டிப்பிலியுங் கராம்பு கோட்டம் பீநாறி
விரைக்கு மிலாமிச் சக்கறா மேவுங்கடுக்கா யதிமதுரம்
இருக்கங் கன்னார் கொத்தமல்லி யிசைந்த செஞ்சந் தனம்வசம்பே. (பா. 208)

ஏயும் வெளுத்த லிருவேலி யிவையோர் கழஞ்சு பொடிசெய்து
காயு நெய்யி லீருள்ளி காட்டு முத்த மாகாணி
மேயு மிலையும் பூவுமரிந் திட்டே யுள்ளி பொன்றிறமாய்
ஏயு நேரங் கீழிறக்கி யிசைத்த சரக்கின் பொடிதூவே. (பா. 209)

தூவி யாற்றி யுட்கொடுத்துச் சொல்லு முடம்பின் மேற்பூச
மேவு மாந்த முடம்பிலுறு மெலிவு கழிச்ச லக்கரங்கள்
நாவி லுறும்புண் ணுள்ளவிய னவிலுந் தாக மிளைப்பீளை
யாவுஞ் சோகை தோஷவகை யகலும் வயிற்றுக் கடுப்பதுவும். (பா. 210)

கொதியெண்ணெய்

அகலும் படிக்கோர் கொதியெண்ணெய் யரத்தை மல்லி யீருள்ளி
புகலுங் கடுக்காய் வசம்போமம் பொன்னி னிறமாஞ் செவ்வள்ளி
மிகவுஞ் சிவந்த சாதிலிங்க மேவு மதுரந் திரிகடுகு
தகவு முள்ளி யிலவங்கஞ் சன்னி நாயன் பீநாறி. (பா. 211)

நாறுங் காயம் வெண்கார நவிலும் வெளுத்தல் சதகுப்பை
கூறு மடவி கச்சோலங் குலமா மஞ்சள் செஞ்சந்தம்

வேறு மேலங் கழஞ்சொன்று வேர்கேள் வில்வம் நன்னாரி
ஊறுங் கோரை சீதேவி யுரைக்குஞ் சிவதை மால்காந்தி. (பா. 212)
(மால்காந்தி-விட்டுணுக்கிரந்தி)
காந்தும் வீழி வவ்விலொட்டி கண்டங் காலி முசுமுசுக்கை
ஏய்ந்த வட்டுத் தூதுவளை யிலாமிச் சவரி நீர்ப்பூலாச்
சேய்ந்த செங்கத் தாரிநிலக் குமிழ்போய்ப் பலவன் சம்மட்டி
ஆய்ந்த கரிய காக்கணவ னறலின் வள்ளி நிலப்பனையே. (பா. 213)
(சம்மட்டி-குத்துக்காற்சம்மட்டி அறலின் வள்ளி-சாத்தாவரி)
நிலத்தின் மருவு சாரணையு நிகழுங் கிரந்தி நாயகனும்
பலத்தின் மருவு கிலுகிலுப்பை பகரு மிவைவேர் பிடியொன்று
தலத்தின் மருவு மிருவேலி சாருங் கரிய காக்கணவன்
குலத்தின் மருவு செவ்வரத்தை கொள்ளும் வீழி யிவையிலையே. (பா. 214)

இலையும் பூவுஞ் செவ்வரத்தை யிலைவேர் சரக்க வெவ்வேறாய்
நலிய விடித்துப் பொடிசெய்து நல்லெள் ளெண்ணெய் நிம்பெண்ணெய்
மலியக் கலந்து காய்ச்சியிலை வெடிக்கும் பதத்திற் கீழிறக்கி
வலிய வேர்த்தூள் சரக்குத்தூள் வகைசே ரிலைத்தூண் முடிவிலிடே.

இட்டே யுள்ளும் புகட்டியுடம் பிசையப் பூசித் தலைதனிலும்
மட்டாய்ப் பொருத்த வக்கரத்தில் வந்தசன்னி சுரம்வீக்கம்
முட்டும் வலியிற் சன்னிசுர முதிர்ந்த மாந்த சன்னியதும்
விட்டே தீரு மெனவாயுள் வேதம் விதித்த விதியாமே. (பா. 216)

அக்கரத்தின்பேதம்

வெள்ளையக்கரத்தில் வெப்புக் குணம்

வாய்ப்புண் ணாகி யிளைப்பிருமல் வந்து மயக்கந் தூக்கமுண்டாம்
காயம் வெளுக்குங் கண்வெளுக்குங் கனக்கு முடம்பு மிகக்குளிரும்
தாயார் முலையுண் டுறங்காமற் றளரு மலமும் வெளுப்பாகும்
வாயார் நாக்கு மாசனமும் பூர்க்கும் விக்க லெடுத்திடுமே. (பா. 217)

கறுத்த அக்கரத்தில் வெப்புக் குணம்

கறுக்கும் பல்லு நாக்கதுவுங் கண்ணு மலமுங் கறுப்பாகும்
மறுக்கும் வலிக்கும் வயிறூதும் வயிறுகழியு முவாந்திக்கும்
உறுப்பெல் லாநோ முடல்கனக்கு முள்ளே மெத்த மலங்கட்டும்
கறுத்தக் கரத்தின் வெப்பிதென்று கண்டாலறிந்து கொள்வீரே. (பா. 218)

சிவத்த அக்கரத்தில் வெப்புக்குணம்

இதமாய் வெதும்பும் வயிறுளையு மிளகுஞ் சீதம் பச்சைமஞ்சள்
அதுவாய் மேனி சிவந்திளைக்குஞ் சலமஞ் சணிக்குங் கோபமுண்டாம்
விதமாம் வேர்க்கு முவாந்திபண்ணும் வீக்கந் தூக்க மயக்கமுண்டாம்
மதமா யிருந்த வுடல்புலர்ந்து வாய்புண் ணாகு மலஞ்சிவக்கும். *(பா. 219)*

அக்கப் படுவன் குணம் - மருந்து

வலிக்குங் கழியும் வயிறெரியும் வாய்நீ ராக வுவாந்திக்கும்
நலிக்கு முடலு மெண்சாணு நடுக்கு மிதுவக் கரப்படுவன்
பலிக்கு மசமே தீண்டாத பாலை யிலைபொன் முசுட்டையிலை
மலிக்கும் பிடிநீர் நாலுபங்கு வற்றி நாலொன் றாய்க்குடியே. *(பத. 220)*

மேற்கூறிய மூன்றும் அசாத்தியம். அக்கரப்படுவன் ஒன்றும் கட்டசாத்தியம்.

சிகிச்சை - ஏரண்டத் தயிலம்

நாயுருவி யரிசிமுத்தற் காசி யங்கி
னற்கொழுந்து பெருமருந்து கிரந்தி நாயன்
தூயதொரு நெய்க்கொட்டான் பழம றைப்புத்
தூசிவசம் பரத்தைகடுக் காயிந் துப்பு
நேயமுறு கராம்பிவைவியான் றரைக்க ழஞ்சு
நேர்வாளஞ் சுத்திசெய்து வறுத்து நெய்யில்
ஆயவிரை முப்பதுகொண் டரைத்தே ரண்ட
மதிற்றயிலத் தொடுகலக்கி யடுப்பிற் காய்ச்சே. *(பா. 221)*

'நெய்க்கொட்டான் பழம் - புனலைப்பழம்)

சூரியபுட எண்ணெய்

காய்ச்சிவடித் துட்புகட்ட வக்க ரத்திற்
கடுமைதரு நாலுவகை வெப்புந் தீரும்
மூச்சடரு மிளைப்புக்கு மருந்து கேண்மின்
முதியகாக் கணங்கொவ்வை கிரந்தி நாயன்
பேச்சுதவு குன்றிமணி யாம ணக்குப்
பேருந்நா யுருவியொடு சிறுநெ ருஞ்சி
ஆய்ச்சிதரு வெண்ணெயுண்ட மாலின் காந்தி
யவையிலையோர் பிடிதுவைத்தே யெள்ளிலெண்ணெய். *(பா.222)*

கூட்டியதி னன்னாரி செங்கத் தாரி
குலவுதூ துளையின்வேர் சீனக் காரம்
கோட்டமதி மதுரமக்க றாக்க டுக்காய்
குலக்காய்செஞ் சந்தனமு மாயாக் காயும்
நாட்டுகராம் பொடுகருஞ்சீ ரகம்பீ நாறி
நாற்றாது வளம்பூவும் பழமு மல்லால்
சூட்டுமா துளங்கனியிற் றோலு மெல்லாந்
தூளாக்கி யெண்ணெயினி லளவிப் பின்னை. (பா. 223)

குடிநீர்

வல்லிரவி முகந்தன்னின் மூன்ற நாட்கள்
வைத்தெடுத்தே யுட்புகட்டித் தலையில் வார்க்கச்
சொல்லியவக் கரமிளைப்புத் தொய்வு மாறுஞ்
சுகந்தருநற் குடிநீர்கேள் கராம்பு நற்சீர்
நெல்லியின்காய் திப்பிலியக் கறாக் கடுக்காய்
நிகழேல மாயாக்காய் சிவந்த சந்தம்
மல்லியிவை யோரொன்று கழஞ்சு தூது
வட்டுவே ரிலாமிச்சுக் கண்டங் காலி. (பா.. 224)

வேரிவைநா யுருவியது சமூலங் கொண்டு
விளம்புசம னெட்டொன்றாய்க் கஷாயம் வைத்துக்
கூர்மையுடன் வடித்தருந்த வக்க ரத்திற்
கொள்வீக்கம் வெப்பிவைகள் குறைந்து போகும்
நீர்மையுடன் மற்றுமொரு குடிநீர் முத்தந்
நீடுகவிழ் தும்பைவே றறுகின் வேரும்
சீர்மைசிறு காஞ்சோன்றிக் கொழுந்து சுக்குத்
திப்பிலிநன் மிளகுகடுக் காய்வெள் ளுள்ளி. (பா. 225)

வகையொன்றுக் கொருபிடிநற் சரக்கோ ரொன்று
வருகழஞ்சு வெள்ளுள்ளி பிடியுங் கூட்டித்
தொகையொன்று நீர்கூட்டி யெட்டொன் றாக்கித்
துய்க்கவரு மக்கரத்தில் வீக்க மாறும்
நவையொன்று நாவினிலக் கரங்கள் போக்க
நற்கடுக்காய் நெய்க்கொட்டான் பழம்வெந் நீரில்
சுவையொன்ற வரைத்துநா வினிலே தேய்க்கச்
சுகம்வருமென் றாயுண்மறை சொற்ற தன்றே. (பா. 226)

நெய்

நறுநெய்யி லதிமதுரங் கன்னா ரோம
நற்சீர கந்திப்பில் வட்டு வேரும்
மறுவறுசா ரணைவேருஞ் சமன்பொ டித்து
வளமையுடன் கொதிப்பித்துக் கழஞ்சு நெய்தான்
குறைவறவே யந்திசந்தி கொடுக்க முன்னர்க்
கூறியவக் கரமூன்றுங் குணமே யாகும்
இறுதிசெயு மக்கரத்திற் சுரமேற் கொண்டா
லிசைந்தமருந் துரைத்திடுவ னின்பமானே. *(பா. 227)*

சுரத்துக்குக் கோரோசனைக் குளிகை

இன்பசுவின் ரோசினைநற் றுரிசு துத்த
மேற்றதிரி பலைகணித வேதி திப்பில்
துன்பறுநற் சாதிலிங்கங் கழஞ்சோ ரொன்று
சுத்திசெய்த நேர்வாள மிருபத் தைந்து
கும்பமுலைப் பாலதனிற் சாம மாட்டிக்
குன்றியள வாயுருட்டி நிழலு லர்த்தி
அன்புடனே முலைப்பாலிற் கொடுக்கப் பேதி
யாகுமது பசுவின்பான் மாற்றுக் கொள்ளே. *(பா. 228)*

கழிச்சலுக்குக் குடிநீர்

கொண்டதொரு வக்கரத்திற் கழிச்சன் மிஞ்சிற்
குடிநீர்கேள் பீநாறி சிவந்த சந்தம்
மண்டிருசீ ரகம்பெருஞ்சீர் தேற்றாக்கொட்டை
மாயாக்காய் களிப்பாக்குக் கைப்பு நெல்லி
உண்டி தரு கடுக்காய்நற் சந்தி லாமிச்
சுவந்தவிரு வேலியொடு செண்ப கப்பூக்
கண்டுமொழி யெழிலணங்கே யோம முத்தங்
காய்ச்சியிவை யெட்டொன்றாய்க் குடிநீர் கொள்ளே. *(பா. 229)*

அக்கரசுரத்திலெண்ணெய்

சிற்றமட்டி சீதுளாய் நன்னாரி யிலைவேர்
சேரவொரு பலமிடித்து நற்றூள தாக்கிச்
சொற்றபடி யோராறு நாழிநீர் விட்டுச்
குழவொரு படியிறுத்து நல்லெண்ணெய் நாழி

கற்றாவின் பாலினொடு சிறுவிளாச் சாறுங்
கருதிவகை யொருநாழி கலந்துமுத்த நாரி
உற்றவெட்டி வேர்சுக்கு நற்சந்து கோட்ட
முசிர்மதுர மோரொன்றுக் கொருகழஞ்சு பொடியே. (பா. 230)

பொடித்துக் கலந்து மூன்றாநாட் போதக் காய்ச்சி மெழுகுபதம்
வடித்துத் தலையில் வைத்திடுகின் மாறுஞ் சுரங்க ளானவெல்லாம்
தொடுத்துத் தனிவேல் விட்டவுணற் றொலைத்த குமர னருட்பதங்கள்
படித்துப் பரவுந் தமிழ்முனிவன் பகர்ந்த மொழியின் படியாமே. (பா. 231)

உள்ளுரோகக்குணம்

கொதித்திடும் வயிறுமூதிக் குளிருடன் காய்ச்ச லுண்டாம்
விதித்திடு மன்னஞ் செல்லா மேனியு முலர்ந்து வேறாம்
கதித்திடுங் கழிச்சன் மிஞ்சிக் கழிந்திடுங் கடுக்குஞ் சீதம்
மதித்திடு முள்ளு ரோகஞ் செய்குண மதிக்குங் காலே. (பா. 232)

சிகிச்சை தூதுவளை நெய்

தூதுவளம் பழச்சாறு தென்னையினிற் குரும்பை
துவைத்தெடுத்த சாறுவகைக் கிருநாழி கொண்டு
மீதுவளர் நாகவல்லி மாதளங்காய் காணி
மிகுசாறு மொருநாழி நெய்யுமொரு நாழி
தீதகற்றுந் தூதுவளை வேராறு பலமாய்த்
தேடியிடித் தவித்தநீர் தானுமொரு நாழி
ஓதுநவ பாண்டமதி லுறக்கலந்து காய்ச்சி
யுற்றதனி லிடுஞ்சரக்குச் சீரகமு மிரண்டே. (பா. 233)

சீரகமோ தகமிளகு கராம்பினொடு கோட்டந்
திப்பிலிமா மதுரமில வங்கமது மாயாத்
தூர்செறிசிற் றரத்தைவசம் பீருள்ளி கடுக்காய்
தூயகைப்புச் சாதிக்காய் செவ்வள்ளி நெல்லி
நீர்செறியுங் கொத்தமல்லி செஞ்சந்தம் விடயந்
நேராக வொருகழஞ்சு பொடித்தபொடி தூவி
நேரவடித் தேயருந்திப் பூசிவரு வீரே
வில்லாதுள் ளுரோகமிவைநிச்சயந்தானாமே. (பா. 234)

ஈருள்ளி நெய்

ஈருள்ளி தனிற்சாறு நானாழி சங்கி
னிலைச்சாறு வல்லாரல் கர்ப்புர வள்ளி
நீர்வள்ளி யிவைசாறு வகைக்கிரண்டு நாழி
நேரியபொன் னாங்காணி தூதுவளை குன்றி
சீர்கொள்ளு மிவைவகைக்கு நாழியொன்று சாறு
செப்பியகாக் கணங்கோவை நாழியொன்று சாறு
பேர்கொள்ளு மிலைச்சாறென் றோடுகால் கோவின்
பீருமற்றை நெய்யுமிரு நாழிவகை கூட்டே. *(பா. 235)*

(கோவின் பீர்-பசும்பால்)

கன்முரிசு களப்பன்னை செங்கத் தாரி
கான்றையிரு முட்டிகறுக் காய்நன் னாரி
வன்மைபெறு மிருவேலி யியங்கு தூது
வளையிலா மிச்சினொடு குதிரை வாலி
நன்மைபெறு விசலிகையு மிவைவே ருள்ளி
நற்கடுக்காய் சுக்கமரர் தாரு கோட்டம்
தன்மைபெறு வெளுந்தனறும் பிசினி னோடு
தருகடுகு ரோகணியுஞ் சிவந்த சந்தம். *(பா. 236)*

(விசலிகை-கொடிமல்லிகை)

பூவிருக்குஞ் சிறுநாக மலர்செவ் வள்ளி
புகல்கணித வேதியிவை கழஞ்சி ரண்டாய்க்
கோவிருக்கும் ரோசினைகுங் குமப்பூ வொன்று
கொள்கழஞ்சு மெழுகுபதந் தனில்வ டித்து
நோவிருக்குஞ் சிறுமதலைக் கூட்டமுன்னே
நுவன்றவுள்ளு ரோகமொடு கணைகண் மாந்தம்
தேவிருக்குங் கதிரைமலை முதல்வன் பாதஞ்
சேருமருந் தவர்வினைபோற் றீர்ந்து போமே. *(பா. 237)*

கோரோசனைக் குளிகை

கோரோ சனைபாற் கெருடபச்சை கூறுங் கன்னார் மாயாக்காய்
சிரார் கணித வேதியதுஞ் சிறக்க வோரொன் றொருகழஞ்சு
நீரார் சாதிக் காயுமரை நிகழக் கூட்டிச் செவ்விளநீர்ப்
பேரா மட்டை தனிற்சாறு பெருக விட்டே யரைத்திடுமே. *(பா. 238)*

அரைத்தே பருத்தி விரையளவா யதனை யுருட்டி நிழலுலர்த்திப்
பருத்திப் பிஞ்சுத் தண்ணீரிற் பருக்க வுள்ளு ரோகமதில்
வருத்துங் கழிச்சன் மாறிவிடும் வந்த சுரத்துக் கிளவெந்நீர்
பருத்த கடுக்காய் நீரிலிடப் பாறு மிருமன் மலக்கட்டே. *(பா. 239)*

விஷகிரந்தியின் குணம்

உருமிகுங் கனல்போற் பாயு முண்முட்டா யனுங்கித் தொய்வாய்ச்
செருமிடும் வயிறு மூதித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
இருமிடுந் தலைக்குத் துண்டா மிரவினிற் கடினஞ் செய்யும்
பொருமிடும் விஷகி ரந்தி செய்குணம் புகலுங் காலே. (பா. 240)

சிகிச்சை குடிநீர்

வல்லாரல் வள்ளிசிறு காஞ்சோன்றி பிரமி
வருமிருசீ ரகமேலந் திப்பிலிசெவ் வள்ளி
சொல்லாரு நாகையுள்ளி கொத்தமல்லி கடுக்காய்
தூயவதி மதுரமிவை சொன்னபடி யவித்தே
எல்லாரு நீர்க்குடிநீ ரந்திசந்தி குடிக்கி
லிடரான விஷகிரந்தி வெப்பிருமல் காய்ச்சல்
நில்லாது கதிரவன்முன் பனியதுவே போல
நீங்கியகன் றோடுமென நிகழ்த்துமரு மறையே. (பா. 241)

நெய்

கோட்டமதி மதுரநெல்லிக் காயசம தாகங்
கொத்தமல்லி யிருசீரஞ் செஞ்சந்த மாயா
நாட்டமுறு நிலவினுப்பு மிளகுசிறு திப்பில்
நல்லகடுக் காயேலங் கராம்புமிகு சுக்கும்
ஈட்டுமதி விடயமில வங்கமொடு சாதி
மியல்பான செவ்வள்ளி யிவைசரக்கு நேராய்க்
கூட்டுசெங்கத் தாரிவட்டுத் தூதுவளை யிலைகாய்
குலப்பிரமி வல்லாரல் காஞ்சோன்றி முசுக்கை. (பா. 242)

கொண்டிவைத மிலைச்சாறு வேர்சரக்குச் சரியாய்க்
கோதினறு நெய்யதனை விட்டுமிகக் காய்ச்சிக்
கண்டநல்ல மெழுகுபத மதனில்வடித் தருந்திற்
கடியசுரம விஷகிரந்தி கழிச்சலிவை யகலும்
உண்டுநற் கொதியெண்ணெய் சிரத்திலுறப்பொருத்தி
லுள்ளவிய லக்கரமு மோடியகன் றிடுமால்
விண்டுறுமா யுருவேதம் விளம்பியவிக் கிருதம்
விரும்பியருந் திடுகிலிவை விடுமதுகைகண்டோம். (பா. 243)

ஊதுரோகக்குணம்

ஊதிடு முடம்பு காயு முடற்குலை கருகியாங்கே
வேதினை மிகவே யுண்டாய் வெந்திடும் வாயு நாவும்

தீதினை யூது ரோகஞ் செய்குண மிவையே யென்ப
வாதினை வரட்சி ரோக மதின்குணம் வகுக்க லுற்றாம்.

வரட்சிரோகக்குணம்

உடம்பது வரண்டு காயு முதரமு மெரிவுண் டாகும்
திடம்பெற மலமுஞ் சிக்குந் திட்டுத்திட் டெனவே முக்கும்
தடம்பெறு நாவும் பூத்துச் சளிசல மிரும லுண்டாம்
வடம்பெறு தனத்தாய் தீர வருமருந் துரைக்க லுற்றாம். *(பா. 245)*

சிகிச்சை வல்லாரை யேரண்டெண்ணெய்

காணியுங் காளி யாரை கணைப்பூடு தகரை பாசி
ஊணிய சாறு ழக்கோ டொக்கவே ரண்டத் தெண்ணெய்
தாணியுங் கடுக்கா யுள்ளி காராம்புநல் வசம்பு கோட்டம்
கேணிவெந் தயமு மேலங் கெருடபச் சையுமீ ருள்ளி. *(பா. 246)*

(காணி-பொன்னாங்காணி காளி-மணித்தக்காளி ஆரை-வல்லாரை
தகரை-கையாந்தகரை)

மதுரமிங் கிவைக ளெல்லாம் வகைக்கொரு கழஞ்சதாக
இதமுற விடித்த ரைத்தே யெண்ணெயிற் கலக்கிக் காய்ச்சிப்
பதமுற வடித்தருத்தப் பகர்ந்திடும் வரட்சி நாவிற்
கொதிதரு மூதுரோக மக்கரங் கணைகள் போமே. *(பா. 247)*

வில்வாதியேரண்டெண்ணெய்

வில்வமிலை யிற்சாறு துளசிச் சாறு
விட்டுணுவின் கிராந்தியுடன் பொன்னாங் காணி
வல்லிதொரு நீர்வள்ளி பிரமி கன்னி
வகுத்திடுமீ ருள்ளிமணி சேர்தக் காளி
சொல்லியவெள் ளாட்டின்பா லேரண் டெண்ணெய்
சுகமாக வொருநாழி வகைக்குக் கூட்டி
நல்லிவெள்ளைக் கெருடபச்சை கூக நீறு
நயந்ததிரி கடுகுதிரி பலைநற் சீரம். *(பா. 248)*

சீர்செறியு மதிமதுரங் கராம்பு கோட்டஞ்
சேருங்கோ ரோசனையு மாயாக் காயும்
நீர்செறியு மேலமொடு குங்கு மப்பூ
நிகழ்த்துபதி னாறுமொரு கழஞ்சு வீதம்
ஏர்செறியும் பொடியாக்கித் தூவி வெய்யி
லின்முகத்தி னாண்மூன்று வைத்தெ டுத்துப்
பேர்செறியு நான்காநா ளடுப்பி லேற்றிப்
பெட்புறவே மெழுகுபதம் வடித்துக் கொள்ளே. *(பா. 249)*

வடித்தவெண்ணெய் துட்டளவா யுள்ளே கொண்டு
மதிந்துமேற் பூசிவர வுள்ளு ரோகம்
பிடித்துவரு மிருமல்சுரம் வரட்சி விக்கல்
பேசுசத்தி யுட்காந்த லுழலை தாபம்
வெடித்துவரு மத்திசுரங் கணையி னோடு
மேவுகின்ற வக்கரங்க ளான வெல்லாம்
துடித்துவரும் பசித்தோர்த முகம்பா ராமற்
றுய்க்குமவர் செல்வமெனத் தொலைந்து போமே. (பா. 250)

நெய்

ஆலங் கொழுந்தி னிளந்துளிரு மரிய தென்னம் பூமதுரம்
கோல மிளகு சீரகமுங் கூட்டிப் பசுப்பால் வார்த்தரைத்துச்
சீல முடனே நறுநெய்யிற் றிரள வெந்து வடித்தருந்தப்
பாலே யனைய மொழிமடவீர் பருக்கம் பிள்ளை பகர்ந்தோமே. (பா.251)

சுரசம்

துடி யட்டி சீரகங் கராம்புசாத் திரவேதி
சுத்தவெள் ளைக்கெருடனுந்
தூயமா யாக்காயி னோடுசிறு கீரைவேர்
சொல்லுவகை யெட்டுநேராய்க்
கொடிவிட்ட கோவைவிரி யீருள்ளி சாறுசரி
கொண்டரைத் தத்தண்ணீரிலே
கூசாம லிருபோது நாண்மூன்று முண்ணக்
கொடுத்துவிடின் மாறுபிணிகேள்
அடியுந்து மலசீத சோரிகுட லூதையும்
மதரநா விரிவுசுரமு
மழலுள்ளு ரோகமு மக்கரங் கணையீனு
மரியபல நோய்களெல்லாம்
பொடிபடும் பத்தியங் கைப்புப் புளிப்பகல
புதல்வருக் கன்னைகாக்கப்
பொதியமலை முனிபகரு மறையிலுறை தெரிகவிஞர்
புகலவெகு புண்ணியமிதே. (பா.252)

(துடி - ஏலம் அட்டி - மதுரம்)

கெந்ததாளிக்குணமும் சிகிச்சையும்

மதிநிகரு முகமானே கெந்த தாளி
வாய்சுணைத்துக் கொள்ளுமிக மிடறு புண்ணாம்

கொதியுடனே யுடல்வெதும்பு முலையுண் ணாது
கோழைவிழும் வாய்நாறு மலமுந் தீயும்
அதுவிலகப் பழம்பாசி யீர வுள்ளி
யாரையிவை பிழிந்திடுசா றாட்டின் பாலும்
இதமுறுசீ ரகம்வெதுப்பிக் கலந்தே யூட்ட
வெண்ணுகெந்த தாளிவிரைந் தேகு மன்றே. (பா. 253)

கன்றூஷம்

பொருந்து மேல மாசிக்காய் புதிய கடுக்காய் குங்குமப்பூத்
திருந்து மாவின் சினையீர வள்ளி நற்சீ ரகங்கூட்டி
வருங்கர்ப் பூர வள்ளியிலைச் சாற்றா லரைத்து வழித்தெடுத்த
மருந்தை நாவிற் றேய்த்திடுகில் வாயிற் சுணையும் புண்ணும்போம்.(பா. 254)

வரட்சிக்கொதிப்பின் குணம்

கடுப்போ டிரத்தஞ் சீதமலங் கலந்து தானே கழிந்திருக்கும்.
அடுக்கு மபானங் கீழ்வயிறு மதுதன் னுடனே சலங்கடுக்கும்
நடுக்குஞ் சுழற்சி தலைகனக்கு நயனந்தானு மஞ்சணிக்கும்
கொடுக்கு மசன முவாந்திக்குங் குடல்சேர் வரட்சிக் கொதிப்பாமே. (பா. 255)

சிகிச்சை : நெய்

முத்தற் காசு மலைதாங்கி முதிர்ந்த துத்தி நிலப்பனைவேர்
கைத்த காசுக் கட்டிநெல்லி கருங்குந் திருக்கஞ் சீரகமும்
சுத்தி மிகுநற் சாதிக்காய் துலங்கு மிலவம் பிசின் விடயம்
வைத்தே யெரித்து நெய்கொள்ளில் வரட்சிக் கொதிப்பு மாறிடுமே. (பா. 256)

மூலக்கொதிப்பின் குணம்

மூலங்கொதித்துக் கடுத்துளைந்து முக்கிக்கழிந்து வெதுப்பலுண்டாய்க்
கோல வயிறு பொருமிநொந்து குமுறி யழுது வலித்தூதிப்
பால்போற் சியல்போற் பலவிதமாய்ப் பதறிக் கழிந்து சோகமிகும்
கால மூலக் கடுப்பென்று சாற்று மாயுண் மறைதெரிந்தே. (பா. 257)

சிகிச்சை : நெய்

நாயுருவிச் சாறுடனே நாகையுள்ளி தன்சாறும்
ஏயுநறு நெய்கூட்டி யிசையவடித் தேயருந்தக்
காயும்மூ லக்கொதிப்புக் கடுப்புடனே கழிச்சலெல்லாம்
வாயுவெதிர் சருகெனவே வற்றியகன் றோடிடுமே. (பா. 258)

வயிற்றுக்கடுப்பின் குணம்

இடுப்புக் கடுத்து வயிறுளைந்திட் டிளகிச் சீத மற்றிற்று
முடுக்கித்துயர முடன்மூலந் தோன்றி மலமுங் கழிந்திருக்கும்

அடுத்தோ ரன்ன மருவருக்கு மறவே யங்க மெலிந்துவரும்
தொடுக்கும் வயிற்றுக் கடுப்பென்று சொல்லுங் குணங்களிவையாமே.(பா. 259)

சிகிச்சை : நெய்

பனிச்சை துத்தி மலைதாங்கி பகரும் வரட்புல் லாந்தியின்வேர்
முனித்த சுக்கோ டதிவிடய முதிருநற்சீ ரகமோமம்
தனித்த கைப்புக் குந்திருக்கந் தானே வகைக்குக் கழஞ்சாக
இனித்த நறுநெய் தனில்வடித்தே யிதமா யருந்தக் கடுப்பறுமே. (பா. 260)

குடிமருந்து

துத்தி யிலையும் விளாங்காயுந் துவைத்தே யெருமை மோரதனில்
வைத்து வடித்துக் குடித்துவரின் மாறும் வயிற்றுக் கடுப்புளைவு
முத்தே யன்ன விளாங்காயு முதிர்ந்த பழத்தேங் காய்ப்பாலும்
ஒத்தே வடித்துக்குடித்துவரி லோடும் வயிற்றுக் கடுப்புளைவே. (பா. 261

இலவம் பிசினும் வீளாம்பிசினு மியல்பாம் வேலம் பிசினுடனே
நலமாய் நீர்விட் டவித்துவற்றி நாலிலான் றாக்கி யசமோதம்
குலமா நற்சீ ரகம்விடயங் கூட்டி யெருமைத்தயிரதனிற்
திலமா யரைத்தே யருந்திவரிற் றீரும் வயிற்றுக் கடுப்புளைவே. (பா. 262)

கருவேம்பி னிலையிரச வாழைப்பூ விளங்காய்
காய்க்கும்மா தளங்காயுங் களிப்பாக்குக் கைப்புத்
தருநாவல் புல்லாந்தி யாலரசோ டத்தி
சாற்றியவே லம்பட்டை சமனிடித்தே யவித்து
வெருவாது வேர்க்கொம்பு நற்சீர மோமம்
விட்டவித்துக் குடித்துவரிற் கடுப்பிரத்தக் கழிச்சல்
சருவாது சீரகநெய் தானுமிக நன்றாஞ்
சாற்றெருமைத் தயிர்மோரும் பத்தியம தாமே. (பா. 263)

வயிற்றுளைவின் குணம்

வருத்திடும் வெதுப்புங் காயும் வயிறுளைந் திடுந்தீன் செல்லா
துருத்திடு முறங்க வொட்டா துளமலங் கழிந்து சோரும்
பொருத்தெலாங் கழலும் புண்போற் பொறுக்கொணா நடுக்கங் கூதல்
பெருத்திடுங் கழிச்சல் சீதம் பெருவயிற் றுளைவி தாமே. (பா. 264)

சிகிச்சை : உணவு வகை

வரகுரோ றுடனல் லெண்ணெய் வைத்தநீர்ச் சொறு மோரும்
தரமிகு மிரச வாழை தங்கிய கனியு நன்றாம்

புரமிகு முசுட்டைக் கீரை பொருந்திய கறியு நன்றாம்
உரமிகு மோருங் கூட்டி யுண்டிடி லுளைவு போமே. (பா. 265)

குடிநீர்

வெந்தயநற் சீரகமீ ருள்ளி யோமம்
விளங்குகடுக் காய்கடக சிங்கி யெல்லாம்
முந்தவொரு நிறையாக்கி யவித்துக் கொள்ளின்
முதிர்வயிற்றுக் கடுப்புளைவு சீத ரத்தம்
வந்தவரட் சிக்கொதிப்பு மாறிப் போகு
மலங்கழியப் பிரமியொடு கடுக்காய்நீரிற்
தந்திடுமா மணக்கினெண்ணெய் கூட்டிக் கொள்ளச்
சார்ந்தமலக் கட்டகலுங் கடுப்பும் போமே. (பா. 266)

வேறு

ஆனை தனிற்கண் ணொருபிடியு மசுரர் விரோதி யிளம்பிஞ்சும்
கானக் குதிரை மேற்புறணி கண்டர் வாயில் களிப்பாக்குத்
தாயைக் கொன்றான் சாற்றைவிட்டுத் தாகந் தணியக் கொள்வீரால்
மானைப் பொருதும் விழிமடவீர் வடுகுந் தமிழுங் குணமாமே. (பா. 267)

(ஆனைதனிற்கண் - அத்திப்பிஞ்சு
அசுரர்விரோதியிளம்பிஞ்சு - வேலம்பிஞ்சு
குதிரைமேற்புறணி - மாம்பட்டை
கண்டார்வாயில் - காசுக்கட்டி
தாயைக்கொன்றான் சாறு - வாழைப்பழச்சாறு
வடுகு - சீதம்
தமிழ் - இரத்தம்)

கணை

கரிமுக னடியை வாழ்த்திக் கமலவா சனியைப் போற்றி
அரியசெந் தமிழி னாலே யகத்திய முனிவன் சொன்ன
பெரியமா வியாதி யான பேசுமக் கணையின் றோஷம்
தெரியவே புவியின் மீது செப்புவன சிந்தை வைத்தே. (பா. 268)

சிந்தைவிட் டகலா முக்கட் டேவனை வணங்கிப் பாலர்
வந்தவோ ராண்டின் மேலாய் வருத்திடுங் கணையின் றோஷம்
தந்திடு நரம்ப தெல்லாந் தாங்கியே யூனைப் பற்றி
உந்திடு மிரத்த மெல்லா மழிதென வுண்ணு மன்றே. (பா. 269)

என்றதோர் கணைக டாமு மிப்படி யெழுந்து பொங்கி
நின்றபேர் பதினெட் டுந்தா னிறைந்திடு மாண்டின் மேலாய்க்

கன்றிய பாலர் மெய்யிற் பன்னிரண் டாண்டு காறும்
நின்றிடு மென்று முன்னா ணிகழ்த்தினன் முனிவ னன்றே. (பா. 270)

கணை பதினெட்டின் பெயர்

உரிமெனுங் கணைகண் முன்னோ ருரைத்தவா றுரைப்பக் கேண்மின்
சுரிமெனுங் கணையு மொன்று தூங்குமக் கணையு மொன்று
நிரவிய மூல மிரத்த நீங்கரும் வரட்சிவெப்புக்
கருவுறு மனலன் வீங்கி கடியதோர் மஞ்ச ணீலன். (பா. 271)

நீலமாங் கணையி னோடு நின்றிடு வெளுப்பு மாகும்
சாலவே சத்தி மேலுந் தப்பிலா மாந்த மேகம்
மேலதாம் வினைகள்போல மிகுந்திடுங் கழிச்சல் காசம்
ஆலாமா ரிரும லெய்ப்பு மாம்வை பதினெட் டாமே. (பா. 272)

இச்செய்யுட்கள் இரண்டும் எல்லாப் பிரதிகளிலும் காணப்படுவனவாயினும் விரித்துக் கூறுமிடத்திற் பெயர்களும் முறையும் இதிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. எல்லாப் பிரதிகளுக்கும் இவ்வேறுபாடு ஒத்தே - காரணம் விளங்கவில்லை.

வாத கணையின் குணம்

நீறிடுஞ் சுரிமென் மேலு நீரொடு மலமுஞ் சிக்கிக்
கூறிடுண் ணாக்குத் தொண்டை குதங்களும் விரிந்து புண்ணாய்
வேறுநீர்த் தாகந் தாபம் வெப்புறக் கழிச்ச லுண்டாம்
கூறிடுங் குணங்கள் வாத கணைக்குண மென்ன லாமே. (பா. 273)

பித்தகணையின் குணம்

பித்த கணையின் குணந்தன்னைப் பேசக் கேளீர் பெய்வளையே
மெத்தப் பொசிப்பு வேண்டாது மேனி வெளுக்கும் வாய்கசக்கும்
குத்தி வயிறும் பொருமிவருங் குடலைப் புரட்டி யுவாந்திக்கும்
பத்தி வயிறுங் கழிந்திருக்கும் பரிந்தே யுடலுங் காய்ந்திடுமே. (பா. 274)

நாக்கடி பூத்து வாய்ப்புண்ணாந் நல்லபிடரி தலைகாயும்
போக்குன் [illegible]கும் வயிறதைக்கும் பொருமிக் கழியு நாவுலரும்
தூக்கும் போதி லரைக்கண்ணாய்ச் சுகமாய் நயனஞ் சிவந்திருக்கும்
மார்க்க முடனே பித்தகணை வருத்துங்குணங்க ளிவையாமே. (பா. 275))

சிகிச்சை : குடிநீர்

முத்தற் காசு வில்வமிலை முதியார் கூந்தன் மாதளையும்
ஒத்த துளசி வல்லாரை யுடனே கொடுப்பை மருதந்தோல்

சித்த முடன்பொன் னாவிரையுஞ் சேரக் கூட்டிச் சீராக
நத்தைச் சூரி வேருடனே நன்றாய் வகைக்குப் பிடியாமே. (பா. 276)

(கொடுப்பை - பொன்னாங்காணி)

பிடியே யேலஞ் சீரகமும் பெருத்த சிங்கி செண்பகப்பூப்
படியே கோட்ட மதிமதுரம் பண்பா ரிலாமிச் சிருவேலி
கடிதா யோரொன் றிருகழுஞ்சு காய்ச்சிக் குறுக்கி யெட்டொன்றாய்க்
கொடுநீ பித்த கணையெல்லாங் குடிபோ மென்று கூறினாரே. (பா. 277)

நவ்வற் பட்டை தூதுளம்வேர் நாடுந்துளசி வல்லாரை
செவ்வற் கதலிப் பூவிதழுஞ் சிறக்க முத்த மோரொன்று
கவ்வைப் படாதே யோர்பிடியாய்க்கலந்தே காய்ச்சியெட்டொன்றாய்த்
தவ்வில் சாதிக் காயுரைத்துக் தணியக் கொடுக்கிற் கணைபோமே. (பா278)

குடிநீர் - 3

கொச்சங் காயு நன்னாரி கூறிய வாழைப் பூவிதழும்
மெச்சு மருதம் பட்டையுடன் மிகவேயிர வுள்ளியுமாம்
நச்சு நல்ல சீரகமு நவிலு மதுரஞ் சாதிக்காய்
வைச்சுக் குடிநீ ரெட்டொன்றாய்க் காய்ச்சி யெடுத்து வகைகேளே. (பா. 279)

(கொச்சங்காய்-பீர்க்கங்காய்)

கேளீர்வெந்த நீரதனிற் கிளருஞ் சரக்கை யெடுத்தரைத்து
நாளே கலக்கித் தான்கொடுக்கி னடுக்குங் கணைநோய் கடுப்புளைவு
கோளே தீரு முண்மையிது குறித்துச் செய்யு வல்லீராய்.
வாளே யனைய விழிமடவீர் வகுத்தா ராயுள் வேதியரே. (பா. 280)

அத்தியா லரசு மொட்டு மவற்றுடன் மருதம் பட்டை
பத்தியா யத்திப் பிஞ்சும் பருத்தியின் பிஞ்சுங் கூட்டி
நத்தமாஞ் சூரி வேரு நலமுடன் முத்தற் காசும்
சித்தியாம் பணப்புல்லொக்கச் சிறக்கநீ வறுத்து வையே. (பா. 281)

வைத்ததோர் மருந்தி னோடு சீரகம் வருக ராம்பு
கைத்ததோர் விடயஞ் சாதிக் காயுட னுலுவா வோமம்
மெத்தெரைஞ் சமனாய்க் கூட்டி மேவநீ வறுத்துக்கொண்டு
சுத்திடு கிளியாக் கட்டிச் சுகம்பெறக் காய்ச்சிக் கொள்ளே. (பா. 282)

மாதளை நெய்

மாதளை யிலையு மிளம்பிஞ்சும் வகைசே ரத்தி யால்மொட்டுத்
தூதுளை துளசி வல்லாரை துலங்கும் பருத்திப் பிஞ்சுடனே
சீதள மான பழம்பாசி சிறந்த கொடுப்பை முசுமுசுக்கை
தூதுள மற்று நலக்கொவ்வை தண்ணீர் விட்டான் சாறுழக்கே (பா. 283)

உழக்கே வகைக்குச் சாறுசம னொக்க விடித்து வடிகொண்டு
வழக்கா மதுரஞ் சீரகமு மருவுந் திப்பிலி சாதிக்காய்
செழிக்கும் பத்திரி யேலமுடன் சேருங் கன்னார் கெருடபச்சை
விழிப்பாய் வகைக்குக் கழஞ்சுகொண்டு மேவு நறுநெய் யுரியாமே. (பா. 284)

உரிதான் கூட்டி யெரியிட்டங் குடனே மெழுகு பதம்வடித்து
மருவார் நெய்யைக் காசிடையாய் வகுத்துக் கொடுக்கிற் சிவனருளால்
தெரிவாய் பலநோய் பித்தகணை தீரு முடலுந் தெளியும்பின்
சொரியாய் புதுநீர் செவித்துவிடிற் றுலங்கும் பிணியுந் தோன்றாதே.(பா. 285)

பொன்னாங்காணி நெய்

பொன்னாங்காணி சிறுகீரை புகலுந்துளசி மாதளையும்
நன்னார் கூவிளை முசுமுசுக்கை நலமாங் கோவை வல்லாரை
சொன்னார் தாமரை சீந்திலுடன் றுலங்க வகைக்குச் சாறுழக்குப்
பன்னா வீர வுள்ளியது பகருஞ் சாக முழக்காமே. (பா. 286)

இருசீ ரேலஞ் சந்தனமு மிணங்குங் கராம்பு சாதிக்காய்
வருமோ தகமு மாயாக்காய் வளருங் கோட்டம் வசுவாசி
தருமே கன்னார் மதுரமுடன் சாத்திர வேதி சதகுப்பை
பொருமே நெல்லிப்பருப்பதுவும் போற்றிவகையோர் கழஞ்சுகொள்ளே.(பா. 287)

கொள்ளே நறுநெய் நாழியதிற் கூட்டுஞ் சாகத் தரைத்திட்டு
நள்ளே காய்ச்சி மெழுகுபத நன்றாய் வடித்துச் சீனியுமிட்
டுள்ளே காசி னிடைகொள்ள வோடும் பித்த கணையெல்லாம்
எள்ளார் பலநோய் வெதுப்புவிடு மிணங்கச்செய்வீர் பெரியோரே. (பா. 288)

சுரக்கணையின் குணம்

சுரமதிற் கணைக்கு ணங்கேள் சோர்வுடன் றேகம் வற்றும்
கரமொடு முகமுங் காலுங் கனத்துநீர் குளிர்ந்து காட்டும்
வரவர வெதும்பூந் தேகம் பறகடித் தலறுஞ் சற்றே
சிரமுழு திடிக்குங் கண்டஞ் சிக்கென விருமுந் தானே. (பா. 289)

சுரந்தனிற் கணைவந் துற்றாற் றோன்றிடுங் குணங்கள் கேண்மின்
நிரந்ததோர் விலாவெ லும்பு நெருப்பெனக் கொதித்துக் காட்டும்
கரங்களுங் கால்க டாமுங் கணையெனத் திரண்டு நீளும்
உரங்கெடக் கெடுத்து முள்ள வூனையு முண்ணு மென்றார். (பா. 290)

சிகிச்சை : குடிநீர்

ஆடா தோடை தூதுவளை யளவார் சீலக் கூவிளைவேர்
தேடா ரியங்கு நன்னாரி சிறுகாஞ் சோன்றி முத்தமுடன்

நாடா விலந்தை சிற்றமட்டி நலமா நிலவே ரோஸிரான்று
வாடா தெடுத்தே யொருகழஞ்சு வகுத்த மருந்தின் வகைகேளே. (பா. 291)

கேளாய் திப்பிலி செவ்வியமுங் கிளருந் திப்பிலி மூலமுடன்
நாளார் சீந்தில் சிறுதேக்கு நல்ல மதுரமிருசீரம்
வாளார் கொத்தம் பாலரிசி வளரும் வேம்பி னரிசியுடன்
தூளார் மிளகு நெய்பொரியுந் தொகுத்தே யெடுத்து நிறைகேளே. (பா. 292)

கூட்டி வகையிரான் றொருகழஞ்சு குறிசே ருதக மாறுபடி
நாட்டி யெட்டொன் றாய்க்குறுக்கி நலமாய் நான்கு நாட்குடிக்கில்
வாட்ட மறவே சுரக்கணையும் மற்றும் பலநோ யுள்ளிவெலாம்
காட்டில் விழுந்தே யோடிவிடுங் கருத்தாய் நெய்யும் வைத்திடுமே. (பா. 293)

வாழைப்பூ நெய்

நாவுறு வாழை யின்பூக் கமுகின்பூத் தென்னம் பூஷம்
தாவுதா மரையின் பூவுஞ் சதாவேரிக் கிழங்கின் சாறும்
கூவிளை கொடுப்பை யாரை கோவையி னிலையும் பாசி
மேவுற வகைக்குச் சாகம் விளங்கிவொன் றுழக்காய்க் கூட்டே. (பா. 294)

கூட்டியே யதனோ டொக்கக் கோவினெய் நாழி சேர்த்துப்
பாட்டியல் சாதிக் காயும் பத்திரி கராம்போ டேலம்
நாட்டிய மாயாக் காயும் வசுவாசி சாத்திர வேதி
காட்டிய மதுரஞ் சீரங் கல்லினார் கெருட பச்சை. (பா. 295)

கடைமருந் திவையோ ரொன்று கழஞ்சிடை பொடித்துக் கொண்டே
அடைவுறு மீர வுள்ளி யதுதனிற் சாறு ழக்குத்
தடையற வார்த்துச் சொல்லுஞ் சரக்கினை யரைத்துக் காய்ச்சி
இடையொரு கரண்டி கொள்ள விரியுமே கணைநோ யெல்லாம். (பா. 296)

அத்தி சுரக்கணையின் குணம்

அத்தி சுரத்தில் வருங்ணைதா னிதிக தாக முண்டாகி
மெத்த வெதும்புந் தேகமெலாம் மெலிந்தே யன்னம் வேண்டாது
சத்தி யெடுக்குந் தழற்சியுண்டாஞ் சன்ன விருமல் பெலவீனம்
பத்தி வயிறுங் கழிந்திருக்கும் பகுத்தே யறிந்து கொளநன்றே. (பா. 297)

சிகிச்சை : குடிநீர்

தூதுளை கண்டங் காரி சொறிகிழங் கதுவுந் தோடை
சீதளை யியங்கு மேனி சேரவோர் பிடியாவ் வொன்று

தீதக லிஞ்சி யுள்ளி கராம்புடன் றிரங்கன் மூலம்
தாதளை யரத்தை சுக்குச் சரக்கிவை கழஞ்சொவ் வொன்றே. (பா. 298)
(சொறிகிழங்கு-சிறுகாஞ்சோன்றிக்கிழங்கு திரங்கன்மூலம்-செவ்வியம்)
கூட்டி யிடித்துப் பிட்டவியல் கூறாய் வெந்து பிழிந்துகொண்டு
வாட்டி யதனைக் குடித்திடுகின் மாறு மத்தி சுரக்கணைதான்
தேட்ட நறுநெய் தான்வைக்கச் செப்பு மருந்தின் வகையெல்லாம்
நாட்ட முடனே பொதியமுனி நவிலும் படிதா னினிக்கேளே. (பா. 299)

மேனிநெய்

அணிற்பிள்ளை யிரத்தத் தோடே யருமுய லிரத்தந் தானம்
துணித்தநன் முயிற்று முட்டை துலங்கவே யொன்றாய்க் கூட்டி
மணித்தநல் லாட்டின் பாலும் வல்லாரை கொடுப்பைச் சாறும்
கணித்திடு மேனிச் சாறு மொருசரி கலந்து வையே. (பா. 300)

வைத்த மதுர மிருசீரம் வளருங் கராம்பு வான்மிளகு
மெய்த்த திரிகடு கேலமுடன் மேவு மரத்தை சதகுப்பை
நத்தும் வகையொன் றொருகழஞ்சு நறுநெய் யதுவு மொருநாழி
செய்த்த தேனு மோருழக்குத் திடமாய் விட்டுக் காய்ச்சுகவே. (பா. 301)

காய்ச்சி யெடுத்துக் காசிடைகொள் காணா தத்தி சுரக்கணைபோம்
கூச்ச மறவே யுடறெரியுங் கொண்ட விரும லீழையும்போம்
வாய்ச்ச மருந்தே யிதுசெய்யின் மற்றும் பலநோய் மாறியிடும்
பேய்ச்சி முலையுண் டருண்மாயோன் மருக னருகண்முன்னிருளனவே.

வரட்கணையின் குணம்

வரண்ட கணையின் குணந்தன்னை வகுத்தே யுரைப்பன் மடமானே
திரண்டு வளரு முடம்பதனைச் சேதப் படவே தானுலர்த்திக்
கருண்டு நாவு முலர்ந்திருக்குங் கண்ணும் வெள்ளை விழிதனிலே
பரந்து பற்றுஞ் சிலாம்பதுபோற் பகற்போ மளவிற்றெரியாதே. (பா. 303)

வாலசந்திரக்கணையின் குணம்

வன்னமே புகலக் கேளாய் வாலசந் திரத்தின் செய்கை
முன்னமே வெதும்பிக் காய்ந்து முதுகின்றண் டெலும்பைச் சார்ந்து
மின்னெனு நயனந் தன்னில் மீன்சிலாம் பதுபோற் பற்றிப்
பின்னுமே கடுபப்ச் சீதங் கழிந்துடல் வற்றுந் தானே. (பா. 304)

வற்றுமே தேக மெல்லாம் வயிறது பொருமுங் காயும்
முற்றுமே மூலந் தள்ளு முதுகின்றண் டெலும்பு காயும்
சுற்றுமே புறங்கால் கைகள் சூழந்துதான் குளிர்ச்சி யுண்டாம்
பற்றுறு கழிப்புச் செய்து பகர்நெய்யுங் கொடுக்கிற் றீரும். (பா.305)

மகேந்திரக் கணையின் குணம்

மாதுகேண் மகேந்தி ரத்தால் வருத்திடுங் கணைக்கு ணங்கள்
சீதமே கழியும் பின்னைச் சிறந்துடல் வெதும்பிக் காயும்
நாதமாய் வரளு மேனி நயனத்தில் வரியு மீளும்
சாதமாய் நயனம் பாழாஞ் சடுதியிற் கழிப்புச் செய்யே. *(பா. 306)*

இம்மூன்று கணைகட்கும் கழிப்பு

பொரித்தரி யிளநீ ரப்பம் புகல்கரும் பிவையி னோடு
மருப்பொரி விளாங்காய் தேங்காய் வகையவல் மலர்தாம் பூலம்
கருத்துடன் படைத்து வேழ முகன்கழல் பூசித் தேத்தி
விருப்பொடு கழிக்கின் மீளும் விளம்புநெய் கொடுத்தி டாயே. *(பா. 307)*

மூன்று கணைக்கும் நெய்

பிள்ளைப் பிணியின் வகைதீரப் பேசு நெய்யின் வகைகேளீர்
தள்ளா மருதம் பட்டையுடன் றளமாங் கூவிளை நன்னாரி
கள்ளார் கருவே லிலைப்பட்டை கருதுஞ் சிற்ற மட்டியின்வேர்
உள்ள படியே கொச்சங்கா யுவந்து வகைக்குப் பலமொன்றே. *(பா. 308)*

ஒக்க விடித்தே யுத்தமது பலமொவ் வொன்றுக் கிருநாழி
மெய்க்கக் காய்ச்சி யெட்டொன்றாய் மேவி யிறுத்து வடிகொண்டு
வைக்குந் துளசி கீழ்நெல்லி வாரி மீட்டா னலக்கோவை
புக்குங் கொடுப்பை வல்லாரை புகலு மவுரி பழம்பாசி. *(பா. 309)*

('கொச்சங்காய் - பீர்க்கங்காய்
வாரிமீட்டான் - சாத்தாவாரிக்கிழங்கு
கொடுப்பை - பொன்னாங்காணி)

பச்சை மருந்து வகையொன்று பகரிற் சாகம் படிகாலாய்
மெச்சுங் கஷாய மதில்விட்டு மேவுங் கற்கந்திரிசாதி
வைச்ச மதுரங் கன்னாரும் வகைசேர் வேதி திப்பிலியும்
மிச்சு முடனே நற்சீர மிகாமே கழஞ்சொன் றிடைகூட்டே. *(பா. 310)*

(திரிசாதி - ஏலம், கராம்பூ, வசுவாசி மிச்சு - விலாமிச்சு)

கூட்டி யரைத்துப் படிநெய்யிற் குணமாய் வெந்து மெழுகு பதம்
நாட்டி வடித்துக் காசிடைகொ ணவின்ற கணைகண் மூன்றுடனே
காட்டுங் கடுப்புப் பலரோகங் கடுகத் தீரு முள்ளுலர்தல்
வாட்டும் வரட்சி வகைமாறி வலுக்கு முடம்பு மெனவுரைத்தார். *(பா. 311)*

தூங்குகணையின் குணம்

தூங்கு கணையி னியல்பதனைக் கேண்மின் முனிவன் சொற்றபடி
ஆங்கு வெதும்பி யங்கத்தி லரைக்க மேலே வெளுத்திருக்கம்

தீங்காய் வடிவு தனைக்கெடுத்துத் தியக்கஞ் செய்து தூங்குவிக்கும்
பாங்கார் குரலுந் தான்கன்று மொழியுந்தவறும் பான்மையிதே. (பா. 312)

சிகிச்சை : பிரமிநெய்

கண்ட சர்க்கரை விழாலரிசி கடுக்காய் மஞ்ச ளதனோடு
மண்டு நிலத்து வாகையின்வேர் மருவுந் திப்பிலி நெல்லிமுளி
சொண்ட விடையொன் றிருகழஞ்சு குளிர்ந்த பிரமிச் சாறுபடி
வண்டு பயிலு மலரளக மானே நறுநெய் படியொன்றே. (பா. 313)

விட்டே காய்ச்சி மெழுபத மேவ வடிகொண் டிருகழஞ்சு
கட்டா யேழு நாட்கொள்ளிற் கன்று மிடறுங் குயில்போலாம்
தொட்டேபத்துநாட்கொள்ளத்தோன்றாப் பொருளுந் தோன்றுவிக்கும்
முட்டா நெய்தா னொருமாதங் கொள்ளவுடம்புபொன்போலாம் (பா. 314)

சிகிச்சை : தாழைவீழுது நெய்

காராவி னெய் நாழி பானாழி தாழை தனிற்சாக மொருநாழியுங்
கணி நலக்கோவைமிலை வல்லாரை யால்விழுது கடியதோர் முசுமுசுக்கை
பார்மீதி லேவளருங் கூவிளைத கரையாரை பழம்பாசி துளசிநெல்லி
பண்பான கீழ்நெல்லி வீராணிக் கிழங்குகரை பரிவான விரிசிலையுமே
ஏராரு மோரிலைத் தாமரை கணைப்பூ டியல்சிறிய புள்ளடியது
மிவைசாக மேறொன் றுழக்காக வேகொண்டினிதுபெற வைத்தபின்பு
வாராரு மேலமில வங்கநற் சீரகம் மதுரநற் கெருடபச்சை
மாலாயந் தலைமீரவுள்ளிகன் னாடருடன் மாசியின் காய்வசம்பே. (பா. 315)

(நலக்கோவை - கொல்லன்கோவை
விரிசு - கையாந்தகரை
மாலயம் - சந்தனம்)

சுத்தியாங் கோட்டநற் செண்பகப் பூநெல்லி சுருதிசாத் திரவேதியும்
துய்யதிரி லகிரிகச் சோலமொ டிலாமிச்சு தொடுகூகை நீறுசீனி
பத்திரியு டனேகோ ரோசனை யிவையொன்று பகரரைக் கழஞ்சதாகும்
பரிவா யிடித்ததூ டுவிமேற் காய்ச்சியே பதமுற வடித்தநெய்யைப்
புத்தியுட னேயிரண்டுகாசளவு கொண்டிடிற்புகல்கணைகள் பதினெட்டுமே
பொருமலொடு மாந்தவகை பாலரது சோகங்க டீரவென் றெண்ணிமுன்னாட்
டென்பொதிய மலையிலுறு குறியமுனி யாராய்ந்து செப்பியமொ ழிப்படியதே

அனற்கணையின் குணம்

மானே யனலின் கணைக்குணமு மியைந்த மருந்தும் வகுத்திடுவன்
ஊனே யெல்லாந் தானுண்டே யோரு நெஞ்சை யெடுத்தடிக்கும்

ஆனைபோன்ற வுடல்வற்று மசன மறுத்துத் தாகமிகும்
வானேய் மதியம் போல்வெளுத்து வரிசேர் விழியும் பாழாமே. (பா. 317)

சிகிச்சை - சஞ்சீவியெண்ணெய்

மஞ்சாருங் குழலாய்கேள் வல்லாரை பாசி
வருதுளசி தக்காளி யோடுமஞ்ச ணாத்தி
கஞ்சமிகு கற்றாழை பருத்திவரு பிஞ்சு
கருவேல்வெட் பூலாவுங் கர்ப்பூர வள்ளி
பஞ்சாரும் புள்ளடியுந் தகரையொடு பிரமி
பண்புபெறு மிவைசாக மேரண்ட வெண்ணெய்
தஞ்சமுற வேயெல்லாஞ் சமனாகக் கூட்டிச்
சாற்றுமதி லினியமருந் தோமமுட னேலம் (பா. 318)

(பாசி - பழம்பாசி
தக்காளி - மணித்தக்காளி)

ஏலங் கோட்ட மதிமதுர மிருசீ ரகமுஞ் சந்தனமும்
ஞாலம் புகலு முரோகணியு நல்ல கடுக்காய் மாயாக்காய்
மேலும் கராம்பு சாதிரண்டு வெள்வெங் காயங் கெருடபச்சை
கோல்கார் கன்னா ரீரவுள்ளி கூட்டி வடித்துக் கொள்வீரே. (பா. 319)

(சாதிரண்டு - சாதிக்காய், வசுவாசி
கோல்கார் - கார்கோலரிசி)

கொண்டா லொழியுங் கணைச்சுரமுங் கொடிய விருமல் வயிற்றுளைவும்
உண்டா லிளைக்கு மிருமலுட னுதி மறியு நோயனைத்தும்
கண்டா லிந்த வெண்ணெயினாற் கடிதிற் றீர்ந்து போமெனவே
பண்டே யாயுண் மறைதெரிந்து பகர்ந்தான் மலையின் முனிவனுமே.(பா. 320)

வீங்குகணையின் குணம்

வீங்கு கணைதான் புதல்வர்க்கு மிகவே வந்தங் குதிக்குமெனில்
தாங்கு நீரு மலமதுவுந் தானே யுடம்பு மிகவெளுக்கும்
ஏங்கித் தியங்கு மெந்நேர மெடுத்துக் குடிக்குந் தண்ணீரை
ஓங்கி வீங்கு முடம்பெல்லா முயிரை மயங்குங் கண்டாயே. (பா. 321)

சிகிச்சை : எண்ணெய்

தென்னங் குரும்பை யதனுடனே சீரார் தகரை பழம்பாசி
மன்னுங் குமரி யாவரையு மஞ்ச ணாத்தி யிவையனைத்தும்
தன்னந் தனியே யொவ்வொன்றிற் சாறு முழக்குத் தம்முடனே
பன்னும் பசுவின் மணக்கெண்ணெய் பகர்ந்தா ருரியுங் கலந்ததற்பின்

ஏலமோர் கழஞ்ச தாகு மிலவங்கப் பட்டை யிரட்டி
சீலமார் மதுரங் கோட்டஞ் சீரகங் கூட்டிக் கொண்டு
காலமே வடித்த வெண்ணெய் காசிடை கொள்வீ ராகில்
பாலகர் கணைக ளெட்டும் பாறுமென் றருளி னாரே. (பா. 322)

வெளுப்புக் கணையின் குணம்

வெளுப்புக் கணைதான் மெய்கலந்தால் வெளுத்தே முகமு மிகவீங்கிக்
கழுத்துந் தேய்ந்து கண்வெளுத்துக் கருவிதளர்ந்தே மயக்கமுண்டாம்
பழுத்த பழம்போன் மிகவுலர்ந்து பச்சை நரம்பு வயிறொட்டி
நழுக்கு முடலிற் சுரமுண்டாய் நயந்தே யசனஞ் சொல்லாதே. (பா. 323)

சிகிச்சை : நாயுருவி நெய்

நாயுருவி சிறுகீரை பொன்னாங் காணி
நற்சாறு நறுநெய்யுஞ் சமன தாக
மாயாக்காய் கெருடபச்சை யீர வுள்ளி
மஞ்சணற்சீ ரகமதுரங் கராம்போ டேலம்
ஆயமிவை யிடித்தபொடி தூவிக் காய்ச்சி
யரும்பதத்தி லேவடித்துக் கொடுக்கும் போது
காயமதிற் கொண்டகணை பதினெட் டுக்குங்
கறியகத்திச் சாகம்பூக் கதலிக் காயே. (பா. 324)

சத்திக்கணையின் குணம்

சத்தியாங் கணைவந் துற்றாற் சாற்றிய குணத்தைக் கேளாய்
வத்தியே யுடம்ப தெல்லா மாலையின் மருளுங்கண்ணும்
அத்தியைப் பற்றிக் காயு மரோசிப்பை மிகவுண் டாக்கும்
நித்திய மயக்க முண்டா நெடுமூச்சுத் தோன்றுமன்றே. (பா. 325)

கணையவத்தை

வாலசந்திரக்கணையில் அவத்தைக்குணம்

கண்டங்கண் ணீரும் பாயுங் கருதிடுந் தண்ணீர்த் தாகம்
விண்டதோர் குணமில் லாட்டான் மேவியே சிதறச் செய்யும்
அண்டிடு வால சந்திரக் கணையுறு மவத்தை யீதாம்
மண்டிய வியாதி தீரா மரணமா மறிந்து கொள்ளே (பா. 326)

மகேந்திரக்கணையில்

அவத்தைக் குணம்

மகேந்திரக் கணைய வத்தைக் குணத்தினை வகுக்கக் கேளாய்
சகோதரன் வால சந்திரக் கணையுடன் றானே கூடி

அகோரமா யுடம்பு வற்றி யானதோர் வயிறுந் தள்ளி
விகாரமாய்க் கண்ம யங்கி விழியினீர் பாயு மன்றே. *(பா. 327)*

பாயுமே கடைக்கண் ரண்டிற் பகர்ந்திடும் பிராலும் பற்றித்
தேயுமே பிரால்பொ ழிந்து சேர்கரு விழிக்கீ ழாக
மாயுமே பிறையைப் போல வளர்ந்திடும் வெள்ளைச் சுக்கிரன்
ஏயுமே கறுத்தச் சுக்கிர னேரிடின் மரணமாமே. *(பா. 328)*

இரத்தக்கணையின் குணம்

காலும் வீங்கு முடல்வற்றுங் கடுப்போ டுதிரங் கலந்துவிழும்
மூலந் தள்ளு மேல்காயு முன்னே கைகால் கனப்பாகும்
மாலுங் கொள்ளு மிரத்தத்தில் வருத்துங்கணையின் குணமிதெனக்
கோல முடைய பண்டிதரே குறித்துச் செய்வீர் குணங்கண்டே. *(பா. 329)*

சிகிச்சை - மூலக்கடுப்பு வயிற்றில் வெக்கைக்கு நெய்

மாதளையின் பிஞ்சினுடன் பருத்திப் பிஞ்சு
வகுத்தகுன்றி யிலைதுவைத்துப் பிழிந்த சாறு
கோதகற்றம் பசுவின்னெய் வகைக்கோர் நாழி
கூட்டிநல்ல மெழுகுபதம் வடித்துக் கொண்டு
சீதமுறு முன்னேலங் குலக்காய் சுக்குச்
சென்னகரம் பழமதுரஞ் செண்ப கப்பூத்
தீதகற்றுங் கராம்பினொடு வெளுத்தன் மாயாச்
சேருங்கோ ரோசனையும் பொடித்துத் தூவே. *(பா. 330)*

தூவுநெய்யிற் காசினிடை யுள்ளே கொள்ளச்
சொன்மூலக் கடுப்புவெக்கை யக்க ரங்கள்
தாவிரத்தக் கணை தீருங் கடுப்பு நீங்கச்
சாற்றுமருந் தாவரையின் வேரு மற்றைக்
காவிலுறு மாதளையிற் பட்டை தானுங்
கலந்தரைத்தே யெலுமிச்சம் பழத்திற் சுட்டு
மேவுமதின் றோலுடனே யரைத்து மோரில்
வேகவைத்து வடிகட்டிக் கொடுக்கப் போமே. *(பா. 331)*

கணைகள் பதினெட்டுக்கும் பொதுச் சிகிச்சை

பொன்னாங் காணி சிற்றமட்டி புகனன் னாரி யுஞ்சிவர்த
பொன்னி னெருஞ்கியிலைவேர்கள் பொருந்துஞ் சிறிய புள்ளடியும்
மன்னம் பிரமி வல்லாரல் வகுத்த கருவே றனிற்பட்டை
பின்னு மகத்தி யதும்பட்டை பேணிச் சமனாக் கொள்ளுகவே. *(பா. 332)*

ஏயு மிவைக ளிடித்தரைத்தே யீருள் ளியிற்சா றூரிகூட்டி
ஆயுஞ் சிறிய வேரண்ட வெண்ணெ யதுவோர் நாழிவிட்டுச்
சாயுமிருசீ ரகமுலுவாச் சாதிக் காயு மதிமதுரம்
பாயுங் கழஞ்சு நாலரைத்துப் பகரு மெண்ணெய் தனிற்கலந்தே. (பா. 333)

கலந்து பசுவின் சாணியெனக் காணும் பதத்திற் காய்ச்சியபின்
மலர்ந்த வெயிலி னாண்மூன்று வைத்தே யெடுத்துப் பின்காய்ச்சி
இலங்கு மெழுகு பதந்தன்னி லிறக்கி வடித்துக் கொள்ளும்போ
தலர்ந்த விழிசேர் மடமயிலே யருமெள் ளெண்ணெய் முலைப்பாலும்.

அவையோர் நாழி கிளுவையினிற் பட்டை வசம்பு பெருங்காயம்
நவைதீ ருள்ளி பீநாறி நலஞ்சேர் கோட்ட மவற்றுடனே
குவைசேர் புறத்துப் பாலாமை கொள்ளு நெஞ்சி னெலும்பதுவும்
தவறா தரைத்து மெழுகுபதந் தன்னில் வடித்துத் தலைக்குவையே.(பா. 335)

வைத்து மேலும் பூசிமுதல் வகுத்த வெண்ணெ யுள்ளுக்கு
நத்தி யொருநாள் விட்டொருநா ணாடிக் குடித்து நவநாளில்
வைத்த வெண்ணெய் தனைக்கழற்றி வரவே கணைகள் பதினெட்டும்
ஒத்த கணையிற் காய்ச்சல்வயிற் றூதல் கழிச்ச லுடன் மெலிவு. (பா. 336)

வீக்கம் பழுப்பு நெஞ்சிடிப்பு விட்டுப்போகும் பூசினியில்
ஆக்குநெய்யுங் கணையெண்ணெ யதுவு நன்றாம் பலபிணியும்
தீர்க்கு முடலுந் தெளிவாகுந் தேர்ந்தே யுரைத்த தமிழ்முனிவன்
வாக்கின் படியே மாறின்றிச் செய்க வலிதாம் பண்டிதரே. (பா. 337)

பூசினி நெய்

பூசினிக் காயின் சாறு புகலுநீர் விட்டான் சாறு
மாசறு மிளநீர் பானெய் வகைக்கொரு நாழி யாகத்
தேசுறு கூவி ளத்திற் செழும்பிசி னிலகு தன்னில்
வீசுறு பிசினி னோடு விளாம்பிசின் மாம்பருப்பே. (பா. 338)

கோட்ட மேல மிலவங்கங் கூறும் வெட்டி யிலாமிச்சு
நாட்டு மதுரஞ் செண்பகப்பு நலஞ்சேர் பச்சை கெருடபச்சை
கூட்டு மாரந் திப்பிலியுங் குலவுங் கராம்பு மிருசீரம்
ஈட்டும் வகைக்கோர் கழஞ்சுகொண்டேயிடித்துக்கரைத்து மெழுகுபதம்.(பா. 339)
(ஆரம்-சந்தனம்)

தன்னில் வடித்துக் காசினிடை தானே கொடுத்து வரக்கணையின்
மன்னுங் காய்ச்ச லுட்சுரமு மாறா விரும லுடல்வெதுப்பும்
இன்னும் பலநோய் களுமாறி யினிதா யுடலும் பூரிக்கும்
துன்னும் பெரிய வாயுண்மறை துணிந்தே யுரைத்த படியாமே. (பா 340)

கணையெண்ணெய்

கூவிளையி னிலைச்சாறு மால்காந்தி துளசி
குமரியீ ருள்ளியொடு நீர்வள்ளி பிரமி
காவிலுறு தக்காளி யிவைசாறு தாமுங்
கணக்காக வொருநாழி யோரொன்று பின்னும்
பாவிலுறு மேரண்ட வெண்ணெயொரு நாழி
பயில்கின்ற வாடுதவு பாலுமிரு நாழி
கோவுதவு பாலுமிரு நாழியது கூட்டிக்
கூகைதரு நீறட்டி கோட்டமுட னோமம். (பா. 341)

(அட்டி-மதுரம்)

ஏலமொடு பலைமூன்று முக்கடுகு தாமு
மினிமைபெறு சீரகமு மேலங்க ராம்பு
பாலினிறு நற்கெருட பச்சைவரு மாவின்
பயில்சார மாசியுறு காயிவைக ழஞ்சாய்ச்
சீலமுட னேயுரலி லிட்டிடி பொடித்துச்
செப்பியவிவ் வெண்ணெயினி லேவிசிறி வெய்யில்
நாலுவரு நாளளவில் வைத்தெடுபி னடுப்பி
னன்மெழுக தானபத நாடிவடித் திடுமே. (பா. 342)

வடித்தெடுத்த வெண்ணெயதனைக் குழந்தை கட்கு
வகுத்தொருகா சிடைகொடுக்க வரட்சி காந்தல்
தொடுத்தகணை யத்திசுர மிருமல் விக்கல்
சொல்வெதுப்புப் பரிதாபஞ் சத்தி யோடே
அடுத்துவரு முழலையுட னெஞ்சி டிப்பு
மகலுமிது பெரியவர்க டமக்கு மாகும்
படித்துவருந் தமிழுணர்ந்த மலைய மேலோன்
பகர்ந்தனனிவ் வண்ணமருட் பண்பி னாலே. (பா. 343)

சஞ்சீவியாதி யேரண்டத்தைலம்

உற்ற மாந்த கணந்தீர வுரைக்குஞ் சீந்தில் பரிவாலி
யுவந்தகொடுப்பை குருவிச்சீருள்ளி முசுக்கை யோரிதழும்
மற்றுந் தக்ரை பழம்பாசி வகுத்த பாலைக் கொடிகொத்தான்
மன்னுஞ் சிறிய புள்ளடியுங் கோவை கூத்தன்குதம்பையுமே
சொற்ற விவைகடனித்தனியே துவைத்துப் பிழிந்து படிகாலாய்ச்
சூழு மாவின் மணக்கெண்ணெ யதுவோர் படியுஞ்சூட்டியதில்
திற்றி யுதவுஞ் சாதிக்காய் செய்ய கடுக்காய் குங்குமப்பூச்
சேருஞ் சாதி பத்திரியுங் கராம்பு கடுகு ரோகணியே. (பா. 334)

இவையோடைந்து திரவியமு மேலம் பசுவின் ரோசினையு
மெடுத்து வகைக்குப் பலங்காலாயிடித்துத் தூவியடுப்பேற்றி
நவைசே ராது மெழுகுபதந் தன்னிற் காய்ச்சி வடித்ததனி
னாடுங் காசி னிடைகொடுத்து வரவே தீரு நவின்றகணை
குவைசேர் நகிலத் துறுமமுதங் கொடுத்து வளர்க்கு மடநல்லார்
கொள்ளு முணவு பத்தியமா யிருக்க வென்று குறிப்பித்தான்
சிவமே யன்றி யஷிமான்றுஞ் சேராத் தவத்துக் குறுமுனிவன்
செப்புமருத்து நூன்முறையே தெளிதன் முறையாஞ் சேயிழையே.

(கூத்தன்குதம்பை-மூக்குத்தி
ஐந்திரவியம்-ஏலம்,சண்பகம்,சீரகம்,கிராம்பு,கோட்டம்)

மாதுளம்பழத்து நெய்

தத்துவக் கணைக ளெட்டுஞ் சன்னியக் கரமீ ராறும்
பித்தத்தி லுள்ள வான பிணிகளீ ராறு தாமும்
மற்றுள தோஷ மேழு மாந்தத்தின் வாத மாறும்
உற்றமிடு மிவைகட் கெல்லா முதஷிமன் மருந்து மாதே. *(பா. 346)*

மாதளங் கனியிற் சாறு மலைமகள் குமரிச் சாறு
தூது ளங் கனியும் வில்வந் துளசிவே லிப்ப ருத்தி
ஈதுட னீரவுள்ளி யிடைசரி சாறு கொண்டு
தீதறு நறுநெய் நாழி சேர்த்துநற் கற்கஞ் சீரே *(பா. 347)*

இச்செய்யுள் வேறு பிரதிகளிற் பல வேறுபாடுகளோடு காணப்படுகிறது. முதலாமடியில் 'குமரிச்சாறு' என்பதற்குப்பதில் குமரிவேரும் என்றும், மூன்றாமடியில் 'இடைசரிசாறுகொண்டு' என்பதற்குப் பதில், இடைசரியாகக் கொண்டு என்றும் பாடமுன்டு. வேறு பிரதியில் 'தூதுளங்கனியும்' என்றும் தொடங்கும் இரண் டடிக்குப் பதில், 'நீதமால் காந்திச்சாறு நிகழ் முசுமுசுக்கைச்சாறு' என்றும் மற்றொரு பிரதியில் மேற்கூறிய இரண்டடிகளும் உள்ளனவாய் அச்செய்யுள் ஐந்தடிச் செய்யுளாயு முண்டு. நன்கு விளங்கும் பொருட்டு மேற்படி செய்யுளை இதன்கீழ்த் தருகின்றோம்.

மாதுளங் னியீற் சாறு மலையினிற் குமரிச் சாறு
நீதாமல் காந்திச் சாறு நிகழ்முசு முசுக்கைச் சாறு
தூதுளங் கனியும் வில்வந் துளசிவே லிப்ப ருத்தி
ஈதளை யீர வள்ளி யிவைசரி யிவைசரி சாறு கொண்டு
தீதறு நறுநெய் நாழி சேர்த்துநற் கற்கஞ் சீரே *(பா. 348)*

சீரகஞ் சாதிக் காயுந் திப்பிலி யக்க றாவும்
நேரிய மதுரஞ் சந்த நிகழேலங் கணித வேதி

ஆரிய கெருட னோம மாவரந் துளிர்மா யாக்காய்
பாரில் சுரனார் மூலி பசுக்கோரோ சனைய தொன்றே. (பா. 349)

ஒன்றதா யரைத்துச் சாற்று முறுநெய்யின் மருந்தீ ரேழும்
நன்றதாய்க் கலக்கி வெந்து நன்மெழு காம்ப தத்தில்
கன்றிய சிறுவர்க் கெல்லாங் காசிடை கொடுப்பீராகில்
என்றுநோய் நீங்கி நன்றா யின்புடன் வாழு வாரே. (பா. 350)

சுரம்

கார்பெறு கரிமு கத்துக் கடவுளை யடிவ ணங்கிச்
சீர்பெறு மருந்த வத்துக் குறுமுனி தெரித்துக் கூறும்
பேர்பெறு மருத்து நூலிற் பாலர்நோய் சுரத்தின் பேதம்
நேர்பெறு குணஞ்சி கிச்சை யறிந்தவர் நிகழ்த்த லுற்றாம். (பா. 351)

வைத்தியர் அறிய வேண்டியன

சுரம்வரு நாளுங் கண்டு சுரத்தினி லேதுங் கண்டு
சுரமுறு தோஷ மூன்றிற் றொந்திப்பு நிலையுங் கண்டு
சுரந்தனிற் குணமுங் கண்டு சுரம்வருங் குறியுங்கண்டு
சுரமறு மருந்து செய்யச் சொற்றனர் முனிவ ரன்றே. (பா. 352)

தீதறு பறவை யாதி சேர்சுர நிலையு ணர்ந்து
காதுமக் கரங்கண் மாந்தங் கடுமைசேர் தோஷ மோர்ந்து
வேதனை செயுங்கி ரந்தி வெப்புடன் கடுப்ப தெல்லாம்
சோதனை புரிந்து மற்றச் சரமறி வதுநன் றாமே. (பா. 353)

அறியமச் சுரத்திற் கோழை யடுத்திடு சுவாதந் தானும்
செறிவுறு சன்னி பாதஞ் சேருளை மாந்தை யாதி
குறியெலா மோர்ந்து ணர்ந்து கொண்டுபின் மருந்து செய்ய
நிறைதவ முனிவன் கூறு நேர்மையை யறிந்து கொள்ளே. (பா. 354)

சலந்தனிற் பேதத் தோடு தாதுவி லுள்ள பேதம்
மலந்தனிற் பேத நாக்கில் வரிவிழி தம்மிற் பேதம்
குலந்தனி லுள்ள பேதக் குணமெலாந் தெளிந்தா ராய்ந்து
நிலந்தனின் மருந்து செய்ய நிறுவினர் முனிவ ரம்மா. (பா. 355)

உண்டிடு புசிப்பின் பேத முற்றிடு நாடி பேதம்
கொண்டிடு-சுரத்திற் பேதங் கோள்களின் பேதா பேதம்
மிண்டிடு சன்னி தோஷம் விஷகலை நிற்கு மாறும்
கண்டுநன் மருந்து செய்யக் கடனதாம் பண்டி தர்க்கே. (பா. 356)

தெரிந்திடு சுரத்திற் கேற்ற சிகிச்சையை யுணரு ஞான்று
பொருத்திடு மருந்தி லுற்ற புரையறு சரக்க தெல்லாம்
தெரிந்துநோய்க் கேற்ற வண்ணங் கூட்டியங் குறைத்துஞ் செய்வோர்
வருந்துநோய் நீக்கற் கேற்ற வைத்திய ராவ ரன்றே. (பா. 357)

வருந்திடு நோயை நீக்கிச் சுகத்தினை வளரச் செய்யும்
மருந்துதான் னோயுஞ் செய்யு மதுவன்றிக் கொலையுஞ் செய்யும்
தெரிந்துநன் மருந்து செய்யுந் திறமெலாந் தெளிந்தா ராய்ந்து
மருந்துநோய்க் கேற்ற வண்ண மாறின்றிச் செய்க மாதோ. (பா. 358)

வாதசுரத்தின் குணம்

வாத சுரத்தின் குணந்தனக்கு மயிரே சிலிர்க்கு மிருமல்குளிர்
போத நடுக்குங் கீழ்முதுகு பொருத்துக் கைகா லுடனுளையும்
காதற் றண்ணீர் மிகுந்தருந்துங் கருதுந் தலைக்குத்துடனோவாம்
மீது தொப்புழ் மலசலங்கண் மிகவுங் கடுக்குங் குலைப்பனுண்டே.(பா. 359)

வாதபித்தசுரம்

வாத பித்தங் கலந்தசுரம் வாய்கைத் திருக்குந் துவர்த்திருக்கும்
கூத லுண்டா மனலுண்டாங் குளிரும் விடாம லேவெதும்பும்
தாது செறியுங் குழண்மடவாய் சரீரமிகநோ முடம்புளையும்
மீது வயிறு கழியமுடல் விடம்போல் வெதும்பு முழலையுண்டே. (பா 360)

வாதசேற்பனசுரம்

இருமித் தொய்வாய் நாவுலர்ந்தே யிறங்காதன்ன மருவருக்கும்
பொருமியுடல முட்குளிரும் பொருந்து மலமோ டுகிர்வெளிறும்
செருமும் பலகாற் கொட்டாவி தீரா வெதுப்பாய்ச் சிலுசிலுக்கும்
வருமே மயக்கந் தெளிவுண்டாம் வாத சேற்ப சுரகுணமே. (பா. 361)

பித்தசுரம்

பித்த சுரத்தின் குணந்தனக்குப் பிதற்றுஞ் சிறுசீர் சிவந்திருக்கும்
மெத்த வெதும்பு நாவுலரு மிகுந்தே சத்தி யோங்காளம்
நித்தங் கழியும் வாய்கைக்கு நிறையப் புண்ணாந் தாகமுண்டாம்
சித்தாய் மயக்கும் பித்தசுரஞ் செய்யுங் குணங்க ளிவையாமே. (பா. 362)

பித்த சுரத்தின் குணங்கேளாய் பிதற்றிப் பேசும் வாய்வெருவும்
ஒத்த நயனஞ் சிவந்திருக்கும் மூடே வயிறு கழிந்துவரும்
மெத்தத் தண்ணீர் தாகிக்கும் வெதும்பு நாவுந் தடுமாறும்
சத்தி யெடுக்கு முகங்கறுக்குஞ் சலவாய் மிடறுபுண்ணாமே. (பா. 363)

பித்தவாதசுரம்

அந்தப் பித்த மதுவிரண்டும் வாத மொன்றுஞ் சுரமானால்
முந்தக் காயும் பொருமலுமா முடம்பு மிகவு மஞ்சணிக்கும்
நொந்தங் குளைய்யு முவாந்திசெயு நோக்கிற் கண்ணும் வெளுத்திருக்கும்
மந்தம் பற்று மூதைமிகும் வகுத்த குணங்க ளறிவீரே. (பா. 364)

பித்தசிலேற்பனசுரம்

பித்தசேற் பனசு ரத்திற் குணந்தனைப் பேசக் கேண்மின்
புத்திமா றாட்டம் பண்ணும் புகைந்திடு மிருமு மென்மேல்
சத்திடை விடாமற் காயுஞ் சலமல மஞ்ச ணிக்கும்
நித்திரை தானும் வாரா வுழலையு நெருக்க மாமே. (பா. 365)

சிலேற்பனசுரம்

சென்னிமிகக் கனத்திடித்துச் சீறிமுக முங்கனத்து
மின்னுமனல் போற்சுரமு மென்மேலு மேமுடுகி
மன்னுசிரத் தூடதிக வலியிடிப்பு மேயாகும்
அன்னநடை மின்னேயீ தறிவைசேற் பனசுரமே. (பா. 366)

சிலேற்பனபித்தசுரம்

செப்பாரு முலைமடவீர் சேற்பனத்திற் பித்தசுரம்
வெப்பாகும் வேர்வையுமாய் வெய்துறுநா வும்வெளுக்கும்
துப்பாதே யடைத்திருக்குந் தொண்டைகட்டி நாக்கறுக்கும்
ஒப்பாருஞ் சடைமுடியா னோதியவா யுண்மறையே. (பா. 367)

சிலேற்பனவாதசுரம்

ஊதைக் கபசுரத்தின் செய்கைதனை யோதிடுவன்
மோதித் தலைதுணுக்கு மோகித்து டன்விறைக்கும்
காதித் திடுமிருமல் கரகரத்து மெய்குழையும்
பேதித் துறுகுணங்கள் பேணிய றிந்துகொள்ளே (பா. 368)

பலசுரத்தின் குணம்

வாதபித்த சுரமாகிச் சேற்பசுர மாகி
மந்தபித்த சுரமாகித் தாகசுர மாகிச்
சீதமிகுங் குளிர்சுரமாய் முறைச்சுரமு மாகித்
தினச்சுரமாய் விடாச்சுரமாய் நானாளைச் சுரமாய்ப்
பேதமுற நீங்காமல் வெதும்பிமிக வேர்த்துப்
பிறங்காலு முகம்வயிறும் வீக்கமுள தாகும்
சேதமுறும் பலசுரத்திற் குரியகுண மிவையாய்ச்
செப்பினர்க ளாயுண்மறை தெளிந்தபெரி யோரே. (பா. 369)

தினம்வெதும்பி முறைவெதும்பித் திரும்ப நானாட்
டீர்ந்துசின்னாள் வாராமன் மந்தம் பற்றிக்
கனம்வெதும்பி யுழலையுண்டாய்க் காய்ந்து விட்டே
கால்வீங்கி முகம்வீங்கி வயிறும் வீங்கி
மனம்வெதும்பி வாதவித்த சேற்ப மாகி
முழுக்கில்வந்து வெதும்பிமந்த பித்த மாகி
அனமிறங்கா துடல்வெளுக்குஞ் சோர்வுண் டாகு
மடுத்தபல சுறமெனவே யறையும் வேதம். (பா. 370)

பலசுரத்தில் அசாத்தியத்தின் குணம்

தானேர் மந்தங் குளிர்தாகந் தலைநோ நடுக்குங் குலைப்பெய்தும்
வானேர் தருமுத் தோஷமுண்டாம் வருத்த மிகுந்து வாய்வெருவும்
ஊனேர் புறந்தாண் முகம்வயிறு முடனே வீங்குந் தொய்வுண்டாம்
கானேர் குழலாய் பலசுரத்திற் கடின மிதுகண் டறிவீரே. (பா. 371)

சிகிச்சை : பலசுரத்திற் குடிநீர்

கண்டிடுங் குடிநீர் வட்டுக் கற்றாழுஞ் சருகு கோரை
உண்டிடுங் கொட்டைப் பாக்கு முவந்தலா மிச்சின் வேரும்
மண்டிடுங் கடுக்காய் மல்லி திப்பிலி யசமதாகம்
மிண்டிடுஞ் சுக்குங் கூட்டி வெந்தநீர் குடிக்கப் போமே. (பா. 372)

குடிநீர் - 2

குடித்தபின் பற்ப டாகங் கோதறு கடுக்காய் சுக்குத்
தடுத்திடு கோரை வெட்டி தகுமிலா மிச்சின் வேரும்
அடுத்திடு வட்டி னோடே யருநில வேம்பு மல்லி
படித்திடு சீந்தில் சிற்ற மட்டிவேர் பகரு மோமம். (பா. 373)

இவைசமன் குடிநீர் காய்ச்சிக் கொடுத்திட வேகு மின்னம்
நவைதரு சுரநீங் காதே னல்லவே லாதி மற்றம்
தவலரு மிருத்தி யாதி சந்தனா திப்பேர் கொண்ட
நுவலரு மருந்தி லொன்றை யிட்டுண நொய்தி னேகும். (பா. 374)

பலசுரத்தில் வீக்கத்துக்குக் குடிநீர்

குடிக்குநீர் முள்ளிச் சாம்பல் குலவுநா யுருவிச் சாம்பல்
அடிப்புளிப் பொருக்குச் சாம்ப லாண்பனைப் பாளைச் சாம்பல்
துடிப்பல நிறையாய்க் கொண்டு தாணிநீ ரவித்துட் கொள்ளில்
தடிப்புள வீக்க முட்டுப் பலசுரந் தணிந்து போமே. (பா. 375)

குடிநீர் - 2

தணித்திடுங் குடிநீர் முள்ளி தனிக்கையாந் தகரை கோரை
பணித்திடுஞ் சிறுகாஞ் சோன்றி பற்படா பங்கீழ் நெல்லி
துணித்திடும் பிரமிநீற்றுப் பூசினி சுரைத்தண் டோடு
கணித்திடு நிலத்திற் பாகல் கடியபேய்ப் புடோலே குப்பி. *(பா.376)*
(குப்பி-பீச்சுளாத்தி)

ஒன்றிடும் வேர்க்கொம்பெல்லா மொருநிறை யிடித்த வித்து
நின்றிடுங் குடிநீ ரந்தி சந்தியாய் நிதானங் கொள்ளில்
சென்றிடுஞ் சுரத்தில் வீக்கஞ் செப்பிய தாகங் கூதல்
கன்றிடுங் கதிர்முன் கண்ட பனியெனக் கலைந்து போமே. *(பா. 377)*

முலைப்பாலெண்ணெய்

பொன்னார் பசுவின் பானாழி புகனல் லெண்ணெ யொருநாழி
மின்னார் முலைப்பாணாழி விரும்பு மிளநீ ரொருநாழி
நன்னார் முத்தஞ் சீதேவி நலஞ்சே ரிருவே லிலாமிச்சுச்
சொன்னார் சிற்ற மட்டியுடன் றரய வமுக்கி ராய்வேரே. *(பா. 378)*

வேருடை யரத்தை கோட்டம் வேர்க்கொம்பு தேவ தாரம்
சீருடை யகில்கச் கோலஞ் செவ்வள்ளி மாஞ்சி வேலம்
ஏருடை மதுரஞ் சாதி யிலவங்கஞ் சிறுநா கம்பூத்
தாருடைக் கடுகு ரோணி பச்சிலை சந்தங் குப்பை. *(பா. 379)*

ஏய்ந்திடு சரக்கும் வேரும் வகைக்கிரு கழஞ்ச தாக
ஆய்ந்திடு மமுக்கி ராய்வே ரரையிரு கழஞ்சு சுக்கும்
ஒய்ந்திடா தரைத்தொன் றாக்கி யுடனவடித் துடலிற் பூசச்
சாய்ந்திடுங் காய்ச்சல் குத்துத் தணிந்துட னகலுந் தானே. *(பா. 380)*

தானதைப் பொருத்திக் காய்ச்சிச் சாதித்துத் துடைத்துப் பூசில்
ஊனதிற் கோழை காச முடனிளைப் பிரும வீழை
ஆனதுஞ் சலம லங்க ளடைத்திட லதிக வீக்கம்
ஈனமார் நெஞ்சின் மார்பிற் குத்துட னிளகிப் போமே. *(பா. 381)*

பலசுரத்திலெண்ணெய்

பலசுரத்தி லெண்ணெய்வைக்கும் படியைக் கேண்மின்
பற்படக நன்னாரி முல்லை சீந்தில்
குலவியதேரா் சிறபீளை முத்தற் காசு
கூறுமிலா மிச்சமிரு வேலி தானும்
நிலைமைபெறு மின்பூறல் பொன்னாங் காணி
நேடியிவை யோரளவாய் நிறுத்துக் கூட்டித்

திலதயில மொருநாழி துளசிச் சாறு
செப்பினாரே ரொருநாழி தெரிந்து ளோரே. (பா. 382)

தெரிந்தரைக்கு மருந்துதிரி கடுகு கோட்டஞ்
சீரியரு மிருவர்திரி பலைவ சம்பு
பொருந்தியகற் கடகசிங்கி தேவ தாரம்
பொன்மெழுகு மதுரமுசிர் புகல்செவ் வள்ளி
திருந்தவிரு கழஞ்சுகொண்டே யரைத்தெண் ணெய்யிற்
சிறக்கவடித் துடலமெங்கும் சிரத்தும் வார்க்கில்
விருந்தினரைக் கண்டுகொடா னொழித்தல் போல
வீங்குசுரங் குளிர்தாகம் மெலிந்து போமே. (பா. 383)

சுரத்தில் வீக்கத்துக்கு மண்டூரப்பாகு

மெலிந்திடும் புளியி னிலைதனைப்பறித்து மிஞ்சிடக் காடிவார்த் தவித்துப்
பொலிந்திடு மதனை மறுபடி துவைத்துப் பிழிந்துடன் வடித்தவந்நீரில்
மலிந்திடுங் கீச்சுக் கிட்டம தெடுத்து மறுபடி நெருப்பெழக் காய்ச்சி
நலிந்திட வதையந் நீரினிற் போட்டு நல்லரை பொடியுட னரைத்தே.(பா. 384)

அரைத்ததிற் காந்த மிளகுசுக் குள்ளி யானநற் கடுகுடன் கடுக்காய்
உரைத்திடு முலுவாத்திப்பிலியோமமொன்று முக்கழஞ்சு கொண்டரைத்தே
கரைத்திடு முள்ளி யொருபல நறுநெய் கதிக்கநற்குழம்பதாய்க் காய்ச்சிப்
பொருத்தமாயருந்தி லிருமலெய்ப் பிளைப்புப்புகல் சுரவீக்கமும் போமே.

வாதகரப்பன் சுரத்தின் குணம்

சுரத்துடன் வீக்கம் வெதுப்புடன் குலைப்புத்துயர்செயுநடுக்குடன் கூதல்
உரத்திடுந் தாக மிருமலுள் ளெரிவு முபாதியாய் முகம்வயி றதைக்கும்
பொருத்தமாரன்ன மறந்தருங்களையாய்ப் பொருத்துடன் கால்கையிற் பிடிக்கும்
வருத்தமாய் வீங்குஞ் சுரமிது வாத கரப்பனின் சுரமென வகுத்தார்.(பா. 386)

சிகிச்சை : முலைப்பாலெண்ணெய்

தார்செறிமங் கையர்முலைப்பால் பசுப்பால் நாழி
தனியிளநீர் நல்லெண்ணெய் தானு நாழி
சீரிலா மிச்சையிரு வேலி கோரை
திகழுநன்னார் சீதேவி யழுக்கி ராய்வேர்
ஏர்நாகம் பூவிருசீர் கோட்ட மேல
மியல்பான கொத்தமல்லி யிலவ மாஞ்சில்
பார்மதுரஞ் சதகுப்பை யொடுசெவ் வள்ளி
பகர்ந்திடுசந் தனஞ்சரக்கோர் நிறையாய்க் கொள்ளே. (பா. 387)

கொண்டுபி னரைத்திட் டூறிக் கோதற வடித்து வார்த்துக்
கண்டுட லெங்கும் பூசி முழுகவே காய்ச்சல் வீக்கம்
தண்டிடுங் குத்துத் தொய்வு தகுமுட லெரிவுட் காய்ச்சல்
மிண்டிடா தகலு மென்று விளம்பிய தாயுள் வேதம். (பா. 388)

பலவிலைக்குழம்பு

வேர்தருநற் பிரமியுடன் பொன்னாங் காணி
விளம்பியவா டருந்தாத பாலை கையான்
பார்தருநா யுருவிகுப்பை மேனி வீழி
பகரீச்சங் குருகுநீர் முள்ளி வித்தும்
ஏர்தருவேர்க் கொம்புமிள குலுவா வுள்ளி
யியல்கடுக்கா யறுபதுநற் கடுகு காந்தம்
சீர்தருசா திலிங்கமதி மதுரங் கோட்டஞ்
சீனக்கா ரங்கருஞ்சீர் திப்பிலிந் துப்பே. (பா.389)

துப்பினரை பொடிவாசி கராம்புநற்சா திக்காய்
தூயசவர்க் காரம்பொரி காரநவச் சாரம்
தப்பில்லாக் கிட்டமுட னெலுமிச்சம் புளியுந்
தறுகாம லெரித்துநல்ல குழம்பதுவாய்க் காய்ச்சி
உப்பில்லா தந்திசந்தி யருந்தமிக நன்றா
முள்ளியுடன் முருங்கையிலைத் தண்ணீருங் கூட்டில்
வெப்பில்லாச் சுரம்வீக்கந் தொய்வுடனே முட்டு
விட்டகலு மெனவாயுண் மறைவிதித்த தன்றே. (பா. 390)

குடிநீர்

அன்றியும் பிரமி சுரைநில வாகை யடுத்தநா யிருவிகைத் தகரை
கன்றிய முருங்கை வீழிவல் லாரல் கடியவவ் விலொட்டியிங் கிவற்றோ
டொன்றிய வுள்ளி சுக்குடன் மிளகு முருக்கர பொடியுடன் கிட்டம்
சென்றிடுங் கடுக்காய் கடுகுரோ கணியுந் திப்பிலி சீரகஞ் சீனம். (பா. 391)

சீர்நவச் சார மோதக முலுவாச் செப்பிய வொருநிறைப் படியே
நேர்தர வவித்துக் குடித்திரு நேர நிதானமாய் வரவிடுஞ் சுரமும்
சோர்வறு வீக்க முட்டுடன் றொய்வு துடிப்புமெய் பிடித்தலு நடுக்கம்
தேர்வருங்கதிர்கண்டகன் றிடும்பனிபோற்றிர்ந்திடுமெனமறை யியம்பும்.

ஆமசுரத்தின் குணம்

கூறுமாம சுரந்தன்னிற் குணத்தைப் புகலி லுடம்புளையும்
சீறு மிருக்கும் பசியில்லைத் தினமு முறக்கந் தானுண்டாம்

வீறு சேரு முடனோவா மிகவும் வெதும்பா தொருசாமந்
தோறும் வெதும்பி நடுங்கிடுமெய் சொல்லிற் கால்கை தளர்ந்திடுமே.(பா.393)

சிகிச்சை : குடிநீர்

இடுமே யிதற்குக் குடிநீர்தா னிலங்கு கொன்றைத் தோல்சிவதை
கொடுமே் கடுக்காய் களிப்பாக்குக் கொட்டைப் பாக்குக் கற்றாழை
வடுநீர்ச் சருகு மிவைதம்மில் வனநா னாழி வார்த்தூறி
அடுநீர் நாழி யொன்றானாற் றிப்பிலிப் பொடியிட் டருந்துகவே. (பா. 394)

குடிநீர் - 2

அருந்தும் கண்டங் கத்தரிவட் டதன்வேர் சிறிய காஞ்சோன்றி
திருந்தும் பேர மட்டியுடன் சிற்றா முட்டி கொத்தமல்லி
விரும்புங் கருவேம் பினிற்றண்டும்வேர்க்கொம் புடனொன்றொருகழஞ்சு
பொருந்தும் புனல்தா னிரு நாழி புகட்டி யெட்டொன் றாக்கிடுமே. (பா. 395)

ஆக்கியருந் திப்பிலிமேற் பொடியிட்டே யருந்திடுகில்
தேக்கிவரு கதிரவன்முன் பனியெனவே தீருமென்று
தூக்கியரு மறைமொழிந்த துணியிதுகண் டஞ்சாமல்
நீக்கியிடு குடிநீரா னிச்சமயம்போ மாமசுரம். (பா.396)

மந்தசுரத்தின் குணம்

அன்றிடு மந்த சுரம்வயி றூதி யதிகமாய் வெதும்பியுட் காயும்
ஒன்றிடும் வயிறு புகைந்திடும் வலிக்கு முழலையுந் தாகமு முண்டாம்
நின்றிடுங் கழியுந் தலைவலி கூத நெருப்பென வெதும்பியே காயும்
சென்றிடுஞ்சிலநாள் விடுஞ்சலஞ் சிவக்குஞ்சிரத்தினின் மயக்கமுமுண்டே.

சிகிச்சை : குடிநீர்

உண்டிடுங் குடிநீ ருள்ளி யுவந்தநல் வசம்பு சுக்குக்
கொண்டிடுங் கருஞ்சீர் கொத்த மலிமிள குடன்க டுக்காய்
மிண்டிட வரிசி விட்டுறக் கருக்கி யொன்றாய்த்
தண்டுற வவித்துட் கொள்ளிற் றான்மந்த சுரம்போ மன்றே. (பா. 398)

குடிநீர் - 2

அன்றியுங் கடுக்காய் மூன்று மருமிள கொருக ழஞ்சும்
ஒன்றிய பிரமிதானு மொருபிடி நிதானங் கொண்டு
நன்றதா யவித்த தண்ணீர் நாலிரு நேரங் கொள்ளிற்
கன்றிய மந்த மோடு கடுஞ்சுரங் கலைந்து போமே. (பா. 399)

நாலாம் நாள் மாறலுக்கு குடிநீர்

செப்பினர் நிலத்தின் வேம்பு சேர்ந்தபற் படாகஞ் சீந்தில்
தப்பிலா மலையின் வேலி சாற்றிடு வட்டத் துத்தி
ஒப்பிலாக் கண்டங் காலி யுவந்தபேய்ப் புடோல்வெட் பாலை
துப்பிலா மிச்சுக் கோட்டந் தூயவேப் பலகு திப்பில். (பா. 400)

திப்பிலி மூலஞ் சுக்குச் சேர்ந்திடு மரத்தின் மஞ்சள்
பொற்புறு கடுகு ரோணி பொருந்ததி விடய மொன்றோர்
நிற்புறு கழஞ்சொன் றாக்கி நீரலிட் டவித்துட் கொள்ளிற்
சொற்பெறு நாலா நாளைச் சுரமது தணிந்து போமே. (பா. 401)

குடிநீர் - 2

துணிந்திடுந் தோட மிலையொரு பிடியுந் தூயவேர்க்கொம்பு நாற்கழஞ்சு
தணிந்திடுங் கொத்த மலியுடன் றிப்பில் தகுமுறை நீரினிற் காய்ச்சிப்
பணிந்திடு மந்தி சந்திமுன் பருகப் பறந்திடுந் தலைவலி காய்ச்சல்
அணிந்திடு நாலா முறைச்சுர மகலு மெனவரு மறைமொழிந்ததுவே.(பா.402)

மகாவற்சனாதிக்குடிநீர்

பற்படக மதிவிடய நிலவேம்பு கோட்டம்
பகருமிரு மேலிவேப் பலகுவெட் பாலை
சிறுபமுறு கடுகுரோ கணியிலா மிச்சுச்
சிறுமூல கத்தினொடு பேய்ப்புடோல் துத்தி
கற்பமுறு சீனமஞ்சள் சீந்தில்சுரர் தாரு
கருமிளகு மாமேதை யிடவகஞ்சீ வகமும்
பொற்பினுறு திப்பிலியிந் துப்பினொடு சுக்குப்
போதமுறு சிறுவீடு கொள்ளுமிரு கொள்ளும். (பா. 403)

கொள்ளுமிகு மேதையிவை யோரொரு கழஞ்சாய்க்
கோலமிகு நீரதனை விட்டுட னவித்தே
உள்ளமிகு வேர்வற்ச னாதியிது தன்னை
யுண்டிடுகி லெச்சுரமு மோடிவிடு முண்மை
தள்ளருமிந் நீர்சுரம் விடுந்தனையு முண்ணிற்
றங்கிவரு நாலுமுறை யிற்சுரமு மேகும்
துள்ளிவரு மாசுரந்து ணித்திடுகை யாலே
சொற்றனர்கள் மாவற்ச னாதியிது வென்றே. (பா. 404)

சுரந்தெறுகுலிசம்

வென்றிடும் வற்ச னாபம் விதித்தகன் மதநற் சூதம்
ஒன்றிய நெல்லிக் கெந்த முறுமனோ சிலையி னோடு

கன்றுபொன் னரியின் றாரங் கதிக்கவொன் றிருக ழஞ்சாய்
நின்றுகோ சலத்தி லூறி நிதானமாய் நஞ்சு வாங்கே. (பா. 405)

வாங்கியே மிளகு சுக்குத் திப்பிலி வகையோ றொன்று
நீங்கிடா தொருக ழஞ்சு நேர்வாள மிருக ழஞ்சு
பாங்குறு பாகற் சாற்றி லரைத்துடன் பதனம் பண்ணித்
தேங்கிடக் குன்றி போலுந் தெளிந்தவேர்க் கொம்பு நீரில். (பா. 406)

நீரினிற் கரைத்து நல்ல குளிகையை நிதான மாகச்
சீரினான் முறையிற் பேதி செய்திடக் கொடுப்பீ ராகில்
பாரினா னாளை மாறற் சுரமுதற் பறந்து போகும்
தேரினா னாளை மாறற் சுரந்தெறு குலிச மாமே. (பா. 407)

வெருகெண்ணெய்

வெருகங் கிழங்கு சமூலமுடன் வெட்டிப் பலமீ ராறிரண்டும்
பெருகுஞ் சிற்ற மட்டியின்வேர் பேசி னிறையு மதினளவு
நெரிய விடித்து நாண்மூன்று நேரா யவித்துப் பிழிந்துவடித்
தருநீர் நாலு நாழியினி லளவா யெண்ணெ யிருநாழி. (பா. 408)

விட்டே மதுரஞ் சிறுதேக்கு மிகுத்த கடுகு ரோகணியும்
மட்டே யிலந்தை மெழுகுடனே மருவுங் குரும்பை கழஞ்சொன்றாய்க்
கட்டே செங்கழு நீர்க்கிழங்கு கருநன் னாரி சீதேவி
பட்டே நல்ல சந்தனமும் பகரு மிலாமிச் சிருவேலி. (பா. 409)

வேலி யமுக்கி ராய்கோரை விரும்பி யோஸிரான் றொருபலமாய்ச்
சால வரைத்து விட்டூறித் தங்கி மறுநாண் மெழுகில் வடித்
தாலு மொருகா சிடையெண்ணெ யமரப் பொருத்தி யுச்சிதன்னில்
சீல மிகும்வேர்க் கொம்பினினீர் திடமாய்க் குடித்து மூன்றுநாள். (பா. 410)

மூன்று நாளுஞ் சிரம்வைத்து முற்றும் பூசி முழுகிவரில்
தோன்று நாலா முறைச்சுரங்க டுணிந்தே நாலு முழுக்கில்விடும்
சான்றோர் புகழும் வெருகெண்ணெய் தவறா திதுகை கண்டோநாம்
ஆன்ற வாயுண் மறையுரைத்த தறிந்து பேணிச் செய்வீரே. (பா. 411)

பெரிய வெருகெண்ணெய்

வெருகங் கிழங்கு நூறுபலம் வெட்டி யிடித்துக் காடிவிட்டுப்
பெருக வவித்துப் பேரமட்டி பெருஞ்சா ரணைவேர் குறிஞ்சாகம்
மருவுஞ் சிறிய காஞ்சோன்றி மலர்க்கூ விளைவே ரமுக்கிரவு
திருகா தோஸிரான் றொருபல மாய்ச் சீவி யிடித்திட் டவித்தூறி. (பா. 412)

ஊறி யிருந்த கஷாயமதி லொன்றாய் விட்டு வடித்ததனைக்
கூறா யாறு கொத்தளந்து குறிப்பா யெண்ணெய் முந்நாழி
பேறாய் விட்டுக் காய்ச்சியபின் பெருங்கொத் தமல்லி சீரகமும்
தேறார் விழாலிந் ததிவிடையஞ் சிறந்த விருதிப் பிலிமேதை. (பா. 413)

மேதை கடுகு வெட்பாலை மிகுமஞ் சிட்டி தேவதரு
கோதை யரத்தை பெருங்குரும்பை கொடுமுக் கடுகு முப்பலையும்
சூது முலையாய் பெருங்குரும்பை தூய சிறுதேக் குடனுள்ளி
ஓதை யிடவகஞ் சீவகமு முறுசவர்க் காரஞ் சதகுப்பை. (பா. 414)

குப்பை நிகருங் கச்சோலங் கொடுமா மஞ்சள் பச்சிலையும்
செப்ப முறவே முக்கழஞ்சு தேடி யரைத்து வடித்த வெண்ணெய்
வெப்பை யறவே சிரத்தில்வைத்து மேலும் பூசி முழுகிவரில்
தப்பா தோடும் விடசுரமுந் தரிக்கு நாலா முறைச்சுரமும். (பா. 415)

கட்டுமருந்தும் செவியிற் பிழியவும்

தயிர்வளை வெள்ளை யுள்ளி தட்டியே நாடி பார்க்கும்
செயிரறு நரம்பிற் கட்டத் தீருநா னாளை மாறல்
வயிரநன் மிளகோ டுள்ளி வருந்தயிர் வளையி னோடு
பெயருறத் தட்டிக் காதிற் பிழிந்திடச் சுரங்கள் போமே. (பா. 416)

விடாச்சுரத்தின் குணம்

காய்ந்திடுந் தலைக்குத் துண்டாங் கடினமாய்ச் சரீர நொந்து
சாய்ந்திடுந் தணிந்து காயுஞ் சற்றுநா வரட்சி யுண்டாம்
ஓய்ந்திடும் விடாம னின்றே யுள்வெப்பா யனலாய்க் காயும்
ஏய்ந்திடும் விடாச்சு ரத்தின் குணமிதென் றறிந்து கொள்ளே. (பா. 417)

சிகிச்சை : குடிநீர்

கொண்டிடுங் குடிநீர் வட்டுக் குறிந்திடும் பேரமட்டி
மிண்டிடும் வேர்க்கொம் போடு விட்டுநீ ரவித்துக் கொள்ளில்
அண்டிடும் விடாச்சு ரங்க ளகன்றிடு மாடா தோடை
கண்டிடுந் திப்பில் சுக்கு மவித்துண்ணக் கலைந்து போமே. (பா. 418)

கலைந்திடுங் கடுக்காய் சுக்குக் கடியபேய்ப் புடோலுங் கூட்டி
உலைந்திட வவித்து நன்றா யுறுகுடி நீருட் கொள்ளில்
அலைந்திடா வுட்சு ரங்க ளகன்றிடு முண்மை யாகப்
பலந்தரு சுக்கு நீரை யுண்கிலும் பாறு மன்றே. (பா. 419)

அத்திசுரத்தின் குணம்

அத்தி சுரத்தின் குணங்கேள் ரழல்போல் வெதும்புங் கண்சிவக்கும்
புத்தி தளரு நெஞ்சுளையும் புறநீர் தானுஞ் சிவந்திருக்கும்
மெத்த மயக்கும் பேசாது மிகவு முறக்கந் தானில்லை
வத்தி யிருக்கும் வயிறழியு மரண மிதற்குத் தப்பாதே. (பா.420)

தப்பா தகலு மத்திசுரந் தன்னைக் கேளு முடனடுக்கம்
வெப்பா ருழலை யுடனுண்டாம் விடம்போற் றாக மடங்காது
மெய்ப்பா யுறங்கா மயக்கமுறு மிகவும் வெதும்பு மனல்போலத்
துப்பா ரத்தி சுரமிதெனச் சொன்னார் சுருதித் துணிபுணர்ந்தோர். (பா. 421)

சிகிச்சை : குடிநீர்

உணர்ந்தோ ருரைந்தா ரதிமதுர முறுபற் படாக மிலாமிச்சுக்
கணந்தீர் முத்தற் காசுடனே கடிய வேர்க்கொம் மிருவேலி
குணஞ்சேர் கோட்ட மசமோதங் கூடும் பங்கம் பாளையுடன்
மணஞ்சேர் குடிநீர் சர்க்கரையிட் டருந்த மாறு மத்திசுரம். (பா. 422)

உட்சுரத்தின் குணம்

உள்ளே வெதும்பி யனுங்கு முட்டா யுடம்புகனத்துத்தலைநோவாய்க்
கொள்ளா துறக்கம் வயிறாதிக் கூதன் மிகுந்து தாகித்துத்
தள்ளா நடுக்கந் திமிருளைவு தணியா வயிற்றி னடுவேநோம்
துள்ளா விதுவுட் சுரமெனவே சொன்னா ராயுண் மறையுணர்ந்தோர். (பா. 423)

சிகிச்சை : குடிநீர்

உணர்ந்தே யுள்ளி சுக்குடனே யரிய வசம்புங் கடுக்காயும்
தணந்தே கருக்கி யெட்டொன்றாய்த் தானே யவித்துக் குடித்துவரில்
குணந்தான் வருமுட் சுரமெனவேகுறித்தார்வேர்க்கொம்புடன் வசம்பு
கணந்தா னவித்துக் குடித்துவரிற் கடிதாயேகு முட்சுரமே. (பா. 424)

அன்றியுங் கடுக்காய் வேர்க்கொம் பரியபற் படகாஞ் சீந்தில்
வென்றிடுஞ் சிற்றா முட்டி விட்டுணு கிராந்தி நாரி
ஒன்றிய வசம்பு சுட்ட கரியுட னுவந்தெட் டொன்றாய்
நன்றிசேர் குடிநீர் கொள்ள நணுகுமுட் சுரம்போ மன்றே. (பா. 425)

சுரமது நீங்கா தாகிற் சொற்றவே லாதி மற்றும்
வரமுறு சந்த னாதி வகுத்தநன் மிருத்தி யாதி
உரையறு குளிகை யொன்றை யுற்றநற் குடிநீர் தன்னில்
பருகிட நீங்கு மென்று தமிழ்முனி பகர்ந்த தாமே. (பா. 426)

கிரந்தி வெப்புச் சுரத்தின் குணம்

சுரமிகக் கொதித்துக் காயுந் துயர்செயுந் தலைக்குத் துண்டாம்
உரமிகுங் கனல்போன் மேனி யெரிந்திடு முவாந்தி செய்யும்
இரவினி லிருமித் தொய்வா யிருந்திடுங் களையுண் டாக்கும்
தரமுறு கிரந்தி வெப்புச் செய்குண மவிய லுண்டே. (பா. 427)

சிகிச்சை : குடிநீர்

உண்டொரு குடிநீர் தான்வட் டுரியதுதா துளைநன் னாரி
கொண்டிடுங் கண்டங் காலி கோதிலா விருசீர் கோட்டம்
மிண்டிடு மசம தாகந் திப்பிலி மிளகு கூட்டிக்
கண்டிடுங் குடிநீ ருண்ணக் கலைந்திடுங் கிரந்தி வெப்பே. (பா. 428)

நீர்த்தோஷசுரத்தின் குணம்

வெப்புட னிருமல் கூதல் மிகுத்திடுந் தலைநோக் காய்ச்சல்
அப்பினிற் றாக மிஞ்சி யதிகமாய்ப் பிடரி வாங்கும்
செப்பிடி னாடி நோவாந் தீன்மறந் துளைந்து குத்தும்
தப்பிடு முழுக்கிற் றோன்றுஞ் சுரமெனச் சாற்றி னாரே. (பா. 429)

சிகிச்சை

சாற்றினா ரரிசி தன்னிற் றலையணைச் சயனம் பண்ணி
மாற்றிடு மிளகு நொச்சித் துளிர்தனைக் கருக்கி மத்தித்
தீற்றினின் மிளகு வேதி லிளகிடுஞ் சுக்கு நீரும்
போற்றினர் குடிக்கிற் றோஷ சுரம்பொடி பட்டுப் போமே. (பா. 430)

அவசுரத்தின் குணம்

அறிந்திடு முணர்வு தான்கெட் டயர்வொடு மயக்கி வேர்க்கும்
பிறிந்திடாக் கழிச்சல் சோகம் பெருத்திடுஞ் சுரமுட் டாகம்
முறிந்திடா தலையைத் தூக்கி மொய்த்திடு மூட மாகும்
பறிந்திடா பேச்சு மூச்சும் பகரவ சுரமீ தாமே. (பா. 431)

சிகிச்சை

சுரமிதென் றறிந்த போதே தூயமுக் கூட்டி லெண்ணெய்
சிரமிகப் பொருத்தி நன்றாய்ச் செப்பிய வாதம் பேணித்
தரமிகு மரிசி சுக்குத் தாமிவை வறுத்துக் கட்டி
உரமிகு குடிநீர் கொள்ளி லோடுமிக் குணங்கள் காணே. (பா. 432)

சன்னி சுரத்தின் குணம்

முன்னமடிக் கடிவெதும்பி நெஞ்சு காயு
முடுகவடிக் கடிகுளிர்ந்து வெதும்ப லுண்டாம்

சொன்னபித்த முடனரைக்கால் வாதஞ் சேரிற்
சொற்றமூன்று நடுக்கமுறுந் துயரஞ் செய்யும்
பன்னுபல பேதமுறும் பேச்சுக் காட்டும்
பலபேத சுரமுகமு மெழிலுண் டாக்கும்
துன்னுசன்னி தோன்றுகுணச் சுரமீ தென்றே
சொற்றனர்முன் னாயுண்மறை துணிந்து ளோரே. (பா. 433)

சிகிச்சை

உள்ளிசுர சன்னியெண்ணெய் முக்கூட் டெண்ணெ
யுடன்பொருத்திக் கொத்தமல்லி வேர்க்கொம் போடு
வெள்ளையுள்ளி சீரகந்திப் பிலியுங் கூட்டி
மிடுக்காக நாலிலொன்றா யவித்தெ டுத்துத்
துள்ளருமிக் குடிநீரைச் சற்றுச் சற்றே
தான் குடித்து வரவரவே சாயக்கி னன்றாம்
எள்ளளவுங் கதித்துவரிற் நீரா தென்றே
யியம்பினா ராயுண்மறை யிசைத்து ளோரே. (பா. 434)

பிரமேகசுரத்தின் குணம்

எரிந்திடுங் கனல்போற் காயு மேதமாய்ப் பிடிக்குங் கால்கை
பரிந்திடுங் கடுக்கு நீரும் பகர்சலஞ் சியல்போன் மோர்போல்
சரிந்திடு மோங்கா ளிக்குஞ் சன்னிபோ னடுக்கிச் சோரும்
பிரிந்திடு நெடுநா ணிற்கும் பிரமேக சுரமி தாமே. (பா. 435)

சிகிச்சை : குடிநீர்

இதற்கொரு குடிநீ ரிலைகுறிஞ் சாக மோதமின் மிளகொரு கழஞ்சு
பதக்குநீர் விட்டே யவித்ததைக் குடிக்கிற் பகர்ந்திடு சுரமது நீங்கும்.
அதற்குமே னெடுநாட் காய்ந்திடிற் சுக்கு மடுத்தபற் படாகநா யுருவி
மதர்த்தலா மிச்சு வேரவித் தருந்தின் மாறிடு மேகத்தின் சுரமே. (பா. 436)

சல்லக்கடுப்புச் சுரத்தின் குணம்

மெய்யினிற் குத்தி யுனந்திடுங் கடுக்கும் வெதும்பிடு நாரியிற் பிடிக்கும்
துய்யதோர் நெஞ்சு நொந்திடு மிருமுந் துயர்செயு மன்னமு மிறங்கா
பையவே நடுங்கிக் கூதலு முண்டாம் பயம்வரு மயரில்வாய்வெருவும்
வெய்யதோர் சல்லக் கடுப்பினில் வருமச்சுரமெனவிளம்பினர்மேலோர்.

சிகிச்சை

நொச்சியின் றுளிரு மிளகுமேயரைத்து நுண்ணிதா யருந்திட மாறும்.
மெச்சிய மிளகு கஞ்சியு நன்றா மிண்டிணாற் சிறுகுறிஞ் சியினீர்

உச்சிதங் கஞ்சி காய்ச்சிநீ ரருந்தி லோடிடு மன்றியு முள்ளி
நிச்சயஞ் சுட்டுத் தின்றிடி லேகு நிகழிசல்லக் கடுப்பினிற் சுரமே. (பா 438)

தடிமன் சுரத்தின் குணம்

கடுத்திடுந்தலை நோம் மூக்கினீர்காய்ச்சல்கனத்துடன்மிடறுநாசழற்றும்
விடுத்திடுஞ் சரீர நொந்துடனெரியும் வெப்பித்துமுகந்தலையதைக்கும்
கொடுத்திடு மனங்குணத்தினிலிராது கோபித்தகண்ணுநீர்சொரியும்
அடுத்திடு நடுக்கங் கூதலு முண்டா மறிந்திடுந் தடிமனின் சுரமே (பா 439)

சிகிச்சை

குணமதின் மிளகு பொடித்திடப் பண்ணிக் கோவின்பாற் கலசத்திற்றூவிக்
கணமதில் வேது விடில்விடுந் தடிமன் கஞ்சியில் வேதுநன்றாகும்
மணமுறு கோவை முருங்கையு நன்றாம் வருகருஞ் சீரகங் கட்டித்
துணையதின் மூக்கின் முகந்திட வேகுஞ் சொற்றிடுந்தடிமனின்சுரமே

கோழைச்சுரத்தின் குணம்

தார்செறி விலாவி னெஞ்சிற் றங்கிடு முலைமார் தன்னில்
சீர்தரக் குத்தி நொந்து தியங்கிடக் குளிர்ந்து காயும்
ஏர்தருஞ் சாய்நே ரத்தி லிருமிடுந் தொய்வுண் டாகும்
பார்தருங் கோழை தோன்றிப் பற்றிய சுரமி தாமே. (பா 441)

சிகிச்சை

சுரம்விடுஞ் சிற்ற மட்டி தூதுவளைகண்டங் காலி
உரம்பெறு சிறுகு றிஞ்சியுடனிலை யாடாதோடை
தரம்பெறு நிலக்கு மிழ்வேர் சாற்றிய வட்டுங் கூட்டித்
திரம்பெறு மிளகு சுக்குத் திப்பிலி கடுக்காய் கொள்ளே (பா 442)

கொண்டுசீ ரகமுங் கூட்டிக் குடிநீரை யவித்துட் கொள்ளில்
மிண்டிய கோழை மீதிற் சுரமதுமீளுங் கண்டாய்
உண்டிடுஞ் சிற்ற மட்டிக் கஞ்சியு முவந்த தாகும்
பண்டுள தூதின் பாகு நெய்யுணப் பறந்து போமே. (பா. 443)

போமிதின் முக்கூட் டெண்ணெய் பொருத்திநற் சிரத்தில் வைத்துத்
தீமன்னு தூதி னெய்யுந் தின்றிடிற் சுரமுந் தீரும்
தாமின்ன முலைப்பாலெண்ணெய் பூசிடத் தணியுங்குத்துத்
தேமன்னு சிர கத்தி னெய்யுந்தின் றிடவே மாறும் (பா. 444)

அக்கரசுரத்தின் குணம்

மாற்றரு மிருமல் காய்ச்சல் வயிற்றுநோத் தலைநோக் கூதல்
சீற்றமாய்க் கஞ்சி தண்ணீர் தின்றிடா மயங்கிச் சோரும்

ஏற்றமாய்த் தொய்வுண் டாகி யடரதாய்ப் பிதற்றிப் பேசும்
சாற்றரு மவியலுண்டா மக்கர சுரத்தின் றன்மை (பா. 445)

சிகிச்சை - குடிநீர்

சாற்றியகர்ப் பூரவள்ளி சிறியகாஞ் சோன்றி
தனிப்பிரமி வல்லார லதிமதுர மிளகு
போற்றியதிப் பிலிகடுக்கா யோமமுடன் கருஞ்சீர்
பொருந்தியிடு மீரவுள்ளி யவித்திடுநீர் குடிக்கில்
மாற்றருமக் கரமிருமல் சுரமுடலிற் புண்ணோ
மாறாத விஷகிரந்தி மாறியகன் றோடும்
ஏற்றமிக தென்மலையி லிருந்த தமிழ் முனிவ
னியம்பியவா யுண்மறையி லிசைத்தபடி யன்றே. (பா.446)

பறவைச்சுரத்தின் குணம்

அன்றருந் தலைக்குத் துண்டா யதிகமா யிருமிவேர்த்துச்
சென்றருந் தாக மிஞ்சித் தீன்மறந் தோங்கா ளிக்கும்
நின்றருங் கனவு காட்டு நித்தியம் மயக்கிச் சோரும்
துன்றரும் பறவைமீதிற் றோன்றிய சுரமி தாமே (பா 447)

சுரத்தினிற் பருவி றிந்து தூயநா வரட்சி யுண்டாய்
உரத்திடுங் தடின மாகி யுவாதியா யுறிவு கேடாய்ச்
சிரத்தினின் மயக்கி யேறித் திமிர்த்திடுங் கழிச்ச லுண்டாம்
மரத்தினிற் பறவை வெப்புச் சுரமிது வவல மாமே. (பா 448)

சிகிச்சை

ஆனமுக் கூட்டி லெண்ணெ யதுசுர சன்னி யெண்ணெய்
தானது சிரத்தில் வைத்துத் தணிக்குமக் கரத்தி னெய்யும்
தேன்றளி யழவி யுள்ளே தின்றிடிற் பறவை வெப்பும்
ஊன்மிக மிருமல் தாக மோடுமென்றுரைத்தார் தானே (பா 449)

முத்தோஷ சுரத்தின் குணம்

சிரத்தினிற்கனத்து மிண்டித் திமிர்த்துவெப் பதிக மாகிச்
சுரத்துடன் குலைப்பன் கூதல் துயர்செயு நடுக்க முண்டாம்
உரத்திடு மந்த மாகு முபாதிக்குந் தாக முண்டாம்
அரத்தின்முத் தோஷ வெப்புச் செய்குண மறைந்தா ரன்றே (பா. 450)

அன்றியு மிருமித்தொய்வா மனலேன வெரிவுண் டாகும்
நின்றிடும் வாத பித்த சேற்பன நிலைத்தொன் றாகி

வென்றிடுங் கழிச்சல் தாக மிகுந்திடி லதிக மாகிக்
கொன்றிடு முத்தோ ஷத்தின் சுரமெனக் கூறும் வேதம் (பா 451)

சிகிச்சை - குடிநீர்

ஆடாதோடை பேரமட்டி யடுத்த கண்டங் காலிபுடோல்
காடார் வட்டுப் பற்படகங் கடிய வரத்தை சிறுதிப்பில்
கோடார் சுக்குக் கொத்தமல்லி குலவுஞ் சரக்கொன் றிருகழஞ்சாய்ப்
பீடார்நீர்விட் டவித்துண்ணிற் பெருமுத் தோஷ சுரம்போமே (பா 452)

போமே சுக்குப் பற்படகம் புதிய கடுக்காய் மிளகுள்ளி
தேமே வியதிப் பிலிகோட்டந் திகழு மல்லி பேரமட்டி
தூமே வியசீ ரகமரத்தை சுறுக்கா யோரிரான் றிருகழஞ்சு
தாமே யவித்துக் குடித்துவரிற் றனிமுத் தோஷ சுரம்போமே (பா 453)

சுக்குடன் கொத்த மல்லி திப்பிலி தூய வாக்கித்
தொக்கிவாவ் வொன்றி ரண்டு கழஞ்சினி னீரைவிட்டு
மிக்கநா லொன்ற தாக்கி மெய்ப்படப் பரகு வீரேல்
தக்கமுத் தோஷ மன்றிச் சன்னியிற் சுரமும் போமே. (பா 454)

விடசுரத்தின் குணம்

துயர்மிகு விடமாஞ் சுரந்தனிற் குணத்தைச்சொல்லுதுங் கையுடன்காலும்
அயர்வுறக் காயு நாமிக வரளு மடிக்கடி யமர்ந்திடுங் காயும்
பயமுறந் தாயைக் கட்டிவிட் டுழலும் பலபல பேசிடு மயங்கும்
நயமிகத் தெளியுஞ் சந்துநோந்தலைநோ நாடியிக்குணம்பகுத்தறியே(பா455)

சிகிச்சை : குடிநீர்

ஏய்ந்திடு குடிநீர் சுக்குவேப் பந்தோ லிசைநில வேம்புடன் சீந்தில்
ஆய்ந்திடு கடுக்கா யோடுபற் படாக மடுத்தபேய்ப் புடோலுரு ளரிசி
சாய்ந்திடு மாடாதோடைவே ரிவைகடகுமிரு கழஞ்சிரு நாழி
பாய்ந்திடு நீரி லிட்டுழக் காக்கிப் பருகிட விடகரம் போமே (பா 456)

போமினுஞ் சுக்குச் சந்தன மல்லி பொருந்துவெட் பாலையினரிசி
தாமினுஞ் சீந்தில் வாசைபற் படாகந் தகுமிலா மிச்சிரு வேலி
காமுறு முத்தற் காசிவை முன்போற் கருதியே யவித்திடு நீரில்
பூமலி வெள்ளைச் சர்க்கரை தூவிப் புகட்டிட நன்றதா மினுங்கேள்(பா.457)

உற்றநன் மதுரஞ் சிறியகாஞ் சோன்றி யுவர்ந்தவெட் பாலையினரிசி
துற்றுறு முத்தற் காசுபற் படாகந் தொகுதிரி பலைநில வேம்பு
சொற்றகு கண்டங் காலிவெண் கோட்டந்தூயநற் றருப்பையின்புல்லு
வற்றிடு கொன்றைப் பழங்கடு ரோணி வகுத்தசே வகன்றரு பூடே (பா 458)

இவைியலாஞ் சமனாய்க்கொண்டுநா லத்திலெட்டொருபாகமாய்வற்றி
நவையியலாந் தீரவடித்திடு குடிநீர் நாலுநாட் குடித்திடச் சுரங்கள்
அவையியலாந் தீரு மென்றுமா முனிவ ரறைந்தனர் நீங்கிடா நிற்கில்
உவையியலா மகற்று மாந்திரைகூட்டி யுண்டிட வொழிந்திடுங்காணே.(பா.459)

சுரங்களின் பொதுச்சிகிச்சை

இச்சாபேதிக்குளிகை

நச்சனங் காரஞ் சுத நல்லிந்து நாவி வாளம்
கச்சணி முலையி னாளே கடுத்திரி பலையி னோடு
நெச்சிகந் தகமுங் கூட்டி நேர்தலைக் கறியின் சாற்றில்
வைச்சரை குளிகை குன்றி போலள வாகத் தானே. (பா 460)

(நச்சனம்-வெண்காரம்)

இவ்விச்சா பேதி தன்னை யிஞ்சியின் சாற்றிற் கொள்ள
வெவ்விய சுரமுந் தீரு மிகுத்திடு வாத சூலை
உவ்வியமிருத்தி குன்ம முயர்குட கரியு மோடும்
செவ்வியின் வயிறுங் கான்று திருமென் றுரைத்திட் டாரே. (பா 461)

முச்சுரக் குளிகை

கெந்தகந் திப்பிலி வெண்காரங் கிளரு மிரத மரிதாரம்
மந்தங் கெடுக்கு நேர்வாள மருவு மிவையியான் றிருகழஞ்சாய்
முந்தப் பாகற் சாற்றரைத்து முற்றுங் குன்றி போலுண்டை
தொந்தஞ் செயுமூ வகைச்சுரமுந் தொலையும் வெந்நீர்தனிலுண்னே. (பா.462)

சுரத்தில் இருமலுக்கு ஏனாதி

நன்னாரி தாது வளைவட்டு நல்லமிளகு திப்பிலியும்
சொன்னார் கடுக்கா யிந்துப்புத் தூய நற்சீர் கற்கண்டு
பொன்னார் பதமாய் வறுத்திடித்துப் பொருந்து நறுநெய்தனிற்காய்ச்சி
மின்னா ரிஞ்சிச் சாறுவிட்டு வெதுப்பி யருந்தில் விடுமிருமல் (பா. 463)

வெண்கா ரிந்து திரிகடுகு மிகுத்த நெல்லிக் கெந்தகமும்
நண்பா லோரிரான் றொரு கழஞ்சு நல்ல வாள மிருகழஞ்சு
உண்பார் கடுகு ரோகணியு முறவே நாலு கழஞ்சாக்கி
வண்சேர் முலைப்பால் தனினாலு சாம மரைக்க வகைவருமே. (பா. 464)

வருந்தி யரைத்து வழித்துளுத்து வகைபோ லுண்டைப் பிறமாணம்
மருந்து மிஞ்சிச் சாற்றிலுண்ண மருவுங் குணங்கண் டொவ்வொன்று
திருந்தக் கொடுத்துப் பத்தியமுந் தெளிவுங் கண்டா லஞ்சாமல்
இருந்து படியே கொடுத்துவரி லேகுஞ் சன்னி பாதசுரம். (பா. 465)

சுரகுலிசம்

ஏகுஞ் சன்னி பாதசுர மிதற்குக் குளிகை யதுகேளாய்
பாகு போலும் புளிமதந்தான் பகரி லதுவு மொருகழஞ்சு
தாக மிகும்பூ சினிப்பூவுந் தகுநல்லிரத முமிற்று முட்டை
போகு மிவையொன் யொருகழஞ்சு புதியமரிசங் காற்கழஞ்சே. (பா. 466)

கழஞ்சோர் நிறையா யீவைகொண்டு கடுகமாற்று வெற்றிலைநீர்
பிழிந்தே யரைப்பா யுளுந்தளவு பிரியா துண்டை தளையுருட்டி
இளஞ்சேர் மடவார் முலைப்பாலி லிதமா யுண்ணச் சன்னிசுரம்
துழைந்தே யோடு மிதுசுரத்தி னுதிசேர் மெனலாமே. (பா. 467)

பலசுரக்குடி நீர்

திற்பலி கொந்த மல்லிசீரகஞ் சுக்குங் கூட்டி
அற்பினீ ரவித்தே யுண்ணி வருஞ்சுர மகன்று போகும்
பொற்புறு கொத்த மல்லி பொருந்துசுக் குடனீர் கொள்ளில்
நிற்புற சுரங்களெல்லா நிச்சய மகலுங் காணே. (பா 468)

கொத்தமல்லி சிற்றமட்டி பேரமட்டி
குலவுசிறு காஞ்சோன்றி சுக்குச் சிந்தில்
மெத்துவட்டுப் பேய்ப்புடோல் பற்ப டாக
மேன்மையுற மசமோதங் கண்டங் காலி
முத்தநில வேம்புடனே யாடா தோடை
முதுவேரு மொருநிறையாய்க் குடிநீர் கொள்ளில்
பித்தசுரம் வாதசுரஞ் சேற்ப மேவும்
பெருத்தசுரம் பலசுரங்கள் பிரிந்து போமே. (பா 469)

பித்தசுரத்துக்குக் குடிநீர்

வட்டுச் சீந்தில் பற்படகம் வளரும் வில்வஞ் சிற்றமட்டி
துட்டச் சிறுகாஞ் சொறிசுக்குத் தூய கோட்டஞ்சிறுதேக்குக்
கட்டச் சிறுதிப் பிலிகோரை கழஞ்சா யவித்துக் குடித்துவரில்
விட்டே பித்த சுரங்களெலாம் விரைந்தே யகலு மெனவுரைத்தார் (பா 470)

கொத்தமல்லி சிறுதேக்குப் பற்ப டாகங்
கோட்டந்திப் பிலிமதுரஞ் சுக்குச் சீந்தில்
சுத்தநில வேம்புவட்டுக் கண்டங் காலி
கறுக்கான சிற்றமட்டி சமன தாக
நித்தமொரு கழஞ்சுகொண்டு நீர்விட் டூறி
நிதானமா யந்திசந்தி குடிப்பீ ராகில்

சித்தமுறு பித்தசுரம் பழுவெ துப்புத்
தீராத முத்தோஷ சுரங்கள் போமே (பா 471)

சிறுதேக்குச் சந்தனம்பற் படாகஞ் சீந்தில்
திப்பிலிமுத் தற்காசு கோட்டஞ் சுக்குச்
செறுமேவு காஞ்சோன்றி யிருவே லிமிச்சுச்
செப்பியபேய்ப் புடோலிவைியான் றிருகழஞ்சாய்
உறுநீர்விட் டவித்தூறி நாலிலான் றாக்கி
யுடன்குடிநீர் குடித்துவிற் றீரும் வெப்புத்
திறமேவு மத்திகர முச்சு ரங்க
டீராத பழுவெதுப்புத் தீருந் தானே. (பா 472)

தோஷம்

பறவைத்தோஷம்

அடைக்கோழி வானம் பாடி யதிரவே பறந்தாற் பிள்ளை
மடைப்படு நீர்தா கிக்கும் வயிறோடு மிளைக்கு முச்சி
திடம்படக் குழியுங் கண்க ளதிற்பட வட்ட மாகும்
படிப்பிலாப் பால கர்க்குப் பறவையின் தோஷ மாமே. (பா 473)

நீர்ப்புள்

பிள்ளைமிளைத் தேவயிறு நீரா யோடும்
பெருவிழியும் வட்டமிட்டுச் சியுங்கு ளிர்ந்தால்
விள்ளுநீர்ப் புள்ளினது தோஷ மாகும்
விரிநிலத்தி லாட்டெருவைச் சுட்டு நன்றாய்க்
கள்ளமற நன்னீரிற் கரைத்துக் கொண்டு
கனமாக வுடம்பதனிற் குளிக்க வார்க்கப்
பிள்ளையுநன் றாய்த்தெளியு முடம்பி லுற்ற
பிணிதோஷம் புட்தோஷங் கழன்று போமே (பா 474)

கணைப்புள்

உச்சி யுடனே கண்குழியு முண்ண முலைப்பால் தொங்காது
பச்சை நிறமாய் வயிறழியும் பறவைக் குலம்போற் சீறியழும்
இச்சித்திருந்து தண்ணீரை யெடுத்துக் குடிக்குந் திகைத்திருக்கும்
கச்சு முலையி னல்லாளே கணைப்புட் தோஷ மிதுவாமே. (பா 475)

பாலைப்புள்

குஞ்சுத னுடம்பு லர்ந்து குடித்திடும் பாலுந் தொங்கா
நெஞ்சையுங் குழிய வாங்கு நிறம்விழி வேற தாகும்

அஞ்சிடுந் துணுக்கென் றேங்கு மரைக்குக்கீழ்க் குளிர்ந்திருக்கும்
பஞ்சின்மேல் லடியி னாளே பாலைப்புட் குணமி தாமே (பா 476)

வெண்புள்

பாலகன் மேனி வாடிப் பசலையாய் விழி யினீராய்ச்
சீலமாய்க் கால்கு ளிர்ந்து சீறிப்பா லெதிரெடுக்கும்
தூலமாய்க் குழியு முச்சி தோற்றிடு மலம்வெவ் வேறாம்
வேலைபோ லிரையு முந்தி வெண்புள்ளுத் தோஷ மாமே. (பா 477)

இரவுப்பறவை

முகத்தைத் துடைக்கும் புறங்கையினால் முறுக்கியழுதே தலைபுரட்டும்
கிகத்துக் குணங்க ணினைவறியா சிந்தை கலங்கி யெழுந்திருக்கும்
அகத்தைப் பார்த்தே வெருண்டு கொளுமனேககுணமாய்ச் சோர்ந்துவிழும்
இகத்துப் பிறந்த குணங்கிளலா மிரவுப் பறவைக்குணமென்னே (பா 478)

கருநீர்ப்பறவை

குடித்தபா லெதிரெ டுக்குங் குழிந்திடுந் தலையுங் கண்ணும்
அடிக்கடி சிலிர்த்து மேனி யறமெலிந் தழன்று பிள்ளை
எடுக்கினுங் கையிற் றங்கா திலையினிற் சாறு போலக்
கடுத்திடும் வயிறு போகுங் கருகுநீர்ப் பறவை தானே. (பா 479)

கன்னிப்பறவை

செங்கை மதலை தான்வாடுஞ் சிறுகக் கழியும் வயிறூதும்
முன்கை காலுங் குளிர்ந்திருக்கு முறுக்கி யழுமே கண்வட்டாம்
அங்கை யாலே முகந்துடைக்கு மறவே குரலு நெரிந்திருக்கும்
கங்கு லனைய குழன்மடவாய் கன்னிப் பறவைக் குணந்தானே (பா. 480)

சாவுக்குருவி

வீரிட் டழுமே யொருகுரலாய் விறைத்துக்கிடக்கும் வேர்வையுண்டாம்
பார்விட் டெழும்பு மிருக்கவொட்டா பரந்துவிழிக்கும் பலகாலும்
நீரிட் டிழியு மொழிந்திடுநீர் நினைவு தெரியா மூர்ச்சையதாம்
சாரிட் டுயிர்க்கும் வாய்வெருவுஞ் சாவுக் குருவிக் குணந்தானே. (பா 481)

மயானக்குருவி

முறிக்கு மூரி கொட்டாவி முன்னெற் றியிலே மயிர்பறிக்கும்
இறுக்கி யழுது கண்மூடு மிருகை காலுங் குளிர்ந்திருக்கும்
கறுக்கு முதடு நாவுலருங் கஞ்சி கேட்குங் குடியாது
மறுக்குஞ் சுரமு மிகவுண்டா மயானக் குருவிக் குணந்தானே (பா 482)

ஆண்பெண் குருவி

கைகால் பின்னும் வாய்கறுக்குங் கண்ணுஞ் சிறுக்கும் வட்டமிடும்
மெய்தா னிளகுந் தாகமுண்டா மேனி வெளிறு நீர்கடுக்கும்
நெய்பால் தாகக் கூஞ்சிகொள்ளு நேரே யிருக்க வொட்டாது
ஐவா யழுமே யிக்குணந்தா னாண்பெண் குருவிக் குணந்தானே (பா 483)

பட்சி தோஷம்

அருண்டெழும் வயிறு விம்மு மரைக்குக்கீழ்க் குளிர்ந்தி ருக்கும்
வெருண்டுகை முகத்திற் றேய்க்கு மிகவுநித் திரைகொள் ளாது
உருண்டு போம் படுக்கைக் கீழே யுழலையு மதிக மாகும்
சுருண்டமென் குழலாய் பட்சி தோஷத்தின் குணமிதாமே. (பா 484)

பறவைக் குணத்துக்குச் சிகிச்சை

கோரோசனைக் குளிகை

கோரோ சனையே மாசிக்காய் கோட்ட மதுரந் திப்பிலியும்
கூர்சே ரோம மிவையனைத்துங் கூட்டி யரைத்து முலைப்பாலிற்
சீரார் குளிகை நிழலுலர்த்திச் சேரும் பாலிற் கரைத்திடவே
தீராப்பறவைக் குலமனைத்துந் தீர்ந்துபோமென் றுரைத்தனரே. (பா. 485)

ஈருள்ளி எண்ணெய்

சாற்று மதுரஞ் சீரகமுந் தானா மேல மிலவங்கம்
போற்றுங் கராம்பு செண்பகப்பூப் பூகலுங் குலக்காய் பத்திரியும்
ஏற்ற முத்த மிவையனைத்து மியலுங் கழுஞ்சு முசுக்கையிலை
தோற்றுங் காணி சிறுகீரை சுகமார் கண்டங் கத்தரியே. (பா 486)

சீந்தி லிவைவேர் பலமொன்று சேருமெண்ணெ யிரண்டுபடி
காந்துமிர வுள்ளியினீர் கருது நாழி யரைகூட்டிச்
சாந்த மாகவெரித்தடுப்பிற் சார வடித்து மெழுகுபதம்
போந்த சங்கி னிடைபுகட்டப் போகுந்தோஷ வகையனைத்தும் (பா 487)

புள்ளீட்டெண்ணெய்

வேலிப் பருத்தி பாகலிலை மிக்க மிளகு புளியமிலை
ஆலிச் சிவப்பி தன்பாலு மருந்து மெள்ளி லெண்ணெயுடன்
சாலக் கலந்து நாண்மூன்று சாகும் வெயிலில் வைத்தெடுத்துக்
காலம் பெறவே யடுப்பில்வைத்துக் கடிதாய் வடித்துக் கொள்வீரே.

வடித்த வெண்ணெய் சீரந்தன்னில் வாகாய்ப் பொருத்தி வருவீரேல்
குடித்தபாலை யெதிரெடுத்தல் குறுகி மெலிதல் குறிதோஷம்
சடத்தில் வந்த வுட்காய்ச்சல் சகல பறவைத் தோஷமெலாம்
துடித்து விலகு மெனவாய்ந்து சொன்னா ராயுள் வேதியரே (பா 489)

ஒழிபு

சிறுபுழுக்குணம் சிகிச்சை

சிறிய தாம்புழுச் சீறி யரித்திடில்
வெறிய தாம்வயிற் றானுரை வீழ்ந்திடும்
செறியு மாடுதின் னாச்செழும் பாலையின்
உறுவி ரையரைத் தூட்டுநன் னீரிலே (பா 490)

மசறிப்புழு

நுரையுஞ் சோரியு நோக்குடன் வீழ்ந்திடில்
இறைகொ ளும்மச றிப்புழு வீங்கிதற்
கரிய வேலிப் பருத்தி யிலையரைத்
தூரிய நீரினி லூட்டிட வோடுமே (பா 491)

சன்டைப்புழு

இரத்தம் வீழு மிது சண்டை செய்புழுத்
துரத்த வேண்டிற் றொடுகுப்பை மேனியை
அரைத்த நல்லதண் ணீரி லருந்திட
வருத்த முற்றுடன் மாய்ந்திடும் பூச்சியே (பா 492)

தானைப்புழு

சூழும் வெங்குத வாயி லரித்திடும்
ஆழுங் கண்ணும் பசந்திடுந் தானையில்
வாழும் வெம்புழு மாற்றிட வேண்டிடில்
வீழும் போந்தை வருமூல மாவிலே (பா. 493)

(போந்தைவருமூலமா-ஒடியல்மா)

கார வல்லியிற் காயிலை கூட்டியே
நேரும் பிட்டவித் தூட்டியம் மாவையே
சாரு மவ்விலைச் சாற்றிற் பிசைந்துபின்
நேரும் வெங்குத வாயினிற் பூசுவாய் (பா 494)

(காரவல்லி-பாகல்)

கீரிப்புழு

கீரி யிற்புழுச் செய்குணம் கேட்குறில்
சேரும் வாயினிற் சொள்ளு வடிந்திடும்

ஆரு மேனி வெளுக்குந் திறங்கெடும்
நீரும் வெந்திடு நீரென வாகுமே *(பா 495)*

சோரி சீதம் விழுங்கடுப் பாயிடும்
சேரு மேயுத ரத்திற் புரட்சியும்
ஆரை காளி யொடு விர ணாரியும்
பாரின் மாதளை வேர்ப்பட்டை யூட்டுமே *(பா 496)*

(ஆரை-வல்லாரை காளி-மணித்தக்காளி விரணாரி-கோட்டம்)

நாகப்புழு

நாகப் பூச்சியி னாடுங் குணஞ்சொலிற்
போகும் வாந்தி பொருமும் வயிறது
வேகு நெஞ்சம் வயிறுகா லோடுகை
ஆகு நிம்பத் தலகு புரசினில் *(பா 497)*

வித்து மாதளை வேரினிற் பட்டையும்
ஒத்த கானக் குறத்தி யுலையுடன்
மெத்த நீர்விட் டவித்துப் பருக்கிடச்
சுத்த மாகத் தொலைந்திடும் பூச்சியே *(பா 498)*

(கானக்குறத்தி-வல்லாரல்)

திரைப்புழு

குடித்த பாலெதிர் கொண்டெடுக் கும்பிள்ளை
அடுத்தி ளைக்கு மதற்குறு சுண்டைவேர்
எடுத்த ரைத்தே யிணங்குநன் னீரினில்
கொடுத்தி டக்குண மாகுங் குறிக்கொளே *(பா 499)*

எல்லாக்கிருமிகளுக்கும் பொதுச்சிகிச்சை

குடிநீர்

எலிச்செவி முருங்கை வேரு மியறிரி பலைவி ளங்கம்
பலிக்குமா தளையின் வேரிற் பட்டைமாம் பருப்போ டொக்க
நலத்துறு நீரெட் டொன்றாய் நவின்றிடு வாய்வி ளங்கம்
பலத்துறு தூண்மேற் றூவிக் கொடுத்திடக் கிருமி பாறும் *(பா 500)*

கிருமி நாசமாத்திரை

பாறிடக் குளிகை கேண்மின் பலைமூன்று வாய்வி ளங்கம்
நாறிடும் வசம்பு திப்பில் நவிலுள்ளி யிர யுள்ளி
கூறிடு மாம்ப ருப்புக் குலவுமே னியின் வேர் சுக்குச்
சாறிடு மசந்தீண் டாத பாலைவேர் விரைகொழுந்து *(பா 501)*

கைப்பொடு கடுக ரோணி கனமிள கிரண்டு சீரம்
ஒப்பொரு கழஞ்சு வீதங் கிரமியின் பகையோர் நாலு
தப்பறக் கூட்டி மேலந் தாடிமந் தருவேர்ப்பட்டை
அப்படி நாற்க ழஞ்சு மரைத்திடவ் வேர்ச்சாற் றாலே (பா 502)

(தாடிமரம்-மாதளை)

குன்றியின் வித முண்டை சர்க்கரை கூட்டி யுண்ண
நன்றதா மேரண் டெண்ணெய் நல்கிட மற்ற நாளில்
கன்றிடுங் கிருமி யாவுங் கழன்றிடும் வலிப்போங் காளம்
வென்றிடு மென்று முன்னாள் விதித்தனர் மறையு ணர்ந்தோர் (பா 503)

தொங்கல் கழிச்சலுக்கு

மிளகு, வெற்றிலைக்காம்பு அரைத்துப் பொடுதலைச் சாற்றில் ஓடு சுட்டு அதிற் போட்டு வடிகட்டிக்கொடுக்கவும்.

வசம்பு, வெள்ளுள்ளி, சீனக்காரம், ஒமம், பெருங்காயம், வெளுத்தற் பிசின் இவை பொடித்து இளவறுப்பாய்வறுத்து உத்தமாகாணிச்சாறு விட்டுக் காய்ச்சித் தொப்பூழ்நின்று கீழ்வயிற் றளவும் பூசவும்.

விட்டுணுகிரந்தியிலை வசம்பு ஒருள்ளிப்பூடு இவையரைத்து வில்லை தட்டி ஒட்டிற் கருக்கி வெந்நீரிற்கொடுக்கத் தொங்கல் விழும்.

உப்பை வறுத்துக் கொட்டிப் பின் நாயுருவியிலை ஒரு பிடிவறுத்துக் கொட்டி மோரூற்றி மூடினபின் கொடுக்கத் தொங்கல்விடும்.

ஆமணக்கம் நாரையுரித்துக் காதிற்கட்டவும், உத்தமா காணிக் கொடியைப்பிடுங்கி அரையிற்கட்டவும் தொங்கல் விடும்.

கழிச்சலுக்கு

பெருமரப்பட்டை கடலிறாஞ்சிப்பட்டை முத்தற்காசு காரைவேர் மாதுளம்பட்டை முசுட்டைப்படை புங்கம்வேர் அதிவிடையம் சுக்கு சமன் இளவறுப்பாய் வறுத்து இருநாழி நீர்விட்டு உழக்காக்கிக் கொடுக்கவும்.

சத்தி மாந்தத்துக்கு

பொடுதலை துவைத்து மிளகுவறுத்து ,பின்கூட்டி வறுத்து எருமை நெய் விளாங்காயளவு போட்டு மூடி இறக்கி நெய்யை இறுத்துக் கொடுக்கவும்

பன்னீரும் புனுகும் முலைப்பாலுங்குழைத்துச் சீலையிற் தோய்த்து நாவில் வைக்கவும்

கட்டுக்குப் பூச்சு

கட்டுக்கு வசம்பு மஞ்சள் கருதுமாட் டுப்பு ழுக்கை
மட்டுறு செவ்வ ரத்தம் பூச்சாற்றி லரைத்துப் பூச
இட்டமாந் தேற்றாக் கொட்டை மத்தின்வேர் வசம்பு மஞ்சள்
விட்டெலு மிச்சின் மேவும் பழச்சாறங் கரைத்துப் பூசே (பா 504)

வயம்புதிப் மிலிக டுக்காய் வளர்பிரப் பங்கு ருத்தும்
அயம்பெறு புழுக்கை யெல்லா மதின்சலம் விட்ட ரைத்து
நயம்பெறுப் பூச நவில்கட்டு வகைக ளெல்லாம்
பயம்பெறு மேரன் டத்தின் டத்தின் மருப்புநெற் பொரியுங் கூட்டே (பா. 505)

(அயம்பெறு புழுக்கை-ஆட்டுப்புழுக்கை)

என்னெய்

கூட்டி முக் கண்ணன் பாலுங் கூறுநீ லியினிற் சாறும்
வேட்டுறு களிம்பு றுத்த வட்டிலில் வெயிலில் வைத்து
நாட்டுறு வசம்புத் தூளு நல்லபூ நாகந் தானும்
போட்டிடத் தெளியு மெண்ணெயிறுத்துமேற் புண்ணிற்போடே (பா 506)

(முக்கண்ணன்பால்-தேங்காய்ப்பால்)

அதரகுட்டத்துக்கு

துத்தந் தூசு கல்லுப்புத் துகளர் கைப்புக் களிப்பாக்கு
நத்து மாயாப் பசுமஞ்ச ணவில்சிற் றிலையின் பாலாவி
வித்தூங் கிருமி சத்துருவு மேவும் புங்கின் பாலதுவும்
சுத்த நந்தியிலைச் சாற்றா லரைத்துக்கலக்கு யெண்ணெயினில் (பா 507)

காய்ச்சி யிறக்கிக் கடுகுடனே கிளியாய்க் கட்டி யதரத்தில்
தேய்ச்சுப் பத்துப் பதினைந்து தினந்தா னொற்றிப் பத்தியமாய்ப்
பாய்ச்சும் வெந்நீர் குடித்துவரப் பாறு மதரந் தனிற்குட்டம்
வாய்ச்ச மருந்து நெய்யொன்று வைக்கக் கேளு மடமானே. (பா 508)

செவ்வகத்திநெய்

மானே வேம்பின் பட்டை திருக் கொன்றை வகுக்கும் வெள்ளறுகு
தேனே சிற்றா மணக்கிற்பூச் சிவந்த வகத்திப் பட்டையிவை
தானே சாறு பசுவின்னெய் தவறா தோரிரான் றொருநாழி
கானேய் பிரம்பின் வருமூலங் கருது சீந்தின் மாதளைவேர் (பா 509)

வகையோ றொன்று பலம்பாதி மதுர மிளகு வெட்பாலை
தோகைசேர் கடுகு மஞ்சிட்டி தூய வெள்ளைக் குந்திருக்கம்

பறைகதீ ருள்ளி யீருள்ளி கழஞ்சோ றொன்று படிகூட்டி
இகறீர் மெழுகு பதத்தில்வடித் துள்ளும் புகட்டி மேற்பூசே பா 510)

பூசக் கிரந்தி யுதட்டிற்புண் புகலு நாவி லரளை முதல்
தேசு மருவும் பாலகர்க்குச் சேரு மவியல் பலவகையும்
லீசுங் கரப்பன் சொறிசிரங்கு வேறும் பலநோ யுள்ளவெல்லாம்
ஈசன் குமர னறுமுகவ னருள்மன் னிருள்போ லேகிடுமே (பா 511)

கண்டக்கிரத்திக்கு நெய்

கொன்றை, வெள்ளுறுகு கிரந்திநாயன் இவை சாறு வகை - படி - 1 மதுரம் செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், சந்தனம், நன்னாரி, இலாமிச்சு, இருவேலி, தகரம், செண்பகப்பூ, தாமரைவளையம், சீரகம், கடுக்காய் மாயாக்காய், சாத்திரவேதி, செஞ்சந்தனம், பூதவிருக்கம், மிளகு, ஆல் . அரசு - அத்தி . இத்தி இவற்றின் முகிழரும்பு, வகை கழஞ்சு - 2 நறுநெய், பால்வகை, படி -1 அரைத்துக் கரைத்து மெழுகு பதத்தில் வடித்து உள்ளும் புகட்டி மேலும் பூசக் கண்டக்கிரந்தி கண்டக்கரப்பன் முதலியன தீரும்.

கன்னில் அமரத்துக்கு

கலப்புறத்திலே பசுவெண்ணெயிட்டு வேம்பின் தடியினால் ஒருநாழிகை உரைத்து வழித்துச் சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணிலிட அமரம், கரப்பன், கரப்பன், வெப்பநீர்க்காய்ச்சல் முதலியன தீரும்.

அமேத்திர சன்னியின் குணம்

முலையுண்ணா தழுது பார்க்கு முகமது வேற தாகும்
பலபல வலியுண் டாகும் பாலகன் குரலுங் கம்மும்
மலமது கட்டு மெய்யில் வந்திடுஞ் சுரமி தெல்லாம்
அலைவது வல்லப் பிள்ளைக் கமேத்திர சன்னி யாமே. (பா. 512)

என்னெய்

அக்கறா, அதிமதுரம், சிற்றரத்தை, பெருங்காயம், வசம்பு, மாயாக்காய், கராம்பு, திப்பிலி, வெளுத்தற்பிசின், தயிர்வேளைவேர், வேலிப்பருத்தி வேரும்பூவும், அமுக்கிராய்வேர், வேப்பலகு சமன் வேப்பிலைச்சாறு ஒருபங்க வேப்பெண்ணெய் இருபங்கு காய்ச்சி வடித்து உள்ளும்புகட்டி மேலும்பூச சன்னிவகையெல்லாந் தீருமு.

வெளுத்தற்பிசின், பெருங்காயம், நெல்லிக்காய்க்கெந்தகம், வசம்பு,

இவை வெவ்வேறு பொடிபண்ணி இரசம் - காற்கழஞ்சும் ஈருள்ளியும் கூட்டியரைத்து நிலவேர், முயிற்றுமுட்டை வகைக்கு ஒரு சிறங்கை வேப்பெண்ணெயிலிட்டுக் காய்ச்சி வடித்துக் காசிடை புகட்டி மேலும் பூச, சன்னி, நீரேற்றம் முதலியன தீரும்.

குக்கலின் குணமுஞ் சிகிச்சையும்

கக்குவா னிருமன் மிஞ்சிக் கருதிடு முடம்பு வற்றும்
சுக்குகள் புரண்டு மேலும் புறப்படு மோங்கா ளிக்கும்
மிக்கநோய் மூன்றுதிங்கள் ளிடாமலே வருத்தஞ் செய்யும்
நக்கிட நெய்கேள் கையா னீருள்ளி நவில்ப ருத்தி (பா. 513)

சங்குகர்ப் பூர வள்ளி தருமுசு முசுக்கை மேனி
பொங்குசிசம் பரத்தை யிற்பூத் யிற்பூத் தூதுளை புரமி யெல்லாம்
தங்கிட விடித்தெ டுத்த சாறொன்று நாழி யாவின்
பொங்கு நெய்பாலீர் நாழி போதவே கூட்டிக் கற்கம் (பா. 514)

கரியசீ ரகம ரத்தை கார்புகா மதுரங் கோட்டம்
வருசத குப்பை யேல முப்பலை மிளகு நற்சீர்
மருவுறு சிவந்த சந்தம் வகுத்தகற் கடக சிங்கி
பொருவுறு குங்கு மப்பூப் புதியகோச் சினையோ றொன்றே. (பா. 515)

ஓரொன்று கழஞ்சி ரண்டா யுறுபதந் தனில்வ டித்துச்
சீரொன்று பாலர்க் கூட்டச் சேர்ந்திடு குக்க லீழை
நீரொன்று மிரும லாதி நீங்கிடுங் கிரந்தித் தொய்வும்
பேரொன்று மிதனுக் கேற்ற பெருமருந் தின்னுங் கேண்மோ (பா 516)

கஸ்தூரிமிருத்தியாதி

கூறுகஸ் தூரி யொன்று குங்குமப் பூவி ரண்டு
நாறுகோச் சினையு மூன்று நவின்றிடு மேல நாலு
வீறுவான் மிளகோ ரைந்து மிகுந்தவக் கறாவு மாறு
மாறில்சவ் வாது நல்ல மணமுள புனுகு தானும் (பத 517)

வகையொன்றுக் கரைக்க ழஞ்சு மாற்றுவெற் றிலையின் சாற்றில்
தொகையொன்ற வரைத்து முர்க்கத் தளவதா யுருட்டிச் சொல்லும்
நகையொன்று மடவார் பாலி னன்குற வுரைத்தே யூட்டப்
பகையொன்று மிருமல் தொய்வு பகர்ந்திடு குக்க நீரும் (பா. 518)

குழம்பு

கரியசீ ரகநற் சீரங் கருதிடு மோம நாயின்
உருவிவே லிப்ப ருத்தி யுபயமுஞ் சமூல மாவின்

வருநிநெய்கற் கண்டு கூட்டி வகுத்திடு குழம்பாய்க் கொள்ள
இருமலோ டீழை குக்க லேகிடு மென்றார் முன்னோர். (பா 519)

தொண்டையின் வெளிப்புறத்திற் புலிநெய் பூசிப் புலித் தோலும் புங்கங்காயும் கயிற்றிற்கோத்துக் கழுத்திற் கட்டவும்.

சேர்க்கப்பட்டவை

ஏலாதி மாத்திரை

ஏலமும் பச்சை சாத்திர வேதி மிலுப்பையின் மலரிலா மிச்சு
வாலிப மதுர முருத்திர மருவுறு சந்தன மிரண்டு
கோலநற் பச்சைக் கர்ப்புர மாஞ்சில் கூறுமந் திரிகைபே ரீஞ்சு
பாலுற கெருட பச்சைகஸ் தூரி பகர்குலக் காயிரு வேலி (பா 520)

பூவுறு நாக முசிறின் முட்டை புகலுமான் கொம்பில வங்கம்
காவுறு முத்தற் காசுவெண் கோட்டங் கருதுகோ ரோசனை கன்னார்
மேவுற வகைக்குக் கழஞ்சது வாகவிளம்பிடு கரும்பினி னீரில்
தாவுறு மிளநீர் மட்டையி னீரிற் றகுமுறை யரைத்த பினிலிங்கம் (பா 521)

அதுவிரு கழஞ்சு சுத்திசெய் திட்டே னிரியபன் னீரினா லரைத்து
மதிமுக முடையா யுழுந்துபோ லுருட்டி வருகுணங் கண்டனுபானம்
கொதிபெறு சன்னி சுரங்கணை தோஷங் கூடிடு மாந்தமக் கரங்கள்
விதிமுறை தீரு மென்றுமா முனிவர் விளம்பியவியல்புணர்ந்தியற்றே (பா 522)

தாமரைவளைய ஏலாதி மாத்திரை

சீர்பெறு கோரோ சனையதி மதுரஞ் செண்பக மலர்கோட்டம்
நீருறு மம்போ ருகமதின் மூலமு நிலவேர் முயிறியம்
கூர்பெறு கன்னார் சாத்திர வேதி குலக்கா யிலவங்கம்
வேர்பெறு செங்கழு நீரதின் மூலமும் வெறிதரு மேலமுமே. (பா 523)

வெறிதரு சந்தன மதனொடு குங்கும விரைமலர் மான்கொம்பு
நெறிதரு மான்மத மரனது விழிமணி நேரொரு காசிடைகொள்
அறிதரு குடமுலை யதிலுறு மமுதினி வரைபய றளவாக
முறைபுரி யுரைதரு மமுதினி லுரையிடு விலகிடு பிணிகளே. (பா 524)

சுவர்ணகஸ்தூரி மாத்திரை

சீர்தரு தங்க முயர்ந்தகஸ் தூரி செப்புகோ ரோசனை யதுவும்
ஏர்தரு மோரொன் றொருகழஞ் சுடனே யியறிரி கடுகிரு கழஞ்சு
நேர்தர வகைக்குக் கூட்டிவெற் றிலையி னீரினைவிட்டுநன்கரைத்துப்
பார்தரு முர்க்க மளவுற வுருட்டிப் பகர்நிழ லுலர்த்திவைத் திடுமே. (பா 526)

வைத்திடு குளிகை யேற்றனு யேற்றனு பானம் வகுத்துமேகொடுத்திடிற்றோஷம்
மெத்திடு சன்னி சுரங்களை மாந்த மேவிய கழிச்சலே யாதி
உற்றிடு நோய்க ளீர்ந்திடு மென்றே யுரைத்தனர் சிறுவர்க ளமக்குக்
குற்றமின் றுயர்ந்தசுவர்ணகஸ்தூரிக்குளிகையென்றிதன்பெயர்கூறும்(பா 527)

பெருங்காயக் குளிகை

பெருங்காய முள்ளிவசம் பிருசீரோமம்
பெருங்கடுக்கா யதிமதுரஞ் சுக்குக் கோட்டம்
மருந்தான திப்பிலிநா கம்பூ வோடு
வருநிலவேர் முயிற்றுமுட்டை கழஞ்சோரொன்று
முருந்தேயு நகைமடவார் பாலா லரட்டி
முதுசூரைக் காயளவு குளிகை செய்து
திருந்தாத மொழிபேசும் பாலர்க் கிஞ்சி
தேன்முலைப்பால் கூட்டியிடத் தீரு நோய்கேள். (பா 528)

பொருமன் மாந்தம் புதல்சுரஞ் சன்னியும்
இருமல் கோழை யிளைப்புச் சிவாதநோய்
வருமத் தோஷம் வயிற்றி லடசலும்
ஒருவு மாமென் றுரைத்தனன் மாமுனி (பா 529)

முலைப்பாற்குளிகை

கோரோ சனைதான் கழஞ்சொன்று கூறு வசம்பு நேர்வாளம்
ஒரே வொன்று முக்கழஞ்சி னுடனேதிப்பிலி யிருகழஞ்சு
சீரார் மாசிக் காய்பத்துத் தெரிவை முலைப்பா றனிலரைத்து
நீரார் குன்றி யளவுண்டை மாந்தம் பலநோய் நீங்கியிடும். (பா 530)

காக்கணவனிலைச்சாற்றுக்

கோரோசனைக் குளிகை

கோட்டமு மிருசீர் சாத்திர வேதி கூறுகோரோசனை வசம்பு
வாட்டமின் மாசிக் காயுடன் வாளம் வகுத்திடு திப்பிலி யதுவும்
காட்டுமக் கறாவும் வகைக்கொரு கழஞ்சு கரியகாக்கணமிலைச்சாறு
கூட்டியே யரைத்துப் பயறளவு வுருட்டித் கோதையர்பாரினிலருத்தே(பா531)

அருத்திடக் கரிய கிரந்திசெங் கிரந்தி யண்டிடுங் கிரந்தியிற் சுரமும்
வருத்திடு முட்டு மூச்சுடன் றொய்வு வயிற்றினிற் பொருமனா வரட்சி
தெரித்திடு கணையிற் சுரஞ்சழிக் கட்டுத் தீர்ந்திடு மென்றனர்மதியம்
தரித்திடு சடையெம் மண்ணறாண்மறவாத் தபோதனமுனிவர்கடாமே (பா.532)

வெண்காயக் குளிகை

திரிகடு கிருசீ ரோமஞ் சேருநற் கடுக்காய் கோட்டம்
வருமதி மதுரங் கன்னார் வசுவாசி கெருட பச்சை
மருவுறு மேலங் குப்பை மாசிக்கா மிலவங் கத்தோல்
தருவசம் பக்க றாவுஞ் சாரணைக் கிழங்கிந் துப்பு (பா 533)

துப்புறு மதுர மல்லாற் றொகுபெருங் காயந் தானும்
தப்பறு சாதிக் காயுந் தகுமுருங் கையினிற் பூவும்
வெப்பறு முலுவா வெல்லா மிகஙிதொரு கழஞ்ச கூட்டி
அப்பறு வெள்ளை யுள்ளி யதுஙிவொரு பலமிட் டாட்டே (பா 534)

பொடுதலைச் சாற்றா லாட்டிப் புகல்குன்றி யளவு ருட்டி
இடுமுலைப் பால்வெந் நீரி லேற்றவே றனுபா னத்தில்
வடுவினைப் பொருவுங் கண்ணாய வயிற்றினிற் பொருமன் மாந்தம்
கெடுதலைப் புரிய முட்டுக் கேடுறு கழிச்சல் போமே. (பா 535)

பாலரோகநிதானம் முற்றுப்பெற்றது

◎◎◎◎◎

பரராசசேகரம்

பால ரோக நிதானமும் சிகிச்சையும் பாக்களுக்கு உரை விளக்கம்

காப்புச் செய்யுள்

"குரு வில்லா வித்தை பாழ்" என்பதற்கமைய தன்னுடைய சீலக் குருவான இளநாயகனாரின் அருள் சித்தி வேண்டி பாலர்களுடைய நோயின் குணங்களையும், மருந்து செய்முறைகளையும் பிற தோஷங்களுக்கான கழிப்பு, நீர்தெளிப்பு, காவலுக்காகக் கட்டக்கூடிய மூலிகைகளையும் பிள்ளைகளுடைய வளர்ச்சி கருதி, மற்றும் அதற்கான எண்ணெய் வகைகளையும் நூலார் தெரிவித்துக் கொள்வது காண்க.

பா 1 செங்கிரந்தி கருங்கிரந்தி இவற்றின் குணம்

செங்கிரந்திக்கு தேகம் சிவந்து காட்டும், தொண்டை அடைத்துக் கொள்ளும், தேகம் அசதி கண்டு சோர்வடையும், வயிறு பொருமிக் கொள்ளும், மலம் போகாது பால் குடிக்கமுடியாமல் கஷ்டப்படும். இந்தக் குணங்கள் கண்டு சிகிச்சைக் கிரமம் அமையுமானால் ஐந்து நாளில் தணிவு தென்படும்.

கருங்கிரந்தி மிகத் துன்பத்தை தரத்தக்கது, சீரம் கருமையாகித் தோன்றும், நாக்கு உதடுகள் வரண்டு தொனி குறையும், மலம் போகாது.

இந் நோய் உயிருக்குத் தீங்கு தருவதாகக் கருதுவர். இது அசாத்தியமாகக் கருதப்பட்டாலும், விதி வசத்தால் நோய்க்குறிகள் மாறினாலும் கூட பின்னாளில் பலமாக தோல் நோய்களை உண்டாக்குவதாக முது வைத்தியர் பலர் கருதுவர்.

பா 2 செவ்வாப்புக்கு

குழந்தைகளுக்கு தேகம் சிவப்பாகக் காணுவது செவ்வாப்பு என்பர் செங்கிரந்தி போல, குணங்கள் பலமாக இல்லாவிட்டாலும் இநதக் கிரந்தித் தன்மை சிவந்த சாயலைத் தருகின்றது. இதற்கு செம்பரத்தைப் பூவும் அத்துடன் செங்கத்தாரி வேர், தேற்றா வேர்ப்பாட்டை, இருசீரகம், ஏலம், கடுக்காய், திப்பலி சிறு அளவாக எடுத்து நல்லெண்ணெயில் தூவி வெயிலில் வைத்துப் பதப்படுத்தவும். தக்க அளவாக உள்ளுக்குள் புகட்டியும், பூசிக்

கொள்வதனாலும், செவ்வாப்பு, செங்கிரந்தி தீரும். செம்முள்ளியிலை பிசைந்து அவித்துக் குளிப்பதும் நன்மை தரும்.

பா 3

கருவாப்புக்கு

உடல் கருமை நிறம் காட்டும். (செவ்வாப்பு, செங்கிரந்தி போன்றும் கருவாப்பு கருங்கிரந்தி போலவும், பிற வேற்றுமைகளும் உண்டு பெரும்பான்மையும் பிறந்த சிசுக்களுக்கு கருவுயிர்த்த தன்மையில் ஏற்படும் தோஷ இயல்புக்கமைய இவை இரண்டிலும் முறையே பெலம் . பெற்ற அறிகுறிகளாகும்) கருவாப்பைப் பொறுத்தவரையில் கீழ்காய் நெல்லி, குன்றிமணி பொன்னாங் காணி திப்பலி. இருசீரகம் இவற்றைத் தக்க அளவில் எடுத்து எள்ளெண்ணெயில் பிசைந்து, வெயிலில் வைத்துக் கொண்டு உள்ளேயும் வெளியேயும் பயன்படுத்த மாறும். இன்னும் கோழி அவரை இலையும், கொவ்வையிலையும் பிசைந்து குளிப்பாட்டுவதால் மேற்படி செவ்வாப்பு, கருவாப்பு நோய்கள் தீரும் (அனுபவத்தில் கோழி அவரை கருவாப்புக்கு விசேஷம் என்பர்)

பா 4

செங்கரப்பன் குணம்

பிள்ளை கனதி அடைந்து வீங்கும் பிரண்டைக் கொடி போன்ற பின்னலாக தேகத்தில் புடைத்துக் காணும். சினத்துடன் வெதும்பி துன்புறும். செந்நிறம் படரும் குழந்தை கையில் தங்காதபடி துடித்துச் சுழலும். இதன் தன்மையால் வயிறு கால், கைகளில் திரட்டி கட்டுகள் தோன்றும் (கருங்கரப்பனுக்கு, கருமை நிறமாக மேற்படி குணங்கள் தென்படும்)

பா 5

சிகிச்சை சுரசம்

(ஸு + ரஸம் = நல்ல பிழிந்த சாறு)

செங்கத்தாரி, புல்லாந்தி வேர், சிறு கிளாவேர் செஞ்சந்தனம், நோய், தேகக் கூறுகளுக் கேற்ப தக்க அளவாக எடுத்து அரைத்துப் பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசி வருவதால் மேற்படி கரப்பன்கள் அகலும்.

பா 6) கொடி மல்லிகையிலையைப் பிழிந்து உள்ளுக்கு பருக்குவதும் வெளியில் பூசுவதும் கைகண்ட மருந்தாகக் குறிப்பிடப்படுகிறது பஞ்ச பாண்டவர் முல்லையிலையும், நாக உள்ளி (வெங்காயம்) அவித்துக் கொடுத்த வரக் கொடிய கரப்பன்களும் மாறும்.

பா 7 - பாகல் இலையும் மிளகும் அரைத்து பிழிந்து கொடுப்பதால் கரப்பனின் வேகம் மீறாமல் தணிவடைந்து மாறும்.

பா 8-10 **புங்கம் வேரெண்ணெய்**

வசம்பு, உள்ளி, கடுக்காய், மிளகு, ஏலம், தான்றி, நெல்லி, இருசீரகம், கோட்டம், செஞ்சந்தனம், கராம்பு, வசுவாசி, மாயாக்காய், இலவங்கம், காசுக்கட்டி, களிப்பாக்கு, செவ்வள்ளி. திப்பிலி, பீனாறி, உலுவா, கொத்தமல்லி, சடாமாஞ்சில், செண்பகப்பூ, அகில், நாகம்பூ வகைக்குக் கழஞ்சு 2

புங்கம் வேரைத் துருவி எடுத்து இடித்து நல்லெண்ணெ 1 படி விட்டுப் பிசைந்து அகன்ற பாத்திரத்தில் போட்டு மேற்படி சரக்குகளை இடித்துக் கரைத்து செம்பரத்தம் பூவும் சேர்த்து வெயிலில் வைத்து நீர்த்தன்மை வற்றிய பதத்தில் உள்ளுக்குக் கொடுத்து வெளிப் பாவனையிலும் வைத்துக் கொள்ள, கரப்பன் ரோகங்கள் மாறும்.

பா 11-12 **செங்கத்தாரி எண்ணெய்**

செங்கத்தாரி, சிறுகிளாத்தி, புல்லாந்தி வேர், புங்கம் வேர், கரஞ்சூரை வேர், இருசீரகம், கோட்டம், கடுக்காய், செஞ்சந்தனம், மிளகு, வெங்காயம், இலவங்கம், திப்பிலி, செவ்வள்ளி, அதிமதுரம், கொத்தமல்லி, கைப்பு களிப்பாக்கு, நெல்லி, சதகுப்பை, சிற்றேலம், பேரேலம் இவற்றைச் சமனாக இடித்து, நல்லெண்ணெயில் போட்டு கொதிப்பித்துப் பூசிவர கரப்பன் ரோகங்கள் மாறும்,

குறிப்பு.-

மேற்படி எண்ணெய்க்கு அளவுகள் சொல்லாதவிடத்திற்கு 2 கழஞ்சு வீத சரக்கு எடைக்கு 1 படி நல்லெண்ணெயைச் சேர்த்துக் கொள்ளவும்.

பா 13 **கொடி மல்லிகையெண்ணெய்**

கொடி மல்லிகை வேர், செஞ்சந்தனம், வசம்பு இவற்றைத்தூளாக்கி வைத்துக் கொண்டு, நல்லெண்ணெயைக் கொதிக்க வைத்து, கொதி பதத்தில் தூளைப்போட்டு கலக்கி, பதத்தில் எடுத்து, பதனம்பண்ணி வைத்துக்கொள்ளவும், இந்த எண்ணெயைக் குடித்து வருவதனால் வியாதி சூரியனைக்கண்ட பனிபோல மறைந்துவிடும்.

பா 14 **புடைக்கரப்பன் குணம்**

இதனால் பீடிக்கப்பட்ட சரீரம் கனத்து, (பாரமாகி) தேகம் முழுவதும் திரட்சி கண்டு சில நாட்களின் பின் சிதல் கட்டி உடைத்து புண்ணாகி பரவும் வேதனை மிகும்.

பா 15 சொறிபடுவன் குணம்

உடம்பு முழுவதும் சொறிந்து தடித்துக் கொள்ளும், சிறுசிறு திரட்சியாகி கிரந்தி பருக்களாகத் தென்படும்.

பா. 16 படுவன் குணம்

இதனுடைய உபாதி அதிகம் விலாப்பகுதி, நெஞ்சு, முகம், மூக்கு, நடுமுதுகு, வயிறு ஏனைய இடங்களிலும் குத்து வேதனை அதிகரித்து கொப்புளம் போடும்.

(படுவன் கரப்பன் முதலியவை அசாத்தியமாக கருதப்படுவது முண்டு. எல்லா தேகவாகுக்கும் அல்ல. ஏழு மாதத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கு அசாத்தியமாகலாம்)

பா. 17 கொள்ளிக் கரப்பன் குணம்

இது தேகத்தில் பரவிக் கடித்து புடைத்துப் புடைத்து பரவும்.

பா. 18 கொள்ளிக்கரப்பன் அசாத்தியக்குறி

கெள்ளிக்கரப்பனில் பின்வரும் குறிகுணங்கள் காணப்படின் மாறுவது எளிதல்ல. வயிற்று வீக்கம், இருமல், மார்பு அடைப்பு, இளைப்பு, குரல் மெலிதல், களைப்பு, விக்கல் அசாத்தியமாகவே கருதப்படுகிறது.

பா. 19 கொப்புளக்கரப்பன் குணம்

தேகம் முழுவதும் நோ காணப்படும், மேலும் தலைவலி, இருமல், காய்ச்சல், அங்கமெல்லாம் கொப்புளங்கள் தோன்றுதல், விழி சிவத்தலாக அமையும்.

பா 20 வாப்புளிக் கரப்பன் குணம்

இது வரக்கூடிய சிறுவர்களின் தேகம் தேமல் போல் தோன்றி தொல்லைதரும், கண் கலங்கி நீர் சொரியும் சரீரம் குளிர்ந்து காணப்படும். குடித்த பாலை வாந்தி எடுக்கும், கண்கள் கூச்சமடைந்து குழிவிழும், வயிறு பொருமிக் காணப்படும், கழிச்சல் தென்படும் இத்தகைய குணங்கள் இதற்கு அமையும்

பா 21 பறவையின் குணம்

இது பறவை போல திட்டம் திட்டமாக வீசி வீசி சொறியும். காய்ச்சல்

காணப்படும், தலைக்குத்து இருமல் உண்டாகும். தொண்டை அரிப்புக்குள்ளாகும், கண் பீழை சாறும், சிவக்கும். இதுவுமல்லாமல் வயிறு புண் போல நொந்து துன்பப்படுத்தும், சொறிவு தடித்து தடித்து தணியும் இத்தகைய குணங்கள் இதற்கு அமையும்.

(சின்னமுத்துவின் குணத்தை ஒத்ததாகக் கருதுவர்)

பா 22 சிரங்கின் குணம்

சிறுவர்களுக்கு உள்ளங்கை, புறங்கை, அரை, வேறும் தானங்களிலும் சொறிவு உண்டாகும் நீர் கோத்து கொப்புளம் உண்டாகித் துன்பப்படுத்தும்.

பா 23 சிரங்கின் மகோதரக் கரப்பன் குணம்

சிரங்கு உள்ளடங்கி, தேகம் அதைப்பு உண்டாகி மலசலம் போகாமல் மார்பில் முட்டு அதிகரித்து உபத்திரவம் தரம். குரல் கரகரத்து மிடறு விக்கும் மூச்சு மிகுந்து மேல் மூச்சு எடுக்கும். வாய்வு அதிகரித்து. சாப்பாடு உண்ண முடியாத தாகம் மிகும், களை, சோகம் உ்ணடாகும் இரவுக்காலம் வேதனைக்ள கூடும்.

பா 24 - 26 கிரந்தியெண்ணெய்

இருசீரகம், வசுவாசி, இலவங்கம், ஏலம், கோரோசனை, வலம்புரி, வெங்காயம், மாயாக்காய், செஞ்சந்தனம், சாதிக்காய், அக்கறா, வகை கழஞ்சு1, மயிலடிக் குருத்துவேர், கல்முரிசு வேர், செங்கத்தாரி வோர், புங்கம் வேர், நிலக்குமிழ் வேர், களப்பன்னை வேர், சிறுகாஞ்சோன்றி வேர், வகைக்கு 1 பிடி, சரக்கும் வேர் வகையும் வேறு வேறாக இடித்து, தூள் செய்து வைத்துக் கொண்டு நல்லெண்ணெய்யைப் பாத்திரத்தில் விட்டு கொதிப்பித்து, வெற்றிலையைப் போட்டு, வெடிக்கும் பதத்தில் இறக்கி வைத்து, வேர்த்தூளைப் போட்டு, பின் சரக்குத் தூளைப் பேட்டு, ஆற்றி வைத்துக் கொள்ளவும். இதனைத் தலையில் வைத்தும் நாக்கினில் தடவியும், உடம்பில் பூசியும் வர, சிரங்கு, செங்கரப்பன், செவ்வாப்பு, வாய்ப்புண்கள் மாறும்.

பா 27, 28 புங்கம் வேர்க் கொதியெண்ணெய்

செங்கத்தாரி வேர், புங்கம் வேர், அதிமதுரம், இருசீரகம், இலவங்கம், திரிகடுகு, செஞ்சந்தனம், பூத விருக்கம், இராத்தை, வசம்பு, உசிர், வலம்புரி, ஏலம், அகில், சதகுப்பை, கராம்பு, வெண்பிசின், செவ்வள்ளி, கச்சோலம், உள்ளி, வெங்காயம், சடாமஞ்சில், கடுக்காய், கைப்பு, களிப்பாக்கு, இவற்றை தூள்

செய்து முன்போல் எண்ணெய் கொதிப்பில் தூவி இறக்கி வைத்துக் கொண்டு பயன்படுத்தி வர கிரந்தி ரோகங்கள் தீரும்.

(பூதவிருக்கம் - பூனாறி, உசிர் - இலாமிச்சு)

பாடு 29 - 31 சூரியபுட எண்ணெய்

குன்றிமணி, கற்பூரவள்ளி, பிரமி, வல்லாரை, தூதுவளை, கொன்றை, முசுமுசுக்கை, கறுத்தப்பூ காக்கணன், நிலபாவல், இவற்றின் வேர்கள், இலைகள் சமபங்காக எடுத்து தனித்தனி இடித்து தூள் ஒரு பகுதியாக வைத்துக் கொள்ளவும்.

(சூரியபுட எண்ணெய் - வெய்யில் வெப்பத்தில் வைத்து பதப்படுத்தி கொள்வது)

கராம்பு, செவ்வள்ளி, மல்லி, முக்கடுகு, திப்பலி மூலம், சாதிக்காய், வசுவாசி, ஈருள்ளி, ஏலம், வெட்பாலை, இருசீரகம், வெண்கோட்டம், அக்கறா, கிருமி சத்துரு, அரத்தை, செஞ்சந்தனம், மாயாக்காய், அசமோதகம், வெளுத்தல் பிசின், பீனாறி, இச்சரக்குகளை தூளாக தனித்து இடித்து வைத்துக் கொள்ளவும்.

இங்கு குறிப்பிட்ட பிரகாரம் சமனாக இடித்த சரக்குத்தூள் இருபங்கு, இலைத்தூள் ஒரு பங்கு துசிவையின் தூள் ஒரு பங்கு இவற்றை முறையே எண்ணெயில் கலக்கி வெயிலில் மூன்று நாள் காய வைத்து எடுத்துக் கொண்டு உள்ளுக்கு கொடுத்து மேலுக்கும் பூசி வர கொள்ளிக்கரப்பன்கள் மாறும்.

பா 32 - 37 பெருங்கிரந்தியெண்ணெய்

தூதுளை, பிரமி, செருப்படிநாயன், முசுமுசுக்கை, வெள்ளறுகு, கறுத்தக்காக்கணவன் வீழி, கரிசாலை, மால்காந்தி, ஆடுதீண்டாப்பாலை, குக்குடத்தவரை, கர்ப்பூரவள்ளி இவற்றின் சாறுகளுடன் தேசிப்புளியும் இவை படி-1 பசுப்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கு 2 படி.

(மால்காந்தி - விட்டுணுகிராந்தி, குக்குடத்தவரை - கோழியவரை)

அவுரி, காற்றோட்டி குதிரைவாலி, முசுமுசுக்கை, பேய்ப்பீசுக்கு, செங்கத்தாரி, கல்முருசு, களப்பன்னை, நாயுருவி, சடைக்காவிளை, பெருங்குரும்பை, கோழியவரை, நன்னாரி, சிறகாஞ்சோன்றி கிரந்திநாயன், விடத்தல், பொன்னாங்காணி, தூதுவளை, ஒரிதழ்த்தாரை, சிற்றாமட்டி, கண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி, ஆடாதோடை கான்றை, வயங்கு, கீழ்காய்நெல்லி இவை வேர்வகை இருகழஞ்சு 2.

(வயங்கு - (வி) இயங்கு)

கோட்டம், இலவங்கம், ஏலம், உள்ளி,ஈருள்ளி, இலவங்கம், (கராம்பு), மல்லி,வசம்பு, அட்டி, செண்பகப்பூ, இருசீரகம், சாதிக்காய், ஈரரத்தை, திப்பலி, ஓமம், வாலுளுவை. செவ்வள்ளி, வேம்பாடு, கடுகுரோகணி, தேவனாறு சிறுநாகம்பூ, சுக்கு, கடுக்காய், கடுகு, வெண்பாலை, வெந்தயம், சடாமாஞ்சில், அக்கறா, மாயாக்காய், விழாலரிசி, வகைக்கு 2 கழஞ்சு அனைத்தையும் இடித்து பொடி செய்து எண்ணெயில் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து உள்ளுக்குக் குடித்தும் வெளியிலும் பூசிவர கிரந்தி, கரப்பன், விறைப்பு மூலப்பவுத்திரம் குட்டம், தினவு, உட்டணவாதம், பிரமேகம் இவை தீரும். பத்தியமாக உப்பு, புளி அகற்றுவது சிறந்தது

(அட்டி - மதுரம்.)

பா 38 - 41 சென்னகரம்பழத்து நெய்

சென்னகரம்பழம், மாசிக்காய், செவ்வள்ளி, திரிகடுகு, ஏலம், கோட்டம், குறாசாணி, செம்பகப்பூ, கராம்பு, ஓமம், மதுரம், இருசீரகம், வசம்பூ இலவங்கம், வசுவாசி, செஞ்சந்தனம், சாதிக்காய், பூதவிருக்கம், கடகுரோகணி, வ.க.1 இவற்றை .இடித்து வஸ்திரகாயம் செய்து தூள் (வடி துணியில் அரித்து எடுத்த தூள்)

வேர்வகை '. உத்தமகாணி, தூதுவளை, சிறுகீரை(சில்லி) சூரி (நத்தைச்சூரி) சூதப்பட்டை (மாலம்பட்டை), அத்திப்பட்டை, மேற்படி வ.க.1 (இவை மேல் தால் போக்கி இடித்ததூள்)

சாறுவகை '. நத்தைக்சூரி, உத்தமாகாணி, காற்பாசம், சில்லி
பசுநெய் வகைக்கு நாழி, இவை எல்லாவற்றையும் கூட்டி சட்டியில் இட்டு வற்றி வருகின்ற பொழுது வெங்காயம் இரண்டு பிடி அரிந்து போட்டு பொன்னிறமாக வரும்பொழுது பதத்தை கவனித்து இறக்கி வைத்தல் வேண்டும், பத்தியத்தோடு தாயார் குடித்தும், பிள்ளைக்குப் பருக்கியும் மேலுக்குப் பூசியும் வருவதால் சொறி, சிரங்கு, கரப்பன், புடைகரப்பன், வாய் வயிற்றுப்புண். தொப்புள்புண்கள், கருவாப்பு, செவ்வாப்பு வீங்கு கரப்பன் மற்றும் வெகு கரப்பன்கள் அனைத்தும் மாறும்.

பா 42 - 44 சென்னகரம் பழத்து நெய் - வேறு

சாறுவகை '. மாதுளம்பழம், சிறுகீரை, கறுத்தப்பூக்கொடி, கர்ப்பூரவள்ளி, குண்டுமணி, தூதுவளை வேர், அதன் பழம் துவைத்தெடுத்த சாறு இவை வகைக்கு நாழி 1 பசுநெய் நாழி 1 சேங்கொட்டை, அதிவிடயம், ஓமம், வசுவாசி காந்தம் குறாசாணி, தற்கோலம், மாயாக்காய், ஈருள்ளி, சுக்கு, மஞ்சள், கராம்பு, ஏலம், அக்கறா, 'செவ்வள்ளி' உலுவா, கறுவா, செஞ்சந்தனம், அதிமதுரம்,

சாதிக்காய் கிருமிசத்துரு, மதுரம், இலவங்கம், வசம்பு, நற்சீரகம் வ.க.2, இவற்றைத் தூளாக்கி மாம்பட்டை அவித்த நீரினில் அரைத்து திரட்டி நெய்சாறு உள்ள சட்டியில் இட்டுப் பதத்தில் காய்ச்சி எடுத்து வைத்துக் கொள்ளவும் தாயும் பிள்ளையும் பூசிப் பரகிவர கருங்கிரந்தி, செங்கிரந்தி, செவ்வாப்பு, கருவாப்பு, கரப்பன் ரோகம் எல்லாம் மாறும்.

பா 45 - 47 மாந்தம் - வரலாறு

குழந்தைகளுக்கு உட்கொள்ளப்படும் பால், அன்னம், நொய், பழங்கள், வித்துக்கள், பயறு, தேங்காய், வாழைக்காய் ஆகிய அடர்த்தியான மாப்பொருட்கள், கொழுப்புப்பொருட்கள், சீரணிக்கக் கஷ்டமான வேறு பதார்த்தங்களும் உட்கொள்ளப்படின், சுரம் ஏற்பட்டு, குறிப்பாக கால் குளிர்ந்தால் இக் குறிகுணங்கள் மாந்த நோய்க்கு அடையாளமாகும்

குழந்தைகள் தாய்ப்பாலை உண்டதன் பின் பசுப்பாலை மேற்கொண்டு குடிப்பதனாலும் ஒன்றுக் கொன்று மாறுபட்ட நிலையில் வயிற்றுத்தீ மந்தப்பட்டு, சீதம் மிகுந்து, குடித்த பால் சீரணிக்காமல் திரைக்க வாயால் உவாந்தி எடுக்கும், வயிறு இரைச்சலும் விழி மருட்சியும் உண்டாகும், கழிச்சலுக்கான ஏதுவாகும்.

குழந்ததைக்கு பால் கொடுக்கும் தாயார் அரைக்கீரை போன்ற பல கீரைகளையும் பெரும்பான்மை உட்கொண்டால் அவ் அன்னையின் பாலைக் குடிக்கும் அக்குழந்தைக்கு வயிற்றில் சீதத்தன்மை அதிகரித்து கிருமிகள் உற்பத்தியாகி சிரங்கு போன்ற தோல் நோய்களும் ஏற்படும்.

பா 48 மாந்தத்தின் பொதுக்குணம்

ஆயுள்வேத பண்டிதர்கள் பின்வருமாறும் மாந்தக் குணங்களைக் குறிப்பிடுவர். குழந்தையின் கால் குளிர்ந்து எதிர்பாராத கழிச்சல் தோன்றி, பிள்ளை அடிக்கடி அழுது அழுது சோரும், இது கடுமையான மாந்தக் குணமாக கருதப்படும்.

பா 49 மாந்தம் மிகுந்த குணம்

வாய் வெந்து அவிந்து, சுரம் உண்டாகும் இருமலும் காணும். நெற்றி புருவம் வலிக்கும் வயிற்று வேதனை அதிகரிக்கும், வயிறுளைந்து இரத்தம் போகும்.

பா 50

சிறு பிள்ளைகளுக்கு வயிற்றாலே போகும். பிள்ளை சினந்த பயந்து கத்தும், பாசமிகுந்த தாயாருடைய கையில் இருக்க முடியாமலே அனுங்கி, அனுங்கி அழும், அறிவு மயங்கி உடலில் வெப்பம் அதிகரிக்கும், பிரதானமாக அரைக்குக்கீழ் குளிர்ந்திருக்கும். விரல், கால் கை இவற்றில் வீக்கம் ஏற்படும்.

பா 51 **சிகிச்சை சுரசம்**

உள்ளி, வசம்பு, வேலிப்பருத்தி பேய்மிரட்டி இவற்றை சம அளவு எடுத்து, அவித்து, உடம்பில் தேய்த்தும் அந்த நீரில் பொடுதலைக் குளிகை மருந்துகளை உள்ளுக்குள் கொடுத்து வருவதால் மேற்படி நோய் தீரும்.
(வேலிப்பருத்தி - உத்தமாணி, பேய் மிரட்டி - கிலுகிலுப்பை)

பா 52 - 54 **பொடுதலைக் குளிகை**

சுக்கு, மிளகு, திற்பலி, ஓமம், கருஞ்சீரகம், பெருங்காயம் வகைக்கு நாலு கழஞ்சு, வசம்பு, மூன்று கழஞ்சு, சாறணைவேர் ஐந்து கழஞ்சு, கடுக்காய் பதினைந்து கழஞ்சு,

வேலிப்பருத்தி, பொடுதலை , தும்பைக்கொழுந்து மற்றும் தொடர்ந்து வந்து இலைக்கொழுந்துகளும் வகைக்கு ஒரு பிடி, இவற்றின் வேர்களுடன் மேற்படி சரக்கு வகைகளையும் உலரவைத்து தும்பைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்து, பின்னர் பொடுதலைச் சாற்றினால் அரைத்தும் குண்டுமணிப் பிரமாணம் உருட்டி வைத்துக் கொள்ளல் வேண்டும்.

பிள்ளைகளுக்கு வரும் நோய் வயதுகளை கவனித்து குறிப்பிட்ட குளிகையை தக்கதான அனுமானங்களில் கொடுத்துவர மாந்தம், அசீரணம், மயக்கம், சுரம் நீங்கும்.

பா 55 **பால் மாந்தத்தின் குணம்**

மாந்தத்தின் பிரிவுகளில் பால் மாந்தத்தின் குணம் சொல்லப்படுகின்றது. ஆந்தை போல விழித்த பார்வை காணும். தாய்ப்பாலை உவாந்திக்கும், கழிச்சலும் தோற்றும். அனேகமாகப் பால் நிறமாக உவாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்படுவதால் அதிலும் வாடிய வேப்பம்பூ போல திரைந்து காணப்படும் இளைப்பு அதிகரிக்கும்.

(மாந்த வகைக்கு பொடுதலை மிக முக்கியமானதாகும். ஐகமருந்தான

மாந்த கருக்கு குடிநீரில் வேப்பங்காம்பூ கறி வேப்பிலைக் காம்பூ ஒதியம் காம்பு, மஞ்சல்நுணாக்காம்பு உத்தமாகாணிக்காம்பு பொடுதலைக் காம்பு வசம்பு, ஓமம், மிளகு, உள்ளி, சீரகம், மருந்து அவித்து குடிப்பது தாய்மாரின் வீட்டு வழக்கமாகும்.)

பா 56

குழந்தைகளுடைய கண்கள் குழிவிழும், காதுப்பகுதி பதியும். மயக்கம் ஏற்படும். தேகம் தளர்ச்சியடைந்து, குழைந்து போகும் இதனால் வயிறு புண்பட்டு பிள்ளைக்கு உபத்திரவம் கொடுக்கும், மேலும் புளித்து மலங்கழியும். வயிறு பொருமிக் கொள்ளும், இவை பால் மாந்தத்தின் குணம் என்று தெரிந்து கொள்ளலாம்.

பா 57 **சிகிச்சை - மேதிநெய்**

மேதிநெய், ஒரு உழக்கு வாழை ஈர்க்குச்சாறு, பொடுதலைச் சாறு மேற்படி நெய்அளவைக் கொண்டது. சரக்கு வகை கர்க்கம் ஏலம், விழால் அரிசி, வசம்பு உள்ளி, மதுரம், சிரகம், திரிகடுகு சரக்கு வகை 10 எண்ணிக்கை.

(மேதி நெய் - எருமைநெய், கர்க்கம் - இலுப்பம்பூ தாமரைப்பூவையும் கருத்தில் கொள்வர்)

பா 58 - 59

வகைக்கு அரைக் கழஞ்சு எடுத்து இங்கு காட்டிய சரக்குகள் எல்லாம் இடித்து, அரைத்து கலந்து வைத்த நெய் சாறுகளுடன் கூட்டி மெழுகு பதமாக எரித்து எடுத்து வைத்துக் கொண்டு நல்ல அனுமானங்களுடன் கொடுத்து வர வெண்டும்.

மேதிநெய் மாந்தத்திற்கு கொடுப்பதாக இருப்பினும் வயது, கால தேசங்களை அனுசரித்து உத்தி புத்தியாக கையாளப்பட வேண்டியதாகும். அடர்த்தியும் கொழுப்புத் தன்மையாகவும் இருப்பதனால் வயிற்றில் சங்கடங்களை உண்டாக்கக் கூடும். எனவே வியாதி தணிந்ததன் பிற்பாடு உடல் நலத்திற்கும் நரம்பு தாக்கியத்திற்கும் ஏற்றதாக அமையும்.

பா 60 **போர் மாந்தத்தின் குணம்**

வயிற்றுப்பொருமல், கழிச்சல் புண்வலிப்பது போல மிக்க வலி, பிள்ளை தாய்ப்பால் குடிக்காது, மயக்கம், வெருட்சி, சத்தி,தோற்றம் குறுகும், கைகால் சோர்ந்து குளிரும், மிக்கதுயரம் அடையும் கண்ணின் புருவங்களை நெரிக்கும், இவை போர்மாந்தக்குணமாகும்

பா 61 **போர்மாந்தத்தின் அசாத்தியக் குறி**

பிள்ளைக்கு மிகுதியாக கழிந்த சோர்வு உண்டாகும். இடைக்கிடை சுரமும் ஏற்படும் உடற்தோற்றம் மெலிவு காணப்படும். விலா எலும்பு தெரியும் வாந்தி மிகுதிப்படும் விழிகள் விரிந்து மூடும். இது அசாத்தியக் குணமாக உரைப்பர்.

(போர்மாந்தத்தில் அபான வாயு இத்தொந்தரவுக்கு காரணமாகும். அடிக்கடி வயிற்றை பொருமி, பொருமி இரைச்சலுடன் மலம் கழியும். இந்த கருத்தை வைத்து மேற்படி கருத்தை வைத்தார்கள் போலும்.)

பா 62

உடம்பு தேய்வதுடன் வயிற்றின் நரம்புகள் தோற்றமாய் தெரியும் மாறுபாடாக மலங்கள் கழித்து விட்டு விட்டு அதிகரிக்கும். அடிவயிற்றில் கடுப்பு உண்டாக்கி சீதப்போக்கு ஏற்பட்டு புறங்கால்கள் வீக்கம் கொள்ளும். பல தொந்தரவுகளை வியப்பாக காண்பிக்கும் இறுதியில் உயிரை வாங்கி விடும்.

பாட்டு 63 **சிகிச்சை குடிநீர்**

நிம்மக்கூர், நுணாக்கூர், சூதக்கூர், எகினக்கூர், நிற்குண்ணிக்கூர், கொடிவேலிக்கூர், உத்தமாகாணிக்கூர், இவற்றின் காம்புகள் அளவாக சேர்த்துக் கொண்டு வசம்பு, பொடுதலை, ஓமம், இருசீரகம், நாகவல்லி இவைகளை மேற்படி காம்புகளுக்கு அளவளவாக சேர்த்து கசாயம் வைத்து பருக்குவதால் மாந்தம் மாறும்.

குறிப்பு -

சரக்குகளை வறுத்து நீர்விட்டு அவிப்பது மேற்படி நோய் கட்டத்தில் சிறந்த குணத்தைத் தரும். அடிக்கடி சரக்கை வறுப்பதனாலே மலத்தை கட்டுகின்ற தன்மை அதிகம்.

சரக்குகளிலுள்ள வெப்ப தன்மையினாலும் பசி அதிகரிப்பு பக்குவமற்ற புளிப்பு மற்றும் தோஷங்களை எரிக்கக் கூடியதாய் உடலிலுள்ள நீர்ப் பதார்த்தங்களுக்கு வரட்சியை உண்டாக்கும் காரியம் வறுப்பதினாலும் சரக்கின் மாண்மீகத்தினாலும் மலப்போக்கு தணிவடையும், வடமொழியில் இதனை "கீராவறி" என்பர்.

சிகிச்சை - குடிநீர்

நிம்பம்	- வேம்பு
நுணா	- மஞ்சவண்ணா

சூதம்	- மா
எகினம்	- புளி
நிர்க்குண்டி	- நொச்சி
கொடிவேலி	- சித்திர மூலம்
உத்தமகாணி	- வேலிப்பருத்தி
நாகவல்லி	- வெற்றிலை

சமனிடை அவித்துக் கொடுக்க மாந்தம் குறையும்

பா 64 (வேறு)

உத்தமகாணித் துளிர், பொடுதலைத் தளிர், வசம்பு, நாயுருவி, மாந்துளிர், நாவற்றுளிர், சுக்கு, மோதகம், வெள்ளைப்பூடு, அவித்து குமடிப்பதனால் போர்மாந்தம் விலகும்.

(மோதகம் - அசமோதகம் - அசமதாகம் - ஓமம்)

பா 65 **நெய்**

பேய்ப்பருத்தி, முருக்கு, பொடுதலை, முருங்கை இவையெல்லாம் சாறு (சாகம்) உழக்கு, கஸ்தூரி மஞ்சள் (சிங்கார மஞ்சள்) கடுகு, உள்ளி, வகைக்கு, 1 கழஞ்சு மேதி நெய்யில் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு பாக்களவு உண்ண மாந்தம் தீரும்.

பாட்டு 66 ,67 **முலைப்பாலே ரண்டெண்ணெய்**

ஏரண்ட தைலம் முலைப்பால், பசுப்பால், வகை உழக்கு எடுத்துக் கொண்டு சரக்கு எடுத்துக் கொண்டு கொன்றைப்பட்டை, தயிர்வளை மூலம், வசம்பு, உள்ளி, வெட்பால் அரிசி கூட்டவும், வகைக்கு2 கழஞ்ச, அரைத்துக் கரைத்து பதத்தில் இறக்கிக்கொள்ளவும். காசளவு முலைப்பாலை சேர்த்துண்ண போர் மாந்தம் தீரும்.

பா 68,69 **குண்டலாதியே ரண்டெண்ணெய்**

பொன்னாங்காணி, முசுமுசுக்கை, தாளி, பழம்பாசி, இயங்கு, தூதுவளை, குமரி இலைச்சாறு, வ.க. ஒரு நாழி நெய் 1 நாழி சீவகம், சிவதை, மிளகு, கடுகுரோகணி, சேர்த்து மெழுகு பதத்தில் காய்ச்சி காசடை உண்ண மலம் கழியும், மாந்த வெப்பு அகலும், உடல் தேறும்.

பா 70 **கொதியெண்ணெய்**

சிற்றரத்தை, சதகுப்பை, திரிகடுகு, கடுக்காய் அசமோதகம் (ஓமம்)

வசம்பு, வெளுத்தல்பிசின், உள்ளி கரஞ்சீரகம், மரப்பட்டை (பீநாறி) இவற்றைப் பொடி செய்து நல்லெண்ணெயைக் கொதிப்பித்துத் தூளைப் போட்டுக் கலக்கி, இறக்கவும். உள்ளும் வெளியும் பாவிக்க மாந்தம் பற்றறும்.

பா 71 மாந்த மயக்கத்துக்குத் தைலம்

நொச்சி, பொடுதலை வேலிப்பருத்தி, மாவிலங்கை திருகுகள்ளி, கொடிவேலி, முத்தெருக்கு இவற்றின் கொழுந்து வக கழஞ்சு1 வேப்பெண்ணெய் அரை போத்தலில் காய்ச்சி பூசிவர மயக்க மாந்தம் தீரும்.

பா 72,73 மாந்த வில்லை

மிளகு, உள்ளி, திப்பலி, இருசீரகம், வசவு (வசம்பு), பொடுதலை, மாப்பருப்பு கறிவேப்பிலை வெந்நீர் விட்டு அரைத்து வில்லை தட்டி வைத்துக் கொள்ளலாம். வெந்நீர் அனுமானத்தில் கொடுக்க போர் மாந்தம், மாந்தக் கழிச்சல், வயிற்றுப் பொருமல், சத்தி தீரும்.

பா 74 விஷமாந்தத்தின் குணம்

உடல்தாபம் பெற்று தலை சுற்றி திடீரென வீங்கும் வாட்டமேற்படும். தேக உறுப்புகள் அனைத்தும் உழைவும் குத்துமாக துன்புறுத்தும் வயிற்று வேதனையோடு மலம் போகும். மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளும்.

பா 75 விஷமாந்தத்தின் அசாத்தியக் குறி

விஷ மாந்தத்தின் அசாத்தியக்குறி தேகம் குளிர்ந்து வெதுப்பமும் காணும். ஒரு பக்கத்திற்கு காய்வனவும் ஒரு பக்கத்திற்கு குளிரும் முதுகு குளிர்ந்து அப்புகுதி பெரிதாக வீங்கும் மலக்கடுப்பு உண்டாகும்.

பா 76

சிறுநீர் கடுத்துப்போகும். கழிச்சல் கூடும். பிதற்றல் ஏற்பட்டு உடல் சோரும் நாவும் பல்லும் புரளும் வெளுப்படையும்.

பா 77 தொங்கல் மாந்தம்

தேகம் வலிப்புக்குட்படும் வயிற்றுப்போக்கு வெப்பமாகவும், மாக்கரைத்தது போலவும், நீர்த்தன்மையாகவும் இருக்கும், அத்துடன் சலிப்புடன் ஓங்காளமும் எடுத்து உடல் சோரும். வயிற்றில் இரைச்சல் உண்டாகும். இது தொங்கல் மாந்தமாக குறிப்பிடப்படும்.

பா 78

நெய் மாந்தம்

மயக்கம் வலிப்பு, வேதனை, சோர்வு ஓங்காளம், வயிறு கழிதலுடன் பொருமலும் முட்டும் அதிகரிக்கும். கால் கை விறைப்பு தோன்றி சுரம் ஏற்படும், உணவு செல்லாது தரிக்கும்.

பா 79

பழமாந்தம்

பொருமல், வலிப்பு, காய்ச்சல், புறம்தாள்வீக்கம், வயிறு பொருமி வாந்தி ஏற்படும், தாகம் உண்டாகும், செருமிக் கொள்ளும், காலிலே சூடு இராது, விறைப்புத் தன்மை அதிகரிக்கும். இழைப்பு , தொய்வு உண்டாகும், பழங்கள் உண்பதால் ஏற்படும்.

பா 80

இவற்றின் அசாத்தியக் குறி

மலங்கழியும், இடையிடை சோர்வும், சுரமும் தோன்றும், உடல் வற்றும், விலா எலும்புகள் வெளிப்படும். சத்தி, முச்சு, கண் விரிந்து மூடும்.

பா 81

அக்கினி மாந்தம் முதற்குறி

உணவு, மாறுபட்டால், அசீரணத்தால் சல வெப்பினாலும் மலம் வரட்சி கொள்வதாலும் அங்கி (பசித் தீ) மந்தமாய் அமையும்.

பா 82

குணம்

மலம் சலம் கழியும், வயிறு உளைதல் காணும். சலமும் அதிகம் போகும் மலத்தில் இரத்தக்கசிவு தென்படும் பலம் குறைந்,. கண்ணும், முகமும் மாறுபட்டு வெளுத்துக் காணும்.

பா 83

வயிறு மந்தித்தாலும் பசித்தவனம் ஏற்படும். தான் நினைத்ததெல்லாம் விரும்பிக் கேட்கும், ஆனால் வயிறு ஏற்காது அலைச்சல் உண்டாகும்.

பா 84

வாயு மாந்தம்

வாயு வயிற்றைப் பொருமச்செய்து வயிற்றில் அடசிக் குத்து உண்டாக்கும். உதராக்கினி செயல் புரியாது. குழந்தை உணவு விரும்பாமல் அருவருக்கும். மலசலம் தடைப்பட்டு பசி குறையும்.

பா 85

பேய் மாந்தம்

பிள்ளை அடிக்கடி சோர்ந்து விழும் அலகை போல் விழித்துப்பார்க்கும்,

குடித்த பால் உவாந்திக்கும். சத்தத்தோடு வயிற்றுப்போக்கு உண்டாகும். தேகம் நடுங்கலுற்று உவாந்தி தொடரும். வாயிலிருந்து எச்சில் நுரைத்து விழும்

(அலகை - பேய்)

பா 86 **சிகிச்சை - கருக்குக் குடிநீர்**

கறியுப்பு, வேப்பிலை, வசம்பு, உள்ளி, வறுத்து, நீர்விட்டு அவித்து, தக்க அளவாக குழந்தைகளுக்கு கொடுக்க, மாந்தம் நீங்கும். உள்ளியைச்சுட்டு அருந்துவதாலும் மாந்தம் தணியும்.

பா 87

வேர்க்கொம்பு, வசம்பு, உள்ளி, கடு இந்துப்பு, கருஞ்சீரகம், வேப்பங்கூர், மிளகு, அசமதாகம் கடுகு, உலுவா, மல்லி, திப்பிலி, கார்ப்பெருமரிசி, தக்க அளவாகக் கருக்கிக் கொடுக்க மாந்தம் மாறும்.

(கடு - கடுக்காய், அசமதாகம் - அசமோதகம், அசமோதம், ஒக்கம், ஓமம், கார்ப்பெருமரிசி - பெருஞ்சீரகம்.)

பா 88

உத்தமாகாணி, நொச்சி, நுணா, வேம்பு இவற்றின் காம்புகள், வசம்பு, உள்ளி, வேர்க்கொம்பு, அளவாக சேர்த்து வறுத்தவித்துக் கொடுப்பதால் மாந்தங்கள் அனைத்தும் மாறும், மாப்பரும்பு, உப்பு வசம்பு உட்கொள்வதால் சிறுவர் மாந்தம் குறையும்.

பா 89

எருக்கலை, வறுத்து அவித்த நீர் உட்கொள்வதாலும் மாந்தம் தணியும் உருக்கு உள்ளித் தைலம் பருகுவதால் மாந்தம் விலகும் உப்பு உள்ளி, வேப்பிலை அரைத்து வெந்நீருடன் விழுங்க மாந்தம் தீரும்.

பா 90 **கொதியெண்ணெய்**

சீரகம், மிளகு, கடுக்காய், உள்ளி, வசம்பு, கோட்டம், இலவங்கம், சுக்கு. திப்பிலி, கருஞ்சீரகம், தேவதாரம். வகைக்கு 2 கழஞ்சு, சிற்றவரை இலை, உத்தமாகாணி, ஒரிதழ்த்தாமரை சமூலம் இவற்றை, நல்லெண்ணெயில் சேர்த்து கொதிப்பித்து பயனபடுத்துவதால் மாந்தம் கழிச்சல், வலி போன்றவை மாறும்.

பா 91, 92 **வாழைப்பூ நெய்**

புல்லாந்திக் கொழுந்து, நாவற்பட்டை, மால் விழுது, மலைதாங்கி

இலை, வாழைப்பூ, ஒன்றாகச் சேர்த்து இடித்த நீர் நாழி 1 இஞ்சி உள்ளி, சுக்கு, கோட்டம், கொத்தமல்லி, நெல்லி, ஓமம், இருசீரகம், திப்பிலி, இந்துப்பு, அதிவிடயம் இங்கு6, பசுநெய் சேர்த்து (உள்ளி , இஞ்சி வகைக்கு 2 கழஞ்சு ஏனையவை கழஞ்சு 1) இவற்றை சாறு செய்து நெய்யுடன் கலந்து பதத்தில் வடித்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் உட்கொண்டுவர கழிச்சல், மாந்தம், வெப்பக் கொப்பளம், கிராணி, அக்கரம் இவைகள் தீரும்

பா 93 (மற்றொரு பிரதியின் படி கட்டு மாந்தத்திற்கு)

வயிறு பொருமி திரட்சியாக காணப்படுமானால் பொன்னாவரை வேர், மிளகு இவற்றை அரைத்து தண்ணீரில் சேர்த்து அருந்துவதால் கட்டு மாந்தம் கலையும்.

பா 94 - 96 வாழைப்பூ நெய் வேறு

வாழைப்பூ, மலைதாங்கி இலை, வெள்வேல், சம்பு (நாவல்), புல்லாந்திப்பட்டை, இஞ்சி இவற்றின் சாறுகளும், பசுநெய் நாழி 1 காய்ச்சி, அதனோடு நெல்லிக்காய், அதிமதுரம், இருசீரகம், கருங்குங்கிலியம், திப்பிலி, உள்ளி, ஈருள்ளி, சுக்கு, இந்துப்பூ அதிவிடயம், ஏலம், வெண்காரம், கைப்பு களிப்பாக்கு, செவ்வியம், கோட்டம், வ.கழஞ்சு 2 ஆகிய சரக்குகளின் தூள்களையும் ஒன்று சேர்த்து மெழுகு பதத்தில் வடித்து பிடித்து வருவதால் சுரங்கள் வாயில் கிரந்தி, கழிச்சல் மாறும்.

பா 97 -98 வெண்காயக் குளிகை

அக்கரா சற்றேலம், உலுவா, நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், கடுக்காய், ஓமம், கூகைநீறு, பெரிகாரம், வெளுத்தல் பிசின், இந்துப்பு சன்னிவிதை, சதகுப்பை, மதுரம், இஞ்சி, சித்தரத்தை, கராம்பு கடுகுரோகணி, வசுவாசி, பெருங்காயம், கொத்தமல்லி, சாரணை வேர், வகைக்கு 1 கழஞ்சு, உள்ளி பலம் 2 இவற்றின் தூளை உத்தமாகாணிச்சாற்றில் நாலு சாமம் அரைத்து எடுத்தல் வேண்டும். வெந்நீருடன் உட்கொள்வதால் மாந்தவகை, கழிச்சல் வாயு நீங்கும்.

(சன்னிவிதை - காட்டுச்சீரகம்)

பா 99 மாந்த சன்னிக் குணம்

வயிறு ஊதிப்பருத்து, கடுமையாக வலித்து, வெப்பம் அதிகரிக்கும் மயக்கம் ஏற்பட்டு தன் உணர்வு குறைந்து விறைப்புணர்வுடன் சோரும் உணவு எடுக்காது. தாகம் இருக்கும், இது மாந்த சன்னிக்குணம் என்க.

பா 100 சிகிச்சை - கொதியெண்ணெய்

தக்காளி, தூதுவளை, குதிரைவாலி , சன்னிநாயகன் வேர், அவுரி, துளசி, பொன்னாங்காணி, பெருமருந்து. மணித்தக்காளி, நொச்சி, கிலுகிலுப்பை சீந்தில், இம்பூரல், சிற்றாமட்டி, மைலடிக்குருந்து, நத்தைக்சூரி கல்முருசு, பேராமட்டிவேர், முசுட்டு முட்டை நிலநாகம். (நிலநாகம் - மண்புழு)

பா 101

வேர்க்கொம்பு, மல்லி, சன்னிவிதை சதைகுப்பை உள்ளி, கோட்டம், ஏலம், ஈரரப்பை, சீரகம், வெளுத்தல் சாயம், இலவங்கம், செம்பகப்பூ வசம்பு இவற்றின் தூளை தெளிவெண்ணெயில் கொதிப்பித்து சிரசில் பூச சன்னிவகை தீரும்.

பா 102 குடிநீர்

வேர்க்கொம்பு, நிலவேர், அரிசி இவற்றை வறுத்து பொட்டளிகட்டி, மேலும் நீர்விட்டு அவித்து அக்குடிநீரை குடித்துவர மாந்த சன்னி, இருமல், சேடப்பொறுப்பு தீர்வதற்கு கைகண்ட நீராக இதைக் கூறுவர். கார்க்கரிசி வறுத்து அவித்த தெளிவும் சன்னி வகைக்கு உகந்ததாகக் கொள்வர்.

(நிலவேர் - மண்புழு, அரிசி - நெல்லுப்பொரி ஏலரிசி)

பா 103 பொடி

நன்னாரி, தூதுவளை, வட்டுக்கத்தரி, வேளை, களப்பன்னை, இவற்றின் வேர்களும், முசிறரிசி, நிலவேர் திப்பலி, மிளகு, வசம்பு, கருஞ்சீர், இவற்றை ஓட்டில் வெதுப்பித் தூளாக்கி பொன்னாரையின் பழம் அவித்த தண்ணீரில் குறிப்பிட்ட தூளையும் போட்டு கொதிப்பித்து உண்டால் மாந்தம் சன்னி எல்லாம் விலகும்.

(வேளை - தயிர்வேளை, முசிறரிசி - முசுறு முட்டை, பொன்னாரை பழம் - ஒருவகைப் பழம்.)

பா 104 சிற்றமட்டிக் குளிகை

இருசீரகம், அசமோதகம், திப்பலி, சுக்கு, வசம்பு, உள்ளி, பெருங்காயம், சதகுப்பை, கறிமுருங்கை, உத்தமாகாணி, சிற்றமட்டி இவற்றின் வேர்களைத் தூளாக்கி, வெந்நீர் விட்டு அரைத்து சுத்தி செய்த வாளம் ஒருபங்குடன் சேர்த்து பகுதி பகுதியாக வகுத்து மிளகளவு உருட்டி வைத்துக் கொள்ளல் வேண்டும். மலக்கட்டு மாந்த சிக்கல், அதன் கோளாறுகளுக்கு தக்க விதமாக ஏற்ற அனுபானங்களில் கொடுக்கலாம்.

(ஊர்தணி முதலி - கறிமுருங்கை, சரக்குகள் ஒரு கழஞ்சாயின் பாதிக்கு சத்தி செய்த வாளம் ஒரு கழஞ்சு)

பா 105 மாந்த சன்னிக் குளிகை - வேறு

சாதிலிங்கம், இருசீரகம், உள்ளி, காயம், கராம்பு, வசுவாசி, சாதிக்காய், சினக்காரம், சுக்கு, திப்பலி, கிருமிசத்துரு, இலைக்கள்ளி அசமதாகம், ஏலம் வகைக்கு 1 கழஞ்சு, வாளம் 2 கழஞ்சு.

(இலைக்கள்ளி - மான் செவிக் கள்ளியின் கருத்து)

பா 106 இதனை இரு பங்காக்கி எலுமிச்சம் பழப்புளி வைத்து அரைத்து, பாவட்டங்காய்ப் பிரமானம் நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். நோய்க்கு ஏற்றவண்ணம் தக்க அனுமானங்களில் கொடுத்து வரவும். பிள்ளைஅழுது பால் உண்ணாது காய்ச்சல். சத்தி இருக்குமானால் ஒரு குளிகை பயன்படுத்தலாம். (பால் மாந்தத்துக்கு)

பா 107 கல்மாந்தமாக காணப்படுமானால் ஒரு குளிகை வெல்லத்துடன் கொடுக்கலாம் ஊதுமாந்தமாக இருப்பின், எலுமிச்சம் புளியில் கொடுக்கவும் காய்ச்சல், வீக்கம் காணப்படும்.

பா 108 சிலேற்பன சன்னி மாந்தம் ஏற்படுமானால், காய்ச்சல், குளிர், வரட்சி இவற்றிற்கும் பாதுகாப்பிற்கும் குளிகை உண்ணத்தேனில் கொடுக்கவும். காய்ச்சல் குளிர் திடுக்காட்டம் ஆகிய சன்னி மாந்த குணங்களில் வேர்க்கொம்பு அவித்த நீரில் கொடுக்கவும்.

பா 109 பிள்ளைகளுக்கு வயிறு பொருமி வாயால் கிருமி வெளிப்படும். மலசலங்கள் போகும் இத்தகைய கிருமி மாந்த குணங்களில் குளிகை பழப்புளியில் கொடுக்கவும் உணவு செமிக்காமல் அசீரண மாந்தத்திற்கு மிளகு அவித்த நிரில் கொடுக்கவும்.

(இஞ்சி முகிழ், உள்ளி, கராம்பு, ஊரரிசி, எலுமிச்சம் இலை, வறுத்தவித்த நீரில் குளிகை சேர்த்து கொடுப்பது பலனளிப்பதாகக் கொள்வர். தேசிப்புளி சிறந்ததாகும்.)

பா 110 கால், கை வீக்கமுற்று, தலையிடி, வாயால் நுரை விழுதல், வலிப்புத்தன்மை, வயிற்றுப் பொருமல் ஆகிய குணங்கள் தென்படும், வலி மாந்தத்திற்கு வசம்பு, மிளகு, உள்ளி, திப்பலி, அவித்த நீரில் இக்குளிகையை வழுங்கத் தணியும்.

பா 111 மாந்தம் மிகுந்த குணத்தில் சரீரம் நீலம் பாரித்து பெற்றோருக்கு அலைச்சல் உண்டாகும். மூலமும் கருமையடைந்து நுரையும் போகும்.

இதற்கு உள்ளி, வேர்க்கொம்பு, ஓமம், திப்பலி, குளிகை செய்து கொடுக்கவும். விஷமாந்தமாகிய குணங்களான அடிக்கடி சீறுதல், விக்கல், காய்ச்சல், பால் உண்ணாமை ஆகிய குணங்கள் கண்டால் வேர்க்கொம்பு, வசம்பு அவித்த நீரில் கொடுக்கவும்.

பா 112 பிள்ளைகள் கண் முளிகுதல், காய்ச்சல், மலசலம், போகாமை ஆகிய அமர் மாந்த குணம் காணப்பட்டால் கடுக்காய், ஏலம், மிளகு, கைப்பு, இலவங்கம், திப்பலி சேர்த்து அவித்த நீரில் தேசிப்புளி சேர்த்து குளிகை. உட்கொள்வதால் அமர் மாந்தம் தீரும்.

பா 113 தலை நடுக்கம், மலம் போகாமை, தேகக்கனதி, காய்ச்சல், வீக்கம், உழத்தி ஆகிய குணங்கள் உடைய உழத்து மாந்தம் காணில், சீநிதிற் சாறும் நல்லெண்ணெய் துளியும் குளிகையும் சேர்த்துக்கொடுக்கத் தீரும்.

(வேப்பெண்ணெய் சிறந்ததாக அனுபவத்தில் கண்டது.)

பா 114 காய்ச்சல் தூக்கம், அடிக்கடிமய்ககம், குளிர்ச்சி, வியர்வை என்னும் குறிகளுடன் வாதக்கதிப்பு, மாந்த சன்னி கண்டால் காயம், சுக்கு, கடுகு, மிளகு அவித்த நீரில் குளிகை கொடுத்தால் தீரும்.

பா 115,116 மாந்த கோழைச்சன்னி ஆகியவற்றின் குறிப்புகளான கரம், மூச்சு, வயிற்றுப்பொருமல், மலசலம் போகாமை, சறளி சேருதல், இளைப்பு வேர்வை, மார்வு படபடப்பு சேடப்பொறுப்பு இத்தகைய சன்னிக்குணம் ஏற்படின் உள்ளி, ஓமம். கடுக்காய், கறுவா, சுக்கு, இந்துப்பு, பெருஞ்சீரகம் துருசு, வசம்பு, குப்பைமேனியிலை, வகைக்கு சமனாக அரைத்த கூட்டுடன் குளிகையும் சேர்த்து எள்ளெண்ணெயும் சேர்த்து அருந்தி வர மாந்தம் எல்லாம் தீரும்.

பா 117 நீர்ப்பாட்டின் குணம்

சலம்போல மலம் கழிந்து கொண்டிருக்கும், நீர்த்தாகம் கூடும், விழி சிறுக்கும், விறைப்பு, வியர்வை தென்படும் நா வரளும். புண் போல் வயிற்று வலி அதிகரிக்கும், பிள்ளை ஓரிடத்தில் நிலை கொள்ளாது புரளும், தளரும் காலை பரண்டை வலித்து உளையும்.

பா 118 நீர்ப்படுவன் குணம்

பலமாக வயிறு வலித்து கழிந்து சோர்வடையும் விரல்களால் எதையும் வறுகிப் பிடிக்கும். சீழ் இரத்தம் கழியும் நாக்கு பேச முடியாமல் கொன்னிக்கும். உடல் சீதளமாகி அசைவு குறைந்து, களைப்பு ஏற்படும் இது அசாத்தியத் தன்மையுடையது

பா 119 செரியாப்படுவன் குணம்

வயிற்றுப் பொருமல், வயிற்றில் புளிப்பு ஏற்பட்டு நெஞ்சு புகைத்து அயரும், செருமலும் சத்தியும் உண்டாகும், உணவை விரும்பாது, வயிற்றில் இரைச்சலுடன் அதிகமாக நீர்த்தவனம் உண்டாகும். தேகத்தைக் கெடுக்கும்.

பா 120 ஈரற்படுவன் குணம்

இப்படுவனில் ஈரல் பகுதியில் வறுகுவது போன்ற தன்மை ஏற்படும். எரிவு ஏற்பட்டு புகைச்சலாக்கி வலிப்போடு வயிற்றுப் போக்கு அதிகரிக்கும் இது துன்பம் தருவதுடன் உடலைச் சுருட்டி கூன் விழப்பண்ணும், சரீரம் குளிர்ந்து பார்வை மங்கி நா வரளும் மயக்கம், விறைப்பு தோன்றும்.

பா 121 இரத்தப்படுவன் குணம்

வயிறு வலிப்புக் கொண்டு பொருமி நோகும். உதிரம் கழியும். வாயில் புரட்டி, ஒங்காளம் அழற்சி ஏற்படும். சரீரம் குளிர்வடைந்து பதறும். வியர்வை உண்டாகும். இரத்தப்படுவனது குணம் மிக அசாத்தியமாகும்.

பா 122 சிகிச்சை – உள்ளித் தைலம் ஒத்தணம்

உள்ளியை அரைத்துசீலையில் பூசி விளக்கின் சுடரில் வாட்டி எடுத்து சிரசிலும் உள்ளங்கால், மார்பு இவற்றிலும் பொருத்திக் கொள்ளலாம். (வேப்பெண்ணெய்ச் சுடர்) சமய ஒழுங்கின்படி நீறு, பூசியும் வேப்பங்குழையால் தடவியும் வேப்பிலையை பொட்டளியாகக் கட்டி ஒத்தணம் பிடிப்பதும் கிராமிய வழக்காகும்.

பா 123 தாகத்துக்குக் குடிநீர்

சட்டியை அடுப்பில் வைத்து அதில் நன்னீர்க்கரை மண் (உவர் இல்லாத மண்) மாவிலைச் சருகும் சேர்த்து வறுத்து நன்னீர் விட்டு வற்றக் காய்ச்சி வடித்து பருக்கத் தாகம் போகும்.

பா 124 கருக்குக் குடிநீர்

வெண்பருத்திக் கொம்புகளும், பனைப் பச்சை ஒலை, வேர்க்கொம்பு, வெங்காயம் சட்டியில் கருக வறுத்து நீர் விட்டு, பதமாய்க் காய்ச்சி வற்ற விட்டுப் பருக மழலை நாவரட்சி அகலும், மந்திர மோதித் தீர்த்தம் கொடுக்க இது தீரும்.

பா 125 நீர்ப்பாட்டுக்கு

சமைத்த சோறை வறுத்து நீர் விட்டுக் கொதிப்பித்துக் குடித்து வர நீர்ப்பாட்டுக் கழிச்சல் தீரும். உள்ளி, வேர்க் கொம்பை உத்தமாகாணிச் சாற்றில் அரைத்துக் கொதிக்க வைத்து அதனை தலையிலும் உடம்பிலும் பூசி வர நீங்கும்.

பா 126 **குடிநீர் 1**

மாங்கொட்டைப் பருப்பு அல்லது வித்து, வசம்பு, சுக்கு, உள்ளி, தனித்தனியாக வறுத்தெடுத்து நீர் விட்டுக் காய்ச்சி, வடித்து எடுத்து உட்கொள்ள நீர்ப்பாட்டு மாந்தம் தணியும். வேப்பிலையை வறுத்து அவித்த தண்ணீர் குடிக்கலாம்..

பா 127 **நீர்ப்படுவனுக்கு**

அரிசியை வறுத்து அவித்த நீர் குடிக்கவும் வேப்பிலை துவைத்து வறுத்து ஒத்தணம் கொடுக்கலாம். சுக்குப் பொடியுடன் குளிகை கலந்து தேய்க்க மூன்று நாளில் தணியும்.

(குளிகை - மாந்தசன்னிக் குளிகை)

பா 128 உத்தமகாணி, நொச்சிச் சருகு இரண்டையும் வறுத்து சாம்பலுடன் சேர்த்து ஒத்தனம் பிடித்தல் நல்லது. சுகவெந்நீர்க் குளிப்பைத் தெரிந்து செய்க..

பா 129 சரீரம் விறைத்து வேர்க்குமானால் கொள்ளுமாவை வறுத்து. ஒத்தண(ட)ம் கொடுப்பது நல்லது. தணியா விட்டால், எருக்கலை வேரை இடித்து அவித்து ஒத்தணம் கொடுக்கலாம். இது தீரும். வேர்வை கட்டுப்படாமல் மேலும் அதிகரிக்கில் அசாத்திய குணம் என்று தெரிந்து கொள்ளலாம்.

பா 130 **தாகத்திற்குக் குடிநீர்**

மாம்பூ 2 பிடி, குளக்கரை மண் அள்ளி கராம்பையும் அதனுடன் சேர்த்து வறுத்துக் காய்ச்சிக் குடிநீர் அருந்துவதால் கூடிய தாகம் நாவரட்சி நிச்சயமாக மாறும் மாறாவிட்டால் சுக்குக்களி ஏற்றதாகும்.

பா 131 இஞ்சியுறட்டி கொடுப்பதனால் கழிச்சல் மாறும். இலேசான தாகம், வறட்சி, ஓங்காளமும் மாறும், இஞ்சிக்களியும் இஞ்சி நெய்யும் தொடர்ந்து அருந்திவந்தால், ஐந்து விதமான நோய்களுக்கு இம் மருந்துகள் உகந்தவை, இவற்றை ஆராய்ந்து மருந்து செய்க.

(இஞ்சியுறட்டி- இஞ்சி, உள்ளி, கராம்பு நற்சீரகம் அரைத்து தேசி இலையில் தட்டிமேலும் இலைமூடி இந்த ரொட்டியை காய வைத்து தேன் விட்டு நீரில் அவித்தல். வழக்காற்றில் இது பயனுள்ளதாகக் கருதுகிறோம்.)

பா 132 **ஓங்காளத்துக்கு**

இஞ்சிக் கிழங்கு சீரகம் அரைத்து தேன் விட்டு (கொதிப்பு காணும் போது) நீர் விட்டு அவித்து கொடுக்க ஓங்காளம் நிற்கும். சாதிக்காய், சுக்கு, சீரகம், ஓமம் வறுத்து, பொடி செய்த தூள் போட்டு உட்கொள்ள ஓங்காளம் குறையும்.

பா 133 **தாமரை வளைய ஏலாதிக் குளிகை**

ஏலம், வெண்கோட்டம், சாத்திரவேதி, இலவங்கம், செம்பக மொக்கு (மொட்டு) சாதிக்காய், உருத்திராட்சம், கோரோசனை, மதுரம், நிலவேர், முசுறுமுட்டை, மான்கொம்பு, செங்கழுநீர்க் கிழங்கு வ.க.1.

பா 134 தாமரை வளையைச் சாற்றால் அரைத்து பாவட்டம் காயைப்போல உருட்டி நிழலில் உலர்த்தி தக்க அனுபானங்களில் கொடுத்து வர தாகம், நாவரட்சி, சுரம், தோஷம், மாந்தம், அக்கரம், நீர்ப்பாடு என்பன தீரும்.

பா 135 **மிருத்தியாக் குளிகை**

அதிமதுரம், கோட்டம், ஆரம்லாமிச்சு, முத்தற்காசு, நன்னாரி, கிலுகிலுப்பை, செங்கழுநீர், பங்கம்பாளைவேர், சுக்கு, முந்திரிகை, பேரீஞ்சு, மான்கொம்பு, கோரோசனை, ஞாழல்

(ஆரம்-சந்தனம், ஞாழல்-குங்குமப்பூ)

பா 136 காண்டாமிருகத்தின் கொம்பு, மாரலின் கிழங்குப்பூ, சிறுநாகம்பூ, முசுறுமுட்டை, செண்பகப்பூ, திப்பிலி, தேவதாரம், பச்சைக்கர்ப்பூரம், வ.க.1 இவற்றைத் தூளாக்கி முலைப்பால் விட்டு அரைத்துக் கொள்க.

(மாரலின் கிழங்குப்பூ - நீலோற்பலப்பூ)

பா 137 மெழுகு பதத்தில் உருட்டி பயறுப் பிரமாணம் நோய்க்கு ஏற்ற அனுமானங்களில் கொடுத்திட மாந்தம், அக்கரம், வாத பித்த சேற்பனத்தினால் ஏற்படும் சுர நோய்களையும் சன்னி இவற்றையும் தீர்க்கும்.

(மூர்க்கம் - பயிறு)

பா 138 **வாத மாந்த வலிப்பின் குணம்**

நரம்பு இசிவு எனக்கருதப்படும் வலிப்பு, வாத தோஷகாரணமாக மாந்தத்தை மேற்கொண்டு வருமானால் கைகால் சீதளம் கொள்ளும், வயிறு பொருமும், குழந்தை விழி சொருகி, நிலைக்குத்திப் பார்க்கும். உடம்பு வியர்க்கும், முகம் கோணி, விறைத்து வலிக்கும் ஏப்பம், கொட்டாவி, (இயல்பு நிலை இல்லாமல் வாய்வு ஆதிக்கத்தால்) காணப்படும். நாசி, கண்ணிலிருந்து நீர் சொரியும். இதனை வாத மாந்த வலிப்பாக கருதுவர்.

பா 139 பித்த மாந்த வலிப்பின் குணம்

உவாந்தி ஏற்படும். மயக்கநிலை காணும். சுவாசம் உழலை அதிகரிக்கும். தொனி குறையும், வெப்பம் சோர்வு, வியர்வை, திமிர்ப்பு தோன்றுவதுடன் பஞ்ச இந்திரியங்களும் தளர்ச்சியடையும். இது பித்தமாந்த வலிப்பு ஆகும்.

பா 140 சிலேற்பனமாந்த வலிப்பின் குணம்

தேகம் சீதளமாகும். உரோமம் சிலிர்க்கும், வாயால் எச்சில் ஒழுகும், ஓங்காளம், ஏற்படும், கைகால் சொறிவுத்தன்மை காணும், வயற்றுப் பொருமல் தோன்றும் பேச்சு குன்றிவிடும் உடல் பொருமும். மூச்சும், மொய்ப்பான உறக்கமும் ஏற்படும். இது சிலேற்பன மாந்தம் எனப்படும்.

பா 141 சிகிச்சை - பெருங்காயக் குளிகை

வெளுத்தல், வசம்பு, உள்ளி. காயம், பீநாறி, மாயாக்காய், மிளகு, சுக்கு ஓமம், இலுப்பை அரப்பு, வேப்பின் பிண்ணாக்கு இவற்றை சம அளவில் தூளாக்கி உத்தமாகாணிச்சாற்றால் அரைத்து தூதுவளம்பழம் அளவு உருட்டவும்.

பா 142 ,143 வேப்பெண்ணெயில் கொடுக்க மாந்தவலி தணியும் நாவல், நொச்சி, செங்கத்தாரி, முடிதும்பை நொச்சி, துடரி பொடுதலை ஆகியவற்றின் துளிர்கள் அரைத்த நீரில் குளிகை சேர்த்துக் கொடுப்பதால், கழிச்சல் குத்து, கொழுவுதல், பித்த மாந்தம் தீரும்.

(நொச்சி காணப்படுவதால் இருபங்கு சேர்ப்பதாகக் கொள்ளுவர், துடரி - நாயுருவி சிங்கிலியையும் அனுபவரீதியில் சிலர் கையாளுவர்)

பா 144 இம்மருத்தில் பாதி பங்கிற்கு வாளம் சேர்த்து உத்தாமாகாணிச் சாற்றில் அரைத்து உழுந்து அளவு மாத்திரை செய்து பேதி தேவையினில் பயன்படுத்தலாம்.

பா 145 பெருங்காயக் குளிகை

இரு சீரகம் மதுரம், மிளகு, சுக்கு, திரிபலை, ஓமம், உள்ளி, காயம், மல்லி சன்னி விதை. கோட்டம், முசுறுமுட்டை, நிலவேர் சம அளவாக முலைப்பாலில் கரைத்து இலவ மரத்தின் விதைபோல உருட்டி எடுத்துக் கொண்டு இஞ்சி, முலைப்பால் தேன் சேர்த்து கொடுக்க பொருமல் குத்து, தீரும்.

பா 146, 147

ஓமம் வறுத்தவித்த நீரில் தேனும் சேர்த்து, மாந்தம் வலிப்பு. சுரம். சன்னித்தன்மை இருமல் அடைப்பு இவற்றுக்கு உள்ளி வெங்காயம் சமனாகச் சேர்த்து முலைப்பாலும் விட்டுக் கொடுக்கத் தீரும்.

பா 148,151 **மாந்தக் குளிகை**

உள்ளி, மிளகு ஓமம், வசம்பு, கருஞ்சீரகம் பெருங்காயம் சித்தரத்தை, சிறுதிப்பலி, மாங்காய்ப்பருப்பு(ஊறுகாயில் மூழ்கிய மாங்காயின் வித்து) இவை சமஅளவு எடுத்து காயம் தவிர ஏனையவற்றை வெந்நீர் அல்லது பொடுதலைச்சாற்றில் அரைத்து வில்லை தட்டி உப்பை அரைத்து கவசித்து உமிக்காந்தலில் சுட்டு வெந்த பின்பு கவசத்தை நீக்கி, காயத்தை உடன் சேர்த்து பொடுதலைச் சாற்றில் அரைத்து, தூதுவளங்காயளவு உருட்டி உரிய அனுமானத்தில் உட்கொள்ள, மாந்தத்தோடு பலவகை நோய்களையும் மாற்றும், இதற்கேற்றதொரு அனுமானம் கீழ்வருமாறு

கராம்பு, வெங்காயம் மாயாக்காய், பருத்திப்பிஞ்சு, மாதுளையின் பிஞ்சு, பூ, வசுவாசி, மதுரம், ஓமம், சம அளவாக எடுத்து பொடி செய்து, காற்பங்கு நீர் விட்டபின்பு கொடுக்க அக்கரம், கொதிப்பு, கழிச்சல், உடல் அவியல், மாந்தம், தீரும்

பா 152, 153 **கொதியெண்ணெய்**

சிவனர்வேம்பு, ஈசுவரனார் மூலி, அவுரி, நத்தைச்சூரி, இம்பூறல், குந்தம், (குருந்து) வாரை, நொச்சி, பரிதருவாலி இவற்றின் வேர்கள் மதுரம், கோட்டம், செண்பகப்பூ ஓமம், சன்னி விதை, வசம்பு, சிறுதேக்கு, சித்தரத்தை, வெளுத்தற் பிசின், கருஞ்சீரகம், நிலவேர் முசுறுமுட்டை, வ.க சமன் எள்ளெண்ணெயில் கொதித்து பூச வலிகள் நீங்கும் (இங்கு வேப்பெண்ணெய் நல்லது என்பர்)
(வாரை - ஆடாதேடை, பரிதருவாலி - குதிரைவாலி)

பா 154, 155 **பொடுதலையெண்ணெய்**

உள்ளி, பெருங்காயம், வெளுத்தல், திப்பலி, கடுக்காய், மிளகு, வசம்பு வ.க சமன் உத்தமாகாணி, பொடுதலைச் சாற்றில் அரைத்து, வேப்பெண்ணெயில் போட்டு கொதிப்பித்து மெழுகு பதத்தில் எடுத்து வடித்து உள்ளும் கொடுத்து. தேகத்திலும் பூசி உச்சியிலும் பொருத்த மாந்த வலியுடன் தலை கடுப்பு, விறைப்பு தீரும்.

பா 156 **அக்கரம்**

சிவன் நந்திக்கு சொன்னவாறு ஆயுள் - வேதத்தில் இடம் பெற்ற அக்கர நோய் பற்றிய குணங்களும் சிகிச்சைகளும் உலக மாந்தருக்குக் கூறுவாம்.

பா 157 **அக்கரத் தொருப்பு**

கறுப்பு, சிவப்பு வெள்ளை நிறமாக வாத, பித்த கப நிறச்சாயலாக எச்சில் சுரப்போடு அக்கர அவியல் காட்டும் என்பது தெளிவாகும். இதனால் ஏறபடும் சுரம், சன்னி, அவியல் கிரந்தி குணம் சிகிச்சை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

பா 158 **கறுத்த அக்கரத்தின் குணம்**

தலைக்குத்து வேதனை உண்டாகும். வயிறு பொருமிக் காயும், இருமல் மூச்ச முட்டு மயக்கம் வயிற்றுநோய் தென்படும் வாய் உதடு புண்ணாகும், அனுக்கம் உண்டாகும் ஓங்காளம், பச்சிலை கரிபோல கழிச்சல் உண்டாகும்.

பா 159 சாப்பாடு வெறுத்து தேகம் மாற்றமுற்று கருமை பாய்ந்து உள் அவியல் ஏற்பட்டு, இரவு பகலாக மிண்டி மிண்டி அழும், திடுக்காட்டம், சோகத்தன்மை தென்படும், நாவரட்சி தாகம், சீதளம் நடுக்கம் உண்டாகும். இது அசாத்தியமாகக் கருதப்படும்.

பா 160 **சிகிச்சை - குடிநீர்**

கருஞ்சீரகம், மிளகு, வெங்காயம், உள்ளி, பிரமி கர்ப்பூரவள்ளி, சிறுகாஞ்சோன்றிவேர், திப்பலி வல்லாரை இவற்றைச் சம அளவு எடுத்து ஏற்றபடி சாற்றையோ கஷாயத்தையோ பருகுவதால் கறுத்தக்கரம், பறவை தோஷம், வெப்பு விஷகிரந்தி அவியல் மாந்தம் அகலும்.

பா 161, 162 **அரை மருந்து**

திப்பலி, இருசீரகம், ஓமம், அதிமதுரம், ஏலம், இலவங்கம், மாயாக்காய் வசுவாசி, சாதிக்காய், கோட்டம், கராம்பு, சித்தரத்தை, கக்கு, உள்ளி, கடுக்காய், இந்துப்பு, செவ்வள்ளி கலந்து உட்கொள்ளில் அக்கரங்கள் மாறும்.

பா 163 **தூதுவளை நெய்**

தூதுவளை நன்னாரி, கண்டம் காலி, ஆடாதோடை வட்டுக்கத்தரிவேர்,

இருசீரகம் திப்பிலி, கோட்டம் அதிமதுரம், ஏலம், இடித்து தூதுவளை இலை, காய், துவைத்த நீரில் அரைத்து நெய்விட்டு உட்கொள்ள அக்கரங்கள் தீரும்.

பா 164, 165 **செங்கத்தாரி நெய்**

செங்கத்தாரி, தூதுவளை, கண்டங்கத்தரி வட்டுக்கத்தரி இம்பூறல் (சாயவேர்) நன்னாரி, தூதுவளை இலை, காய், வல்லாரை, கர்ப்பூரவள்ளி, இவற்றின் சாற்றடன் பசுநெய்யும் அதற்கேற்ற பங்கு சேர்த்து, இருசீரகம் ஏலம் அதிமதுரம் வெங்காயம் இலவங்கம், திப்பிலி, மிளகு, கடுக்காய், இந்துப்பு சாதிக்காய், செவ்வள்ளி, கோட்டம் தக்கோலம், இச்சரக்குகளையும் கூட்டி நெய்பிறக்கக்காய்ச்சி, எடுத்து உட்கொள்ள, கிரந்தி, அக்கரம், அவியல் மாறும்.

குறிப்பு 'செங்கத்தாரி முதல் நன்னாரி வரைக்கும் வேர், தூதுவளையிலை காய், வல்லாரை கர்ப்பூரவள்ளி - இவை சாறு சாறும் நெய்யும் - வகை, நாழி1 வேரும் சரக்கும் - வ.கழஞ்சு1

பா 166. 167 **கொதியெண்ணெய்**

நன்னாரி, தூதுவளை, பொன்னாங்காணி, பெருமருந்து, அவுரி, குதிரைவாலி, கிலுகிலுப்பை, மணித்தக்காளி, மயிலடிக்குருந்து சிற்றாமட்டி, இம்பூறல் அமுக்கிராய், சீந்தில், சன்னிநாயகன்வேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், உள்ளி, சதகுப்பி வசம்பு ஏலம், கொத்தமல்லி, ஈரரத்தை செண்பகப்பூ, சன்னிவிதை, இலவங்கம், வெளுத்தல் நற்சீரகம், நிலவேர், முசுட்டுமுட்டை, வகை கழஞ்சு-1, வேப்பெண்ணெயை கொதிப்பித்து குறிப்பிட்ட சரக்குகளின் தூளை அதில் போட்டு துளாவி அக்கரங்களுக்கு பூச தணிவடையும்.

பா 168 **சிவந்த அக்கரத்தின் குணம்**

காய்ச்சல் காயும், உணவை விரும்பாது, அனுக்கம் எற்படும், வயிற்றுநோ அதிகரிக்கும், தேக அதைப்பு தோன்றும், வாய் புண்ணாகும் மலம்சலம் மஞ்சள் சாயலாகக்கழியும் இது இந்நோயின் குறிகளாகும்.

பா 169 **சிகிச்சை - குடிநீர்**

பிரமி, சிறுகாஞ்சோன்றி, வல்லாரல், வள்ளி, கடுக்காய், மிளகு திப்பிலி, வெண்காயம், கருஞ்சீரகம், மதுரம், வ.க. சமன் அவித்து குடித்து வர உடல் கொதிப்பு அக்கரம், மந்தம், வெப்பு, இருமல், கிரந்தி ஆகியவை தீரும்.

பா 170 **நெய்**

தூதுவளைவேர், இலை, காய், செங்கத்தாரி கண்டங்கத்தரி, இம்பூறல், நன்னாரி, வல்லாரல், கற்பூரவள்ளி, மதுரம், திப்பலி, மிளகு, கடுக்காய் சீரகம், வெங்காயம், இலவங்கம், கோட்டம், ஏலம் கொத்தமல்லி, வகை சமனாக எடுத்து தூள் செய்து பசுநெய்யில் வடித்து அருந்திவர சுரம் அக்கரம், கழிச்சல் மாறும்.

பா 171 **வெள்ளையக்கரத்தின் குணம்**

சுரம், வயிற்றுப்பொருமல், மலம் வெளுத்துக் கழிதல், வயிற்றுநோ, அனுக்கம், வாய்ப்புண் தாகம், இருமல், கால் குளிர்ச்சி, இவைகள் தென்படும்.

பா 172 **சிகிச்சை - குடிநீர்**

கொடி மல்லிகை இலை, பூ கர்ப்பூரவள்ளி சிறுகாஞ்சோன்றி, மிளகு சீரகம், வல்லாரை, வெங்காயம், திப்பலி, பஞ்சபாண்டவர் முல்லை இலை, சமனாக இடித்து, அவித்த நீர் அந்திசந்தி குடித்துவர அக்கரம், அவியல், கழிச்சல், மாறும் (முன்னர் கூறப்பட்ட குளிகையையும் இதில் தேவையான போது சேர்த்துக்கொடுக்கலாம்)

பா 173 **நெய்**

கோட்டம், மதுரம் நெல்லி ஓமம் மல்லி, தாண்டி செஞ்சந்தனம், இந்துப்பு மிளகு, சிறுதிப்பலி கடுக்காய், மாயாக்காய், ஏலம் சுக்கு, அதிவிடயம், அகில், இலவங்கம் சாதிக்காய், செவ்வய்ளி இடித்த தூளைச் சம அளவு சேர்த்து கொடிமல்லிகையும் சேர்த்து பசு நெய்யும் கூட்டிக்காய்ச்சி அருந்திவர அக்கரங்கள் மாறும்.

பா 174 **உள்ளக்கரத்தின் குணம்**

உடல்காயும், கால் காயாது. தலைவலி, தேக அவியல், வயிற்றுப் பொருமல், அனுக்கம், செருமல், முட்டு தோற்றுவதுடன் நெய்ப்பற்றாக, சிதறலாக கருகலாக மணத்துடன் கழிச்சல் ஏற்படும்,

பா 175 **சிகிச்சை - குடிநீர்**

பிரமி, சிறுகாஞ்சோன்றி, வல்லாரல், வள்ளி, கடுக்காய், மிளகு திப்பலி, சுக்கு, ஏலம், சமனாக இடித்து அவித்துக் குடிப்பதால் அவியல், சுரம், அக்கரம் சன்னி இவை தீரும், குளிகை வகையையும் இதில் சேர்க்கலாம். இத்துடன் முன்கூறப்பட்ட கொதியெண்ணெய் வகையையும் பொருத்துவது நல்லது.

பா 176, 177 நெய்

தூதுவளை இலை, காய், கண்டங்கத்தரி வட்டுக்கத்தரி, இம்பூறல், செங்கத்தரி, கர்ப்பூரவள்ளி, காஞ்சோன்றிவேர், பிரமி, வல்லாரல், இருசீரகம், அதிமதுரம், ஈருளிவெங்காயம், ஓமம், மிளகு, கடுக்காய், திப்பலி, இலவங்கம், சாதிக்காய், இவற்றின் தூளை நெய்யிலிட்டு வடித்து, அந்திசந்தி வெதுப்பி அருந்த, உள்ளவியல் அக்கரங்கள், கழிச்சல் மாறும்.

பா 178 ஈரலக்கரத்தின் குணம்

கடுப்புடன் கழிச்சல் ஏற்படும், காய்ச்சல், உணவு செல்லாதிருக்கும் குளிர் நடுக்கம், முக்கலுடன் சீதம் இரத்தம் காணும், இது அசாத்தியமாக கருதப்படும்

பா 179, 180 சிகிச்சை நெய்

தூதுவளை வேர், இலை. காய், பூ கண்டங்கத்தரி, வட்டுக்கத்தரி, புல்லாந்தி வேர், செங்கத்தரி, காஞ்சோன்றி வேர் , வல்லாரல், பிரமி, கர்ப்பூரவள்ளி, நாயுருவி, இருசீரகம், ஏலம் அதிமதுரம், ஈருள்ளி, மிளகு, சாதிக்காய், மாயாக்காய், கடுக்காய், தான்றிக்காய் திப்பலி, உலுவா, நெல்லிக்காய், கோட்டம், செஞ்சந்தனம், ஓமம், இலவங்கம் இவற்றின் சாறுகளையும் சரக்குகளையும் ஒன்றாகக்கூட்டி நெய்யில் சேர்த்து வடித்து வைத்துக்கொண்டு, தினம் வெதுப்பி உள்ளருந்தியும், சிரத்திலும் பொருத்த அக்கரம், வெதுப்பி இருமல், விஷகிரந்தி, கழிச்சல் இவை மாறும்.

பா 181 வாயக்கரத்தின் குணம்

வாயில் அவியல் மிகுந்த காணும், தொப்புளங்கள் தென்படும், வயற்றுப்பொருமல் வயிற்று மந்திப்பு குளிர்ந்து குளிர்ந்து காயும். சாப்பாடு செல்லாது. வாய் முகம் வீங்கும், இத்தகைய குணங்கள் காணப்படும்.

பா 182 சிகிச்சை - நெய்

திப்பலி, இருசீரகம், ஓமம், செஞ்சந்தனம், கடுக்காய், நெல்லி, இலவங்கம், ஏலம் கோட்டம் மாயாக்காய் உலுவா தான்றிக்காய், மதுரம் கர்ப்பூரவள்ளி ஆகியவற்றை நெய்யினில் கொதிப்பித்துக் கொள்ளவும்.

பா 183 அக்கர சுரத்தின் குணம்

உணவை விரும்பாது தலைக்குத்து அதிகரிக்கும். இருமல் இழுப்பு, வயிற்றுநோ அனுக்கம், வாயழற்சி, சுரம், வாய் புண்ணாதல் இவை காணும்.

பா 184 சிகிச்சை - குடிநீர்

கர்ப்பூரவள்ளி, சிறுகாஞ்சோன்றி, பிரமி, வல்லாரை, அதிமதுரம், மிளகு திப்பலி, கடுக்காய், சுக்கு, வெங்காயம், கருஞ்சீரகம் இவை அவித்து இடித்துவர அக்கரம், சுரம் கிரந்தி, வெப்பு, பறவைச்சுரம் மாறும்.

பா 185, 186 நெய்

கண்டங்கத்திரி, இம்பூறல், செங்கத்தாரி, வட்டுக்கத்தரி, தூதுவளை இலை காய், பிரமி, வல்லாரை, கர்ப்பூரவள்ளி, காஞ்சோன்றி, இருசீரகம், ஏலம், மதுரம் இலவங்கம், கடுக்காய், திப்பலி, ஓமம் உலுவா., மிளகு இவற்றை நெய்யுடன் சேர்த்து வடித்து அருந்திவர பறவைச்சுரம், அக்கரம், வெப்பு போகும்

பா 187 அரை மருந்து

திப்பலி, இருசீரகம், அதிமதுரம் ஏலம் வெங்காயம் சாதிக்காய் ஆண்பனை வெல்லம் இந்துப்பு இவற்றைக்கூட்டி கர்ப்பூரவள்ளிச் சாற்றில் அரைத்துச் சாப்பிட அக்கரங்கள் போகும் (அரைமருந்து - குளிகை மாத்திரமல்ல, பொதுவாக ஒன்றுடன் ஒன்று சேர்த்து அரைக்கின்ற மருந்தையும் இங்கு குறிப்பிட்டுக் கொள்ளுவர்).

பா 188, 189 அக்கரசன்னியின் குணம்

பெலத்த இருமல் காய்ச்சல் காணும். இவை இரவில் அதிகரிக்கும் உணவை விரும்பாது பிதற்றல் பேச்சு உண்டாகும் படுக்கை கொள்ளாது உழலும் அதிகழிச்சல் ஏற்படும் சுரத்தோடு நடுக்கம், அனுக்கம், மயக்கம் பேச்சு மந்திப்பு, சிரத்தில் அடித்து, தேகவலிப்புத் தோன்றும், இது கஷ்ட சாத்திய நிலைமையாகக் கணிக்கப்படும்.

பா 190, 191 சிகிச்சை - கொதியெண்ணெய்

நன்னாரி, கிலுகிலுப்பை, செங்கத்தாரி, சிவதை, இயங்கு, புங்கு முத்தற்காக, கல்முருசு, களப்பன்னை, நொச்சி, குதிரைவாலி, இருவேலி, எருக்கு, அவுரி, அமுக்கிராய், தூதுவளை, இலாமிஞ்சு, கோட்டம், செஞ்சந்தனம், வேர்க்கொம்பு, உள்ளி, சதகுப்பை, அகில், தேவதாரம், மரமஞ்சள், கடுகுரோகணி, சன்னிவிதை, வசம்பு, அரத்தை, கொத்தமல்லி, செண்பகப்பூ, ஏலம் வகை இரு கழஞ்சாக எடுத்து இடித்த தூளை நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் கலந்து காய்ச்சி கொதிபதத்தில் தூளைத்துளாவி வைத்துக்கொள்ளவும், இதை சிரத்தில் பொருத்துவதால் சன்னிமயக்கம் தீரும்.

பா 192, 193 கொதியெண்ணெய் - 2

குருந்து, மயிலடிக் குருந்து, குதிரைவாலி, மணித்தக்காளி, நன்னாரி அவுரி நொச்சி. கல்முரசு, சன்னிநாயகன், துளசி, மணித்தக்காளி, அசுவகந்தி (அமுக்கிராய்) கிலுகிப்பை, சீந்தில், பொருமருந்து, தூதுவளை, முசுற்றுமுட்டை, நிலவேர், சதகுப்பை, உள்ளி, வெண்கோட்டம், ஏலம், சுக்கு, இலவங்கம், மல்லி, அரத்தை, சன்னிநாயன், வசம்பு, மஞ்சள், வெளுத்தல், காயம் நற்சீரகம், செண்பகப்பூ வ.க.1. வேப்பெண்ணெயில் கொதிப்பித்து பூசுவதால் சன்னி மாறும்.

பா 194, 195 ஏனாதி

நன்னாரி, தூதுவளை, ஆடாதோடை, வட்டுக்கத்தரிவேர், நிலவேர், சுக்கு, மதுரம், கடுக்காய், நற்சீரகம், மல்லி, மிளகு, இந்துப்பு, ஏலம், கோட்டம், திப்பிலி, ஓமம், வெங்காயம், ஆகியவற்றை வறுத்து, ஆடாதோடைச்சாற்றில் கூட்டி, நெய்யில் கொதிப்பித்து, சாப்பிட குறிப்பிட்ட வியாதிகள் தணிவடையும்.

நிலவேர், சுக்கு, அரிசிப்பொரி, வெள்ளைச்சீலையில் கட்டி அவித்த நீரை பருகிவருவதால் சிலேற்பன சன்னி, அக்கரம், சுரசன்னி இவைகள் தீரும், (மேற்படி ஏனாதியோடு எதையும் பருகக்குறிப்பிடுவர், அரிசிப் பொரியோடு மற்றைய இருசரக்குகளையும் வறுத்து சேர்ப்பது கவனிக்கத்தக்கது)

பா 196, 197, 198 அக்கரத்தின் பொதுக் குணம்

வயிற்று பொருமல், கழிச்சல்,. வாய் அவிதல். செருமிக்கொள்ளல், வயிற்றில் நோவு இருமல், காய்ச்சல், தேகளிவு, உடல், தலைகொதிப்பு, கருமையாக வெள்ளையாக, பச்சிலைபோல, செந்நிறமாக, இரத்தசீலமாக, இலுப்பனை எண்ணெய், பால் போன்ற சாயலாக மலப்போக்குக்காணும். காய்ச்சலுடன் தொடர்ந்து இருமல் ஏற்படும். மேலும் வாய், மல உறுப்பு, சலஉறுப்பு அவியல் ஏற்பட்டு, நாவரண்டு, உள்ளவியல் பரவி, முக்கலும், மூலப்புறப்பாடும் ஏற்படும் சத்தியும் ஏற்படும்.

பா 199 அக்கரக்கிரந்தி வெப்பின் குணம்

காய்ச்சல் அதிகரித்து வெதும்பிக் காயும், வயிறு இரைச்சலுடன் பொருமிக்கொள்ளும் வாய் புண்ணாகும், வயிறு மந்திக்கும் உடலில் மேற்பகுதி காய்ந்து கால்குளிரும், உணவை விரும்பாது உபாதி கொடுக்கும்

பொதுச்சிகிச்சை

பா 200, 201, 202 அக்கர சஞ்சீவி மாத்திரை

கஸ்தூரி 1, குங்குமப்பூ 2 (ஞாழல்) கோரோசனை 3, ஏலம், மதுரம், சுக்கு , மிளகு திப்பலி இவை வகை 6 சுரத்தை, சாதிக்காய், ஓமம், சோம்பு கருஞ்சீரகம் வகை 7 கோட்டம் 8, தற்கோலம் 9, அக்கறா, சிறுதேக்கு வகை 10,

இத்தனை சரக்குகளையும் தூளாக்கி முலைப்பாலால் அரைத்து பயறளவு உருட்டி அனுமானாமக முலைப்பால் தேன் சேர்த்துக் கொடுக்க அத்தி சுரம், சன்னி, நாப்புண், வயிற்றவியல், திராணி, மாந்தம் அக்கரசுரம், பறவைத் தோஷம் வேறும் தோஷங்கள் கணைச்சூடு அகலும்.

பா 203, 204 அக்கராக் குளிகை

கோரோசனை, சாதிக்காய், கோட்டம், ஏலம், செம்பகப்பூ, செஞ்சந்தனம், மான்கொம்பூ, பூதாகம், முசுற்று முட்டை, கணிதவேதி உருத்திராக்கம், இலவங்கப்பட்டை, கல்நார், வகைக்கு கழஞ்சு ஒன்று, அக்கரா கழஞ்சு 2 முலைப்பாலில் அரைத்து பயறளவு குளிகை செய்து பயன்படுத்திவர, கழிச்சல், அக்கரம், சன்னி அவியல்சுரம் தீரும்.

பா 205 அமுதாதிக் குளிகை

அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம், கோட்டம் வெட்டிவேர், இலாமிஞ்சு, பச்சை, சடாமாஞ்சில், கராம்பு கணிதவேதி (சாத்திரபேதி), கோரோசனை, வ.க. 1 இவற்றைத் தூள் செய்து, வெட்டிவேர் கஷாயத்தால் அரைத்து குன்றுமணிப் பிரமாணம் உருட்டி வைத்துக் கொண்டு முலைப்பாலில் கொடுத்து வர, அக்கரம், வரட்சி, வெப்பம் மாறும்.

பா 206, 207 நெய்

தூதுவளை, நாயுருவி முசுமுசுக்கை இவை சமூலமாகவும், கர்ப்பூரவள்ளி, வல்லாரை, பிரமி, ஆடாதோடை, கொன்றை, கறுத்தப்பூக்கொடி இவை வேரும்இலையுமாகவும் எடுக்குக. வெங்காயம், மிளகு, சுக்கு வசம்பு இருசீரகம், மாயாக்காய், நெல்லிக்காய், கடுக்காய், கோட்டம், மதுரம், அக்கரா, ஓமம், மல்லி இலை வகை கழஞ்சு1 இலை வகை ஒருபிடியும், வேர்வகை ஒருபிடியும், சரக்குகள் 1 கழஞ்சுமாக, பசு நெய்யில் காய்ச்சி வடித்து இந்த நெய்யை உள்ளுக்குள் புகட்டியும் மேலுக்குப் பூசியும்வர வெப்பு குறையும். சுரங்கள் தணியும் பொருமல், கழிச்சல் மாந்தம் போகும்.

பா 208-210 **நெய்**

ஏலம், வசுவாசி, ஓமம், மிளகு, இருசீரகம், மஞ்சள், திப்பலி, கராம்பு, கோட்டம், பீநாறி, நாபிஞ்சு, அக்கறா, கடுக்காய், அதிமதுரம், நன்னாரி, கொத்தமல்லி, செஞ்சந்தனம், வெளுத்தல், இருவேலி வகைக்கு ஒரு கழஞ்சு எடுத்து, இடித்த தூளுடன் ஈருள்ளி உத்தமாகாணிப்பூவும் இலையும் அரிந்து நெய்யை அடுப்பில் ஏற்றிக் காய்ந்தவுடன் எல்லாவற்றையும் நெய்யில் போட்டுத் துளாவி உள்ளி பொன்னிறமாகும் சமயம் இறக்கி வடித்து வைத்துக் கொள்ளவும். இது உட்செலுத்தியும் மேலும் பூச உடல் மெலிவு மாந்தம், கழிச்சல், அக்கரங்கள், நாக்கு அவியல், தாகம், இளைப்பு, சோகை, தோஷம் விலகும்.

பா. 211-216 **கொதியெண்ணெய்**

அரத்தை, மல்லி, ஈருள்ளி, கடுக்காய், வசம்பு, ஓமம், செவ்வள்ளி, சாதிலிங்கம், மதுரம், திரிகடுகு, உள்ளி, இலவங்கம், சன்னிநாயகன், பீநாறி, வெங்காயம், வெண்காரம், வெளுத்தல், சதகுப்பை, அடவி, கச்சோலம், மஞ்சள், செஞ்சந்தனம், ஏலம் வ.க.1, வில்வை, நன்னாரி, கோரை, சீதேவி, சிவதை, மால்காந்தி, வீழி, வவுலுவிட்டி, கண்டங்காலி, முசுமுசுக்கை, வட்டுக்கத்தரி, தூதுவளை, இலாம்பிஞ்சு, அவுரி, நீர்புல்லாந்தி, செங்கத்தாரி, நிலக்குமிழ், பேப்பலவன், சம்மட்டி, அறலின்வள்ளி, நிலப்பனை, சாறனை, கிரந்திநாயகன், கிலுகிலுப்பை இலையின் வேர் ஒரு பிடி, இருவேலி, காக்கடுவன், செவ்வரத்தை, வீழி, இவை ஒரு பிடி, இலை வேர் சரக்கு வகை வெவ்வேறாக இடித்து பொடி செய்து நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி வெற்றிலை வடிபதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு அரைத்த தூள்களையும் போட்டுத் துளாவி உள்ளும் பருக்கி தலைக்கும் பொருத்தி உடம்பிலும்பூச அக்கரம், கன்னி, சுரம், வீக்கம், முட்டு வலி சன்னி, மாந்த சன்னி தீரும்

பா 217 **அக்கரத்தின் பேதம்**

வெள்ளையக்கரத்தின் வெப்புக்குணம்

வாய் வெந்து காணும், இளைப்பு, இருமல் தென்படும். தூக்கமும், மயக்கமும் உண்டாகும், உடம்பு கனதியாய் இருக்கும். சிதலும்பரவும், தேகம் வெளுக்கும். பிள்ளை பால் குடியாது. தளர்ச்சியடையும். மலம் வெளுப்பாகக் கழியும். விக்கல் ஏற்படும். வாய், நாக்கு, ஆசனம் அவியல் தென்படும்.

பா 218 **கறுத்த அக்கரத்தில் வெப்புக் குணம்**

பல்லு, நாக்கு கண், மலம், கருமை நிறம் காணும் வயிற்றுப் பொருமல்,

வயிற்றுப்போக்கு வாந்தி இவை ஏற்படும் வலிப்பு உடல் எல்லாம் நோதல் போன்ற குணங்கள் உன்டாகும், மலச் சிக்கலும் எற்படலாம்.

பா 219 சிவத்த அக்கரத்தில் வெப்புக்குணம்

தேகம் வெதுப்பாக இருக்கும் வயிறு உளையும், மலம், சலம், மஞ்சள் பச்சை தன்மையாக அமையும், சலம் மஞ்சளிக்கும், கோபிக்கும். தூக்கம் மயக்கம், வாந்தி உண்டாகும், வாய் புண்ணாகும், மலமும் சிவக்கலாம். இவை முத்தோஷ ரீதியாக காணப்படுவதை அவதானிக்கலாம்.

பா 220 அக்கரப்படுவன் குணம் - மருந்து

வலிப்பு, கழிச்சல், வயிற்று எரிவு, நீராக உவாந்தி காணுதல், உடம்பு மெலிதல், சரீரம் முழுவதும் நடுங்குதல், இத்தனை அக்கரப்படுவன் என்பர், இதற்கு மருந்து ஆடு தீண்டாப்பாலை, பொன் முசுட்டையிலை இதனை நான்கு பங்கு நீரில் விட்டு ஒரு பங்கு வற்றக்காய்ச்சி குடிப்பது சிறந்ததாகும். இது கஷ்ட சாத்தியம்.

பா 221 சிகிச்சை - ஏரண்டத்தயிலம்

நாயுருவி, முத்தற்காசு, இயங்கம் கொழுந்து பெருமருந்து, கிரந்தி நாயகன், புனலைப்பழம் இவற்றுடன் மேலும் தூரிசு, வசம்பு, அரத்தை, கடுக்காய் இந்துப்பு, கராம்பு வ.க. ஒன்றறை சுத்தி செய்த நேர்வாளம் நெய்யில் வறுத்து எடுத்தது 30 விதைகள் இவற்றையெல்லாம் கூட்டி ஏரண்ட தைலத்தில் கலக்கி, அடுப்பில் காய்ச்சுக.

பா 222, 223 சூரியபுட எண்ணெய்

காக்கணங் கொவ்வை, கிரந்திநாயகன், குன்றுமணி ஆமணக்கு, நாயுருவி, சிறுநெருஞ்சி. மாலின் காந்தி, இவைகளின் இலை வகைக்கு 1 பிடி துவைத்து எண்ணெய் போட்டு அதில் பின்வரும் சரக்குகள் கூட்டவும். நன்னாரி, செங்கத்தாரி, தூதுளை வேர், சீனக்காரம், கோட்டம், அதிமதுரம், அக்கரா கடுக்காய், சாதிக்காய், செஞ்சந்தனம், மாயாக்காய் கராம்பு கருஞ்சீரகம், பீநாறி, தூதுவளம்பூவும் பழமும், மாதுளம் பழத்தோல் அனைத்தையும் எண்ணெய் துளாவி சூரிய புடமாக 3 நாள் வைத்து உள்ளும் புகட்டி தலையிலும் வைக்க நாலுவகை வெப்பு, மூச்சு இளைப்பு அக்கரம் தொய்வு மாறும்.

(நாலுவகைவெப்பு - தோச தொந்திப்பு - வெப்பு)

பா 224, 226 குடிநீர்

கராம்பு, சீரகம் நெல்லிக்காய், திப்பிலி அக்கரா, கடுக்காய், ஏலம்

மாயாக்காய், செஞ்சந்தனம், மல்லி வ.க. 1 தூதுவளை, வட்டுவேர் இலாமிச்சு கண்டங்கத்தரி வேர்களுடன் நாயுருவி சமூலமாகப் போட்டு 1/8 ஆகக் கஷாயம் வைத்து அருந்துவதால் மேற்சொன்ன நோய்கள் குறைந்துபோகும்.

குடிநீர் (வேறு)

முத்தற்காக, கவிழ்தும்பைவேர், அறுகம்வேர், சிறுகாஞ்சோன்றிக் கொழுந்து சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் உள்ளி, வகை 1 பிடி சரக்கு வகை எல்லாவற்றையும் நீரில் இட்டு 1/8 ஆக்கி பருகுவதால் சுகம் வரும், பூச்சு மருந்து அக்கரத்தில் காணும் நாவேக்காடு அவியல், அக்கரங்களுக்கு கடுக்காயும் நிக்கொட்டான் பழமும் வெந்நீரில் அரைத்து பூசுவதால் விரைவில் ஆறும்.

(கடுக்காய் - வாய் அவியலுக்க மாயாக்காய் முலைப்பாலில் உரைத்து பூசுவர், மேற்படி பூச்சுக்கும் மாயாக்காய் சேருவது பொருத்தமாகது என வைத்தியர் விளம்புவர்.)

பா 227 நெய்

அதிமதுரம், கல்நார் ஓமம், சீரகம் திப்பலி, வட்டுவேர் சாறணை வேர், சமன் பொடித்து நெய்யில் கொதிப்பித்து அந்தி சந்தி குடித்து வர., 3 வகை அக்கரம் மாத்திரமன்றி, இறுதி அக்கரத்தில் ஏற்படும் சுரமாகிய துன்பங்களும் போகும்.

பா 228 சுரத்துக்குக் கோரோசனைக் குளிகை.

கோரோசனை, துருக, துத்தம், திரிபலை, கணிதபேதி, திப்பிலி, சாதிலிங்கம், வ.க. 1, நேர்வாளங்கொட்டை 25, முலைப்பாலில் 1 சாமம் நன்கு அரைத்து குன்றுமணியளவு உருட்டி, நிழலில் உலர்த்தி, வைத்துக் கொண்டு முலைப்பாலில் கொடுக்க பேதியாகும், பசுப்பாலில் இதற்கு மாற்றாக குறிப்பிடப்படுகின்றது,

பா 229 கழிச்சலுக்குக் குடிநீர்

பீநாறி, செஞ்சந்தனம், சீரகம், பெருஞ்சீரகம் தேற்றாங்கொட்டை, மாயாக்காய், களிப்பாக்கு, கைப்பு நெல்லி, கடுக்காய், சந்தனம், இலாமிச்சு இருவேலி, செண்பகப்பூ, ஓமம், முத்தற்காசு சமனாக எடுத்து 1/8 குடிநீர் செய்து கொடுக்க அக்கர ரோகத்தில் அதி கழிச்சல் தீரும்.

பா 230, 231 அக்கர சுரத்தில் எண்ணெய்

சிற்றாமட்டி, சீதுளாய், நன்னாரி இவை வேர் வ,க. பலம் 1 பொரித்து பாண்டத்தில் இட்டு 6 நாழி நீர்விட்டு 1 படியாக்கி நல்லெண்ணெய் 1 நாழி சேர்த்து பசுப்பால், சிறுவிளாச்சாறு வகை 1 நாழி மேலும் சரக்கு வகை முத்தற்காசு, நன்னாரி வெட்டிவேர், சுக்கு, சந்தனம், கோட்டம், இலாமிச்சு, மதுரம் வ.க 1 தூளாக்கி 3 நாள் காய்ச்சி மெழுகு பதத்தில் எடுத்து தலையில் வைத்து வருவதால் சுர வெப்பு அக்கரம் ஆகியவற்றால் வந்த தேகமெலிவு நீங்கும்.

பா 232 உள்ளுரோகக் குணம்

வயிற்றுப் பொருமலும், குளிரும் காய்ச்சலும் தோன்றும் உணவு உட்செல்லாது தேகம் உலர்ந்து விடும் கழிச்சல் மிகும் கடுப்போடு சீதம் கழியும் இது உள்ளுரோகமாக கருதுவர்.

சிகிச்சை

பா 233, 234 தூதுவளைநெய்

தூதுவளைப் பழச்சாறு. எண்ணெய் குரும்பைச்சாறு வகைக்கு 2 நாழி, நாகவல்லிசாறு மாதாளம் பழச்சாறு, பொன்னாங்காணிச் சாறு, வகைக்கு நாழி 1, தூதுவளை வேர் 6 பலம் எடுத்து அவித்த நீர் நாழி 1, பசுநெய் நாழி 1 சேர்த்து காய்ச்சி. அதில் பின்வரும் சரக்குகள் சேர்க்கப்படும்.

இருசீரகம், ஓமம், மிளகு, கராம்பு, கோட்டம், திப்பலி, மதுரம், இலவங்கம், மாயாக்காய், சிற்றரத்தை. வசம்பு, ஈருள்ளி, கடுக்காய், கைப்பு, சாதிக்காய், செவ்வள்ளி, நெல்லி, மல்லி, செஞ்சந்தனம், அதிவிடயம் வ,க. 1 பொடித்து தூவி பதத்தில் இறக்கி அருந்துவதுடன் பூசிக்கொண்டு வருவதால் உள்ளுரோகம் குணமாகும்.

பா 235 ஈருள்ளி நெய்

வெங்காய்ச்சாறு நாழி 4 இயங்கமிலைச்சாற வல்லாரைசாறு கர்பபூரவள்ளிச் சாறு, சாத்தாவரிச்சாறு வகைக்கு நாழி 2 பொன்னாங்காணி, தூதுவளை, குன்றுமணி, நாழி 1 காக்கணங் கொவ்வை, கறுத்தகாக்கணவன் கொவ்வை இவற்றின் இலைச் சாறுகளுடன் 1/4 நாழி கோவின்பிர் நெய் நாழி 2

பா 236, 237

கல்முரசு, (பெருவாகை) களப்பெண்ணெய், செங்கத்தாரி, கான்றை

சிற்றாமட்டி, பேராமட்டி கறுக்காய் (இளநீர்கயர்), நன்னாரி, இருவேலி, தூதுவளை, இலாமிச்சு, குதிரைவாலி இயங்கு கொடிமல்லிகை, இலைகள்வேர் உள்ளி, கடுக்காய், சுக்கு, வெளுத்தல் கொடிமல்லிகை, இலைகள் வேர் உள்ளி, கடுக்காய் சுக்கு வெளுத்தல் கடுகுரோகணி, செஞ்சந்தனம், பீநாறி, சிறுநாகம்பூ செவ்வள்ளி கணிதவேதி வ,க 2, கோரோசனை, குங்குமப்பூ வ,க 1 மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும் இதை உள்ளும், வெளியுமாகப் பயன்படுத்துவதால், குழந்தைகளுக்கு இருக்கக் கூடிய உள்ளுரோகமும் சீர நோவு கணைக்சூடு, மாந்தம் இவை மாறும்.

பா 238, 239 கோரோசனைக் குளிகை

கோரோசனை, கெருடபச்சை, கல்நார். மாயாக்காய், கணிதவோதி வ க 1, சாதிக்காய் அரை கழஞ்சு இவற்றை ஒன்று கூட்டி செவ்விளநீர் மட்டைச் சாற்றில் அரைத்து, பருத்தி விதையளவு உருட்டி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு பருத்திப் பிஞ்சுத் தண்ணீரில் குடிக்க உள்ரோகக் கழிச்சல் மாறும் மலக்கட்டு சுரங்களுக்கு. இளவென்னீர், அல்லது கடுக்காய் அவித்த நீர் இவற்றில் கொடுப்பதால் இருமலும் மலபந்தமும் மாறும்.

பா 240 விஷ கிரந்தியின் குணம்

தேகப் பொருமல் காணும், நெருப்புப்போல சுரம் ஏற்படும், உள்முட்டு அதிகரிக்கும். அனுக்கம் தென்படும் இரைப்பு, .இருமல் தீன் செல்லாது, தலைக்குத்து கடினமாகும். இராப்பொழுது வேதனை மிக அதிகரிக்கும்

சிகிச்சை

பா 241 குடிநீர்

வல்லாரை வள்ளி, காஞ்சோன்றி, பிரமி, இருசீரகம் ஏலம் திப்பிலி செவ்வள்ளி, வெங்காயம் மல்லி, கடுக்காய், அதிமதுரம், கஷாய முறைப்படி வைத்து அந்தி சந்தி குடித்துவர விஷகிரந்தி, வெப்பு, காய்ச்சல் விலகும்.

பா 242, 243 நெய்

கோட்டம், அதிமதுரம், நெல்லி, ஓமம் மல்லி, இருசீரகம் செஞ்சந்தனம், மாயாக்காய், இந்துப்பு, மிளகு , திப்பிலி, கடுக்காய், ஏலம், கராம்பு, சுக்கு அதிவிடயம், இலவங்கம், சாதிக்காய், செவ்வள்ளி,. செங்கத்தாரி, வட்டுவேர் தூதுவளை, இலை காய், பிரமி, வல்லாரை காஞ்சோன்றி, முசுமுசுக்கை இலை,

வேர் சரக்கு ஒன்று சேர்த்து நெய்விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் எடுக்க வேண்டும் பூசியும் உட்கொண்டும் வர விஷ கரந்தி அக்கரம், கழிச்சல் எல்லாம் தீரும்.

பா 244 ஊது ரோகக் குணம்

உடம்பு பொருமும், சுரம் காயும் ஈரத்தாக்கம் ஏற்படும், வாயும் நாக்கும் வேக்காடடையும்.

பா 245 வரட்சி ரோகக் குணம்

உடம்பு வரட்சியடைந்து காய்ச்சல் தோன்றும், வயிற்று எரிவு அதிகரிக்கும், மலச்சிக்கல் உண்டாகி முக்கல் ஏற்படும். நாக்கு பூத்து இருமல் சளி உண்டாகும்.

சிகிச்சை

பா 246, 247 வல்லாரை யேரண்டெண்ணெய்

பொன்னாங்காணிச்சாறு மணத்தக்காளி, வல்லாரைச்சாறு, கணைப்பூடு (கரும்பு), கையாந்தகரைச்சாறு, பழம் பாசிச்சாறு வகை உழக்கு 1, ஆமணக்கு எண்ணெய் உழக்கு 1 சரக்கு வகை தான்றிக்காய், கடுக்காய் உள்ளி, கராம்பு வசம்பு கோட்டம், வெந்தயம், இவற்றை எண்ணெயில் சேர்த்துப் பதமாக வடிக்கவும். இதைப் பயன்படத்துவதால் வரட்சி ஊதுரோகம், கணை வருத்தம் தீரும்.

பா 248 - 250 வில்வாதி யேரண்டெண்ணெய்

வில்வமிலைச் சாறு. துளசி, விஷ்ணுகிராந்தி பொன்னாங்காணி, நீர்வள்ளி, பிரமி, கன்னி (பிள்ளைக்கற்றாளை), வெங்காயம், மணித்தக்காளி, வெள்ளாட்டுப்பால் , ஆமணக்கு எண்ணெய் வகைக்கு 1 நாழி, இதில் சரக்கு வகை, பால் கருடபச்சை, கூகைநீறு, திரிகடுகு, திரிபலை சீரகம், அதிமதுரம், கராம்பு, கோட்டம், கோரோசனை, மாயாக்காய், ஏலம், குங்குமப் பூ வக 1 பொடியாக்கித் தூவி, 3 நாள் வெயிலில் வைத்து நான்காம் நாள் அடுப்பில் ஏற்றி மெழுகு பதத்தில் வடிக்கவும் காசளவு உட்கொண்டு பூசிவர உள்ளுரோகம், இருமல், சுரம், வரட்சி, விக்கல், சத்தி, உட்காந்தல், உழலை, தாபம், அத்திசுரம், கணை, அக்கரம் நோய்கள் மாறும்.

பா 251 நெய்

ஆலம்துளிர், தென்னம் பூ, மதுரம், மிளகு, சீரகம், பசுப்பாலில் அரைத்து தக்க அளவு நெய் எடுத்து வெதுப்பி திரள் பதத்தில் அருந்தி வர தேகம் வளர்ச்சியுற்று நோய் நீங்கும்.

பா 252 சுரசம் (சாறு)

ஏலம், மதுரம், சீரகம், கராம்பு, சாத்திரவேதி, பாற் கருடக்கல். மாயாக்காய், சிறுகீரை, கொவ்வையிலை, வெங்காயம் இவற்றின் சாறுகளில் அரைக்க வேண்டியதை அரைத்துக் கலந்து பிழிந்த எடுத்து அச் சாந்றினை 3 நாள் இரு பொழுது சாப்பிட மாறும் பிணிகள் பின்வருமாறு, சீதமலம், போக்கு, உடல் பொருமல். நாப்புண், அக்கரம், சுர அழற்சி, உழலை உள்ளுரோகம், கணையுடன் தொடர்புற்ற நோய்கள் எல்லாம் அகலும். தாயார் பத்தியமாக கைப்பு புளி அகற்றுக.

(பால் கெருடக்கல் என கருதப்படும் - இக் கற்சரக்கின் பஸ்பம் கணை ரோகங்களுக்கு உகந்ததாகக் குறிப்பிடப்படுவதுண்டு)

பா 253 கெந்ததாளிக் குணமும் சிகிச்சையும்

வாய்ச் சுணைப்பு, அரிப்பு நா, மிடறு புண்ணாகுதல், உடல் வெதுப்பு கொதி வேதனை, சளிவெளிப்பாடு வாய் மணத்தல், மலவரட்சி, இவை காணுகின்ற இந்த நோயால் கொடுக்கக் கூடிய மருந்து கீழ்வருமாறு, பழம்பாசி வெங்காயம், வல்லாரையிலை, இவற்றின் சாறுடன் ஆட்டுப்பாலும், சீரகமும், அவித்த நீரும் உட்கொள்ள கெந்ததாளி மாறும்.

பா 254 கண்டூஷம் (வாய் கொப்பளிக்கும் மருந்து)

ஏலம், மாயாக்காய், கடுக்காய், குங்குமப்பூ கோரோசனை, வெங்காயம், நற்சீரகம், சமன்கலந்து கர்ப்பூரவள்ளிச் சாற்றில் அரைத்து இவற்றை நாவில் தேய்த்தும், வாயில் குதப்பி கொப்பளிக்கவும், கெந்ததாளி வாயிற் சுணை. புண் மாறும்.

பா 255 வரட்சிக் கொதிப்பின் குணம்

உடல் வரட்சி, இரத்தம், சீதம் கழியும், அபானம் கீழ்வயிறு இவற்றின் வேதனை, மலக்கடுப்பு, தேக நடுக்கம் தலை சுழற்சி, கண் மஞ்சளடித்தல், தலைப்பாரம், உணவு வாந்திக்கும்.

பா 256 சிகிச்சை—நெய்

முத்தற்காசு, மலைதாங்கி, வட்டத்துத்தி, நிலைப்பனைக் கிழங்கு, காசுக்கட்டி நெல்லி, கருங்குங்கிலியம், சீரகம், சாதிக்காய், இலவம் பிசின், அதிமதுரம், நெய் கலந்து பதம் செய்து உட்கொண்டு வர வரட்சிக் கொதிப்பு மாறும்.

பா 257 **மூலக்கொதிப்பின் குணம்**

மூலத்தில் வேதனை கொதிப்பு, கடுப்பு, உளைவு, முக்கலுடன் மலம் கழிந்து வெப்பம் மிகுதல், வயிற்று நோய் பொருமல், வயிறு வலித்தல் பால் போல சிதல்போல கழிதல் உண்டாகி துன்பம் தரும்.

பா 258 **சிகிச்சை—நெய்**

நாயுருவி, வெங்காயம், இச்சாறுடன் நெய் கூட்டி அருந்தி வர மூலக் கொதிப்பு தீரும்.

பா 259 **வயிற்றுக் கடுப்பின் குணம்**

வயிறு, இடுப்பு, கடுத்திடும், வயிறம் உளைந்து இளகி, சீதக் கழிச்சல் ஏற்படும், மூலப்புடைப்பு ஏற்படும். உணவு அருவருக்கும் தேகம் மெலிந்து வரும்.

பா 260 **சிகிச்சை—நெய்**

பனிச்சை (ஒருவகை மரம்), துத்தி, மலை தாங்கி, வாட் புல்லாந்தி இவற்றின் வேர்வகை சுக்கு, அதிவிடயம், நற்சீரகம், ஓமம், கைப்பு குங்கிலியம் இவற்றை வ. கழஞ்சாக எடுத்து நெய்விட்டு காய்ச்சி அருந்தி வரத்தீரும்.

பா 261 **குடி மருந்து**

வட்டத்துத்தி இலையும், விளாங்காயும் இடித்து எருமை மோரில் கரைத்துக் குடிப்பதினால் வயிற்றுக் கடுப்பு மாறும்,

விளாங்காயும், பழந்தேங்காய்ப் பூவும் இடித்து பிழிந்து குடிப்பதால் கடுப்பு உளைவு தீரும்.

பா 262

இலவம் பிசின், விளாம்பிசின், வேலம் பிசின், சமன் கால் ஆக அவித்து வற்றிய பின் ஓமம், நற்சீரகம், அதிவிடயம், சேர்த்து எருமைத் தயிரில் உட்கொள்ள வயிற்றுக்கடுப்பு, உளைவு தீரும்,

பா 263

கறிவேப்பிலைச்சாறு, வாழைப்பூ, விளாங்காய், மாதுளங்காய் களிப்பாக்கு கைப்பு நாவல் புல்லாந்தி, ஆல், அத்தி, வேலம் பட்டை. சமனாக இடித்து அவித்து இத்துடன் வேர்க் கொம்பு சீரகம், ஓமம், மேலும் போட்டுக்

காய்ச்சிக் குடித்துவர, கடுப்பு இரத்தக்கழிச்சல், இவை தீரும். சீரகம் சேர்ந்த நெய்யும் நல்லது எருமைத் தயிர் மோர் ஏற்ற பத்தியமாகும்.

பா 264 வயிற்றுளைவின் குணம்

வயிறு உளைந்திடும், உடல் வெப்பம் மிகுந்து காயும், மலக்கழிவு உண்டாகும். உடல் சோரும், மூட்டுக்கள் எல்லாம் நோகும், நடுக்கம் உண்டாகும், சீதப் போக்கு அதிகரிக்கும்

பா 265 சிகிச்சை–உணவு வகை

வரகு சோற்றுடன் வெண்ணெய் சேர்த்து உண்பதும் நீர்ச் சோற்றுடன் மோர் கூட்டி அருந்தி வருதல். இரதை வாழைப்பழம் ருசிப்பதும் முசுட்டை இலைக்கறியும் மோரும் கூட்டி சாப்பிடுவது நல்லது.

பா 266 குடிநீர்

வெந்தயம், சீரகம், வெங்காயம் ஓமம், கடுக்காய், கர்க்கடகசிங்கி சமனாக எடுத்து அவித்து குடிப்பதால் வயிற்றுளைவு, கடுப்பு, சீத இரத்தம் வரட்சி கொதிப்பு மாறும்.

பிரமி, கடுக்காய் அவித்த நீரில் ஆமணக்கு எண்ணெய் பூசி குடிக்க மலக்கூட்டு அகலும், கடுப்பு தீரும்.

பா 267 வேறு

ஆத்திப்பிஞ்சு ஒருபிடி, வேலம்பிஞ்சு 1 பிடி மாம்பட்டை காசுக்கட்டி, களிப்பாக்கு வாழைப் பூச்சாற்றினால் அரைத்துச்சாப்பிட சீத இரத்தம் மாறும்.

பா 268 கணை

கணபதியினுடைய பாதத்தையும் கலைமகளின் பாதத்தையும் போற்றி துதித்து அகத்திய முனிவர் கூறிய கணை வியாதி பற்றிக் கூறுவோம்.

பா 269

சிவனை வணங்கிக் கணையைப்பற்றி கூறுமிடத்து ஒரு வயதிற்கு மேல் தோன்றக் கூடிய கணையானது பிள்ளைகளுடைய ஊனத்திற்கு காரணமாய் (நரம்புகளைப் பாதித்து இரத்த சாரத்தை கெடுக்க கூடிய) வியாதியாக அமையும்.

பா 270 தொகை

பிள்ளைகளுடைய ஓர் ஆண்டுக்கு மேலாக 12 ஆண்டுகாலம் பாதிக்கக் கூடிய கணை நோய் 18 என வகுத்துள்ளார்,

பா 271, 272 கணை பதினெட்டின் பெயர்

வாதகணை, பித்தகணை, சுரக்கணை, அத்திசுரக்கணை, வரட்கணை, வால சந்திரகணை மகேந்திரகணை, தூக்குகணை அனற்கணை, வீங்குகணை வெளுப்புகணை, சத்திகணை, இரத்தகணை, மூலக்கணை, கருங்கணை, மஞ்சட்கணை, நிலக்கணை, வெப்புக்கணை,

விளக்கம்

இப்பாடல்கள் இரண்டும் இவ் ஏட்டின் பல பிரதிகிளிலும் காணப்படினும் விரித்து கூறுமிடத்து பெயர்களும் முறைபும் இதிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. எல்லா பிரதிகளுக்கும் இவ்வேறுபாடு ஒத்ததே காரணம் விளங்கவில்லை.

மேலே காட்டிய தொகை வாரியாக இந்நூலில் கவனித்து எழுதியுள்ளோம் பல்வேறு குறி குணங்களைக் கொண்டு தொகை வகை குறிப்பிடப்படுவதால் இதன் எண்ணிக்கையும் பலவாறு அமையும்

பா 273 வாத கணையின் குணம்

தேகம் வாடும் மென்மேலும் சுரம் அதிகரிக்கும் மலசலம் சிக்கல் உண்டாகும் தொண்டையும் அபானமும் புண்ணாகி விரியும் நீர் வேட்கை உண்டாகும் தேக அழற்சி ஏற்படும். வெப்பமாகக் கழிச்சலும் உண்டு பண்ணும்

பா 274 பித்த கணையின் குணம்.

உணவு விருப்பமிராது வாய் கசப்பு தோன்றும் உடல் இரத்தம் குன்றி வெளுத்த சாயலாகத் தெரியும் வயிறு பொருமிக் காணப்படும். உணவு புரட்டிப் புரட்டி வாந்திக்கும். உடல் காய்வனவு கொண்டு வயிற்றுப் போக்கும் ஏற்படும்.

பா 275

அடி நாக்கு வெந்து வாய் புண்ணாகும் தலையில். பீடரி வெப்பம் அதிகரிக்கும் வயிறு பொருமிக் காணப்படும். வயிறு ஊதிக் கழியும் நா வரட்சி கொள்ளும் அரைக் கண்ணில் தூக்கம் காணும். கண் சிவந்திருக்கும்

பா. 276, 277 **சிகிச்சை - குடிநீர்**

முத்தற் காசு, வில்வமிலை, முதியார்கூந்தல், மாதுளை, துளசி, வல்லாரை, கொடுப்பை (பொன்னாங்காணி) சீராக 1 பிடி எடுத்துக் கொண்டு ஏலம், சீரகம், கர்க்கடகசிங்கி, செண்பகப்பூ. கோட்டம், மதுரம், இலாமிச்சு, இருவேலி வகை கழஞ்சு 2.1/8 ஆக குறுகக் காய்ச்சி கொடுப்பதால் பித்த கணை தீரும்.

பா 278 **குடிநீர் 2**

நாவற்பட்டை தூதுவளம் வேர், துளசி, வல்லரை, கதலிஇளம் பொத்தி மடல், முத்தற்காசு., ஒவ்வொரு பிடியாக எடுத்து அரைக்கால் ஆக காய்ச்சிய நீரில் சாதிக்காய் உரைத்துக் கொடுப்பதால் கணைக் கழிச்சல், மூலக் கணைக் கழிச்சல், இரத்த சீத வெளிப்பாடுகள் தணியும்.

பா 279, 280 **குடிநீர் 3**

பால் பீர்க்கங்காய், நன்னாரி வாழைப்பூ மடல் மருதம்பட்டை வெங்காயம், சீரகம், மதுரம், சாதிக்காய் இவற்றை அரைக்கால் ஆக குடிநீர் காய்ச்சி சரக்கை துளாவி கொடுத்து வர நடுக்கு கணை, உளைவு தீரும்.

பா 281, 282

அத்தி, ஆல் அரசு இவற்றின் மொட்டுக்கள், மருதம்பட்டை அத்திப்பிஞ்சு, பருத்தியின் பிஞ்சு கூட்டி நத்தைக்சூரிவேர், முத்தற்காசு பணப்புல் (தொட்டாற்சுருங்கி) இவ்றறைச்சேர்த்து வறுத்துக்கொண்டு சீரகம் கராம்பு, அதிவிடயம், சாதிக்காய், உலுவா, ஓமம் சமனாகக் கூட்டி வறுத்துப் பொட்டணி கட்டி அதைக் கஷாயத்தில் போட்டு மேலும் அரைக்கால் ஆக அவித்து அக்குடிநீரில் குடிக்கும் பொழுது இச்சரக்கு அளவிடைப் பிரமாணம் கூட்டி கொடுப்பது ஏற்ற பலனைத் தரும்,

பா 283 — 285 **மாதுளை நெய்**

மாதுளை இலை, பிஞ்சு, அத்தி, ஆல் மொட்டு தூதுவளை, துளசி வல்லாரை, பருத்திப்பிஞ்சு, பழம்பாசி, கொடுப்பை, முசுமுசுக்கை, கொவ்வை. சாற்று அவரை வகைக்கு உழக்கு 1 (சாறுவகை) சரக்கு வகை', மதுரம், சீரகம், திப்பிலி, சாதிக்காய் சாதிபத்திரி ஏலம் கல்நார் கெருடபச்சை, வ.க.1 நெய் உரி 1 மெழுகுபதம் வடித்து காசெடை அளவு கொடுத்து வர பித்தகணை உட்பட பல நோய்கள் தீரும். உடல் தெளிவுறும்.

பா 286 - 288 பொன்னங்காணி நெய்

பொன்னாங்காணி சிறுகீரை, துளசி, மாதுளை வில்லை, முசுமுசுக்கை, கொவ்வை, வல்லாரை, தாமரை சீந்தில், வெங்காயம் இவற்றின் சாறு வகைக்கு உழக்கு 1. சரக்கு வகை- இரு சீரகம், ஏலம், சந்தனம் கராம்பு சாதிக்காய், ஓமம் மாயக்காய், கோட்டம், வசுவாசி, கல்நார், மதுரம், சாத்திரவேதி, சதகுப்பை, நெல்லிப்பருப்பு வ.க. 1 பசுநெய் நாழி 1, மேற்படி சாறு சரக்கு வகையைச் சேர்ந்த மெழுகுபதம் போல்வடித்து காசினை அளவு சீனி சேர்த்து உட்கொண்டு வர பித்தகணை, வெதுப்பு ஆகிய நோய்கள் தீரும்.

(தாமரை - ஓரிதழ்த்தாமரை விசேயாகக் கருதலாம்)

பா 289 சுரக்கணையின் குணம்

தேகத்தில் சுரம் அடிக்கும் சோர்வு உண்டாகும் தேகம் பற்றும் கை. கால் முகம் கனதி ஏற்படும் குளிர்மை காட்டும். நாளுக்கு நாள் தேகம் வெதும்பும் அலறலும் பல்லை நறும்புதலும் தலையிடியும் அடைத்த இருமலும் உண்டாகும் .

பா 290

பிள்ளையின் விலா எலும்புகள் தீ போல கொதிக்கும். கை, கால்கள் திரட்சி வற்றி மெலிந்து நீளும், பலத்தையும் கெடுத்து, இரசம் இரத்த மாமிச் தானங்களையும் கெடுத்து விடும்.

பா 291 சிகிச்சை - குடிநீர்

ஆடாதோடை தூதுவளை, வில்வைவேர், இயங்கு நன்னாரி சிறு காஞ்சோன்றி முத்தற்காசு இலந்தை சிற்றாமட்டி நிலவேர் வ.க 1

பா 292, 293

திப்பிலி, செவ்வியம், திப்பிலிமூலம், சீந்தில், சிறுதேக்கு, மதுரம், இருசீரகம், கொத்தமல்லி, வேப்பம்வித்து, மிளகு, நெற்பொரி, வ.க.1 இவற்றைப் பொடித்து படிநீர் விட்டு அரைக்கால் ஆக வற்ற விட்டு, நான்கு நாள் குடித்து வர சுரக்கணை மற்றும் பல நோய்களும் மாறும்.

பா 294 வாழைப்பூ நெய்

வாழைப்பூ, கமுகம் பூ, தென்னம் பூ, தாமரைப்பூ, சாத்தாவாரிச் சாறு வில்வை, கொடுப்பை, வல்லாரை, கோவைமிலை, பழம்பாசி, வகை உழக்கு 1 நெய் நாழி 1

பா 295, 296

சாதிக்காய், சாதிபத்திரி கராம்பு, ஏலம், மாயாக்காய், வசுவாசி, சாத்திர வேதி, மதுரம், சீரகம், கல்நார், கெருடபச்சை, வகைக்கு க. 1 இவற்றைத் தூளாக்கி வெங்காயச் சாறும் உழக்கு, அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து பதத்தில் வடித்து ஒரு கரண்டி விதம் உட்கொள்ள கணை ரோகம் மாறும்

பா 297 அத்திசுரக்கணையின் குணம்

எலும்பு சுரத்தோடு வரும். இக்கணை அதிக தாகத்தை உண்டாக்கும். சுரம் அதிகரிக்கும். தேகம் மெலிவுறும் உணவு செல்லாது வாந்தி எடுக்கும் தளர்ச்சி ஏற்படும் கரகரத்த இருமல் பலவீனம் ஏற்படும். வயிற்றுக் கழிச்சலும் ஏற்படும்.

பா 298, 299 சிகிச்சை - குடிநீர்

தூதுவளை. கண்டங்கத்திரி, சிறுகாஞ்சோன்றிவேர், ஆடாதோடை கொடிமாதளை, இயங்கு குப்பைமேனி வகைபிடி 1 இஞ்சி உள்ளி, கராம்பு செவ்வியம் பூ, மாதுளை, அரத்தை, சுக்கு இவற்றை இடித்து பிட்டவியல் செய்து பிழிந்து அந்நீரைக் குடித்து வர சுரக்கணை தீரும்.

பா 300 - 302 மேனிநெய்

அணில் இரத்தம், முயல் இரத்தம் முசுற்றுமுட்டை ஆட்டுப்பால் வல்லாரை, கொடுப்பை, குப்பைமேனிச்சாறு சமன் கலந்து மதுரம் இருசீரகம் கராம்பு, வால்மிளகு, திரிகடுகு, ஏலம், அரத்தை சதகுப்பை வ.க.1, நெய் நாழி1, தேன் உழக்கு 1, விட்டு காய்ச்சிக் கொண்டு காசிடை அளவிஉட்கொண்டு வர, அத்தி சுரக்கணை மாறும் உடற்தெளிவு உண்டாகும். இருமல் ஈழையும் போகும் பல நோய்கள் மாறும்

பா 303 வரட்கணையின் குணம்

உடம்பு வரட்சி அடைந்து திரண்ட உடம்பு வற்றிக் காணும். நாக்கு வரட்சியாக காணப்படும் நாக்கு கருந்தன்மை காணும், கண் வெள்ளை விழியில் செதில் போன்ற ஒரு அடையாளம் ஏற்படுவதால் பகற்பொழுது மங்கும்.

பா 304 வால சந்திரக்கணையின் குணம்.

தேகம் வெதும்பிக் காயும் முதுகு எலும்பைச் சார்ந்த வெப்பம் தொடர்ந்திருக்கும். கண்ணில் மீன் செதில் போல் பற்றி பார்வைக்கு இடைஞ்சல் செய்யும். கடுப்புடன் சீதம் கழிந்து உடல் வாடும்.

பா 305

உடல் வற்றி வயிறு பொருமிக் காணும். மூலம் தள்ளும், முதுகெலும்பு வெப்பமுறும், புறங்கை, கால் குளிரும் இதற்குரிய நெய்யை கொடுப்பதுடன் முன்னையோர் நம்பிக்கையின் பிரகாரம் கழிப்பு கிரியைகள் செய்து வந்தனர்.

பா 306 மகேந்திரக் கணையின் குணம்

உடல் காயும். வெதுப்பம் உண்டாகும். சீதப்போக்கு ஏற்படும். தேகம் வரளும், கண்களில் வரிகள் விழும். கண்களைக் கெடுத்து விடும். இதற்குக் கழிப்பு பிரதானமாகச் செய்வார்கள்.

பா 307 இம்மூன்று கணைகட்கும் கழிப்பு

இளநீர், அப்பம், கரும்பு விளங்காய், தேங்காய், அவல்; மலர் தாம்பூலம் நம்பிக்கையுடன் பகிர்ந்து விக்னேசுவரனைப் பூசித்து வேண்டிக்கொண்டு கழிப்பு செய்யின் நோயினின்றும் மீளலாம் உள்ளுக்குள் நெய்யைக் கொடுப்பது உத்தம்.

பா 308, 309 மூன்று கணைக்கும் நெய்

மருதம்பட்டை, வில்வை, நன்னாரி, கருவேல் இலை, பட்டை, சிற்றாமட்டிவேர், பீர்க்கங்காய் வ.க பலம் 1 இவற்றை இடித்து பலம் ஒவ்வொன்றுக்கும் 2 நாழி நீர் விட்டு அரைக்கால் ஆகக் குறுக்கி, வடித்துக்கொண்டு மற்றும் சேரக் கூடிய சரக்கு வகை துளசி கீழ்நெல்லி சாத்தாவரி, கொவ்வை, கொடுப்பை, வல்லாரை, அவுரி பழம்பாசி.

பா 310, 311

பச்சை மருந்தாகிய இவற்றை படி ¼ ஆக வறுத்து கஷாயத்தில் போட்டு ஏலம், கராம்பு, வசுவாசி, மதுரம் கல்நார், கணிதவேதி, திப்பிலி, இலாமிச்சு நற்சீரகம் வ.க 1 இவற்றை ஒன்றுபடுத்தி 1 பிடி நெய்விட்டு, மெழுகு பதத்தில் வடித்து காசிடை உட்கொள்ள தீவிர கணைகள் மூன்றுடன் மற்றும் கணைச் சூடுகள் கடுப்பு உள் வரட்சி தேகம் உலர்தல் என்பன தீர்ந்து உடம்பு பெலக்கும்.

பா 312 தூங்கு கணையின் குணம்

உடல் வெதுப்பிக் காயும். அரைக்கு மேல்வெளுப்புத் தோன்றும்.

உடலை வாட்டி அழகு கெடும். குரல் அடைத்துப் போகும். தியக்கமும் தூக்கமும் அதிகரிக்கும்

பா 313, 314 சிகிச்சை - பிரமி நெய்

1 பூமிசர்க்கரைக்(கண்டசர்க்கரை)கிழங்கு, விளால் அரிசி, கடுக்காய் மஞ்சள், நிலவாகைவேர், திப்பிலி, நெல்லிவற்றல், அதிவிடயம்., வகை கழஞ்சு 2, பிரமிச் சாறு நெய் வகை படி 1 காய்ச்சி பதத்தில் வடித்து 2 கழஞ்சு வீதம் 7 நாள் உட்கொள்ள மிடறு கன்றிப் போதலும் பத்து நாட்கள் உட்கொள்ள தோன்றாத பொருளும் கண்ணுக்கு தோன்றும். ஒரு மாதம் உண்ண உடம்பு பொன் போல காணப்படும்.

பா 315, 316 சிகிச்சை - தாழை விழுது நெய்

நெய், பால், தாழங்காய் விழுது சாறு வகைக்கு நாழி 1 கொல்லன் கோவை, வல்லாரை, ஆல்விழுது, முசுமுசுக்கை, வில்வை தகரை, வல்ாரைபழம்பாசி, துளசி, கிழ்காய்நெல்லி, நெல்லி, நிலப்பனைக்கிழங்கு, கையாந்தகரை, ஓிலைத் தாமரை, கணைப்பூடு, சிறுபுள்ளடி இவை வகை உழக்கு 1, இலவங்கம், சீரகம், மதுரம், கெருடபச்சை, சந்தனம், வெங்காயம், கல்நார், மாசிக்காய், வசம்பு, கோட்டம், செண்பகப்பூ, கணிதவேதி, திரிலகிரி கச்சோலம், செண்பகப்பூ, கணித நீறு, சீனி, சாதிபத்திரி, கோரோசனை, இவற்றை வகை. க அரை இவை தூள் செய்து மேற்படி சாறு நெய்யுடன் சேர்த்து துளாவி வடித்துக் கொள்ளவும் இரண்டு காசிடை உட்கொள்ள கணை 18ம் பொருமல் மாந்தம் மசரிநோ அக்கரம் கிராணி வகை ஆகிய பால ரோகங்கள் போகும்.

(கணைப்பூடு - கரும்பு, திரிலகிரி - (வெறி பொருள் மூன்று) சாதிக்காய், வசுவாசி, கராம்பு, மசரி நோ - கிருமி ரோகம்)

பா 317 அனற் கணயைின் குணம்

இக்கணை பின்ளையின் இரத்தம் தசையான ஊன் பொருளை உறிஞ்சி விடும். நெஞ்சு படபடவென அடிக்கும். யானை போல பருத்த உடலும் வற்றிப்போகும் உணவு விரும்பாது, தாகம் அதிகமாகம் முகம் வெளுத்த விழியும் கெடும்.

பா 318 - 320 சிகிச்சை-சஞ்சிவியெண்ணெய்

வல்லாரை, பழம்பாசி, துளிச,, மணித்தக்காளி மஞ்சவண்ணா, கற்றாழை பருத்திப்பிஞ்சு கருவேல் வெண்புல்லாந்தி கற்பூரவள்ளி சிறு புள்ளடி

கையாந்தகரை, பிரமி இவற்றுடன் ஆமணக்கு எண்ணெயும் வகை சமனாக கூட்டி இவற்றின் சரக்கு வகைகளாக ஓமம், ஏலம், கோட்டம், மதுரம், இருசீரகம், சந்தனம், கடுகுரோகணி, கடுக்காய், மாயாக்காய், கராம்பு, சாதிக்காய், வசுவாசி, உள்ளி, கெருடபச்சை, கார் கோலரிசி, வெங்காயம், சேர்த்து பதத்தில் வடித்து இறக்கவும் கணைச்சுரம், இருமல் வயிற்றுழைவு இளைப்பு ஆகிய நோய்கள் அனைத்தும் தீரும்

பா 321 வீங்கு கணையின் குணம்

பாலர்களுக்கு இதனால் படம்பு வீங்கும், சலம் மலம் உடல் வெளுக்கும் ஏக்கமும் ஏற்படும் எந்நேரமும் தண்ணீர் தாகத்தினால் வருந்தும்.

பா 322 சிகிச்சை-எண்ணெய்

தென்னங் குரும்பை கையாந்தகரை பழம்பாசி கற்றாழை ஆவரை மஞ்சள்நுணா, இவற்றின் சாறு தனித்தனி உழக்கு 1 பசுநெய் உரி 1, கலந்து சரக்கு வகையாக, ஏலம் 1 கழஞ்சு இலவங்கப் பட்டை, மதுரம், கோட்டம், சீரகம் வகை 2 கழஞ்சு சேர்த்து வடித்து காசிடை உட்கொள்ள பாலர் கணை 18 ம் மாறும்

பா 323 வெளுப்புக் கணையின் குணம்

இதனால் முகம் வெளுத்து வீங்கும். கழுத்து தேய்ந்து கண் வெளுப்படைந்து புலன்கள் தளர்வுற்று மயக்கம் உண்டாகும் பழுத்த பழம் போல உடம்பு நொய்ந்து பச்சை நரம்புகள் தோன்றி வயிறு ஒட்டி உணவு செல்லாது, காய்ச்சல் காயும்.

பா 324 சிகிச்சை - நாயுருவி நெய்

நாயுருவி சிறுகீரை, பொன்னாங்காணி, இவற்றின் சாறுகளும் நெய்யும் வகைக்கு ஒரளவாகக் கூட்டி இத்துடன் மாயாக்காய், கெருடப்பச்சை, வெங்காயம் மஞ்சள், நற்சீரகம், மதுரம், கராம்பு, ஏலம், இவற்றைப் பொடித்து காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொடுக்க, கணை பதினெட்டும் தீரும். இதற்குப் பத்தியமாக அகத்தியிலை பூ வாழைப்பிஞ்சு ஏற்ற கறியாகும்.

பா 325 சத்திக் கணையின் குணம்

உடம்பு வற்றி விடும். மாலை நேரம் கண் மங்கும் எதைப் பார்த்தாலும் கண் கூசும். எலும்பைப் பற்றி சுரம் காயும். எனவே தொடர்ந்து வெப்பம் நிலை கொண்டிருக்கும். அரோசகம் ஏற்பட்டு உணவெடுக்காமல் சத்திக்கும் நெடு மூச்சும் நித்திய மயக்கமும் உண்டாகும்.

பா 326 கணையவத்தை வால சந்திரக் கணையில் அவத்தைக் குணம்

கண்களில் நீர் பாய்ந்து கொண்டிருக்கும். தண்ணீர் வேட்கை அதிகமாகும். இது தணிவில்லாமல் இருக்குமானால் அசாத்தியக் குறிகளாக கருதுவர்.

பா 327, 328 மகேந்திரக் கணையில்அவத்தைக் குணம்

வால சந்திரக்கணை. மகேந்தரக்கணை ஆகிய இரண்டும் ஒத்த சகோதரர் போல் கூடி தேகத்திற்கு துன்பம் மிகக் செய்யும் உடம்பு மிக வற்றிவிடும். வயிறுதள்ளி பெரிதாகக் காணப்படும். கண்களில் மயக்கம் ஏற்பட்டு நீர் வடியும் கடைக்கண் இரண்டிலும் செதிள் போன்ற காட்சி தென்படும் இன்னும் கரு விழிக்குக் கீழாக வெள்ளை சுக்கிரன் என்று சொல்லும்படி பிறை போன்ற ஒரு தழும்பு நிலைகொண்டு வளரும், வெள்ளை நிறமுடைய நிலை கருமை அடையுமாக இருந்தால் மரணம் என்பது நிச்சயமாக கருதப்படும்

பா 329 இரத்தக்கணையின் குணம்

கால் வீங்கும், உடல் வற்றிப் போகும். இரத்தம் கடுத்துக் கழியும் மூலம் தள்ளிக்கொள்ளும் கை கால் பழுவாகத் தெரியும். மேல் காயும் இரத்தம் நீலச் சாயல் அடையும்

பா 330 மூலக்கருப்பு வயிற்றில் வெக்கைக்கு நெய்

மாதுளம்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு குன்று மணியிலை இவற்றின் சாறுவகை, பசு நெய் வகைக்கு நாழி 1, பதத்தில் வடித்து அதற்குள் ஏலம் சாதிக்காய், சுக்கு, செந்நகரம்பழம், மதுரம், செண்பகப்பூ, கராம்பு வெளுத்தல் மாயாக்காய், கோரோசனை, பொடித்துத் தூவிக் கொள்ளவும் காசிடை அளவு உட்கொள்ளவும்.

பா 331 மூலக்கடுப்பு, வெக்கை, அக்கரம், இரத்த கணை தீரும், கடுப்பு தீர மருந்து ஆவரையின் வேர் மாதுளம் பட்டை அரைத்து எலுமிச்சம் பழம் சுட்ட தோலுடன் மோரில் வேக வைத்துக் கொடுக்க குணமுண்டாகும்

(ஆவரை - பொன்னாவரை)

பா 332 - 337 கணைபதினெட்டுக்கும்-பொதுச் சிகிச்சை

பொன்னாங்காணி, சிற்றமட்டி, நன்னாரி, சிவந்த பொன். நெருஞ்சி இவற்றின் வேர்கள், சிறு புள்ளடி, பிரமி, வல்லாரை கருவேலம் பட்டை, அகத்திப்பட்டை, இவை வகைக்கு சமன் வெங்காயச் சாறு உரி 1 ஏரண்ட

எண்ணெய் நாழி 1, இருசீரகம், உலுவா சாதிக்காய் மதுரம் வ.க 4 இவற்றை அரைத்து எண்ணெய் கலந்து சாணிப்பதத்தில் காய்ச்சி எடுத்து 3 நாட்கள் வெயிலில் வைத்து மறுபடியும் அடுபேற்றி. மெழுகு பதத்தில் வடிக்கவும் வடிக்கும் போது எள்ளெண்ணெய் முலைப்பால் வகைக்கு 1 நாழி கிளுவம் பட்டை, வசம்பு, பெருங்காயம், வெங்காயம், பீநாறி, கோட்டம் பாலாமையின் நெஞ்செலும்பு, இவற்றை. மேற்படி அவித்து மறுபடி பதத்தில் வடிக்கவும் ஒருநாள் விட்டு ஒருநாள் இந்த நாட்களை கவனித்து 8 நாட்கள் குடித்து 9-ம் நாள் நீர்வார்த்து எண்ணெயைக் கழற்றவும். ஆகவே தலைக்கு தேய்ப்பதற்கும் உடலில் பூசுவதற்கும் பயன்படுவதைக் கவனிக்கவும். பதினெட்டு கணைகள் இவற்றோடு ஒத்த கணைக்காய்ச்சல், வயிற்றுப் பொருமல், கழிச்சல், மெலிவு, வீக்கம், வெளுப்பு, நீங்கும் இவற்றுடன் அடுத்துக் சொல்லப்படும் பூசினி நெய்யையும் பயன்படுத்துவது உகந்ததாகும்.

(சிவந்த பொன் நெருஞ்சி-செந்நிற பூவுடைய செப்பு நெருஞ்சி)

பா 338 - 340 **பூசினி நெய்**

நீற்றுப் பூசினிச்சாறு, சாத்தாவாரிச் சாறு, மிளகவித்த நீர், பால், நெய், வகைக்கு நாழி 1 வில்வம் பிசின், இலவம் பிசின், விளாம் பிசின், மாம்பருப்பு, கோட்டம், ஏலம், இலவங்கம், வெட்டிவேர், இலாமிச்சு, மதுரம், செண்பகப்பூ, வங்காள பச்சை, கெருட பச்சை, சந்தனம், திப்பிலி, கராம்பு, இருசீரகம் வ.க.1 இவற்றைப் பதத்தில் வடித்து காசிடை கொடுத்து வர உட்சுரம், காய்ச்சல், இருமல், வெளுப்பு இன்னும் பல நோய்கள் தீரும். உடல் பூரித்து பொலிவு பெறும்.

பா. 341 - 343 **கணையெண்ணெய்**

வில்வையிலை, விஷ்ணு கிராந்தி துளசி, கற்றாழை, வெங்காயம் சாத்தாவாரி, பிரமி மணத்தக்காளி இவற்றின் சாறு வகை வகையாய் நாழி 1 ஏரண்ட எண்ணெய் நாழி 1 ஆட்டுப்பால் நாழி 2 பசுப்பால் நாழி 2 ஒன்று சேர்த்து இவற்றின் சரக்குகளாக கூகைநீறு, மதுரம், கோட்டம், ஓமம், ஏலம், திரிபலை, திரிகடுகு, சீரகம், ஏலம், கராம்பு, கெருடப்பச்சை, கோரோசனை மாசிக்காய், வ.க. 1 இடித்து தூளாக்கி மேற்படி சாறு எண்களுடன் கலந்து வெயிலில் 4 நாட்கள் வைத்து மறுபடி அடுப்பேற்றி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

இவ் எண்ணெய் குழந்தைகளுக்கு காசிடை அளவு பருக்கி வர தேக வளர்ச்சி , வெப்பு மிகுதி, கணை, அத்தி சுரம், இருமல், விக்கல், சத்தி, உழலை., நெஞ்சு இடிப்பு இவைகள் தணியும்.

பா 344 - 345 சஞ்சீவியாதி யேரண்டத்தைலம்

சீந்தில், குதிரை வாலி, கொடுப்பை, குருவிச்சை , ஈருள்ளி, முசுமுசுக்கை, ஓரிதழ்த் தாமரை, கையாந்தகரை, பழம்பாசி, பாலைக் கொடி, முடக் கொத்தான் சிறுபுள்ளடி, கோவை கூத்தன், குதம்பை (மூக்குத்திப் பூண்டு) இவைகளின் சாறு வகைக்கு கால் படி ஆமணக்கு எண்ணெய் படி 1 சாதிக்காய், கடுக்காய், குங்குமப்பூ, சாதிபத்திரி கராம்பு கடுகுரோகணி ஐந்து திரவியம் (ஏலம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் சாதிபத்திரி, இலவங்கம்) பேரேலம், கோரோசனை, வகைக்கு பலம் கால், இடித்து தூவி மெழுகுபதத்தில் வடித்து காசிடை உட்கொள்ள கணை, இன்னும் பலரோகங்கள் மாறும். பால் கொடுக்கும் தாய்மார் பத்தியம் இருக்க வேண்டும்.

பா 346, 347 மாதுளம் பழத்துநெய்

கணைகள் எட்டும் சன்னி, அக்கரம் பன்னிரண்டும் பித்த்திலுள்ளளதான பிணிகள் 12ம் தோஷங்கள் 7ம் மாந்தத்தின் வாதம் 6ம் போக சிறப்பான மருந்துகளாக செப்புகிறார் மாதுளம் பழச்சாறு, கற்றாழைச் சாறு தூதுவளம் பழச்சாறு வில்வைச் சாறு, துளசிச்சாறு, வேலிப்பருத்தி, ஈரவுள்ளி, நெய் வகைக்கு 1 நாழி சரக்குகள் சீராக.

பா 348 - 350

மாதாளம் பழச்சாறு, கற்றாழைச்சாறு, விஷ்ணுகிராந்திச் சாறு முசுமுசுக்கைச் சாறு, தூதுவளம் பழம் வில்வை, துளசி ஈரவுள்ளி, இவற்றின் சாறுகள் சரிகொண்டு நெய் நாழி 1 கூட்டி சரக்கு வகையாக சீரகம் சாதிக்காய், திப்பிலி, அக்கரா மதுரம், சந்தனம், ஏலம் கணிதவேதி, கெருடப்பச்சை, ஓமம், ஆவரந் துளிர், மாயாக்காய், ஈசுரனார் மூலி, (பெரு மருந்து) கோரோசனை வ.க, 1 மேற்கூறிய 14 சரக்குகளையும் நெய்யுடன் கலந்து மெழுகு பதத்தில் எடுத்து சிறுவர்களுக்கு காசிடை அளவு கொடுப்பதால் இவர்களுடைய நோய்கள் பல நீங்கும்.

பா 351 சுரம்

ஆனைமுகக் கடவுளின் பாதார விந்தத்தை துதித்து பாலர் நோய்களில் சுரபேதம் பற்றியும் குணம் பற்றியும் மருந்துகள் பற்றியும் குறுமுனி கூறியவாறு தெரிவிக்கின்றார்.

பா 352 வைத்தியர் அறிய வேண்டியன

சுரம் தோன்றக் கூடிய நாள் நட்சத்திராதிகளை அறிந்து சுரத்தினுடைய

காரணங்களையும் காய்ச்சலுக்கான தோஷக் கூறுகளையும் தொந்திப்பு நிலைகளையும் அவதானித்து, அவற்றின் குணமும் அவை விடும் குறிகளையும் உணர்ந்து இவற்றுக்கான மருந்துகளையும் செய்ய, முனிவர்கள் கூறிய கருத்துக்களைக் கவனிப்போம்.

பா 353 பாலர்களுக்கு ஏற்படும் பறவையாதி தோஷத் தன்மைகளையும் சுர நிலைகளையும் அக்கரங்கள், மாந்தம் தோஷத்தின் பலப்பாடு செங்கிரந்தி கருங்கிரந்தி போன்ற குணங்களையும் வெப்பு, கடுப்பு எல்லாம் தெளிவுபட புரிந்து கொண்டு ஏனைய சுரங்களைப் பற்றி தெரிந்து கொள்வது நன்மையாக அமையும்.

பா 354 காய்ச்சலின் போது சளிப்பற்று அதிகரித்து சுவாத சன்னிபாதம், உளை மாந்தை ஆகிய குறிகளை புத்தியால் உணர்ந்து மருந்து செய்வதை முனிவர்கள் செப்பியுள்ளனர், (சிசுக்கள் சொல்லிக் கொள்ள முடியாதிருப்பதால் மருத்துவருடைய பொறுப்பு இதனால் காட்டப்படுகின்றது)

பா 355 சலத்தினுடைய வேறுபாடுகள் நாடி தாதுவிலுள்ள ஏற்றத்தாழ்வு மலத்தினுள் அடையாளங்களும் நாக்கு, கண், இவற்றின் அடையாளங்களும் குடும்ப வழியிலுள்ள நோய்க் கூறுகளையும் சிந்தித்து மருந்து செய்ய வேண்டியது இன்றியமையாதவை ஆகும்.

பா 356 உண்ணக்கூடிய உணவு மாற்றங்கள் நாடி பேதம் சுர வேறுபாடு கோள்களின் நிலைப்பாடு, சன்னி தோஷம், விஷகலை மாற்றம் (விஷகலை-அமிர்த கலை என இரு பிரிவுகள் உள்ளன. உயிர்ப்பு - அடக்கம்) இவற்றை அறிந்து செய்வது பண்டிதர் கடமையாகும்.

பா 357 நோய்க்குரிய மருந்துகளை உணர்ந்து பொருந்தக் கூடிய மருந்துகளை நினைவு கூர்ந்தும், நோய்த் தோஷ நன்மைகளை, வெட்டும்படியான சரக்குளை தெரிந்து தக்கவாறு கூட்டியும், குறைத்தும் சிகிச்சை செய்பவரே வைத்தியராவார் ("கூட்டியும் குறைப்பதும் தெரிந்தாரானால் குணமான வைத்தியரும் அவரே ஆவர்")

பா 358 வேதனை தரும் நோயை நீக்கி சுகத்தைத்தருவது மருந்து என்பது குறிப்பிடப்படும் இதே மருந்து நோயையும் வருவிக்கலாம், அது மாத்திரமன்றி கொலையையும் செய்யும் எனவே மருந்தினுடைய திறம் தெரிந்து ஆராய்ந்து நோய்க்கு ஏற்றவண்ணம் மாறுதல் இல்லாமல் செய்வது சிறப்பான கருமமாகும்.

பா 359 வாதசுரத்தின் குணம்

வாததோஷ கதிப்பினால் ஏற்படும் சுரத்திற்கு மயிர் சிலிர்க்கும், இருமல்

குளிர், நடுக்கம் இழுப்பு பொருத்துகள், கைகால்கள் உளைவு தண்ணீர்த்தாகம், உடல் நோ தலைக்குத்து, வயிற்றுநோ, மலசலம் கடுப்பு இவைகள் சம்பவிக்கும்.

பா 360 **வாதபித்த சுரம்**

வாதபித்த தொந்திப்பினால் மந்த கரத்தில் வாய்க்கசப்பு துவர்ப்பு, கூதல், காய்ச்சலும் குளிரும் தொடர்ந்து அடிக்கும். சரீரம் நோ உண்டாகும் உடம்பு உளையும். வயிறு கழியும் உடலில் வெதுப்பு உண்டாகும்.

பா 361 **வாதசேற்பன சுரம்**

இருமல் அதிகரித்து, இளைப்பு உண்டாகும் நாக்கு உலரும் உணவு இறங்காது அருவருக்கும் வயிற்றுப் பொருமலும், உட்குளிரும் உண்டாகும் மலம், நகம் வெளுத்து காணப்படும் செருமல் எடுக்கும் அடிக்கடி கொட்டாவி ஏற்படும், சிலுசிலுத்து வெப்பம் ஏற்படும். இடையிடையே மயக்கமும் தெளிவும் ஏற்படும்.

பா 362 **பித்த சுரம்**

காய்ச்சல் மெத்த அதிகரிக்கும் பிதற்றும் நீர் சிவக்கும், நாக்கு உலரும் சத்தி ஓங்காளம் மிகும் கழிச்சல் உண்டாகும். வாய் பூத்து புண்ணாகும் தாகம் ஏற்படும் மயக்கமும் தென்படும்.

பா 363 பலவாறு பிதற்றிப் பேசும், இரண்டு கண்ணும் சிவக்கும், வயிறு கழியும். தண்ணீர் வேட்கை மிகும் தேகம் வெதும்பும், சொல் தடுமாறும். சத்தி ஏற்படும் முகம் கருஞ்சாயலாய்த் தோற்றும், சலவாசல், மிடறு புண்ணாகும்.

பா 364 **பித்த வாத சுரம்**

பித்தம் இரண்டு பங்கும், வாதம் ஒருபங்கும், அமைந்து சுரம் கண்டால் முன்னதாக காய்ச்சல் உண்டாகும் பொருமலோடு உடம்பு மஞ்சட் தன்மை காட்டும் நோவு உளைவு வாந்தி காணும், கண்மணி வெளுத்துக் காணப்படும், வயிறு மந்திக்கும், வாயு மிகும்.

பா 365 **பித்த சிலேற்பன சுரம்**

புகைச்சல், இருமல், புத்தி மாறாட்டம் இடைவிடாத சுரம், சலமலம் மஞ்சள் நிறம் காட்டுதல் நித்திரை குறைவு உழவை அதிகரிக்கும்.

பா 366 **சிலேற்பன சுரம்**

தலைப்பாரம், கபால இடி, சினம் கொள்ளுதல், முகம் வனத்து நெருப்பு போல் சுரம் காயும், தலைவலி அதிகமாகக் காணும்.

பா 367 சிலேற்பன பித்த சுரம்

காய்ச்சல், வியர்வை, நா விழுப்பு தொண்டை கட்டிக்கொள்ளும், நா கறுக்கும்.

பா 368 சிலேற்பன வாதகரம்

தலையிடி, விறைப்பு, இருமல், கரகரப்பு, உடம்பு குலைதல் இவை உண்டாகும்.

பா 369 பலசுரத்தின் குணம்

வாதபித்த சுரமாகி தொடர்ந்து சேற்ப சுரமாகி, மந்தபித்த சுரமாகி, தாக சுரமாக மாறிச் சீதளமும் குளிருமாய் முறைமைச் சுரமாகி, தினச்சுரமாகி, விடாத சுரமாகி, நாண் மாறச் சுரமாகி பல வேறுபாடுகளை செய்து கொண்டு தேகம் வெப்பமடைந்து வியர்வை உண்டாகும் புறங்காலும் முகமும் வீக்கம் காணும் உடம்புக்கு தீங்கு பல செய்யக் கூடிய இக் குணங்களை ஆயுள் மறை தெரிந்த பல பெரியோர்கள் செப்பியுள்ளனர்.

குறிப்பு - சுரம் வற்த போது கவனிக்காத தன்மையினாலும் தனித்த ஒரு தோஷக்கணிப்பால் தோன்றிய சுரமாகினும் வெவ்வேறு மாறபாட்டால் வெவ்வேறு பேதங்களாகி தினச் சுரகமாகி முறைச் சுரமாகி, 3 ம் முறை 4ம் முறைச் சுரங்களாகி, இரத்தம் கேடடைந்து வெவ்வேறு இலட்சணங்களை கொண்டு விளங்கும்.

பா 370 அன்றாடம் காய்ச்சல் கண்டு இடைநாள் விட்டு வராமல் வயற்றில் மந்தம் வைத்து சுரத்தினால் வெப்பு அதிகரித்து உழலை உண்டாகும் கால் வீக்கம், திரி தோஷத்தை ஊடகமாகக் கொண்டு ஸ்நானம் செய்வதனால் வெதுப்பங்கண்டு வயிறு மந்தித்து உணவு செல்லாமல் இருப்பதுடன் உடல் வெளுப்பு சோர்வு உண்டாகும் சுரத்தின் இவ்வித தொடர்புகளை அவதானித்த பெரியோர் பலசுரத்தின் குணமாக விளம்புவர்.

பா 371 பல சுரத்தில் அசாத்தியத்தின் குணம்

வயிறு மந்திப்பு குளிர், நீர்த்தாகம், தலையில் நோ அதிகரித்தல் நடுக்கம் குலைப்பன் காணுதல், வாதம், பித்தம் கபம் மூன்றும் ஒருங்கே கதித்துக் காணுதல், பல் நறும்புதல், புறந்தாழ் முகம், வயிறு வீக்கம் கொள்ளுதல், முட்டு, தொய்வு உண்டாதல்.

சிகிச்சை

பா 372 பல சுரத்திற் குடிநீர்

வாட்டுக்கத்தரி வேர், கற்றாழைச் சருகு, கோரைக் கிழங்கு, கொட்டைப்பாக்கு, இலாமிச்சம் வேர், கடுக்காய், மல்லி , திப்பிலி, அசமதாகம், சுக்கு வகை சமன் இவற்றை குடிநீராக்கிக் குடிக்கவும்

பா 373 - 374 குடிநீர் 2

பற்படாகம், கடுக்காய், சுக்கு, கோரைக்கிழங்கு வெட்டிவேர், இலாமிச்சு, வட்டு வேர், நிலவேம்பு மல்லி, சீந்தில்தண்டு, சிற்றாமட்டி, ஓமம் இவை சமன் குடிநீராக்கி பயன்படுத்தவும். இதற்கு தீராவிட்டால் ஏலாதிக்குளிகை மிருத்தியாதி குளிகை, சந்தனாதிக் குளிகை இவற்றை சேர்த்து அருந்த குணமாகும். (பாட்டு 137 ஐ கவனிக்கவும்) ஏனைய வற்றிற்கு சுரரோக நிதானத்தில் அவதானிக்க வேண்டியவை.

பா 375 பல சுரத்தில் வீக்கத்திற்குக் குடிநீர்

நீர்முள்ளிச் சாம்பல், நாயுருவிச் சாம்பல், புளிய மரத்தின் அடிப் பொருக்கு சுட்ட சாம்பல், ஆண் பனை பாளைச் சாம்பல், சமன் எடுத்து துடி அளவு நீர் விட்டு காய்ச்சி எடுத்த நீர் குடிக்க விக்கம், முட்டு சுரம் தணியும்.

குறிப்பு '.- இந்த சாம்பல்களை தனித்தனி நன்னீரில் கரைத்து வெயிலில் தெளிய வைத்து, உறைந்த பகுதியை எடுப்பது உத்தமம்.

பா 376 - 377 குடிநீர் 2

முள்ளி (நெல்லி முள்ளி -நெல்லிவத்தல்), கையாந்தரை, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சோன்றிவேர், பற்படாகம், கீழ்காய் நெல்லி, பிரமி, நீற்றுப்பூசனி, சுரைத் தண்டு நிலபாகல் பேய்ப் புடோல் குப்பி (பிச்சுவளாத்தி) வேர்க்கொம்பு சமன் இடித்து அவித்த குடிநிரை அந்திசந்தி அருந்தி வர, சுரவிக்கம் தாகம், ஊதல் மாறும்

பா 378 - 381 முலைப்பாலெண்ணெய்

பசுவின் பால் நாழி 1, நல்லெண்ணெய் நாழி 1, முலைப்பால் நாழி 1, இளநீர் நாழி 1, நன்னாரி. முத்தற்காசு, சீதேவியார், செங்கழுநீர், இருவேலி, இலாமிச்சு, சிற்றமட்டி, அமுக்கிராய் வேர், அரத்தை, கோட்டம் சுக்கு தேவதாரம் அகில், கச்சோலம், செவ்வள்ளி, இஞ்சி, ஏலம், மதுரம்,

சடாமாஞ்சில், சாதிக்காய், இலவங்கம், சிறுநாகம் பூ, கடுகுரோகணி, பச்சிலை, சந்தனம், சதகுப்பை வகை கழஞ்சு 2 இவற்றை சேர்த்து காய்ச்சி தேகத்தில் பூசுவதாலும் தலைக்கு வைப்பதினாலும் கோழை, காசம், இளைப்பு, இருமல், ஈழை தீரும், சல மலம் கட்டு விலகும் வீக்கம் மார்புக்குத்து இளைப்பு மாறும் அமுக்கிரா நார் வேரையும் வேர்க்கொம்பையும் வகைக்கு இரு கழஞ்சு வீதம் எடுத்து உடலில் பூசவதால் காய்ச்சல் குத்து தீரும். இதை தனித்து பூசுவதால் அலர்ச்சி, எரிவு உண்டாகும் எனவே எண்ணெயுடன் மந்தித்து தேய்ப்பது உகந்ததாக கருதப்படுகின்றது.

பா 382 - 383 பல சுரத்திலெண்ணெய்

பற்படாகம், நன்னாரி வில்வை, சீந்தில், சிறுபீழை, முத்தற்காசு, இலாமிச்சு, இருவேலி, இன்பூறல், பொன்னாங்காணி, ஒரளவாக எடுத்து எண்ணெய் 1 நாழி, துளசிச் சாறு நாழி 1 கலந்து வைத்துக் கொண்டு, திரிகடுகு, கோட்டம், இருசீரகம், திரிபலை, வசம்பு கற்கடகசிங்கி, தேவதாரம், பொன் மெழுகு , மதுரம், இலாமிச்சு, செவ்வள்ளி வகைக்கு 2 கழஞ்சு எடுத்துக் கொண்டு முதற்கூறிய சரக்கு பகுதியையும் இந்த அளவாக பெற்று எண்ணெயில் இட்டு பதத்தில் வடித்து சிரத்தில் வைத்தும் உடலில் பூசவும் சுரம், வீக்கம் குளிர் போகும்.

பா 384 - 385 சுரத்தில் வீக்கத்துக்கு மண்டூரப்பாகு

கீச்சுக் கிட்டம் (மண்டூரம்) எடுத்து வைத்துக்கொண்டு புளியமிலையை இடித்து, பிழிந்து காடி (புளிப்பு காடி) வார்த்து அவித்து மறுபடி இடித்து கிண்ணத்தில் இட்டு காய்ச்சி அந்த நீரிலே போட்டு காய்ச்சி எடுத்துரைத்த கிட்டத்தூள் (கோ சலத்திலும் சுத்தி செய்யலாம்) இரும்பு அரை பொடியும் சேர்த்து வகை, க. 3 காந்தம், மிளகு, சுக்கு உள்ளி கடுகு, கடுக்காய் உலுவா திப்பிலி, ஓமம், இவையும் வக 3 உள்ளி 1 பலம், ஏற்றளவு நெய்விட்டு இதன் தூளைச் சேர்த்து குழம்பாக காய்ச்சு. இதை அருந்துவதால் இருமல் பலவீனம், களைப்பு, சுர வீக்கம் போகும்.

பா 386 வாத கரப்பன் சுரத்தின் குணம்

காய்ச்சல், வீக்கம், உடல் வெதும்புதல், நடுக்கம் கூதல், தாகம், இருமல், உள்ளெரிவு, முகம் வயிறு அதைத்தல் உணவு விரும்பாமை., களைப்புத் தொடுதல், பொருத்து கால், கை பிடிப்பு வேதனையோடு வீக்கம்.

பா 387 - 388 சிகிச்சை

முலைப்பாலெண்ணெய்

முலைப்பால் நாழி 1, பசும்பால் நாழி 1, இளநீர் நல்லெண்ணெய் வகை நாழி 1, இலாமிச்சு, இருவேலி, கோரைக்கிழங்கு, நன்னாரி, சீதேவியார், அமுக்கிராய், நாகம்பூ இருசீர், கோட்டம், ஏலம் கொத்தமல்லி, சடாமாஞ்சில், மதுரம், சதகுப்பை, செவ்வள்ளி, சந்தனம், வகைக்குச் சமன் இடித்துக் கலந்து பதத்தில் இறக்கி பூசிவர காய்ச்சல், வீக்கம் குத்து தொய்வு உடல் எரிவு உட்காய்ச்சல் விலகும்.

பா 389 - 390 **பல விலைக் குழம்பு**

பிரமி, பொன்னாங்காணி , கொடிப்பாலை, கையாந்தகரை, நாயுருவி, குப்பைமேனி, வீழி , ஈச்சங்குருத்து, நீர்முள்ளி வித்து, வேர்கொம்பு, உலுவா, உள்ளி, கடுக்காய் கடுகு, காந்தம், சாதிலிங்கம், மதுரம், கோட்டம், சீனக்காரம் கருஞ்சீர், திப்பிலி, இந்துப்பு அரை பொடி , வசுவாசி, கராம்பு சாதிக்காய், சவர்க்காரம், பொரிகாரம், நவச்சாரம், கிட்டம் இவை சமனிடை, கடுக்காய் அறுபது எலுமிச்சம் புளி சேர்த்து குழம்பாகக்காய்ச்சி, உப்பைத் தவிர்த்து, அந்தி சந்தி அருந்தி வர சுரம், வீக்கம் முட்டு, தொய்வு மாறும் முருங்கையிலை, உள்ளி, பத்தியத்திற்கு சேர்க்க உத்தமம்.

பா 391 - 392 **குடிநீர்**

பிரமி, சுரை, நிலபாவல், நாயுருவி , கையாந்தகரை, முருங்கை, வீழி வல்லாரை, வவ்விலொட்டி, உள்ளி சுக்கு மிளகு, உருக்கு, அரைபொடி, கிட்டம் கடுக்காய், கடகுரோகணி, திப்பிலி, சீரகம், சீனக்காரம் நவச்சாரம் ஒமம், உலுவா வகை சமன் இவற்றின் குடிநீர் குடித்து வர, சுரங்கள் வீக்கம் மூட்டுத் தொய்வு, மார்பு படபடப்பு கைகால் நடுக்கம், பிடிப்புத் தீரும்.

பா 393 **ஆமசுரத்தின் குணம்**

உடம்பு உளைதல், தீன் மறக்கும் உறக்கம் அதிகம் உண்டாகும் உடல் நோவும். உடல் வெதுப்பி, நடுக்கம் ஏற்பட்டு கால் கை தளர்ந்திடும்.

சிகிச்சை

பா 394 **குடிநீர்**

கொன்றைப் பட்டை, சிவதை. கடுக்காய், களிப்பாக்கு, கற்றாழைச் சருகு, 4 நாழி நீர் கால் ஆக வற்ற வைத்து மேற்படி திப்பிலி பொடி போட்டுக் குடிப்பது.

பா 395 - 396 குடிநீர் 2

கண்டங்கத்திரி, வட்டுவேர், சிறு காஞ்சோன்றி, பேராமட்டி, சிற்றாமட்டி , மல்லி , கருவேம்புத் தண்டு, வேர்க்கொம்பு, வ.க 1, நாழி 2 நீர் விட்டு அரைக்கால் ஆக்கி குடிக்கின்ற போது திப்பலி பொடி தூவவும்.

பா 397 மந்த சுரத்தின் குணம்

வயிறு வெதுப்பிக் காயும் வயிறு புகைந்திடும் வலிப்பண்டாகும் உழலை தாகம் அதிகரிக்கும், வயிறு கழியும். தலைவலி, கூதல், இடையிடையே காய்ச்சல் தென்படும். சலம் சிவக்கும். மயக்கம் ஏற்படும்.

பா 398 சிகிச்சை - குடிநீர்

உள்ளி, வசம்பு சுக்கு கருஞ்சீர், கொத்தமல்லி, மிளகு, கடுக்காய் இவற்றுடன் அரிசி சேர்த்து வறுத்து கருக்கி அரைக்கால் ஆக அவித்து குடிக்க மேற்படி நோய் தணிவடையும்.

பா 399 குடிநீர் 2

கடுக்காய் 3 கழஞ்சு, மிளகு 1 கழஞ்சு, பிரமி 1பிடி அவித்த நீர் நாள் இரு தடவை உட்கொள்ள மந்தசுரம் கலையும்.

பா 400 +401 நாலாம் நாள் மாறலுக்கு குடிநீர்

நிலவேம்பு, பற்படாகம், சீந்தில், மலையின் வேலி (இருவேலி) வட்டத்துத்தி, கண்டங்கத்தரி, பேய்ப்புடோல், வெட்பாலை, இலாமிச்சு, கோட்டம், வேப்பலகு, திப்பலி , திப்பலி மூலம், சுக்கு, . மரமஞ்சள், கடுகுரோகணி, அதிவிடயம் வ. க 1 இவற்றை அவித்து உட்கொள்ள மாறல் சுரங்கள், நாலாம் நாள் மாறற் சுரம் தீரும்.

பா 402 குடிநீர் 2

ஆடாதோடை இலை 1 பிடி சுக்கு கழஞ்சு 4 மல்லி திப்பிலி, சேர்த்து, காய்ச்சி அந்தி சந்தி குடிக்க, தலைவலி காய்ச்சல் நாலாம் மாறற் சுரம் அகலும்.

பா 403 + 404 மகாவற்சனாதிக் குடிநீர்

பற்படாகம் , அதிவிடயம், நிலவேம்பு கோட்டம், இருவேலி,

வேப்பலகு, வெட்பாலை, கடுகுரோகணி, இலாமிச்சு. சிறுமூலம் (திப்பலி மூலம்) பேய்ப்புடோல், துத்தி, சீனக்காரம் மஞ்சள், சீந்தில் தேவதாரு மிளகு, மாமேதை, இடவகம், சிவகம் (பதில் சாத்தாவாரி பதில் நிலப்பூசணி) திப்பலி, இந்துப்பு சுக்கு, சிறுவீடு தயிர்வேளை., கொள்ளு மேதை, வகை க. 1 நீர்விட்டு அவித்து அருந்திவர எல்லா வகையான சுரமும் நீங்கும்

பா 405 - 407 சுரந்தெறுகுலிசம்

வற்சனாபி (நாபிக்கிழங்கு), கல்மதம், சூதம், நெல்லிக்கெந்தகம், மனோசிலை, பொன்னரிதாரம், ஒன்றிரு கழஞ்சாக வகைக்கு எடுத்து கோசலத்தில் ஊறப்போட்டு நஞ்சுத்தன்மை அகற்றி மிளகு, சுக்கு, வ.க, 1 நேர்வாளம் கழஞ்சு 2, பாகல் இலைச்சாற்றில் அரைத்து, குன்றுமணியளவு உருட்டி வைத்துக்கொண்டு வேர்க்கொம்பு நீரில் கொடுப்பதால் பேதியாகும். இத்தகைய மாறற் சுரங்கள் பறந்து போகும்.

பா 408 - 410 வெருகெண்ணெய்

வெருகம் கிழக்கு பலம் 12, சிற்றாமட்டி வேர் 12 பலம், இடித்து 3 நாட்கள் அவித்து பிழிந்து வடித்த நீர் நாழி 4 எள்ளெண்ணெய் 2 நாழி, மதுரம், சிறுதேக்கு கடுகுரோகணி, இலந்தை மெழுகு, சிறுகுரும்பை, வ. க.1, செங்கழுனீர்க்கிழங்கு, நன்னாரி, சீதேவி, நற்சந்தனம் இலாமிச்சு, இருவேலி, அமுக்கிராய் கோரைக்கிழங்கு வகைக்கு 1 பலம் இவற்றை அரைத்துப்போட்டு மறுநாள் மெழுகு பதத்தில் வடித்து தலையில் காசிடை அளவாக பொருத்தி வருவதுடன் வேர்க்கொம்பு நீர் 3 நாள் குடிக்கவும்.

பா 411 இவ்வாறு சிரசில் வைத்தும் பூசியும் வரவும். நாலாம் மாறற்சுரங்கள் நான்கு முழுக்கில் மாறும்.

பா 412 - 415 பெரியவெருகெண்ணெய்

வெருகங்கிழங்கு 100 பலம் வளா எடுத்து, 100 பலம் வெட்டி காணி விட்டு இடித்து அவித்து அத்துடன் பேராமாட்டி, சாரணை வேர், குறிஞ்சா இலை, சிறு காஞ்சோன்றிவேர், வில்வவேர், அமுக்கிராய்வேர்., வகைக்கு ஒரு பலம், சீவி இடித்து அதனுடன் சேர்த்து ஊறி அரைக்கால் ஆக அவித்த கஷாயத்தை 6 கொத்து அளந்து எள் எண்ணெய் 3 நாழி விட்டு காய்ச்சிய பின் பெருமல்லி, சீரகம், விளால் அரிசி அதிவிடயம், சிறுதிப்பலி, பெரும் திப்பலி, மேதை (பொற்றலைக் கையாந்தகரை) கடுகு, வெட்பாலை, சிற்றாமட்டி போரமட்டி, தேவதாரு, அரத்தை பெரும் குரும்பை, திரிகடுகு, திரிபலை

சிறுதேக்கு, உள்ளி, இளவகம், சிவகம், சதகுப்பை கச்சோலம், மஞ்சள், பச்சிலை வகை க 3 போட்டு பதத்தில் காய்ச்சி சிரசிலும் பொருத்தி உடம்புக்கு பூசிவர விவு சுரம் மாறற் சுரம் அனைத்தும் நீங்கும்.

பா 416 கட்டு மருந்தும் செவியிற் பிழியவும்

தமிர் வளையையும் உள்ளியையும் நன்கு அரைத்து நாடி பார்க்கும் நரம்பில் கட்டுவதால் நாலு நாள் மாறற் சுரம் நீங்கும். மிளகு, உள்ளி, தமிர்வளை, பிழிந்து காதில் விட சுரம் போகும்.

பா 417 விடா சுரத்தின் குணம்

காய்ச்சல் காணும். தலைக்குத்து ஏற்படும் சரீரம் மிக நோகும் சற்று காய்ச்சல் தணிந்து தணிந்து வரும், வரட்சி ஏற்படும் உள் எலும்பு அனலாக கொதிக்கும் இது விடா சுரமாகக் குறிப்பிடுவர்.

பா 418 - 419 சிகிச்சை - குடிநீர்

வட்டுக்கத்தரி, பேராமட்டி, வேர்க்கொம்பு, அவித்து குடிப்பதால் மேற்காட்டிய சுரம் தீரும். ஆடாதோடை, திப்பலி சுக்கு அவித்து குடிக்க மாறும் கடுக்காய் சுக்கு பேய்புடோல், அவித்து குடிக்க உட் சுரங்கள் தணியும் வேர்க்கொம்பு அவித்துக் குடிக்க பலன் தரும்.

பா 420 - 421 அத்தி சுரத்தின் குணம்

அனல் போல உடல் காயும் கண் சிவக்கும் புத்தி தளரும், நெஞ்சு உளைந்து கொள்ளும், சலம் சிவக்கும். மயக்கம் போடும், உறக்கம் வராது, உடம்பு வற்றும் வயிறு இழியும் இத அசாத்தியமாகும்.

உடல் நடுங்கும் உழலை உண்டாகும் அடங்காத தாகம் ஏற்படும். சுரம் அதிகரிக்கும்

பா 422 சிகிச்சை - குடிநீர்

அதிமதுரம், பற்படாகம், இலாமிச்சு முத்தற்காசு வேர்க்கொம்பு இருவேலி கோட்டம் அசமோதகம் பங்கம் பாளை (ஆடுதின்னாப் பாளை) இக்குடிநீரில் சர்க்கரை இட்டு அருந்த அத்தி சுரம் மாறும்.

பா 423 உட் சுரத்தின் குணம்

உள் வெதுப்பம் உண்டாகும் அனுக்கம் உண்டாகும் தலை கனத்து

நோகும் உறக்கம் வராது வயிறு பொருமும். கூதல் மிகும் நடுக்கம் திமிர்ப்பு காணும் வயிற்றுப் பகுதி நோவு அதிகரிக்கும்.

சிகிச்சை

பா 424 **குடிநீர்**

உள்ளி. சுக்கு, வசம்பு கடுக்காய் அவித்து குடித்து வருவதால் உட் சுரம் குணமாகும், வேர்க்கொம்பும் வசம்பும் குடிப்பதனாலும் பலன் ஏற்படும்.

பா.425 - 426 கடுக்காய் வேர்க்கொம்பு, பற்படாகம், சீந்தில், சிற்றாமட்டி, விஷ்ணு கிராந்தி நன்னாரி வசம்பு, சுட்ட கரி அரைக்கால் ஆக்கி குடிக்க உடசுரம் போகும் சுரம் நீங்கா விட்டால் ஏலாதி மாத்திரை, சந்தனாதி மாத்திரை மிருத்தியாதி மாத்திரை இதில் எதையாவது குறிப்பிட்ட குடிநீரில் பருகுவதால் நற்பயன் உண்டாகும்.

பா 427 கிரந்தி வெப்புச் சுரத்தின் குணம்.

வெப்பம் மிகுந்து காயும் தலையிடி அதிகரிக்கும் தளல் போல் மேனி எரியும், வாந்தி ஏற்படும் இரவுப் பொழுது இருமல் பெலப்படும் களைப்பு உண்டாகும். இரைப்பு இழுவை ஏற்படும்.

சிகிச்சை

பா 428 **குடிநீர்**

வட்டு வேர் , தூதுவளை, நன்னாரி, கண்டங்கத்தரி, இருசீர் , கோட்டம் ஓமம், மிளகு, இக் குடிநீரை பருகுவதால் கிரந்தி வெப்பு தணிவடையும்.

பா 429 நீர்த் தோஷ சுரத்தின் குணம்

காய்ச்சல், இருமல், கூதல், சிரசுநோ நீர்த்தாகம் காணுவதுடன் பிடரி வலிக்கும், தீன் வெறுத்து நரம்புகள் நோவாகி உளைவும் குத்தும் உண்டாகும் முழுகுவதால் ஏற்படுகின்ற நீர்ப்பாட்டு தோஷம் இதற்கு காரணமாக அமையும்.

பா 430 **சிகிச்சை**

அரிசி கட்டிய தலையணையை வைத்துச் சயனம் செய்வதால் மாறும் மிளகு, நொச்சு துளிர் வறுத்தவித்து பருகுவதும் மிளகு கணித பேதி, சுக்கு இதன் கஷாயமும் மேற்படி நோயை போக்கும்.

பா 431 அவ சுரத்தின் குணம்

தன் உணர்வு குறைந்து அத்துடன் மயக்கம் தென்படும். வியர்வை, கழிச்சல், சோகித்தல், சுரம் உண்டாகும். தலைக்கனதி அதிகமாகி மொய்ப்பு காணும். பேச்சு மூச்சும் குறையும்.

பா 432 சிகிச்சை

தலைக்குத் தைலம் பொருத்தி (முக்கூட்டு எண்ணெய், சன்னி தைலங்கள், வசம்பு தைலங்கள் ஏதாவது) நரம்பு சம்பந்தமான வாத கப, தோஷங்களை கண்டிக்கத்தக்கதான வேர்க் கொம்பு, அரிசி, போன்றவற்றை வறுத்து தேய்த்து, ஏற்றதான குடிநீர் குடிப்பதனால் இது தீரும் என்பர்.

பா 433 சன்னி சுரத்தின் குணம்

அடிக்கடி சுரம் ஏற்படும், நெஞ்சு காயும் தாங்கமுடியாதபடி அடிக்கடி குளிர் உண்டாகும். வெதுப்பமும் தென்படும், தோஷக் கதிப்பை பொறுத்த வரையில் பித்த பங்கிலிருந்து அரைக்கால் வாதம் சேரும், சரீர ஆளுகையான வாதம் மிகக் குன்றிவிடுகின்றது. எனவே துயரம் செய்யலாம், நடுக்கமுறும் பேச்சுக்கள் மாறும் சுரமும் தன்னிலையில் மாறுபட்டுக் காட்டும் இதை சன்னி தோன்றும் குணமாக வகுத்தனர்.

பா 434 சிகிச்சை

இதற்கு ஏற்கனவே கூறியவாறு முக்கூட்டு எள்ணெய் , சன்னி எண்ணெய் பொருத்திக் கொள்ளவும் மல்லி, சுக்கு, உள்ளி, சீரகம், திப்பிலி, கால் ஆக அவித்த நீர் சற்று சற்றே குடித்து வருவதால் நன்மை தரலாம் மேற் கொண்டு எள்ளளவு கதித்து வந்தாலும் தீராது அசாத்தியமானதாகும்.

பா 435 பிரமேக சுரத்தின் குணம்

தேகம் கனல் போல எரிந்து காயும் கை கால்களில் அதிக பிடிப்பு உண்டாகும் சலம் கடுப்போடு மோர் போல சிதல் போன்று போகும் ஓங்காளம், சன்னி போல சோர்வு நடுக்கம் அதிகரிக்கும் நாள் பட இது வருந்தக் கூடிய சுரமாகும்.

பா 436 சிகிச்சை-குடிநீர்

குறிஞ்சா இலை, மிளகு, கழஞ்சு விதம் எடுத்து பதக்கு நீர் விட்டு அவித்த குடிநீர் பருக சுரம் நீங்கும் மேலும் சுரம் விடாது விட்டால் சுக்கு,

பற்படாகம், இலாமிச்சு அவித்துக் குடிப்பதால் பிரமேக வெப்பு அகன்ற சுரம் மாறும்.

பா 437 சல்லக்கடுப்புக் சுரத்தின் குணம்

சடலத்தில் குத்தி உழைவு அதிகரிக்கும் காய்ச்சல் நாரிப்பிடிப்பு, நெஞ்சு நோ , இருமல் , உணவு வெறுப்பு நடுக்கம் கூதல் உண்டாகும். மனம் பேதலிக்கும். நித்திரையில் வாய் புலம்பும், இதை சல்லக் கடுப்பு என்றும் பகர்வர்.

பா 438 சிகிச்சை

நொச்சி துளிரும் மிளகும் அரைத்தும் சொற்பமாக எடுக்க மாறும். மிளகுக் கஞ்சியும் ஏற்றது. அதிகரித்தால் சிறுகுறிஞ்சா கஞ்சி காய்ச்சி அருந்த போகும் அல்லது உள்ளி சுட்டு சாப்பிடலாம்

பா 439 தடிமன் சுரத்தின் குணம்

சரீரக் கடுப்பு, தலை நோதல் மூக்கு நீர் ஒட்டம் காய்ச்சல், மிடறு, நாக்கு அலர்ச்சி, தேக நோ எரிவு, வெப்ப சுரம் தலை முகம் அதைப்பு சாப்பாடு சுவையின்மை, கண் அழன்று நீர் வடியும் நடுக்கம் கூதலும் ஏற்படும்.

பா 440 சிகிச்சை

மிளகை பொடித்து, பால் கலையத்துாள் துாவி வேது பிடிக்கலாம். கஞ்சியின் வேதும் ஏற்றது கொவ்வை, முருங்கையிலை கஞ்சியும் ஏற்றதாகும். கருஞ்சீரகத்தை துணியில் முடித்து மூக்கினுள் நுகருவது நல்லது.

பா 441 கோழைச் சுரத்தின் குணம்

தலை, நெஞ்ச, மார்பு, இவற்றில் குத்துண்டாகி தியக்கம் உண்டாகும் குளிர்ந்து காயும் சாய் பொழுதில் இருமல் தொய்வு உண்டாகும் கோழை வெளிப்படும்.

பா 442 - 443 சிகிச்சை

சிற்றாமட்டி, துாதுவளை, கண்டங்கத்தரி, சிறுகுறிஞ்சா, ஆடா தோடை, நிலக்குமிழ் வேர், மிளகு, திப்பிலி, கடுக்காய், சீரகம் இவற்றின் குடிநிர் கோழைச் சுரம் , தணிக்க உதவும் சிற்றாமட்டி கஞ்சியும் உசிதமாகும் துாதுவளை பாகை நெய்யும் ஏற்றதாகும்.

பா 444

முக்கூட்டு எண்ணெய் பொருத்தி, துாதுவளை நெய்யும் சாப்பிட சுரம்

தீரும், முலைப்பாலெண்ணெய் பூசிக் கொள்ளலாம். சீரக நெய்யும் நல்லது. முக்கூட்டு எண்ணெய் பொருத்தி, தூதுவளை நெய்யும் சாப்பிட சுரம் தீரும், முலைப்பாலெண்ணெய் பூசிக் கொள்ளலாம். சீரக நெய்யும் நல்லது.

பா 445 அக்கர சுரத்தின் குணம்

இருமல், காய்ச்சல், வயிற்று நோ, கூதல், இவை காணும், கஞ்சி, தண்ணீர் குடிக்க முடியாத அளவிற்கு துன்பம் தரும். மயக்கம் சோர்வு உண்டாகும் தொய்வுத் தன்மை உண்டாகி பிதற்றிப் பேசும், வாய் போன்ற வற்றில் அவியல் காணும்.

பா 446 சிகிச்சை - குடிநீர்

கற்பூரவள்ளி, சிறுகாஞ்சோன்றி, பிரமி, வல்லாரை மதுரம் மிளகு திப்பிலி, கடுக்காய்,. ஓமம், கருஞ்சீர், ஈரவுள்ளி, குடிநீர் செய்து குடித்து வர அக்கரம் இருமல், சுரம், புண்பாடு, விஷகிரந்தி மாறும்.

பா 447 - 449 பறவைச் சுரத்தின் குணம்

தலைக்குத்து, இருமல் வியர்வை, உணவு விரும்பாமை தென்படும், ஓங்காளம், மயக்கம், சோர்வு, கனவுத் தன்மைகள் உண்டாகும். காய்ச்சல் காயும் தேகத்தில் பருக்கல் வீசுவதுடன் நா வறட்சி அறிவுக் கேடு, மயக்கம் திமிர்ப்பு கழிச்சல் இவை காணும். இது அதிகரித்து தோஷம் பலமானால் முக்கூட்டு எண்ணெய் , சுரசன்னி எண்ணெய் பொருத்துவது நல்லது. பெதுவாக வெப்பம் தணிக்கக் கூடிய குடிநீர்கள் ஏற்றதாக அமையும் படுக்கையில் வைத்து பராமரிக்க வேண்டியது அவசியம். சத்து மிக்க தேன் துளிகள் அடிக்கடி உள்ளே கொடுத்து வரலாம் இச் சுரத்தை சின்ன முத்தோடு ஒப்பிட்டுக் கருதுவர். இந்த வியாதி மறுதலிக்காமல் பாதுகாப்பது அவசியம் என அனுபவ வைத்தியர் செப்புவர். (சிகிச்சை குறிப்பும் உள்ளடங்கி உள்ளது).

பா 450 முத்தோஷ சுரத்தின் குணம்

தலைப்பாரம், வெப்ப சுரம், குலைப்பன், கூதல், திமிர்ப்பு, நடுக்கம், மந்திப்பு, தாகம் இவை உண்டாகும்.

பா 451 இருமல், தொய்வு அதிக எரிவு, கழிச்சல், இதில் முத்தோஷமும் சம்பந்தப்பட்டு இக் குணங்களையும் சுரத்தையும் உண்டாக்கும்.

பா 452 சிகிச்சை-குடிநீர்

ஆடா தோடை பேராமட்டி, கண்டங்கத்தரி, பேய்ப்புடோல், வட்டுவேர், பற்படாகம், அரத்தை திப்பிலி, சுக்கு மல்லி வ.க. 2, அவித்துக் குடிப்பதால் சுரம் தணியும்.

பா 453

சுக்கு, பற்படாகம், கடுக்காய், மிளகு, உள்ளி திப்பலி, கோட்டம் மல்லி, பேராமட்டி, சீரகம், அரத்தை, இருகழஞ்சாக எடுத்து அவித்த குடிநீரை குடித்து வரலம்.

பா 454

சுக்கு, மல்லி, திப்பலி இவற்றை இரு கழஞ்சு வீதம் எடுத்து கால் ஆக்கி, கொடுப்பதால் மேற்படி வியாதி தணியும்.

பா 455 விட சுரத்தின் குணம்

கை, கால், அயர்வு நா வரட்சி அடிக்கடி தணிந்து தணிந்து சுரம் காயும் பயந்த தன்மையாக தாயைப் பற்றிக் கொண்டு உழலும், பலவாறு பிதற்றும் பொருத்துக்கள் நோவும். தலை நோவும் ஏற்படும்.

சிகிச்சை

பா 456 குடிநீர்

சுக்கு, வேப்பம்பட்டை, நிலவேம்பு, சீந்தில், கடுக்காய் பற்படாகம், பேய்ப்புடோல், மல்லி, ஆடா தோடை இரு கழஞ்சு, நாழி நீர் விட்டு உழக்காக வற்ற வைத்துக் கொடுக்கவும்.

பா 457

சுக்கு, சந்தனம், மல்லி, வெட்பாலை, சீந்தில், ஆடாதோடை பற்படாகம், இலாமிச்சு, இருவேலி, முத்தற்காசு அவித்த குடிநீரில் வெள்ளைச் சர்ககரை சேர்த்துக்கொடுக்கவும்.

பா 458 - 459

மதுரம், சிறுகாஞ்சோன்றி, வெட்பாலை முத்தற்காசு, பற்படாகம், திரிபலை, நிலவேம்பு, கண்டங்கத்தரி வெண்கோட்டம், தர்ப்பைப்புல் கொன்றைப்பழம், கடுகுரோகணி, சேவகன் (சிற்றாமட்டி) சமனாகக் கொண்டு நீர்விட்டு கால் ஆக வற்றவைத்துக் குடிப்பதால் சுரம் போகும் இல்லாவிடில் குடிநீரில் குறிப்பிட்டவாறு மாத்திரைகள் செய்து கொடுக்கலாம்.

சுரங்களின்பொதுச் சிகிச்சை

பா 460 - 461 இச்சாபேதிக் குளிகை

நச்சனங்காரம் (வெண்காரம்) சூதம் இந்துப்பு நாவி, வாளம், திரிபலை, கெந்தகம், சமன் கூட்டி தலைக்கறி (பொடுதலை) சாற்றில் அரைத்து குன்றி அளவாக உருட்டவும். வியாதி, தேகத்திற்கு ஏற்றவாறு இஞ்சிச்சாற்றில் உட்கொள்ள மலம் கழிவதுடன் வாதசூலை குன்மம் குடக்கரிவாயு தீரும்.

பா 462 முச்சுரக் குளிகை

கெந்தகம், திப்பிலி, வெண்காரம், இரதம், அரிதாரம், நேர்வாளம், வ,க.2, பாகற் சாறால் அரைத்து குன்றி போல் உருன்டை செய்து உண்ணவும் இது சுரவகைகளைத் தீர்க்கும் வலக்கண்ணை இழுக்கும் வெந்நீருடனும் கொடுக்கலாம்,

பா 463 சுரத்தில் இருமலுக்கு ஏனாதி

நன்னாரி, துாதுவளை, வட்டு மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு சீரகம், கற்கண்டு, வறுத்து இடித்து துாள் செய்து நெய்விட்டுக் காய்ச்சி, இஞ்சிச் சாறும் விட்டும் வெதுப்பி அருந்த இருமல் போகும்.

பா 464 - 465 சன்னி பாத சுரம் குளிகை

வெண்காரம் இந்துப்பு, திரிகடுகு, கெந்தகம், ஏலம், வ,க 1 வாளம் கழஞ்சு 2 கடுகுரோகணி கழஞ்சு 4 முலைப்பால் அரைத்து உழுந்து போல உருட்டி தக்கபடி இஞ்சிச்சாற்றில் கொடுக்க நோய்கள் தணிவடையும் பத்தியமும் தெளிவும் ஏற்றபடி கொடுத்து வரவும்.

பா 466 - 467 சுரகுலிசம்

புளிமதம் (புளி நடலை, புளிமதுரை) கழஞ்சு 1, பூசணிப்பூ இரதம், முசுட்டு முட்டை இவையும் வ,க 1 மிருசம் (மிளகு) கால் கழஞ்சு, இவற்றை வெற்றிலைச் சாற்றால் அரைத்து உழுந்தளவு உருட்டி முலைப்பாலில் கொடுக்க சன்னி சுரம், சம்பந்தமான சுரங்கள் தீரும்.

குறிப்பு '. வெற்றிலையில் முற்றாக மாளாது, கெந்தி சேர்த்தாலன்றி இரசம் மாளாது என்பது கவனிக்கத்தக்கது.

பா 468 - 469 பலசுரக் குடிநீர்

திப்பிலி, மல்லி, சிரகம் சுக்கு, அவித்த நீராயினும் மல்லி, சுக்கு அவித்த நீராயினும் உட்கொள்ள, சரம் அகலும். மல்லி, இருமட்டி காஞ்சோன்றி, சுக்கு, சீந்தில், வட்டு பேய்ப்புடோல், பற்படாகம், ஓமம், கண்டங்கத்தரி, முத்தற்காக, நிலவேம்பு, ஆடாதோடை, குடிநீர் செய்து உட்கொள்ள வாத, பித்த சேத்தும, மற்றும் பல சுரங்கள் மாறும்.

பா 470 பித்த சுரத்திற்குக் குடிநீர்

வட்டு, சீந்தில், பற்படாகம், வில்வம், சிற்றமட்டி , சிறு காஞ்சோன்றி, சுக்கு, கோட்டம், சிறுதேக்கு, சிறுதிப்பிலி , கோரை கழஞ்சு, வீதம் எடுத்து அவித்துக் குடிக்க பித்த சுரங்கள் தணிவடையும்.

பா 471

கொத்தமல்லி, சிறு தேக்கு, பற்படாகம், கோட்டம், திப்பலி, மதுரம்,

சுக்கு, சீந்தில் நிலவேம்பு வட்டு கண்டங் கத்தரி, சிற்றமட்டி கழஞ்சு படி நீர்விட்டு அவித்துக் குடிப்பதால் பித்த சுரம், பழ வெதுப்புச் சுரம், தீராத முத்தோஷ சுரங்கள் தீரும்.

பா 472

சிறு தேக்கு, சந்தனம், பற்படாகம், சீந்தில், திப்பலி, முத்தற்காசு, கோட்டம், சுக்கு, காஞ்சோன்றி, இருவேலி, இலாமிச்சு, பேய்ப்புடோல், இரு கழஞ்சாக எடுத்து நீர்விட்டு கால் ஆக்கி குடித்துவர, வெப்பு சுரம் அத்தி சுரம், முச் சரங்கள் தீரும்.

தோஷம்

பா 473 பறவைத் தோஷம்

அடைக்கோழி , வானம் பாடி போன்ற பறவைகள் பறப்பதைக் கண்டு குழந்தைகள் பயப்படும், அதிர்ச்சியும் அடைவதால் உள உடல் தியாகப் பல கோளாறுகள் காணும் இதில் தண்ணீர்த் தாகம் வயிற்றோட்டம், இளைப்பு, உச்சிக் குழிவாகக் காணுதல் கண் வட்டித்துக் காணுதல் ஆகிய குணங்கள் தோன்றும்.

பா 474 நீர்ப்புள்

பிள்ளை இளைத்து, வயிற்றோட்டம் நீராகப்போகும், உச்சி குழிந்து, கண் வட்டிக்கும். இதற்கு ஆட்டெருவைச் சுட்டு நன்னீரில் கரைத்து குளிக்க வார்க்க உட்தோஷ பிணிகள் அகலும்.

பா 475 கணைப்புள்

உச்சியோடு கண்ணும் குழிவிழும் குடித்த பால் வயிற்றில் சேராது, மலம் பச்சையாகக் கழியும் தண்ணீர்த் தாகம் ஏற்படும். பட்சிக் குரலில் சீறி அழும், திகைப்பு ஏற்படும்

பா 476 பாலைப்புள்

உடம்பு வரளும், குடித்த பால் வயிற்றில் தங்காது. நெஞ்சு குளிர்ந்து நிறம் வேறாகி, விழி பிதுங்கும், அச்சம் ஏற்படும் அனுங்கலும்அரைக்கு கீழ் குளிரும் ஏற்படும்.

பா 477 வெண்புள்

மேனி வாடும். அதரம் சுருங்கிக்காணும், கண்ணில் நீர் வடியும், கால் குளிரும், குடித்த பால் எதிரேடுக்கும். உச்சி குழியும் வயிறு கடல் போல் இரையும்.

பா 478

இரவுப்பறவை

முகத்தைத்துடைக்கும் தலையை புரட்டிக் கொள்ளும், முறுகி அழும் எழும்பி எழும்பி அழுது கொண்டிருக்கும் வெகுளித் தனமாக வெருண்டு கொண்டிருக்கும்.

பா 479

கருநீர்ப்பறவை

குடித்த பால் எதிரெடுக்கும். உச்சி குழியும். அடிக்கடி தேகம் சிலிர்க்கும். கண்கள் தாழும். இலைச்சாறு போல வயிறு கழியும். கையில் தங்காது. குழந்தை புரளும்.

பா 480

கன்னிப்பறவை

பிள்ளை வாட்ட முறும், வயிறு சிறுக சிறுக கழியும் வயிறு ஊதும், முன் கை, கால் , குளிரும், முறுகி அழும், கண் வட்டித்து கைகால் முகத்தை தடவும் குரல் கேரி அழும்.

பா 481

சாவுக் குருவி

வீரிட்டு அழும். உடல் திமிர்த்து விறைத்துக் கிடக்கும். வியர்வை ஏற்படும். இருப்புக் கொள்ளாமல் பிள்ளை எழும்பி விழித்தழும். பலகாலும் நீர் போல கழிந்திடும். நினைவு தெரியாது. மூர்ச்சையாகும். வாயை வெருவிக் கொள்ளும். (வெருவல்-பயத்தால் சுழித்தல்)

பா 482

மயானக் குருவி

கை, காலை முறுகி முறிக்கும். நெற்றி ரோமத்தை தேய்த்துக் கொள்ளும். அழுதழுது கண்ணை மூடிக்கொள்ளும். கை கால் குளிரும். நாக்கு கறுத்து உதடு காயும். சுரம் காணும். உணவில் விருப்பம் எடுக்காது.

பா 483

ஆண்பெண் குருவி

கை கால் பின்னிக்கொள்ளும். கண்கள் சிறுத்துக் காட்டும். விழி வட்டிக்கும். தேகம் துவளும். வெளிறும். நீர்க்கடுப்பு உண்டாகும். நெய், பால் கஞ்சி போல சாயம் காட்டி கழியும்.

பா 484

பட்சி தோஷம்

நித்திரையில் அருண்டெழும். வயிறு பொருமும். வெருட்சியும், அரைக்குக் கீழ் குளிர்ச்சியும் உண்டாகும். தூக்காது முகத்தை தேய்க்கும். படுக்கையை விட்டு உருளும். இதில் உழலை அதிகமாகக் காணும்.

பா 485 பறவைக் குணத்துக்குச் சிகிச்சை

கோரோசனைக் குளிகை

கோரோசனை, மாயாக்காய், கோட்டம், மதுரம், திப்பிலி, ஓமம் வகை சமனாக எடுத்து முலைப்பாலால் அரைத்து குளிகை செய்து பாலில் கொடுத்து வர பறவைக் குணம் அனைத்தும் தீரும்.

பா 486 - 487 ஈருள்ளி எண்ணெய்

மதுரம், சீரகம், ஏலம், இலவங்கம், கராம்பு, செண்பகப்பூ, குலக்காய், சாதிபத்திரி, முத்தற்காசு, இவை கழஞ்ச 2 எடுத்துக்கொண்டு, முசுமுசுக்கை, பொன்னாங்காணி, சிறுகீரை, கண்டங்கத்திரி, சீந்தில் இவை வேர் பலம் ஒன்று, எண்ணெய் படி 2, ஈருள்ளிச் சாறு நாழி அரை கூட்டி மெழுகு பதத்தில் வடித்து, புகட்டி வர தோஷ வகை அனைத்தும் தீரும்.

பா 488 - 489 புள்ளீட்டெண்ணெய்

வேலிப்பருத்தி, பாகலிலை, மிளகு, புளியமிலை, ஆலிச்சிவப்பி (ஆலம் பால் போலும்), மூன்று நாள் வெயிலில் வைத்து பின் அடுப்பில் வைத்து வடிக்கவும் இதை சிரசில் பொருத்தியும் பூசியும் வருவதால் மெலிதல், குளிர்தல், பால் எதிரெடுத்தல், காய்ச்சல், சகல தோஷங்களும் மாறும்.

ஒழிவு

பா 490 சிறு புழக்குணம் சிகிச்சை

(கிருமி தோஷங்கள்)

சிறு கிருமி அரித்தால் வெறும் வயிற்றில் ஆடு தின்னாப் பாலையின் விதையை அரைத்து நல்ல நீரில் ஊட்டுவது பலன் தரும்.

பா 491 மசறிப்புழு

இரத்தமும் நுரையுமாக வயிறு போகும் இப்புழு வயிற்றில் இரையைச் சாப்பிடும் மல்லாமல் வீங்குகின்ற தன்மையும் ஏற்படும் இதற்கு வேலிப்பருத்தியிலை அரைத்து உள்ளுக்குக் கொடுப்பதால் இது தீரும்.

பா 492 சண்டைப்புழு

இது குடலை முறுக்கி சண்டை செய்வதால் இரத்தம் போகும் குப்பை மேனியை அரைத்து நல்ல நீரில் கொடுக்க இப்பூச்சிகள் மாயும்.

பா 493 - 494 தானைப் புழு

குதவாயில் அரிப்பு காணும், பிள்ளை மெலிவுற்று கண்ணும், தாழ்ந்து

தேகம் வெளுத்துக் காணும். இதற்கு போந்தை மூலமா ஏற்றது (ஒடியல் மா) இம் மாவுடன் காரவல்லி (பாகல்) இலையும் காயும் கூட்டி மாவுடன் சேர்த்து பிட்டவித்து உண்ணக் கொடுத்தும் மாவை அந்த சாற்றிலே குழைத்து குதவாசலில் பூசுவதால், கடிப்பதும் அரிப்பதும் குறையும்.

பா 495 - 496 கீரிப்புழு

மேனி வெளுக்கும், பலம் குறையும், நீர் வெப்பமாகக் கழியும் வாயால் சொள்ளு (சொட்டு) நீர் வடியும். இரத்தம், சீதம் போகும் வயிற்றில் குழப்படியும். காணும். வல்லாரை, மணித்தக்காளி, விரணாரி (கோட்டம்) மாதுளை வேர்ப்பட்டையும் சேர்த்துக் குடிப்பது பயன் தரும்.

பா 497 - 498 நாகப்புழு

வாந்தி, பொருமல், வயிற்றெரிவு, வயிறு, கால், கை அலர்ச்சி ஆகும், இதற்கு வேப்பங்கூர், புரசம் வித்து (பலாசு) மாதளை வேர்ப்பட்டை, வல்லாரையிலை, நீர் விட்டு அவித்து குடிப்பதால் பூச்சி தொல்லை தொலைந்து விடும்.

பா 499 திரைப்புழு

குடித்த பாலை எதிரேடுக்கும் பிள்ளை இளைக்கும் இவை கண்டால் சுண்டை வேரை அரைத்து நன்னீரில் கொடுக்கலாம்.

பா 500 எல்லாக் கிருமிகளுக்கும் பொதுச்சிகிச்சை

குடிநீர்

எலிச்செவி. முருங்கைவேர். திரிபலை. வாய்விளங்கம், மாதுளைப்பட்டை, மாம்பருப்பு, அரை ஆக அவித்து வாய் விளங்கத் தூளை மேற்படி போட்டு கொடுக்க குணம் தரும்.

பா 501 - 502 கிருமி நாச மாத்திரை

திரிபலை, வாய்விளங்கம், வசம்பு, திப்பிலி, உள்ளி, வெங்காயம், மாம்பருப்பு, குப்பைமேனிவேர், சுக்கு, ஆடுதீண்டாப்பாலைவேர், கொழுந்து, விதை, கைப்பு, கடுகுரோகணி, இரு சீரகம் வகை கழஞ்செடுத்து இத்துடன் கிருமி சத்துரு 4 கழஞ்சு சேர்த்து அரைத்து மாதாளம் வேர் பட்டையும் 4 கழஞ்சு உடன் கூட்டி பட்டைச் சாற்றால் அரைக்கவும்.

பா 503 இக் குழிகையை குன்றிமணியளவு உருட்டி வைத்துக் கொண்டு சர்க்கரையுடன் உண்ணவும். அடுத்த நாள் ஆமணக்கு எண்ணெய் குடிப்பதால் கிருமிகள் கழிவுற்று ஓங்காளம் வலிப்பு போகும்.

பா 504 **கட்டுக்குப் பூச்சு**

வசம்பு, மஞ்சள், ஆட்டுப்புழுக்கை செம்பரத்தம் பூச் சாற்றால் அரைத்துப் பூச மாறும். தேற்றாங்கொட்டை, பூமத்தம் வேர், வசம்பு, மஞ்சள் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பூசவும்.

பா 505 வசம்பு, திப்பலி, கடுக்காய் பிரப்பங்குரத்து ஆட்டுப்பிழுக்கை அனைத்தும் வெள்ளாட்டுச் சலத்தால் அரைத்துப் பூச மாறும் ஆமணக்கும் பருப்பும் நெற்பொரியும் கூட்டிக் கொள்ளலாம்.

பா 506 **எண்ணெய்**

தேங்காய்ப்பாலும், இளநீரும் சேர்த்து தாம்பிர வட்டிலில் வைத்து வெயிலில் காய விட்டு வசம்புத்தூள், பூநாகம், என்பவற்றின் தெளிந்த எண்ணெயை புண்களுக்கு பூசிவர தீரும்.

பா. 507 - 508 **அதரகுட்டத்துக்கு**

துத்தம், தூரிசு, கல்உப்பு, கைப்பு, களிப்பாக்கு, மாயாக்காய், பச்சை மஞ்சள், சிறுசிற்றிளம்பாலாவி வித்து கிருமி சத்துரு, புங்கம் பால், இவற்றை சமனாக எடுத்து நந்தியாவட்டைச் சாற்றால் அரைத்து எண்ணெயில் கலக்கி காய்ச்சி இறக்கி கடுகோடு பொட்டளிகட்டி 15 நாள்வரை ஒத்தணம் கொடுத்து பத்தியமாக இருந்து வெந்நீர் குடித்துவர மாறும்.

பா. 509 - 511 வேப்பம்பட்டை திருக்கொன்றைப்பட்டை, வெள்ளறுகு, சிற்றா மணக்குப் பூ, செவ்வகத்திப்பட்டை இவற்றின் கசாயம், நெய், வகைக்கு நாழி 1 இவற்றை ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டு மேலும் பிரப்பங்கிழங்கு, சீந்தில் தண்டு, மாதாளம் வேர் வகைக்கு 4 கழஞ்சு. மதுரம், மிளகு, வெட்பாலை, கடுகு, மஞ்சிட்டி, வெள்ளைக் குங்கிலியம், உள்ளி, ஈருள்ளி, வ.க. 1 தூளாக்கி கலந்து மெழுகுபதம் வடித்து உள்ளும் கொடுத்து மேலும் பூசவும் கிரந்தி, உதட்டுப்புண், நாக்கறளை, பாலர்களுக்குக் காணும் தேக அவியல் பரவு கரப்பன், சொறி சிரங்கு ஆகிய பல நோய்கள் மாறும்.

பா. 512 **அமேத்திரசன்னியின் குணம்**

பால் குடியாது அழுதழுது பார்க்கும் முகம் மாறுபட்டுக் காணும். குரல் கம்பிக் கொள்ளும் வலிப்புகள் ஏற்படலாம். மூலக்கடுப்பு உண்டாகும். சுரமடிக்கும்.

பா. 513 -514 **குக்கலின் குணமுஞ் சிகிச்சையும்**

உண்ணக்கூடிய உணவுகள் வெளியில் கக்கப்படும் இருமல் அதிகமாக

இருக்கும், உடல் மெலிந்துவிடும். கண்கள் மேல்விழி, கீழ் விழியாகி, புறப்பட்டு, ஒங்காளிப்புகள் மிகும். 3 மாதம் வரைவில் வள்ளி, முசுமுசுக்கை, குப்பைமேனி, செம்பரத்தம்பூ தூதுவளை, பிரமி இவற்றை இடித்தெடுத்த சாறு நாழி 1 நெய், பால் நாழி 1 (கர்க்கம். சரக்கு வகைகளையும் கர்க்கம் என்று அழைக்கப்படுவதுடன் சீனிசர்க்கரை என்பதும் கவனிக்கத் தக்கது)

பா.515 - 516 கருஞ்சீரகம், அரத்தை, கார்புகா அரிசி, மதுரம், கோட்டம், சதகுப்பை, ஏலம், திரிபலை, மிளகு, சீரகம், செஞ்சந்தனம், கர்க்கடகசிங்கி, குங்குமப்பூ கோரோசனை, கழஞ்சு 2 இவற்றைச் சேர்த்து பதமுறக்காய்ச்சி, பாலர்களுக்கு காணக்கூடிய குக்கல், ஈழை இருமல் கிரந்தித் தொய்வு ஆகிய ரோகங்கள் தீரும்.

பா. 517 -518 **கஸ்தூரி மிருத்தியாதி**

கஸ்தூரி 1 பங்கு, குங்குமப்பூ 2 பங்கு, கோரோசனை 3 பங்கு, ஏலம் 4 பங்கு, மிளகு 5 பங்கு, அக்கரா 6 பங்கு, சவ்வாது, புனுகு, வகைக்கு 1/2 கழஞ்சு, வெற்றிலைச் சாற்றினால் அரைத்து பயறு அளவு உருட்டி வைத்துக் கொண்டு பாலர்களுக்கு முலைப்பாலில் கொடுப்பதனால் இருமல், குக்கல், தொய்வு, மாறும்.

பா. 519 **குழம்பு**

கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், நாயுருவி, வேலிப்பருத்தி, இலை சமூலமாக எடுத்து இடித்துத் தூளாக்கி, பசுநெய், கர்க்கண்டுடன் குழம்பாய்க் கொள்ள இருமல், ஈழை குக்கல் தீரும்.

பா. 520 - 521 **சேர்க்கப்பட்டவை**

ஏலாதி மாத்திரை

ஏலம், பச்சை (வங்காளப் பச்சை) சாத்திரபேதி, இலுப்பைப்பூ இலாமிச்சு, மதுரம், உருத்திராக்கம், சந்தனம், செஞ்சந்தனம், பச்சைக் கர்ப்பூரம், சடாமாஞ்சில், முந்திரிகை, பேரீஞ்சு, கெருடபச்சை, கஸ்தூரி. சாதிக்காய், இருவேலி, பூநாகம், முசுட்டுமுட்டை, மான்கொம்பு, இலவங்கம், முந்தற்காசு, கோட்டம், கோரோசனை, கல்நார், வகை கழஞ்சு ஒன்று. இவற்றை கரும்புச் சாற்றால் அரைப்பதுடன், இளநீர் மட்டைச்சாற்றால் அரைத்து இலிங்கம் 2 கழஞ்சு வைத்து, பன்னீரினால் அரைத்து உழுந்து போல் உருட்டி வைத்துக் கொள்ளவும். சன்னி, சுரம், தோஷம், மாந்தம் அக்கரம் தீருமென முனிவர்கள் விளம்பினர்.

பா. 523 - 525 **தாமரை வளைய ஏலாதி மாத்திரை**

கோரோசணை, அதிமதுரம், செண்பகப்பூ கோட்டம். தாமரைக்கிழங்கு, நிலவேர், முசுட்டுமுட்டை, நன்னாரி, சாத்திரபேதி. சாதிக்காய், இலவங்கம்,

செங்கழுநீர்க்கிழங்கு, வக ஒன்று இவற்றை முலைப்பாலில் அரைத்து பயறு அளவாக உருட்டி முலைப்பாலில் கொடுப்பதால், சன்னி, சுரம், இருமல், தோஷம், தாகம், மூச்சு, குளிர், விக்கல், அக்கரம், மேலும் பல பிணிகள் தீரும்.

குறிப்பு : பரனது விழிமணி - விழிப்புச் சொல்லாக தென்படலாம். அது உருத்திராக்கமாகவும் கருதப்படும் என்பதை அவதாவிக்கலாம்.

பா. 526 **கஸ்தூரி சுவர்ண மாத்திரை**

தங்கம், கஸ்தூரி, கோரோசனை வக ஒன்று, திரிகடுகு, தங்கமாதி சரக்குகளுக்கு நேர்பட அளவாக கூட்டி வெற்றிலைச் சாற்றால் அரைத்து பயறு அளவு உருட்டி உண்டு கொள்க.

பா. 527 இதனை ஏற்ற அனுமானங்களில் கொடுப்பதனால் சன்னி, சுரம், கணை, மாந்தம், கழிச்சல் ஆகியவை தீரும். சிறுவர்களுக்கு குற்றமல்லாத உயர்ந்த சுவர்ண கஸ்தூரி கொள்க.

பா. 528 - 529 **பெருங்காயம் குளிகை**

பெருங்காயம், உள்ளி வசம்பு இருசீரகம், ஓமம், கடுக்காய், அதிமதுரம், சுக்கு, கோட்டம், திப்பிலி, நாகம்பூ, நிலவேர், முயிற்று முட்டை கழஞ்சு ஒன்று, முலைப்பாலால் அரைத்து சூரைக்காயளவு உருட்டி, வைத்துக் கொண்டு இஞ்சி, தேன், முலைப்பாலில், கொடுக்க பொருமல், மந்திப்பு, சுரம், சன்னி, இருமல், கோழை இளைப்பு, சுவாத நோய், தோஷக் கோளாறுகள் வயிற்று அடசல், இவை மாறும்.

பா. 530 **முலைப்பாற் குளிகை**

கோரோசனை கழஞ்சு ஒன்று வசம்பு, நேர்வாளம், வகைக்கு மூன்று கழஞ்சு திப்பலி, இரண்டு கழஞ்சு, மாயாக்காய் எண்ணிக்கை பத்து முலைப்பாலால் அரைத்து குன்றுமணி பிரமாணம் உருட்டி பாவிக்க மாந்தம் மற்றும் பல நோய்கள் நீங்கும்.

பா. 531 **காக்கணவனிலைச் சாற்றுக் கோரோசணைக் குளிகை**

கோட்டம், இருசீரகம், சாத்திரபேதி, கோரோசனை, வசம்பு, மாயாக்காய், திப்பலி, அக்கறா வகைக்கு ஒரு கழஞ்சு, கறுத்தப் பூ இலைச் சாற்றால்

அரைத்து பயறளவு உருட்டி வைத்துக் கொள்ளவும் முலைப்பாலில் அனுமானமாக கொடுக்கலாம்.

பா. 532

கருங்கிரந்தி, செங்கிரந்தி, கிரந்திச் சுரம், முட்டுமூச்சு, தொய்வு, வயிற்றுப்பொருமல் மன வரட்சி, கணைச் சுரம், களிக்கட்டு, இவை தீரும்.

பா. 533 வெண்காயக் குளிகை

திரிகடுகு, இருசீரகம், ஓமம், கடுக்காய், கோட்டம், மதுரம், கல்நார், வசுவாசி, கெருடபச்சை, ஏலம், சதகுப்பை, மாயாக்காய், இலவங்கம்பட்டை, வசம்பு, அக்கரா, சாரணை வேர், இந்துப்பு,

பா. 534

மதுரம், பெருங்காயம், சாதிக்காய், முருங்கைப் பூ உலுவா, வக ஒன்று, உள்ளி, வகைக்கு 1 பலம்

பா. 535

பொடுதலைச் சாற்றால் அரைத்து, குன்றுமணியளவு உருட்டி வைத்துக் கொண்டு ஏற்ற அனுமானங்களுடன் பயன்படுத்துவதால் வயிற்றுப் பொருமல், மாந்தம் வயிற்றுக் கோளாறுகள், மாந்தக் கழிச்சல் ஆகியன தீரும்.

பாலரோக நிதானம் முற்றுப் பெற்றது.

